களநிலை
அறிக்கையிடல்
வல்லமைக்கு
நம்பகத்
தன்மையே
மிக முக்கியமானது

பக்கம் C


# உதயன்

கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
மேகமூட்டம்,
மழை

சுடர் 30 கதிர் 157 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 20, ஞாயிற்றுக்கிழமை 03.05.2015





சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டும், ஈழத்தின் மிகப் பெரும் ஊடகப் படுகொலையான உதயன் பணியாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதை நினைவு கூர்ந்தும் ஊடாக சுதந்திர தின நிகழ்வு நேற்று யாழ். பொது நூலகத்தில் நடைபெற்றது. இதில் உயிர்நீத்த தமிழ் ஊடகவியலாளர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (மேலும் படங்கள் A,B பக்கங்களில்)

# வாக்குறுதிகளை மைத்திரி அரசு செயல் வடிவில் காட்டவேண்டும்

## கொழும்பில் நேற்று வலியுறுத்தினார் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி

கொழும்பு, மே 3
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசு தனது அனைத்து வாக்குறுதிகளையும் செயலில் காட்டவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன்கெரி.
இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய ஜோன் கெரி, இது இலங்கைக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு என்றும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசு தனது அனைத்து வாக்குறுதிகளையும் செயலில் காட்டவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.
இரண்டு நாள் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு நேற்று அதிகாலை இலங்கை வந்த ஜோன் கெரி நேற்று முழு நாளும் பல்வேறு



முக்கிய சந்திப்புகளை நடத்தியதுடன் சில முக்கிய நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார். அமெரிக்காவுக்குச் சொந்தமான போயிங் 757 விமானத்தில் நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான

பக்.21

## இலங்கையின் பொருளாதாரம் 7.4 வீத வளர்ச்சி

யாழ்ப்பாணம், மே 3
இலங்கையின் பொருளாதாரம் கடந்த வருடத்தில் 7.4 வீத வளர்ச்சியை எட்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
இலங்கை மத்திய வங்கியின் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.கடந்தவருடத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.8 வீதத்தை எட்டுமென மத்திய வங்கி ஏற்கனவே

பக்.21

## தமிழக மீனவர்களை சுடுவதாகக் கூறவில்லை

### அமைச்சர் சுவாமிநாதன் மறுப்பு

சென்னை, மே 03
இலங்கைக் கடல் எல்லைக்குள் வருபவர்கள் மீது சர்வதேச சட்டப்படி சுடுவதற்கு வாய்ப்புள்ளது என்று மட்டுமே பிரதமரும், நானும் கூறினோம். ஆனால், தமிழக மீனவர்களைச் சுடுவோம் என்று நாங்கள் கூறியதுபோல சில ஊடகங்கள் அதனைத் திரித்து வெளியிட்டுவிட்டன என அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.
திருநள்ளாற்றில் அமைந்துள்ள தர்பாரண்யேசுவரர் கோயிலுக்கு நேற்றுப் பயணம் செய்த அமைச்சர் சுவாமிநாதன் அங்கு செய்தியாளர் களிடம் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
தமிழர்கள் மற்றும் சிங்கள மக்கள்

பக்.21

## மைத்திரிக்கு ஜோன் கெரி வாழ்த்து

கொழும்பு, மே 3
பலத்த போட்டிகளுக்கு மத்தியில் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றமைக்கு அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி நேற்று நேரில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.
இரண்டு நாள் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு நேற்றுக் காலை இலங்கை வந்த் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, வெளிவிவகார அமைச் சில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமர வீர தலைமையிலான குழுவினரைச் சந்தித்த பின்னர்

பக்.21

## பொறுப்புக் கூறலுக்குத் தீர்வு

### அமெரிக்காவிடம் உறுதியளித்தது அரசு

கொழும்பு, மே 3
போருடன் தொடர்புடைய பொறுப்புக்கூறல் விவகாரங்களுக்குத் தீர்வு காணப்படும் என்று இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கச்செயலர் ஜோன் கெரியிடம் அரசு உறுதியளித்துள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருடன், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி நடத்திய பேச்சுக்களின்போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.
அமெரிக்க இராஜாங்கச் செயலருடனான சந்திப்புக்குப் பின்னர், நடத்திய செய்தியாளர் சந்திப்பில், கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர,

பக்.21



## வடக்கில் சரணாலயம் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 3
வடக்கு மாகாணத்தில் காட்டுச் செல்வழிகள், இயற்கை ஒதுக்கிடங்கள், சரணாலயங்கள் மற்றும் வன ஜீவராசிகள் தேசிய பூங்காக்களை அமைக்கச் சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
30 வருட போர் நிறைவடைந்த பின்னர் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சூழலைப் பாதுகாத்தல், அடிப்படை வசதிகளை வழங்குதல் மற்றும் அபிவிருத்தி அலுவல்களை மேற்கொள்ளல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்ற 25 இற்கு மேற்பட்ட அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் இந்தத்

பக்.21




## குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

கொழும்பு, மே 3

வெலிஅத்த பிரதேசத்தில் நேற்று அதிகாலை குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

4 பிள்ளைகளின் தந்தையான 53 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் இவரை வீட்டுக்கு வெளியில் வைத்து சுட்டுக்கொன்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## சிறுநீரகக் கற்கள் உடைக்கும் நவீன சத்திர சிகிச்சை யாழில்

யாழ்ப்பாணம், மே 3

யாழ்.போதனா வைத்தியசாலையில் முதல்முறையாக தோல் ஊடாகத் துளையிட்டுச் சிறுநீரகத்தில் உள்ள கற்களை உடைத்து வெளியே எடுக்கும் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை அவ்வாறு 3 பேருக்கு அந்தச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுநீர் சனனித் தொகுதிச் சத்திர சிகிச்சை நிபுணர் பா.சதீசன் இந்தச் சிகிச்சையை மேற்கொண்டுள்ளார்.

அது தொடர்பில் நிபுணர் பா.சதீசன் தெரிவித்ததாவது:-

வாரத்தில் ஒரு நாள் இந்தச் சிறுநீரகச் சிகிச்சை இடம்பெறுகிறது. அந்த ஒரு நாளில் புதிய நோயாளர்கள் 20 பேர் வருகின்றனர். அவர்களில் சுமாராக 10 பேருக்குச் சிறுநீரகம் தொடர்பான பாதிப்பு உள்ளது.

சிறுநீரகத்தில் கல் ஏற்பட்டால் அது அகற்றப்படவேண்டும். சிறுநீரகத்தில் ஏற்படும் கல் சாதாரண அளவில் இருக்குமாயின் அந்த நோயாளர்களைக் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளாது லேசர் கருவி போன்ற கருவி மூலமாக உடைத்து அகற்றப்படும்.

அந்தக் கற்கள் நடுத்தர அளவுக்கு வளர்ந்துவிட்டால் அதனையும் பெரிய அளவில் வளர்ந்துவிட்ட கற்களையும் இதுவரை காலமும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மூலமாகவே அகற்ற முடிந்தது. அத்தகைய இடைத்தர மற்றும் வளர்ந்து விட்ட கற்களே நவீன கருவி மூலமாக அகற்றப்படுகின்றது. நவீன கருவி மூலமாக வரலாற்றில் முதன்முறையாக 3 பேருக்குச் சிகிச்சை மேற்கொள் ளப்பட்டுள்ளது.

சிறுநீரகக் கல் உள்ளவர்களுக்கு மயக்க ஊசி ஏற்றப்பட்டு இடுப்புப் பகுதித் தோலில் சிறு துளையிட்டுச் சிறுநீரகத்தினுள் குழாய் செலுத்தப்படும். அந்தக் குழாய் மூலமாகக் கமரா செலுத்தி சிறுநீரகத்தில் உள்ள கற்கள் உடைக்கப்படும்.

அவ்வாறு சிகிச்சை செய்த மறுநாளே சிகிச்சை பெற்றவர் வீட்டுக்குச் செல்ல முடியும். முன்னர் சத்திர சிகிச்சை செய்தவர்கள் மருத்துவ விடுதியில் சில நாள்கள் தங்கி இருந்தே செல்லவேண்டும்.

ஆனால் அந்த நவீன கருவி மூலமான சிகிச்சை கடந்த வியாழன் ஆரம்பிக்கப்பட்டாலும் தற்போது அனைவருக்கும் அந்த சிகிச்சையை மேற்கொள்ள முடியாது. படிப்படியாகவே அனைவருக்கும் விரிவுபடுத்த முடியும். அதனால் தற்போதைக்கு, ஆரம்பத்திலிருந்து நடைமுறையிலிருக்கும் சத்திர சிகிச்சை மூலமான சிகிச்சையும் தொடரும் –என்றார். (த-4)

# இன்னும் தொடரும் ஊடக ஒடுக்குமுறை

### ஊடகவியலாளர் நினைவு நிகழ்வில் சரவணபவன் எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், மே 3

படுகொலைகள், தாக்குதல்கள் மிரட்டல்கள் எனப் பிரகடனப்படுத்தப்படாத வன்முறைகள் எம் மீது கட்டவிழ்த்து விடப்பட்டபோதும்– அவற்றை மேற்கொள்பவர்கள் யார் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தபோதும், எவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, தண்டனைக்கு உட்படுத்தப்படவில்லை என்று உதயன் குழுமத் தலைவரும் யாழ்.–கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

சர்வதேச ஊடக சுதந்திரத்தை முன்னிட்டும் ஈழத்தின் மிகப் பெரும் ஊடகப் படுகொலையான, உதயன் ஊடகப் பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதனை நினைவு கூர்ந்தும் ஊடக சுதந்திரதின நிகழ்வும்– கண்காட்சியும் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கைகயில், கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் ஊடக ஒ்டுக்குமுறை என்பது பல்வேறு வடிவங்களில் எமது ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் ஒரு மரணப் பயச் சூழலை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் அதனுடன் தொடர்புடைய எவரும் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படர்தபோதும், ஊடகவியலாளர்கள் மீது, பல்வேறு குற்றங்கள் சுமத்தப்பட்டு அவர்கள் நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். அதாவது, ஊடக சுதந்திரத்திற்கு எதிராக ஒரு வன்முறை வலை விரிக்கப்பட்டிருந்தது.

எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு நல்லாட்சியை நிறுவுவதில், அர்ப்பணிப்புடன் பங்காற்றினோம். நாம் ஒரு ஜனநாயக அடிப்படையிலான, ஊடக சுதந்திரத்தை எதிர்பார்த்தோம். ஆனால் வட பகுதியில், எமது எதிர்பார்ப்புக்கள் சிதறடிக்கப்பட்டன. கடந்த காலத்தில் நிலவிய அதே ஒடுக்குமுறை பொலிஸாரால் இன்றும் தொடரப்படும் துரதிர்ஷ்ட வசமான நிலை நிலவி வருகின்றது.

அண்மையில் ஊடகவியலாளர்கள் கிரிமினல் குற்றவாளிகள் போன்று கைது செய்யப்பட்டதையும் புலிகளின் மீளெழுச்சியின் பங்காளர் என ஒரு ஊடகவியலாளர் குற்றஞ்சாட்டப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டமையையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இப்படியான நடவடிக்கைகள், ஒட்டு மொத்த ஊடகவியலாளர்களையும், அச்சுறுத்தி அவர்களின் ஊடக வலிமையை மழுங்கடிக்கச் செய்யப்படும் திட்டமிட்ட வன்முறை சார்ந்த ஒடுக்குமுறை என்றே நாம் நம்புகின்றோம். நாம் எந்த நல்லாட்சிக்காகப் பாடுபட்டோமோ அந்த நல்லாட்சி எமக்குக் கிட்ட வில்லை என்பதற்கு இது ஒரு மறுக்க முடியாத விரும்பத்தகாத உதாரணமாகும்.

'பயங்கரவாதம்,' 'ஊடக ஒழுக்கம்' என்கின்ற பெயரில், நீதிக்காகக் குரல் கொடுக்கும் தார்மீக உரிமையை, எவர் பறிக்க முயன்றாலும், நாம் அவற்றுக்கு எதிராக உறுதியுடன் போராடுவோம் என்பதைத் திட்ட வட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

19 ஆவது திருத்தச் சட்டத்திலும், ஊடக ஒழுக்கம் என்ற பெயரில், ஊடகங்களைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுதியான நிலைப்பாடு காரணமாக முறியடிக்கப்பட்டதை அறிவீர்கள்.

கடந்த ஆட்சியில் நிலவிய ஊடக ஒடுக்கு முறையை இன்றைய ஆட்சியிலும் வடபகுதி ஊடகவியலாளர்கள் மீதும், ஊடகங்கள் மீதும் தொடர முயல்வதைநாம் அனுமதிக்க முடியாது. ஒரு ஜனநாயக சூழலில் நிலவ வேண்டிய நல்லாட்சிக்கான ஊடகவியலாளர்களினதும், ஊடகங்களினதும், போராட்டத்தை எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

9 வருடங்களுக்கு முன்னர் உதயன் அலுவலகத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகள் சுட்டுப் படுகொலை புரிந்ததோடு பல பொருள்களையும் சுட்டு நாசம் விளைவித்தனர். அந்தச் சம்பவம் தொடர்பில் அரை மணி நேரத்தில் அன்றைய ஜனாதிபதியிடம் கூறினேன். பண்டாரநாயக்க நினைவு மண்டபத்தில் வைத்து அவர் கூறியது, தனக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்காகப் புலிகள் சுட்டனர் என்றார். அவ்வாறுகூறிய அரை மணி நேரத்தின் பின்னர் சுட்டவர்களில் ஒருவரைப் பிடித்துவிட்டோம்– என் றார். என்ன நடந்தது பற்றிய அறிக்கை தருவதாகத் தெளிவாகக் கூறினார். அவ்வாறு பிடிக்கப்பட்டது உண்மை. அவர் பலாலி இரா ணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் கேட்ட போது அது தவறுதலாகக் கூறப்பட்டுவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது–என்றார். (த-4)

# ஊடக சுதந்திரம் வடக்கில் இல்லை

### யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்க தலைவர் இராசகுமாரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 3

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியும் என்று அரசு கூறி இருந்தாலும் ஊடக சுதந்திரத்தை முற்றுமுழுதாக அனுமதிக்க முடியாத நிலை தான் வடக்கில் உள்ளது. இது நல்லாட்சிக்கு உரிய அம்சம் இல்லை.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் தெரிவித்தார்.

சர்வதேச ஊடக சுதந்திரத்தை முன்னிட்டும் ஈழத்தின் மிகப் பெரும் ஊடகப் படுகொலையான, உதயன் ஊடகப் பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதனை நினைவு கூர்ந்தும் ஊடக சுதந்திரதின நிகழ்வும்– கண்காட்சியும் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதில் புதிய ஆட்சியில் வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்னும் தொனிப்பொருளில் இராசகுமாரன் உரையாற்றினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பத்திரிகையாளர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான கொலைகளை மக்கள் மறந்து விடாது இருப்பதற்காக இந்த நிகழ்வுக்குப் பொதுமக்களை அழைத்து நடத்தியமைக்கு நன்றி கூற வேண்டும். நான் இன்று உயிருடன் இருப்பதற்குப் பத்திரிகைகளும் ஒரு காரணம். நான் நாலாம் மாடிக்கு அழைக்கப்படுகின்றமை தொடர்பில் பத்திரிகைகள் செய்தி வெளியிடாதுவிட்டிருந்தால் நான் சில வேளை திரும்பி வந்திருக்க முடியாது.

ஜனவரியில் ஆட்சி மாற்றம் ஏற்படாதிருந்திருந்தால் தற்போதைய நிலைமையை எதிர்பார்க்க முடியாது. தமிழ் மக்களின் விடயத்தைப் பொறுத்த வரை தென்பகுதியிலே எல்லாக் கட்சிகளுக்கும் இடையே பெரியளவு வித்தியாசம் இல்லை. அவர்கள் எம்மை இரண்டாந் தரப் பிரஜைகளாகவே பார்க்கின்றனர்.

ஊடக சுதந்திரம் என்பது ஒருவர் தனக்குத் தெரிந்த கருத்தை அல்லது தனது அபிப்பிராயத்தை ஏனையவர்களின் தலையீடின்றிக் குறிப்பாக அரசின் தலையீடின்றி மற்றவர்களுக்கும் தெரியப்படுத்தி அதே நேரம் தானும் தனக்குத் தேவையான கருத்துக்களைத் தேடிக் கொள்ள வேண்டும். தகவல்களை மற்றவர்களுடன் பரிமாறிக் கொள்ளும் உரிமையாகும். அதனை ஐ.நா. சாசனமும் கூறுகிறது.

எங்கு பார்த்தாலும் கொலை வெறி தாண்டவம் ஆடிய காலகட்டத்தில் தமது கருத்துக்கு எதிரான கருத்துக் கொண்ட அனைவரையும் அழித்தொழிக்கும் எண்ணம் காணப்பட்ட காலத்தில் வடபகுதிப் பத்திரிகைகள் குறிப்பாக உதயன் பத்திரிகை மிகத் துணிவாகக் கருத்துக்களைக் கூறியிருந்தது. அதுதான் உண்மையான ஊடக சுதந்திரம்.

ஆனாலும் கடந்த காலத்தில் இலங்கையில் வடக்கு–கிழக்கில் நடந்த போரைக் காரணம் காட்டி இலங்கை முழுதும் அரசியல்வாதிகள் தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ஊடகங்கள் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். ஊடகவியலாளர்கள் கடத்தல் கொலைகள், ஊடகப் பணிமனைகள் எரிக்கப்பட்ட நிலைமையே இங்கு காணப்பட்டது.

ஊடக சுதந்திரச் சுட்டியில் 2013 இல் 162 ஆவது இடத்திலும் கடந்த வருடம் 165 ஆவது இடத்துக்கும் தள்ளப்பட்டுள்ளது. அதாவது மிகக் கேவலமான நிலையில் இங்கு ஊடக சுதந்திரம் உள்ளது.

கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த ஊடக சுதந்திரம் கடந்த ஜனவரிக்குப் பின்னர் சற்றுச் சுதந்திரம் பெற்றது. சில ஊடகங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. முன்னரைவிட ஊடக சுதந்திரம் சற்று அதிகரித்துள்ள நிலை. ஆனால் நாட்டின் சகல இடங்களிலும் இது எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது?

ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவது என்பது செய்தியாளர்களையோ ஆசிரியர்களையோ கட்டுப்படுத்துவது என்பது மாத்திரமல்ல. நிறுவன இயக்குநர்களையும் கட்டுப்படுத்துவர். ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியும் என்று அரசு கூறி இருந்தாலும் சுதந்திரமானது உண்மையில் முற்றுமுழுதாக அனுமதிக்க முடியாத நிலைதான் வடபகுதியில் உள்ளது. இது நல்லாட்சிக்கு உரிய அம்சம் இல்லை. வடக்கில் 100 வீதம் சுதந்திரமில்லை என்றாலும் சில ஊடகங்கள் சுதந்திரம் இல்லாத நிலைக்கும் அஞ்சாமல் தமது கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்–என்றார். (த-4)

# மஹிந்த ஆதரவாளர்களே தேவசிறியைத் தாக்கினர்

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 3

பல்கலைக்கழக விரிவுரையாளர் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி மே தினத்தன்று கொழும்பு, கிருலப்பனையில் வைத்து இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில், இவரது தாக்குதலில் பின்னணியில் மஹிந்த ஆதரவாளர்களே உள்ளார்கள் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் குற்றம்சாட்டியுள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் மிகவும் மோசமானது. இது யார் செய்திருந்தாலும் சட்டத்துக்கு முன்நிறுத்தப்படவேண்டும். நாங்கள் ஒழுங்கு செய்திருந்த மே தினக் கூட்டத்துக்கருகில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றமைக்கு வருந்துகின்றோம். மன்னிப்புக் கோருகின்றோம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள் ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் கொழும்பில் பல்வேறு இடங்களில் மே தின நிகழ்வுகள் நடைபெற்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மஹிந்த ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்திருந்த மே தினக் கூட்டம் கிருலப்பனை அத்துலத்முதலி மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது அவ்வழியாக சென்ற பல்கலைக்கழக விரிவுரையாளர் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் கொழும்பு பல்கலைக் கழக பேராசிரியருமான கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி மீது அங்கு கூடிநின்ற இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் காயமடைந்த அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில், இத்தாக்குதல் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், மஹிந்தவின் அடக்குமுறைகளுக்காகக் குரல் கொடுத்தவர் பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி. அவர் தற்போது மஹிந்தவின் ஆதரவாளர்களினால் தாக்கப்பட்டுள்ளார் என்று குற்றம் சாட்டியுள்ளார்.

கிருலப்பனை பேரணியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக் கார மன்னிப்புக் கோரியுள்ளார். (த)

# களை நாசினி நிறுவனங்களுக்கு எதிராக நட்டஈடு கோர விவசாயிகள் தீர்மானம்

## பயனற்ற மருந்துகளால் பெரும் நட்டமென விசனம்

முல்லைத்தீவு, மே 03

முத்து ஐயன்கட்டுக் குளத்தின் கீழும், சிறிய நீர்ப்பாசனக் குளத்தின் கீழும் சிறுபோக நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் களை நாசினி நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு நட்ட ஈடு கோருவதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறை களைகளைக் கட்டுப்படுத்துவதற்கான முகவர்களால் சிபார்சு செய்யப்பட்டவற்றை ஒவ்வொரு மருந்தாக எடுத்து விசிறியும் களைகள் கட்டுப்படவில்லை. ஒவ்வொரு விவசாயியும் சுமார் ரூபா 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரை களை நாசினிக்குச் செலவழித்தும் எவ்வித பிரயோசனமும் இல்லாது போய்விட்டதாகவும், நெல்லைக் களைகள் மூடிப் பயன்பெற முடியாதுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

கற்சிலைமடு விவசாயி சி.சிங்கராசா தெரிவிக்கையில்,

நான் கற்சிலைமடு சிறிய நீர்ப்பாசனக் குளமான பெரியகுளத்தின் கீழ் 2 ஏக்கர் வயல் செய்கிறேன். இதற்கு 21 நாள்களுக்குள் களை நாசினி அடிக்கவேண்டும். முதலில் ஒரு மருந்து அடித்தேன். பயன் இல்லை. பின்பு வேறொன்று அடித்தேன். அதற்கும் பயன் இல்லை. பின்பு மூன்றாவதாக ஒன்றை அடித்தேன். அதுவும் பயனளிக்கவில்லை. கோரைப் புல் நெல்லை மூடிக் கொண்டே வந்தது. செய்வதறியாது இருக்கும்வேளை ஒரு நிறுவனத்தினர் ஒட்டுசுட்டானில் உள்ள கடை ஒன்றைக் குறிப்பிட்டு அங்கு ஒரு மருந்தை வாங்கி வாருங்கள் நாங்கள் நிற்கும்போது எமது கூற்றுப்படி மருந்து கலந்து அடியுங்கள் என்று கூறினார்கள்.

நான் உடனே ஒட்டுசுட்டான் சென்று ஒருலீற்றர் மருந்தை 900 ரூபாவுக்கு வாங்கி வந்தேன். அந்த நிறுவனத்தினர் அடுத்த நாள் வாகனத்தில் வயலுக்கு வந்து அவர்களே கலவையைக் கலந்து தர நான் அவர்கள் கூற்றுப்படி மருந்தை விசிறினேன். இரண்டு ஏக்கருக்கும் 6 கலவைகள் கலக்கப்பட்டு அவர்கள் முன்னால் அடித்தேன். அடித்து முடித்ததும் இனிப் பயமில்லை களை நாசினிகள் கட்டுப்பட்டு வெற்றியளிக்கும். நாம் 3–4 நாள்கள் கழித்து வருவோம் என அவர்கள் கூறினார்கள். நானும் நம்பி இருந்தேன். ஆனால் அவர்கள் வரவும் இல்லை. களைகள் அழியவும் இல்லை. இதனால் நான் பெரும் நட்டமடைந்துள்ளேன்.

எனவே இந்த நிறுவனங்களுக்கெதிராக நடவடிக்கைகள் மேற்கொண்டு நட்டஈட்டை பெறவேண்டும். நான் மட்டுமல்ல 100 வீதமான விவசாயிகளும் ஒவ்வொரு மருந்தாக வாங்கி விசிறி நட்டமடைந்தது தான் மிச்சம். வயல்வெளி முழுமையும் மஞ்சள் நிறமாக கோரைப்புல் பூத்துக் குலுங்கி நெல்லை ஆக்கிரமித்துள்ளது. இவ்வாறு தரமற்ற களைநாசினிகளை இங்கு விற்று அவர்கள் எமது பணத்தைச் சுருட்டிக் கொண்டு போகின்றனர். நான் பணத்தைச் செலவழித்து கடன் காரனாகி உள்ளேன்.

வர்த்தகர் ஒருவரிடம் இது பற்றி விசாரித்தேன். அப்படியான மருந்துகள் இங்கு விற்பனை செய்யப்பட்டன. ஆனால் அவை பயனளிக்கவில்லை என விசிறியோர் தெரிவித்தார்கள். இதனால் மருந்துகளை விற்பனை செய்யாது திருப்பி அனுப்பவுள்ளோம் எனக் கூறினார். வயல்கள் யாவும் களைகளின் ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் நட்டத்தை எதிர் கொண்டுள்ளார்கள். இவற்றை நேரில் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிறுவனம் நட்ட ஈடு வழங்க வேண்டும் என்று கூறினார். (த-500)

# மயூரனின் உடல் நேற்று ஆஸிக்கு

கான்பரா, மே 03

இந்தோனேஷியாவில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்ட மயூரன் சுகுமாரன் மற்றும் அன்று சானின் உடல்கள் நேற்று ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டு மூன்று நாள்களின் பின்னர், விமானத்தின் மூலம் அவர்களின் உடல்கள் சிட்னி நகருக்குக் கொண்டு செல்லப்பட்டதாக ஏபிசி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இப்போதைய சூழ்நிலையில், இருவரின் இறுதிக் கிரியைகள் தொடர்பான திட்டங்கள் பற்றி எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. எனினும், சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட சமயத்தில் மதகுருவாக மாறிய அன்று சானின் இறுதிக்கிரியைகள் மதச் சடங்காக இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(த)

## வெளிநாட்டு நாணயத்துடன் நேற்று ஒருவர் கைது

இலங்கையில் இருந்து 63 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட வெளிநாட்டு நாணயங்களை சட்டவிரோதமாகக் கடத்திச் செல்ல முயற்சித்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலை அடுத்தே இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் நேற்று அதிகாலை கட்டார் ஏயர்வேஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான விமானத்தில் கட்டார் நோக்கிப் புறப்பட்டுச் செல்லவிருந்தார். அவரது பயணப் பொதிகளைச் சோதனையிட்ட போது அவற்றில் 45 ஆயிரத்து 420 அமெரிக்க டொலர்கள், 5 ஆயிரத்து 225 திர்ஹாம்கள், 19 ஆயிரம் இலங்கை ரூபாவையும் கைப்பற்றியதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவற்றின் பெறுமதி 63 இலட்சத்து 62 ஆயிரத்து 746 ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு பிரதேசத்தை சேர்ந்த 39 வயதான நபர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர் விசாரணைகளுக்காக சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (த)

# மண்கும்பான் பள்ளிவாசல் கொடி இறக்க வைபவம்



வலி.வடக்கு, மே 03

மண்கும்பான் ஜூம்மா பள்ளிவாசலின் கொடியிறக்க நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை அஷர் தொழுகையின் பின்னர் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். 12 நாள்கள் தொடர்ந்து இடம்பெற்ற இந்தக் கொடியேற்ற நிகழ்வின் இறுதியில் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் விசேட துஆ பிரார்த்தனை வைபவமும் இடம் பெற்றுச் சிறப்பாக முடிவடைந்தது.

இதன்போது வருகை தந்த மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதுடன் தாய்க் கொடி சம்பிரதாயபூர்வமாக இறக்கப்பட்டு மற்றுமொரு கொடி பறக்கவிடப்பட்டது. கடந்த காலத்தில் நடைபெற்றதைவிட இம்முறை ஏராளமான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ரஜப் பிறை ஒன்றுடன் ஆரம்பமாகி ரஜப்பிறை 12 உடன் இந்நிகழ்வு நிறைவடைந்துள்ளது. (த-86)

# பசிலுடன் ஐந்து மணித்தியாலம் அத்துரலிய தேரர் ரகசியப் பேச்சு

கொழும்பு, மே 03

திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பான வழக்கில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன், ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் நேற்று முன்தினம் ஐந்து மணி நேரம் பேச்சு நடத்தியுள்ளார்.

பசில் ராஜபக்ஷ சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள, கொழும்பு தேசிய மருத்துவமனையின் கட்டண விடுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐந்து மணி நேரம் இருவருக்கும் இடையில் தனிப்பட்ட பேச்சுக்கள் இடம்பெற்றதைக் கொழும்பு தேசிய மருத்துவமனைத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், விளக்கமறியலில் உள்ள கைதியை எந்த நேரத்திலும் சந்தித்துப் பேசுவதற்குச் சட்டத்தின் இடமளிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாகப் பரப்புரை செய்த அத்துரலியே ரத்ன தேரரும், மகிந்த ராஜபக்ஷவுக்காகப் பரப்புரை செய்த பசில் ராஜபக்ஷவும், நீண்டநேரம் பேச்சுக்களை நடத்தியிருப்பது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் தமக்கு எதிரான அணியினருடன், இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியில் பசில் ராஜபக்ஷ இறங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. (த)

## ஹெரோயினுடன் பெண் கைது

கொழும்பு, மே 03

ஹெரோயின் போதைபொருள் பைக்கெற்றுகளுடன் பெண்ணொருவர், வெலிமடைப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண், கொஸ் கொல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், அவரிடமிருந்து 27 ஹெரோயின் பைக்கற்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஹெரோயின் பைக்கற்றுகள் விற்பனை செய்வதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

## சீரணி நாகபூசணிக்கு இன்று தேர்

சண்டிலிப்பாய், மே 03

சண்டிலிப்பாய் நாகபூசணி அம்பாள் தேவஸ்தான தேர் உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று முற்பகல் 10.30 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருவார்.

பிற்பகல் 2 மணிக்கு அம்பாள் தேரில் இருந்து அவரோகணித்து ஆலயம் சேர்வார். நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆலய உற்சவம் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.



முல்லைத்தீவு, தண்ணீரூற்று சித்திவிநாயகர் ஆலய இரதோற்சவப் பவனி பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடை சூழ நேற்றுச் சனிக்கிழமை காலை பக்தி பூர்வமாக நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தமது வேண்டுதல்களை நிறைவேற்றினர். (த-102)

3,6 மற்றும் 12 மாததவணை காலப்பகுதியில்
உங்கள் தெரிவுப்படி மீளச்செலுத்தலாம்
ரூபா.5 மில்லியன்வரை பெற்றுக்கொள்ள முடியும்
நம்பமுடியாத குறைந்தவட்டி வீதத்தில்
ரூபா.1 மில்லியனுக்கு மாதாந்தவட்டி ரூபா.13,990 மட்டுமே
SINGER FINANCE நாடுங்கள்
உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து
உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
தர்ஷன் 077 7 009 666
சுஜந்தன் 077 7 391 449

# பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஓய்வு பெறும் ஆணையாளர்

கொழும்பு, மே 3

தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதியுடன் 60 வயதை பூர்த்தி செய்வதோடு, அவரது பதவியில் இருந்தும் ஓய்வுப் பெறவேண்டும்.

அவர் தொடர்ந்தும் அப்பதவியில் நீடிக்க விரும்பினால் முன்னரே அதற்கான கோரிக்கையை முன்வைத்திருக்க வேண்டும்.

எனினும், அவர் இதுவரை அவர் பதவியில் நீடிக்க வேண்டும் என்று எவ்வித கோரிக்கையும் முன்வைக்கவில்லை என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்தெரிவித்தன.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 1 9ஆவது திருத்தச் சட்டத்துக்கமையச் சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு ஆரம்பிக்கப்படவுள்ளது. சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தேர்தல் ஆணையாளரின் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவின் கீழ் வரவுள்ளது.

சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு ஆரம்பிக்கப்படவுள்ளதாலேயே தேர்தல் ஆணையாளர் பதவிக் காலத்தை நீடிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கவில்லை எனத் தேர்தல் ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் 19ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தனது பதவிக் காலத்தை 65 வயதுவரைநீடித்துக்கொள்வதற்கானவாய்ப்புகளும்உள்ளன.(த)


## விபத்தில் சிறுமி சாவு

மதவழிபாட்டுக்கு மக்களை ஏற்றிச் சென்ற சிறிய ரகப் பாரவூர்தி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளா னதில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 13பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்றுக் கொழும்பு– அநுராதபுரம் பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதில் உயிரிழந்த சிறுமி 8வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் ,படுகாயமடைந்த 13 பேரில் 4பெண்கள் ,3ஆண்கள்,6 சிறுவர்கள் உள்ளடங்கியுள்ளனர். அநுராதபுரத்திற்கு மதவழிபாடு ஒன்றை மேற்கொள்ள சென்றபோதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)



## இராசு நம்பியார் (அப்பு)

குமரபுரம் பரந்தனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசு நம்பியார் நேற்று முன்தினம் (01.05.2015) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசு பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நகலிங்கம்-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணி (மணி)யின் அன்புக் கணவரு ம், திரோஜினி, அகிலன், அனுந்தா, தினேஷா (தூசி) ஆகியோரின் அன் புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரக்கன் கட்டு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி:-077 9967102

தகவல்:மனைவி, பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 03.04.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர் தயாசலா குகராசா

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாதகல் கிழக்கு, மாதகல்.

குடும்பத்தினர்.

## நன்றி நவிலல்



### அமரர் சுப்பிரமணியம் செந்தில்நாதன்

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சுப்பிரமணியம் செந்தில்நாதன் அவர்கள் நோயுற்ற வேளையில் வைத்தியசாலைகளில் அன்புடன் கண்காணித்த வைத்தியர்கள் தாதியர்கள், சிற்றூழியர்களுக்கும் அவ்வேளை களில் அன்புடனும் பாசத்துடனும், தமமால் இயன்ற உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அன்னாரின் ஆத்மா பிரிந்த செய்தி கேட்டவுடன் நேரில் வந்தும் தொலைபேசி வாயிலாகவும் பத்திரிகைவாயிலாகவும், துண்டுப்பிரசுரம் மூலமாகவும், மலர் வளையங்கள் மூலமாகவும்; பதாதைகள் வாயிலாகவும், தமது அனுதாபங்களையும் அஞ்சலிகளையும் செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரி, வட்டு தொழில்நுட்பவியல் கல்லூரி சமூகத்தினர் மற்றும் அராலி ஆகாயக்குளம் விநாயகர் தேவஸ் தானம், அராலி ஆவாரம்பிட்டி ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான அன்பர்கள் அனை வருக்கும் மேலும் அன்னாரது இறுதிஅஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டோருக்கும் இரங்கல் உரை நிகழ்த்திய அன்பர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உடபதபாற் கந்தோர் ஒழுங்கை, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 12.04.1947 இறப்பு 02.05.2015

### திருமதி கமலாதேவி சிவபாதம்

விளங்காவத்தை மயிலிட்டி வடக்கு, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோயிலடி மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சிவபாதம் நேற்று (02.05. 2015) சனிக்கிழமை காலமாகி விட்டார்.


அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை சிவபாதத்தின் (சித்திரம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான காங்கேசு -இலட்சுமி தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-சிதம்பரம் ஆகியோரின் அன்பு மருமகளும், கஜேந் திரன் (லண்டன்), சுஜேந்திரன், குபேந்திரன் (தபாலகம், காங்கேசன்துறை), சுமந்திரன் (கிராம அலுவலர், காரைமத்தி J/48) ஆகியோரின் பாசமிகு தாயும், மேகலா (லண்டன்), நிரோசன், கேஷநந்தினி (உப தபாலதிபர், உடுவில்) ஆகியோரின் மாமியும், ஜஷன் (லண்டன்), சுபரமி ஆகியோரின் அன்புப் பேர்தியும், ஆனந்தகுமாரசாமி, ஆறுமுகசாமி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2015) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நரியிட்டான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஐயனார் கோயிலடி, மல்லாகம்.

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சின்னையா கந்தையா

### (வேம்பொடு கேணி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், கச்சார்வெளி பிள்ளையார் ஆலயபரிபாலனசபை முன்னாள் பொருளாளரும்)

கொடிகாமம் மயிலபுரத்தைப் பிறப்பிடமாகவும் பளை வேம்பொடு கேணியை நிரந்தர வசிப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா - கந்தையா 2015. 04.29 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - பாக்கியம் தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் சகோதரனும், தனபாலசிங்கம் (மணியம் கராஜ் உரிமையாளர்),காலஞ்சென்ற தவமலர் மற்றும் செல்வகுலசிங்கம் (சுகந்தினி லொறி உரிமையாளர்), தருமகுலசிங்கம் (அதிபர்- யா/ செங்குந்த இந்துக் கல்லூரி), தவமணி, செல்வராணி (கொலண்ட்), குமாரகுலசிங்கம் (பிரபல தேங்காய் வியாபார உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவமலர், சிவபாதம், சிவமணி, தனமணி, சிவப்பிரகாசம், சிவயோகநாதன் (கொலண்ட்), உதயகுமாரி ஆகியோரின் அன்பு மாமனும், நிறஞ்சன் (இத்தாலி), சகிலன் (ஆசிரியர் - பிரமந்தனாறு மகாவித்தியாலயம்),வாசுகி (லண்டன்), சஞ்சீவன் (BA பட்டதாரி), சாந்தமலர், பூபாலசிங்கம் (கட்டார்), குணபாலசிங்கம் (கனடா), ரூபமலர், நவமலர், கவிதாமலர் (பணியாளர் ஆதாரவைத்தியசாலை தெல்லிப்பழை), காலஞ்சென்ற நந்தினி மற்றும் குமுதினி (BA பட்டதாரி), கௌசலா (முன்பள்ளி ஆசிரியர் பளை), செல்வரூபன் (கனடா), வசந்தரூபன் (கனடா), சுகந்தினி (படவரைஞர்), ஆனந்தரூபன் (வாகன உரிமையாளர்), பாமினி (யாழ்.பல்கலைக்கழக நான்காம் வருட விஞ்ஞான பீட மாணவி), சிவரூபன் (சிவாக்குட்டி டிப்பர் உரிமையாளர்), சாந்தினி, சரணியா (ஆசிரியர் - கனகரத்தினம் மகாவித்தியாலயம்), சுகந்தன் (ஆசிரியர் - மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி) சுஜீவன், சஞ்சியா (விஞ்ஞானப் பிரிவு மாணவி 2014 வேம்படி மகளிர் கல்லூரி), கிருபா கரன் (விநாயகர் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் உடுப்பிட்டி மாக்கற்), சுதாகரன் (லண்டன்), மதிவதனி வளர்மதி (சமுர்த்திவங்கி அபிவிருத்தி உத்தியோகத்தர் உடுப்பிட்டி), சிவ லக்ஷன் (A/L மாணவன் யா/ முத்துத் தம்பி மகாவித்தியாலயம்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2015.05.04) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியவில் கல்வியங்காடு செங்குந்தா வீதி, (செங்குந்தா இந்துக் கல்லூரி அருகில்) குமாரகுலசிங்கத்தின் (சிறி பிரபல தேங்காய் வியாபார உரிமையாளர்). இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரிகைக்காகச் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செங்குந்தா வீதி,
திருநெல்வேலி, கிழக்கு.
தொ.பே. 077 481 5914

தகவல்: குடும்பத்தினர்.

(69436) (45.3)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**துரையப்பா நடராஜா**
(நடராஜா கராஜ் -உரிமையாளர்)
திதி: (03.05.2015)
தோற்றம் 20.09.1933 மறைவு 25.04.2013

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறாது உங்கள் பிரிவு
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

ந. முரளிதரன் (மகன்)
குடும்பத்தினர்.
12, BS வீதி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர்த் துளிகளின் பதினோராம் ஆண்டதனில்




அமரர்
**தில்லைநாதன் கெங்காதரன்**
(தரன் மரக்காலை உரிமையாளர் கொக்குவில்)
கங்காவின் அரவணைப்பில் 20.08.1970
கங்காவின் அணைப்பில் 03.05.2004

ஆண்டுகள் பதினொன்று ஆனாலும் நித்தமும் உம்
நினைவுகளால் விழியோரம் கண்ணீர்த் துளிகளால் கசிகிறது
உங்கள் பிரிவதனால் சிறையில் அடைபட்ட சிறுத்தை போல
சிந்தையில் அடங்காமல் சீறுகின்றது எம் மனம்
நரம்பறுந்த வீணையில் நாதத்தைத் தேடுகிறது போல்
நீங்களில்லா நம் வாழ்க்கை...
கண்ணீரில் உயிரை வைத்துக்கொண்டு இன்று நீங்கள் காற்றில்
கலந்தாலும் என்றும் உங்கள் நினைவுகளைச்
சுமந்து கொண்டு இருப்போம்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### பசுபதிப்பிள்ளை திரிபுவனப்பெருந்தேவி



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பசுபதிப்பிள்ளை - திரிபுவனப்பெருந்தேவி 30.04.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் மதியழகன், கோப்பெருந்தேவன், தமிழரசி ஆகியோரின் சகோதரியும் சிவனேசன், ஸ்ரீகுமாரி (கௌரி), தர்சினி ஆகியோரின் மைத்துனியும் கௌரிசன், மதீசன், மதுசிஜா, மதுமிதன் ஆகியோரின் மாமியாரும் ஜாழினி, சிவகணேசன் ஆகியோரின் சிறிய தாயும் முகுந்தனின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பரராசசேகரப்பிள்ளையார்
கோவிலடி,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

### நீக்கிலாப்பிள்ளை பீற்றர்



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், பிரதான வீதி, நவாலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை பீற்றர் 01.05.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பிலோமினாவின் பாசமிகு கணவரும், நிக்கலஸ் யூட்சன் (டோகா), நிக்கலஸ் றொபின்சன் (வைத்தியர், சுன்னாகம் வைத்தியசாலை), நிக்கலஸ் வின்சன் (HRDA - பிரதேச செயலகம், காரைநகர்), மேரிஸ்ரெலா (D.D.O. பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), கொலஸ்ரிகா (தாதி- தேசிய வைத்தியசாலை, கொழும்பு), றெஜினா (ஆசிரியர்- யா/மாதகல் சென் ஜோசப் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாம்பிகை, திரேஸ்மேரி, மாலினி, ஜெயக்குமார், றெஜிநோல்ட், யூட் அன்ரன் ஆகியோரின் மாமனும், நிலுக்ஷிகா, அக்ஷிக்கா, லக்ஷிகா, வினோயன், அபிசா, பிறைட்நோர், ரொனால்டன், பிளசிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.05.2015) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து சென்பீற்றர் தேவாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி,
நவாலிகிழக்கு [illegible]

தகவல்:
[illegible] Dr P.N [illegible]

# கரவெட்டி பிரதேச கலை இலக்கியப் போட்டிகள்

கரணவாய், மே 3

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள், பிரதேசக் கலை ஞர்களின் கலை ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பிரதேச கலை இலக்கிய விழா நடத்தப்படவுள்ளது. இதற்கு பொருத்த மானவரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களில் சிரேஷ்ட பிரிவுக்கு கட்டுரை, கவிதை, கவிதைப்பாடல், பாடல் நயத்தல் போன்ற போட்டிகளும், கனிஷ்ட பிரிவினருக்கு கட்டு ரைப் போட்டி, கவிதைப் போட்டி என்பவற்றுடன் கவிதைப் பாடல் போட்டிகளும், பாலர் பிரிவுக்கு கவிதைப்பாடல் கையெழுத்தப் போட்டிகள் என்பவையும் நடத்தப்படவுள்ளன.

திறந்த போட்டியில் பாடல் ஆக்கம், நாட்டார் கலை, கற்றல் போட்டிகள், இலக்கிய விவரணப் போட்டிகள், சிறு கதைப் போட்டிகள், கவிதை ஆக்கம், சிறுவர் கதை ஆக்கம் என்பவை நடத்தப்படவுள் ளன.


இந்தப்போட்டிகளில் பாட சாலை மாணவர்களுக்கான கவிதைப்பாடல்கள் மற்றும் கையெழுத்துப் போட்டிகள் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்பாகவும் ஏனைய போட்டிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு முன்பாகவும் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்குமாறு கரவெட் டிப் பிரதேசசெயலர் சிசிவசிறி கேட்டுள்ளார். (வ-108)

## மரண அறிவித்தல்

### முருகன் கதிரன் (ஜெகோவா)

(ஓய்வு பெற்ற வைத்தியசாலைப் பணியாளர்)



நயினாதீவைப் பிறப்பிடமாக வும், அக்கராஜன் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் கதிரன் 01.05.2015 வெள்ளிக்கிழமை இறைவனுக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக்கணவரும் நிகால், பிறீடா, காந்தன், எப்சிபா ஆகியோரின் அன்புத் தந்தையும், சித்திரா, பாலினி ஆகியோரின் பாசமிகு மாமனும், யஸ்மியா, எல்கான், யாபேத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பரிசுத்த உடல் இன்று (03.05.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அக்க ராஜன் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

## முதலாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



அமரர்
**மயிலன் கந்தசாமி**
திதி: பூரணை (03.05.2015)
மலர்வு 14.01.1954 உதிர்வு 14.05.2014

அகல் விளக்காய் ஒளி தந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
இமைதில் செழிப்புடன் வாழ்வதற்கு
அன்பின் வழிகாட்டிய எம் தெய்வத்திற்கு
ஓராண்டு நிறைவதனில் அஞ்சலிகள் பல

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

## மட்டு. வாவியில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, மே 03

மட்டக்களப்பில் நேற்று முன்திணம் மாலை காணாமல் போன குடும்பஸ்தர் நேற்றுப் பகல் மட்டக்களப்பு கல்லடி வாவியோரம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு கல்லடி நிவைரா விடுதி வீதிப் பக்கமாகவுள்ள வாவியிலிருந்து இவர் சடலமாக மீகப்பட்டுள்ளதாகக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான வீதி கிரான் பிரதேசத்தைச் சேர்ந்த ஞானமணிவிதிஸ்தகுமார்(வயது-40) எனும் குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீகப்பட்டவர் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.(த)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**இராசேந்திரம் சொரூபகாந்தன்**
திதி: பிரதமை (04.05.2015)



அன்னையின் மடியில் 18.08.1955
ஆண்டவன்அடியில் 15.04.2014

எங்கள் ஆருயிரே அப்பா!
அப்பா! என்றழைத்து ஓராண்டு ஆனது என்றும் எம் சிந்தையில் செயல்களில்
கலங்கரை விளக்கமாய் நின்றிடுங்கள் அப்பா!
எம் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகளுடன் வாழ்வோம்
ஆண்டுகள் ஒன்று ஆனாலும் அப்பா! அழியாது உங்கள் நினைவு
காலங்கள் பல ஆனாலும் அப்பா! நெஞ்சதனை விட்டு ஆறாது - எம்துயர்
உங்கள் நினைவுடன் வாழ்ந்த நாள்களை எண்ணியே வாழ்கின்றோம் - எந்நாளும்
பெற்றெடுத்து எம்மைப் பெருமையுடன் வளர்த்தீரே!
பாரினிலே நாம் பரவசமாய் வாழ்ந்திடவே
பாதைதனை அமைத்து விட்டு பரமசிவன் பாதம் சென்றீரோ - அப்பா!
கண்ணை இமை காப்பதுபோல் எங்களைப் பேணிக் காத்தவரே!
கண் கலங்காமல் காலமெல்லாம் வாழ்ந்திடவே
வழி அமைத்துவிட்டு கடவுளிடம் சரணம் அடைந்தீரோ - அப்பா!
குழந்தைகள் நாம் குறைவின்றி வாழ்ந்திட வேண்டுமென்று
நிறைவாக எமை வளர்த்த நினைவாற்றல் எமக்குண்டு
நேர்மையாய் நாம் இன்று நேர்த்தியுடன் வாழ்வதனை
நெற்றிக்கண் உடையானுடன் - சேர்ந்தே நீங்கள் பார்ப்பது நிறைவாக உள்ளதையா!
ஆண்டுகள் ஒன்று கடந்தாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சம் விட்டு அகலாதையா!

தகவல்:
சாலினி (மகள்)
தொ.பே. 077 056 4781

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கில் ஊடுருவும் வெளிமாவட்ட வியாபாரத்தால் விளைவது கேடே...!

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து, வடக்கில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்களின் வருகையைக் கட்டுப்படுத்த முடிவாகி உள்ளது. அதற்கான தீர்மானத்தை வடக்கு மாகாணசபை ஏகமனதாக நிறைவேற்றி உள்ளது.

வடக்குக்கு வந்து நடைபாதைகளில் வியாபாரம் செய்யும் வெளியார்களினால், இங்குள்ள வர்த்தகர்கள் பெரிய அளவில் பாதிப்புற்று நட்டமும், கஷ்டமும் அடைகிறார்கள். பலவழிகளிலும், வகைகளிலும் பாதிப்புறுகிறார்கள்.

அதனாலேயே, வெளியார் இங்கே வியாபாரம் செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தவிர்க்க முடியாத முடிவை, வடக்கு மாகாணசபை ஏகமனதாக நிறைவேற்றி உள்ளது.

தெற்கில் இருந்து வடக்கே வரும் நடைபாதை வியாபாரிகளால், மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களின் நிரந்தர வர்த்தகர்கள் பாதிப்புறுவதால், மாகாண சபையின் தீர்மானம் -- முடிவு -- குறித்து எதிர்மறை விமர்சனங்களுக்கு இடமில்லை.

எனினும், இதனை ஒரு விவகாரம் ஆக்கி, இனவாத ரீதியிலான கருத்துக்களைப் பெருக்கி, வர்த்தகக் குழப்பத்தை ஏற்படுத்த முயல்வோர் மீது கொழும்பு அரசு (அதன் வர்த்தகத்துறை அமைச்சு) உரிய, உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது அத்தியாவசியம்.

வடக்கில் வர்த்தகத்தில், வியாபாரத்தில் ஈடுபடுவோர் இந்த மாகாணத்தின் மைந்தர்கள். அவர்களில் மிகப் பலர், வாடகைக்குக் கடை எடுத்தும், பல வகைசார் வரிகளைச் செலுத்தியும் தமது தொழிலைச் செய்கி றார்கள்.

அவர்களின் வியாபாரத்தைத் தட்டி வீழ்த்திக் கெடுக்கும் கைங்கரியங்களில், முதன்மை பெறுகிறது தெற்கிலிருந்து வரும் நடைபாதை வியாபாரிகளின் வர்த்தகச் செயற்பாடுகள்.

கடந்த பல ஆண்டுகளாக அவ்வகைச் செயற்பாடு, தடுப்பார் எவருமில்லை என்ற நிலையில், மேலோங்கி இருந்தது. குறிப்பாக, வடக்குக்கான பயணக்கதவு திறக்கப்பட்டதன் பின்னர் நிலைமை, தட்டிக் கேட்க எவரும் இல்லையெனின் தம்பி சண்டப் பிரசண்டன் என்ற நிலைக்கு உயர்ந்து வருகிறது.

வெளிமாவட்டங்களில் இருந்து "சீசன் வியாபாரத்துக்கு"ப் படை எடுக்கும் தெற்கு நடைபாதை வியாபாரிகள், வட மாவட்டங்களின் நிரந்தர வர்த்தகர்களை, சொந்த மண்ணின் வர்த்கர்களை "தண்டிக்கும்" போக்கை முன்னெடுக்கிறார்கள் என்று கொள்வதில் தப்பில்லை.

வடக்கு மாகாணத்தின் வர்த்தகர்களில் பலர், வங்கிகளில் கடன்பெற்று வியாபாரத்தை வளர்த்து உயர்த்தும் வாய்ப்பு இருந்த போதிலும், வெளிமாகாணங்களில் இருந்து வந்து நடைபாதை வியாபாரம் செய்வோரால் பாதிப்புறுகிறார்கள் என்ற நடைமுறை உண்மையை, யதார்த்தத்தை --

எங்கள் (வடக்கு) மாகாணசபை மட்டுமன்றி, ஏனைய மாகாண சபைகளும், கொழும்பு அரசும் உணர்ந்து செயற்பட வேண்டிய, தட்டிக் கழிக்க முடியாத, தேவை எழுகிறது.


நாட்டின் ஒரு பகுதியில் இருந்து குறிப்பிட்ட மாகாணம் ஒன்றுக்குச் சென்று வர்த்தகம், வியாபாரம் செய்வதற்குத் தடை விதிக்க முடியாது என்ற கருத்து சில பக்கங்களில் இருந்து எழலாம்; அதனை எதிர்பார்க்கலாம்.

ஆனால், சொந்தப் பிரதேசவாசிகளின் தொழில் துறையை தட்டிப் பறிக்க வகை செய்வது என்பது, சர்வாதிகாரத்தின் ஒரு படி. அதனைப் புதிய அரசு கருத்தில்கொள்ளுமா.....?

# மஹிந்த வந்தால் தமிழருக்கு 'வேட்டு'

## அரசியலில் பதற்ற நிலைவரலாம்

● ராயிஸ் ஹஸன்



முன்னாள் ஜனாதிபதியின் அடக்கப்பட்ட ஆதிக்கம் மீண்டும்மேலெழத்தொடங்கியுள்ளமை, அரசுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகக் கருத முடிகிறது.

ஒரு தசாப்த காலம் அதிகாரத்தைத் தன் கைக்குள் வைத்திருந்து நாட்டையே ஆட்டிப்படைத்த மஹிந்த ராஜபக்ஷ குடும்பம், முதற்கட்டமாக 2005ஆம் ஆண்டுத் தேர்தலில் தட்டுத்தடுமாறி ரணிலை ஓர் இலட்சத்து 80 ஆயிரம் வாக்குகளினால் தோற்கடித்து ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றியது.

தனது முதல் பாதியாட்டத்தில் தமிழ் மக்களை அடக்கும் போக்கைப் பின்பற்றிய மஹிந்த, 2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தை வெற்றிகொண்டு பெரும்பான்மை மக்களின் கதாநாயகனாக உருவெடுத்தார்.

அதிகார ஆசையின் உச்சக்கட்ட வெறியினால் மஹிந்த தனது இரண்டாவது பாதியாட்டத்தைத் தொடங்குவதற்காக தேர்தலுக்கு அவசர அவசரமாகச் சென்று இரண்டாம் கட்டமாக பொன்சேகாவை 18 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி மீண்டும் தனது அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

இரண்டாவது காலப் பகுதியிலேயே மஹிந்தவின் அட்டகாசம் மேலோங்கத் தொடங்கியது. நீதித்துறை, நிர்வாகத் துறை, சட்டவாக்கத்துறை என முத்துறைகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு நினைத்ததை முடிப்பவன் என்ற விதத்தில் செயற்பட்டார். இதனால் அவரை ஒரு சர்வாதிகாரி யாக எதிர்க்கட்சியினர் சித்திரித்தனர்.

அதற்கு மெருகூட்டும் வகையில் சில அரசியல் இலாபம் தேடும் சிறுபான்மைக் கட்சிகளினது ஆதரவுடன் 18ஆவது திருத்தச் சட்டத்தையும் நிறைவேற்றிக் கொண்டார். வாழ்நாள் முழுவதும் ஆட்சியில் ஆதிக்கம் செலுத்தும் நோக்குடன் ஜனாதிபதியொருவர் எத்தனை தடவைகளும் தேர்தலில் போட்டியிட்டு வென்று பதவி வகிக்க முடியும் என்ற சட்டத்தையும் அதற்குள் உள்ளடக்கினார்.

மஹிந்த சிறுபான்மை மக்கள் விடயத்தில் கையாண்ட அணுகுமுறை, இறுதிக்கட்டத்தில் அரசில் இடம் பெற்ற பெருமளவிலான மோசடிகள் என்பவற்றினால் தனது செல்வாக்கை நாளுக்குநாள் இழந்து வந்தார். 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்பதுபோல தெற்கு மக்களின் கதாநாயகனான இவர், அம்மக்களுக்கு வில்லனாகத்தோன்றஆரம்பித்தார்.

ஊவா மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வலுவடைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பின்னடைவைச் சந்தித்தது. இது மஹிந்தவுக்குப் பேரிடியாக அமைந்த போதிலும் மூன்றாவது கட்ட ஆசையையும் நிறைவேற்றவேண்டும் என்பதற்காக எதனையும் பொருட்படுத்தாது ஜனாதிபதித் தேர்தலுக்கு வெகுவிரைவில் போகவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தார்.

நீதியற்ற நீதிமன்றம், நாடக நாடாளுமன்றம், அடிமை அமைச்சரவை எனத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த மஹிந்த தான் விட்ட சில குறைபாடுகள் தனக்கே வினையாக மாறும் என எதிர்பார்க்கவில்லை.

ராஜபக்ஷக்களின் அடாவடித்தனங்களினால் கூட்டணியில் வெட்டுக் குத்துகளுக்கு மத்தியில் செயலிழந்து போயிருந்த கூரிய ஆயுதங்கள் சந்தர்ப்பம் வரும்வரை காத்திருந்து மஹிந்தவின் முதுகில் பலமாகக் குத்தியதை நாங்கள் கடந்த கால அரசியலில் அவதானித்தோம்.

இந்த நிலையில், மஹிந்தவின் சாம்ராஜ்யத்தை அடியோடு முறியடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உள்ளிட்ட குழுவினர் சுகாதார அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேனவை பொது ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கினர்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜாதிக ஹெல உறுமய, த.தே.கூ., மு.கா. உள்ளிட்ட பல கட்சிகளின் கூட்டு முயற்சியின் விளைவாக மைத்திரி ஒபரேஷன் இலக்குநிறைவேறியது. மஹிந்தவின் கதைக்கு முற்றுப் புள்ளிவைத்து,மைத்திரியின் வாக்கியம் ஆரம்பமாகியது.

அதிகாரத்தின் உச்சத்தை அனுபவித்த மஹிந்தவுக்கு தங்காலையில் அடைந்துகிடக்க முடியாது. மீண்டும் அலரி மாளிகையின் சுகம் அனுபவிக்கவே மனம் நாடுகின்றது. இதற்காக என்னவேண்டுமானாலும் செய்ய அவர் தயாராக இருப்பது தெரிகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தனது ஆதிக்கத்தை மீண்டும் ஊன்றுவதற்காக மஹிந்த அடிமட்டக்கட்சி உறுப்பினர்களுடன் அடிக்கடி இரகசியச் சந்திப்புக்களையும் மேற்கொண்டுவந்தார்.

ஜனாதிபதியின் செல்லப்பொம்மையாக இருந்த நிமல் சிறிபால டி சில்வா எதிர்க் கட்சித்தலைவர் பதவியைப் பெற்றமையினால் அரசின் கொந்தராத்துக்காரராகவே காய்நகர்த்தல்களை முன்னெடுத்தார். இதனால் வெறுப்படைந்த கட்சி உறுப்பினர்கள் சிலர் மஹிந்தவுடன் அடிக்கடி சந்தித்து கட்சி உள்ளக இரகசியங்களைப் பகிர்ந்து கொண்டு வந்தனர்.

57 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 50க்கும் மேற்பட்ட மாகாண, உள்ளூராட்சி உறுப்பினர்கள் மஹிந்தவின் தங்காலை கோர்ல்டன் வீட்டுக்குப் படையெடுத்தனர். அங்கு அவர்கள் முன்னாள் ஜனாதிபதியுடன் எதிர்கால அரசியல் தொடர்பில் விசேட பேச்சில் ஈடுபட்டனர்.

மஹிந்தவுடனான வெளிப்படையான சந்திப்பின் பின்னர் அரசுக்கெதிரான செயற்பாடுகளில் சு.க. உறுப்பினர்கள் மும்முரமாக இறங்கியுள்ளமை இந்த வாரத்தில் வெளிப்படையாகத் தெரியக்கூடியதாக இருந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.க.யின் பொதுச் செயலாளராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்க மஹிந்தவுடன் இணையும் போது பணமாற்றம் இடம்பெற்றதாகத் தெரிவித்து அது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு ஊழல் மோசடிஆணைக்குழுவில் மஹிந்தவை கடந்த 23ஆம் திகதி முன்னிலையாகுமாறுஅழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அதற்குஎதிர்ப்புத்தெரிவித்து நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் சிலர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனால் 19ஆவது திருத் தச் சட்டம் தொடர்பான இறுதி விவாதம் மற்றும் வாக்கெடுப்பு பிற்போடப்பட்டது.

இந்த நிலையில், மஹிந்த ஊழல் – மோசடி ஆணைக்குழுவில் முன்னிலையாக வேண்டிய அவசியமில்லை என்பதுடன், அதிகாரிகள் அவரது வீட்டிலேயே விசாரணையை மேற்கொள்வர் என சபாநாயகர் அறிவித்ததைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

இதேவேளை, சிங்கள ராவய அமைப்பு உள்ளிட்ட மஹிந்த ஆதரவு தரப்பினர் அதே கோரிக்கையை முன்வைத்து செவ்வாய்க்கிழமை உயர் பாதுகாப்பு வலயத்தில் கடும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். இவர்களுடன் நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் செய்தவர்களும் இணைந்து கொண்டதுடன் நாடாளுமன்றத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயத்தைத் தெளிவுபடுத்தி ஆர்ப்பாட்டத்தைக் கலைத்திருந்தனர்.

இவ்வாறான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பிரதமர் ரணில் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன், மஹிந்த மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தமையும் முக்கிய அம்சமாகும்.

மஹிந்த, தான் இழந்த அதிகாரத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் இரகசியமாக இறங்கியுள்ளார். அது சாத்தியப்படாவிடின் வெளிப்படையாக அரசியல் களத்தில் குதித்து தெற்கில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் அரசு ஆட்டம் கண்டுவிடும் என்பது அரசியல் அவதானிகளின் கணிப்பாகும். மேலும் வெகுவிரைவில் பொதுத் தேர்தல் நடத்தப்படக்கூடிய சந்தர்ப்பம் நிறையவே உள்ளது. இதில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மைப்பலத்தைப்பெறுமா?,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவடையுமா? – என்பனவே எதிர்கால அரசியலில் பெரும் பதற்றமாக இருக்கப்போகின்றன.

எது எவ்வாறாயினும், மஹிந்த ஒபரேஷன் வெற்றியளிக்குமாயின் இந்நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு வேட்டு நிச்சயம். காரணம், அண்மையில் இடம்பெற்ற மஹிந்தவுக்கு ஆதரவான தேசிய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் ஏந்தியிருந்த தேசியக் கொடிகளில் சிறுபான்மை மக்களை அடையாளப்படுத்தும் தேசிய சின்னங்கள் அகற்றப்பட்டிருந்ததுடன் இந்த விடயம் தொடர்பில் எவருமே கவனத்தில் கொள்ளவுமில்லை. ஆகவே மஹிந்தவின் அடுத்த நகர்வு இனவாதம்தானே?

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### வீடு விற்பனைக்கு

யாழ்.அரசினர் ஆஸ்பத்திரிக்கும் புகையிரத நிலையத்துக்கும் இடையில் வீடு ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 344 8863

(59318)(4.3.7)

### மலிவு விலையில் கருங்கல் விற்பனை

சகல விதமான கருங்கற்களும் மலிவு விலையில் பெற முடியும்.

தொடர்பு: நிவேஸ் 077 237 5304
இந்திரா 077 486 1421

10 KM இற்கு உட்பட்ட இடங்களுக்கு இலவசமாக வாகனம் விடப்படும்.

KMS முறிகண்டி

(57089)(4.3.7)

### விற்பனைக்கு

இல.84, 86 கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் 4 பரப்புக் காணி யில் உள்ள 5 அறைகள், 2 குளியலறை கள் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 807 2985

(58356)(4.3.7)

### கார் விற்பனைக்கு

Toyota Tercel, 1994 Model, Car விற்பனைக்கு. A/C நன்றாக வேலை செய்கிறது. Power Steering, Alloy Wheel, Tyresand Battery புதிது.

(59377)(4.3.7) தொடர்பு: 071 686 7209

### வீடு வளவு விற்பனைக்கு

ஈச்சமோட்டை வீதியில் புது வீட்டுடன் சேர்ந்த 6 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
நவீன வசதிகள் யாவும் உண்டு.

தொடர்பு: 071 564 4236, 077 861 0025

(59316)(4.3.7)

### விற்பனைக்கு

Schooty Pep, முதிரைக் கதிரைகள், கடைக்குரிய ஸ்ராண்டுடன் கூடிய பெயர்ப்பலகை, பெட்டி உடைக்கப்படாத புத்தம் புதிய Preethi Grinder, கோயில்களுக்கும், நகைக்கடைகளுக்கும் ஏற்ற இரும்புப் பெட்டகம் என்பன விற்பனைக்குள்ளன.

(59421)(4.3.7) தொடர்பு: 072 931 1927

### காணி விற்பனைக்கு

யாழ் உரும்பிராய் Church Lane பலாலி வீதிக்கு அடுத்த by lane இல் வீடு (5 Rooms) 3பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (15467)(3.9)

தொடர்பு: 021 321 7840, 077 114 7395

### விற்பனைக்கு

நல்லின ஒரு நாள் ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு.

தொடர்பு: 076 807 9351 (59433)(4.3.7)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோண்டாவில் மேற்கு முத்தட்டிமட ஒழுங்கை, கே.கே.எஸ். வீதி அருகில் 4 பரப்புக் காணி யுடன் உள்ள புது வீடு விற்பனைக்குண்டு.
(சுற்று மதிலுடன்) (சி/15466)(4.3.7) 077 529 6698

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, அடைக்கலந்தோட்ட கந்தசாமி கோயிலுக்கு அண்மையில் $4\frac{1}{2}$ பரப்பு நிலத்தில் 5 அறைகள், சமையல் அறை மற்றும் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. (59419)(4.3.7)

தொடர்பு: 076 854 3909, 077 431 9749

### காணிகள் விற்பனைக்கு

கொக்குவில் சம்பியன் வீதியில் 2 பரப்பு மற்றும் தாவடி கே.கே.எஸ். வீதிக்கு மிக அருகில் $1\frac{1}{2}$ பரப்புக் காணித்துண்டுகள் விற்பனைக்குள்ளன. (59368)
தரகர் தேவையில்லை. (4.3.7)

தொடர்பு: 077 210 0972

### காணி விற்பனைக்கு

தாவடி வடக்கில் அமைந்துள்ள மாரியப்புலம் 6பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(59391) (3.9) தொடர்பு: 077 959 0238

### காணி விற்பனைக்கு

யாழ்.புகையிரத நிலையத்துக்கு அண்மை யில் வேம்படி வீதியில் (மாட்டின் வீதி அருகில்) $5\frac{1}{4}$ பரப்பு வெற்றுக் காணி மொத்தமாக விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 343 0017

(59426)(4.3.7)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

40 நாள்கள் நிரம்பிய நல்லின ஜேர்மன் செப்பேட் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 613 9307

(59386)(4.3.7)

### காணி விற்பனைக்கு

சுதுமலை கலாமந்திரா வீதி அருகில் $4\frac{1}{2}$ பரப்புக் காணியும் வீடு வளவும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 187 6600

(59312)(4.3.7)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி ஏ9 பாதையில் நகரசபை எல்லைக்குள் வாகன புகைப் பரிசோதனைக்கு அருகில் 6 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 976 6026, 021 222 2326

(41118)(4.3.7)

### காணி விற்பனைக்கு

அளவெட்டி அலுக்கையில் 2.5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (59399) (4.3.7)

தொடர்பு: 077 983 9288

### வீடு விற்பனைக்கு

கோப்பாய் வடக்கில் 3 பரப்புக் காணியுடன் கூடிய அறைகளைக் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

(சி/15473)(4.3.7) தொடர்பு: 077 952 7569

### காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு, ஞானபண்டிதா வித்தியா சாலைக்கு அண்மையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(57835) (45.3.7) தொடர்பு: 075 210 2281

## மணமக்கள் தேவை

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984 ஆம் ஆண்டு பிறந்த ரேவதி 2 ஆம் பாதம் கிரகபாவம் $19\frac{1}{2}$ உடைய அபிவிருத்தி உத்தியோகத்தராக அரச சேவைபுரியும் 6 அடி உயரமான மணமகனுக்கு பெற்றோர் அழகான மெல்லிய உயர்ந்த தோற்றம் கொண்ட அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளை எதிர்பார்க்கிறார்கள். பட்டம் பெற்று அரச சேவையை எதிர்பார்த்திருப்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 077 654 4047, 021 222 1467

(59317)(4.3.7)

### மணமகள் தேவை

யாழ். இணுவில் இந்து கௌரவ குடும்பம் 1974 பூராடம் தனியார் துறையில் உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 077 952 5015

(59389) (4.3.7)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்ப 1990 இல் பிறந்த மணமகள் மிருகசீரிட நட்சத்திரம் உதயத்து செவ்வாய், செவ்வாய் பாவம் 32, மொத்த பாவம் 46 லக்னத்தில் Bio Medical Engineering படித்தவர். தகுதியுடைய எஞ்சினியர், எக்கவுண்டன், டாக்டர் மணமகன் தேவை. தகுதிக்கு தகுந்த சீதனம் கொடுக்கப்படும்

இலகும் திருமண சேவை, கைதடி.

தொடர்பு: 077 399 3011, 021 720 1373

### மணமகன் தேவை

1973 பிறந்த இந்து கௌரவ குடும்பம் விவாகரத்துப் பெற்ற பட்டதாரி ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை. அரச உத்தியோகம் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 171 1386

## தேவை





### தேவை

விடுதி ஒன்றுக்கு கீழ்க்காணும் வேலைகளுக்கு திறமையானவர்கள் தேவை.
* வரவேற்பாளர்
* மேசன், கூலி
* Room பராமரிப்பாளர்.
* சிற்றுண்டி, உணவு தயாரிப்பாளர்.

தொடர்பு: 077 500 6769 (59430)(4.3.7)

**தேவை** யாழ் நகரில் வீடு, தோட்டத்தைப் பராமரிக்க ஆள் தேவை.
தங்குமிட வசதி வழங்கப்படும்.

(15463)(3.9) தொடர்பு: 077 772 7654

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

### பழுதடைந்த கணினிப் பாகங்கள் தேவை

பழுது அடைந்த LCD/LED மொனிட்டர்கள், கம்யூட்டர்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் உங்கள் இடத்திற்கே வந்து நல்ல விலைக்கு கொள்முதல் செய்யப்படும்.

(59431) (4.3.7) தொடர்பு: 077 397 3166

### வீடு வாடகைக்குத் தேவை

அரச உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றுக்கு சாவகச்சேரி நகர் அல்லது அதற்கு அண்மையான பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

(59416)(4.3.7) தொடர்பு: 071 211 7561

**தேவை** கொழும்பில் வசிக்கும் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு சமையற்காரர் தேவை. தங்குமிட வசதி உண்டு. 45வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். உறவுகளை இழந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(15464)(3.9) தொடர்பு: 077 779 3284

## வாடகைக்கு

### வாடகைக்கு

யாழ்ப்பாணம், Stanley Rd இல் உள்ள People Bank Building இன் 3 ஆம் மாடி (4000 சதுர அடி) வாடகைக்குண்டு.

தொடர்பு:
077 314 4861, 077 771 1339

(சி/15475)(4.3.7)

### வீடு வாடகைக்கு

சரவணன் வீடு புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தி பலாலி பிரதான வீதியில் (சேவிஸ்ரேசனுக்கு அருகில்) அமைந்துள்ள தோட்டக் காணியுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தோட்டம் செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
10 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

(59314)(4.3.7) தொடர்பு: 077 678 6312

### Room நாள் வாடகைக்கு

600/=, 800/=, 1200/=, 2500/=3950/=, A/C.TV இணைந்த குளியலறையுடன் Hotel Villa, 422, Galle Road, Wellawatte. 072 255 2222
(இராமகிருஷ்ண வீதிக்கு அருகில்)

### வீடு வாடகைக்கு

வவுனியா நகரில் இருந்து 1.2KM தூரத்தில் விசாலமான போக்குவரத்துப் பாதையில் அமைந்துள்ள முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட 10 அறைகளைக் கொண்ட மாடி வீடு வாடகைக்குண்டு போதுமான வாகனத் தரிப்பிட வசதியுண்டு. கல்வி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு: 077 735 2260 (59058)(4.3.7)

### வீடு வாடகைக்கு

குருபரன் : 0777 760 663

### வீடு வாடகைக்கு

நல்லூர், செட்டித்தெருவில் 3 அறைகளுடன் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

(சி/15466)(4.3.7) 076 850 8411/077 687 4651

## ஏனையவை

### சீரடி சாய்பாபா ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்

சாய்ராம் சாஸ்திரிகள்

ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டு பிரச்சினை, குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

காலை 9.00 மணி - மாலை 6.00 மணி வரை

076 809 7406

Land Mark Yaal inn Hotel

(59429)(4.3.7)

### பிரத்தியேக வகுப்புக்கள்

வீட்டிற்கு வந்து Spoken English மற்றும் கணினி கற்றுத் தரப்படும். (கணினி ஆசிரியரால் எடுத்து வரப்படும்)

தொடர்பு: 072 186 7203

(59392)(4.3.7)

### விற்பனைக்கு

ஹொண்டா 50 மோட்டார் சைக்கிள் ஜப்பான், மெறிஸ் மைனர் கார், சணல், யமுனா பாறி ஆடுகள் பாவித்த சலவை இயந்திரம், பொமேரியன் நாய்க்குட்டிகள் என்பன.

(59415)(4.3.7) தொடர்பு: 077 434 7800

### Video Editing

யாழ்ப்பாணத்தில் Full HD Video Editing செய்து தரப்படும்.
Blue Ray & DVD தரப்படும்.

தொடர்பு: 077 384 2077 (59324) (4.3.7)

Mail: newshadowmaking@gmail.com
Fb: newshadowmaking/077 384 2077

### சேவை

தாவடிக்கு அண்மையில் மிருகவைத்திய தேவைக்களுக்கு.

தொடர்பு: 077 973 8802, 021 224 2502

**கல்வி** TOEFL, IELTS, ETC ஆகிய சர்வதேச ஆங்கிலப் பாடநெறிகளை யாழ்ப்பாணத்தில் நெறிப்படுத்தி நடத்துவதற்குப் பொருத்தமான தகைமை உடைய ஆசிரியர்களைக் கொண்ட கல்வி நிறுவனங்கள் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றிகள்.

(சி/15469)(4.3.7) 077 611 0802 Leonard



(Consultant orthodontist)

(Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006

றோயல் மெடிக்கல் சென்றர்
தொடர்பு: 077 654 4731



# சீரணி நாகபூஷணி அ

## சீரணி, சண்

# ஆலய இரதோற்சவ

### பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



இந்துமா சமுத்திரத்தின் முத்தெனத் திகழும் இலங்கைத் தீவின் வடக்கே அமைந்துள்ள யாழ்ப்பாண குடாநாட்டின் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களுள் சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும். இங்கு வீற்றிருக்கும் அருள்மிகு சீரணி நாகபூஷணி அம்பாள் பக்தர்களுக்கு அருளாட்சி புரிந்து வருகின்றார். இவ் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில் மலர்ந்துள்ள மன்மத வருட வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழாவானது சித்திரை மாதம் 20ம் நாளாகிய இன்று (03-05-2015) நடைபெறுவது சிறப்பம்சமாகும். இவ்வகையில் இன்று நடைபெறும் தேர்த்திருவிழா நிகழ்வில் வெளியிடப்படும் தேர்த் திருவிழா சிறப்பு மலரிற்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் அம்பாளின் அருளாசி அனைவருக்கும் கிடைக்க எல்லாம் வல்ல அருளிமிகு சீணி நாகபூஷணி அம்பாளை வேண்டுகின்றேன்.

**திரு.எஸ்முரளிதரன்**
*பிரதேச செயலர், சண்டிலிப்பாய்.*

### நாடுவோருக்கு நலமருளும் நாகபூசணி தாய்க்கு தேர்த்திருவிழா

யாழ்ப்பாணத்தின் வடபகுதியில் இயற்கை எழிலும் தெய்வீகப் பொலிவும் பொருந்திய பிரதேசமாக விளங்கும் சண்டிலிப்பாய் பதிதனில் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. நாடிவரும் அடியவர்களின் வினைகளைப் போக்கி நலமளிக்கும் அம்பாளின் அருட்கோபுரங்கள் வரவழைக்க கண்கவர் வண்ணமும் கலைஎழில் காட்சியுமாகக் காணப்படும் அம்பிகையின் ஆலயம் அலைகின்ற மக்கள் மனங்களை அமைதிப்படுத்தி நிற்கின்றது. கோவிலின் சிறப்பும், பூர்வீகப் பெருமைகளும் அற்புதங்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஆலயமாக நாகபூசணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. இத்தகு பெருமைகளைக் கொண்ட ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் இரதோற்சவக் காட்சியானது கண்கொள்ளாக் காட்சி யாகும். தேர்த்திருவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**அன்னதான சபை**
**சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்**

### செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி



சீரும் திருவும் தரும் சீரணிநாகபூஷணி அம்பாள். தேர் ஏறிவரும் திருநாள் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். புதுமை நிறைந்த சக்தி தலமாக விளங்கும் சீரணியின் சிறப்பை அறியாதவர்களில்லை. ஆண்டு தோறும் திருப்பணிகள் நடைபெற்று புதுப்பொலிவுடன் ஆலயம் காட்சி தருவது திருப்தி தருகிறது. ஆலய அறங்காவலரும் அடியவர்களும் மிக அர்ப்பணிப்போடு ஆலயத்தை நேசித்து வருகிறார்கள். புதிய அன்னதான மண்டபம் உருவாக்கப்பட்டுள்ளமை இவ்வாண்டுப் பணிகளில் முதன்மை பெறுகிறது. கிராமத்து மக்கள் பலநூறு நேர்த்திகள் வைத்து வழிபாடு செய்யும் இப்புண்ணிய தலத்தின் தேர்விழா சண்டிலிப்பாய்த் திருநகர் தெய்வீகம் கொள்ளும் பெருநாள். இந்நன்நாளில் அம்பாளின் திருத்தேர் பவனி கண்டு அனைவரும் நல்லருள் பெறுவோமாக.


**கலாநிதி ஆறு.திருமுருகன்**
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*
*தலைவர்,*
*சிவபூமி அறக்கட்டளை.*

### இரதோற்சவ வாழ்த்து செய்தி



ஈழமணித்திருநாட்டின் வடபாலமைந்த சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்நகரின் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் சண்டிலிப்பாய் சீரணி எனும் திவ்விய திருப்பதியில் நாகபூஷணியாக வீற்றிருந்து தன்னிடம் தஞ்சமென்று வரும் அடியவர்களுக்கு எல்லாம் அருள்வாரி வழங்கும் அன்னையின் இராதோற்சவ பெருவிழா மன்மதவருடம் சித்திரை மாதம் 20ம் நாள் (03-05-2015) நடைபெறும் நன்நாளாகும். இத்திருநாள் குறித்து வாழ்த்துவதில் நான் மிகவும் ஆனந்தமடைகின்றேன். அபார சகதி நிறைந்த சீரணி நாகபூஷணிக்கு நேர்த்தி வைத்து பயன்பெற்ற பக்தர்கள் பல்வேறு திருப்பணிகளை காலத்துக்கு காலம் நிறைவேற்றி அம்பாளின் கடைக்கண் பார்வையால் பெருவாழ்வு வாழ்வது மானிடப் பிறவியில் பெற்ற பெரும்பயன் ஆகும். அம்பாளின் பேரருளால் எம்மண்ணில் நீதியான, மகிழ்ச்சியான வாழ்வு எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி.ஜெயந்தா சோமராஜ்**
**(செயலாளர்)**
*வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை*
*மானிப்பாய்.*



**ஆலய வ**

இலங்கையில் புகழ்பெற்

மணியகாரன் உடையார் பரம்பரையினராகிய இரா
வந்தார். அவர் மகன் இராமர் அவர் மகன் முருகேசு. முத்த
பிள்ளை, அன்னப்பிள்ளை, நன்னிப்பிள்ளை, மயில்வ
ஆகியோருடன் இசைந்து வாழ்ந்து வந்தார். நாகபூஷணி அ
ஒன்றிலே நாகபூஷணி அம்பாள் கனவில் தோன்றி தான் இ
தனக்கொரு கோயில் அமைக்கும்படி கேட்டதற்கு அமைய
செய்துவர வைத்திலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார்.
வழிபட்டு வந்தார்கள். காலம் காலமாக முருகேசு பரம்பரையி

## இரதோற்சவம் சிறப்


**ஐங்கரன் மோட்டோர்ஸ்**



சியாட் ரயர், Fevicol தயாரிப்புக்களின் ஏக விநியோகஸ்தர்கள். ஆட்டோ, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி, வாட்டர்பம் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்.
சந்தை முன்பாக, மானிப்பாய்.

**லீலா வெதுப்பகம் சுவையகம்**



சீரணி, சண்டிலிப்பாய்

**லம்போதரன் மோட்டோர்ஸ்**
பலாலி வீதி, டிப்போ அருகாமை, கோண்டாவில்

**சந்திரா கல் உடைக்கும் தொழிற்சாலை**
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.
தொ.பே : 077 1037026

**சக்தி எலக்ரிக்கல்ஸ்**
மின்சார உபகரணங்கள், இலத்திரனியல் பொருட்கள், வீட்டு மின் இணைப்பு பொருட்கள், PVC குழாய்கள், என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ஓடைக்கரை வீதி, சங்கானை.



**சுதர்சன்**
பிரதான வீதி, மானிப்பாய். தொ.பே : 0212255136

**நியூ சண்முகானந்தா ரேடீஸ்**
23, (58) பெரிய கடை, யாழ்ப்பாணம்
தொ.பே : 0212223356

**கணபதி ஹாட்வெயார்ஸ்**
தொட்டிலடி, சங்கானை.

**COMPUTER WORLD PRINTERS & TRAVELS**
All Kinds of Computer Works
7ம் கட்டை, சண்டிலிப்பாய்.

**ஆசைப்பிள்ளை அன் சன் நகை மாடம்**
கே.ரீ பிளாசா, பிரதான வீதி, சங்கானை.
தொ.பே : 0213212399

இன்று எமது நாட்டில் பல்வேறு நோய்களுக்கு தடுப்பு முறைகள், சிகிச்சை முறைகள், விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இருந்தபோதிலும், விலங்குகள் மற்றும் கட்டாக்காலி நாய்க் கடிக்குள்ளாகிச் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது.

# நாய், பூனைக்கடியிலிருந்து விடுபடுவோம்



விலங்கு விசர்நோய் பெரும்பாலும் நோய்த் தொற்றுள்ள நாயினால் பரப்பப்படுகின்றது. சிலவேளைகளில் பூனை, குரங்கு, கீரி, வௌவால், நரி போன்ற விலங்குகளாலும் தொற்று ஏற்படுத்தப்படலாம். இதன் நோய்க்காரணி வைரஸ் ஆகும். இது நரம்புத் தொகுதியைத் தாக்கி சாவை ஏற்படுத்துகின்றது. நோய் ஏற்பட்டால் சாவு நிச்சயம். நாய், பூனைக்கடியிலிருந்து எவ்வாறு எம்மை பாதுகாத்துக் கொள்வது?

கடந்த சில மாதங்களில் நாய்க்கடிக்கு இலக்கானவர்களையும் இதன் தாக்கம் கூடி மரணித்தவர்களையும் நினைக்கும்போது எமது நாட்டில் நாய்க்கடி வீதம் கூடி இருப்பதை புள்ளி விவரங்களினூடாகக் காணக்கூடியதாக உள்ளது.

தினமும் குறைந்தது ஒரு நாளைக்கு 25 – 35 பேர்கள் நாய்க்கடி, பூனைக்கடிக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் சிகிச்சை பெறுகிறார்கள் என்பதை புள்ளி விவரம் சுட்டிக் காட்டுகின்றது.

கடைசியாக வெளி வந்த புள்ளி விவரத்தின் படி, அரசு மற்ற மருத்துவத்துக்குச் செலவழிக்கும் செலவை விட நாய்க்கடி, பூனைக்கடிக்கு



உள்ளாவோருக்குச் செலவழிக்கும் செலவு கூடுதலாக உள்ளது.

வருடம் ஒன்றுக்கு 350 மில்லியன் ரூபா தொகையை இதற்காக அரசு செலவிடுகின்றது. இது மருத்துவத்துறையின் மருத்துவச் செலவினத்தில் இரண்டாவது இடத்தைப் பிடிக்கின்றது.

ஆகவே இது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளதனால் எமது மாவட்டத்தில் இந்த நோய் சம்பந்தமான கண்காணிப்பு அவசியமாகத் தேவைப்படுகின்றது. எனவே இந்த நாய்க்கடி, பூனைக்கடியிலிருந்து ஏன் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிந்து கொள்வது அவசியம் ஆகிறது.

விலங்கு விசர் நோய் பெரும்பாலும் நோய்த் தொற்றுள்ள நாயினால் பரப்பப்படுகின்றது. சிலவேளைகளில் பூனை, குரங்கு, கீரி, வௌவால், நரி போன்ற விலங்குகளாலும் தொற்று ஏற்படுத்தப்படலாம். இதன் நோய்க் காரணி வைரஸ் ஆகும்.

இது நரம்புத் தொகுதியைத் தாக்கிச் சாவை ஏற்படுத்துகின்றது. நோய் ஏற்பட்டால் சாவு நிச்சயம். நாய், பூனைக்கடியிலிருந்து எவ்வாறு எம்மை பாதுகாத்துக் கொள்வது?

## விலங்கு விசர் நோயை இல்லாதொழிப்போம்

வீட்டில் வளர்க்கும் பூனை, நாய்களுக்கு கடைசியாக வந்த கால அட்டவணையின்படி குட்டிகளாயின் ஆறு கிழமையில் முதலாவது ஊசியையும், இரண்டாவது ஊசியை மூன்றாவது மாதத்திலும் பின்னர் ஒவ்வொரு வருடமும் விலங்கு விசர்நோய்க்கெதிரான தடுப்பூசியை கிரமமாகக் கட்டாயமாக ஏற்றுவித்துக் கொள்ள வேண்டும்.

உங்களது வளர்ப்பு நாய்கள் தேவையற்றுப் பெருகாமல் இருக்க சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தொடர்புகொண்டு இலவச கருத்தடை சிகிச்சை செய்வித்துக் கொள்ள வேண்டும்.

நாய் வளர்ப்போர் தங்கள் வீட்டு நுழைவாயிலில் நாய்கடிக்கும் கவனம்" என்ற சுலோகத்தைத் தொங்கவிட வேண்டும். பூனை, குரங்கு போன்ற பிராணிகளுக்கு தடுப்பூசி போடுவது சிரமமானபடியால் இவற்றை செல்லப்பிராணிகளாக வளர்ப்பதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். விஷேடமாக சிறு பிள்ளைகள் வாழும் வீடுகளில்.

சுகாதார அமைச்சு, அரசின் அனுசரணையோடு நாய்களுக்குத் தடுப்பூசிகள் பெற்றுக் கொள்வதற்காக இலகுவான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதோடு மட்டுமல்லாது இந்த வாய்ப்பை அலட்சியப்படுத்தி நாய்களுக்கு ஊசி ஏற்றாமல் இருப்போருக்கு எதிராக சரியான ஒரு சட்டத்தை நடைமுறைப் படுத்தி தண்டம் அறவிடுவதன் மூலம் ஒழுங்கான முறையில் தடுப்பூசி ஏற்றுவிப்பதை ஊக்குவிக்கலாம்.

*ம.சுரேஷ்நேசன்,*
*சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர்,*
*விலங்கு விசர் நோய்ப் பிரிவு,*
*யா/ போதனா வைத்தியசாலை.*

### கேள்வி:

**எனக்கு 40 வயதாகிறது. எனக்கு மலச்சிக்கல் உள்ளது. இதனால் உடலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்கு சரியான தீர்வு சொல்லுங்கள்?**

### பதில்:

மலச்சிக்கல் என்பதை ஒரு வாரத்தில் 3 தடவைகளுக்கு மலம் கழித்தல் அல்லது மலத்தின் கடினத் தன்மை அல்லது மலம் கழித்தலிலுள்ள கடினத் தன்மை அல்லது பூரணமாக மலம் கழிக்கவில்லை என்ற உணர்வு என வரையறை செய்யலாம்.

பொதுவாக மலச்சிக்கலானது முறையற்ற உணவுப் பழக்கங்கள், நீர் அருந்துதல் போதாமை, ஒழுங்கற்ற முறையில் மலங்கழிக்கச் செல்லுதல் போன்றவற்றினால் ஏற்படலாம். இவற்றை விடச் சில மருத்துவக் காரணங்களாலும் மலச்சிக்கல் ஏற்படலாம். உதாரணமாக தைரொக்சின் குறைபாடு, வேறு சில மாத்திரைகள் பயன்படுத்துதல், வேறு குடல் சம்பந்தமான நோய்கள் போன்றவையாகும்.

எனவே நீங்கள் மலச்சிக்கலைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொரு நாளும் குறைந்தது 2 லீற்றர் நீராவது அருந்த வேண்டும். உங்கள் உணவில் அதிகளவு நார்ப்பொருளுள்ள உணவுகளை, பழங்கள், மரக்கறிகளை அதிக அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றை விட நீங்கள் தினமும் குறித்த ஒரே நேரத்தில் மலங்கழிக்கச் செல்ல உங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வர உங்கள் மலச்சிக்கல் நீங்கும். இவற்றைவிட வேறு ஏதாவது மலச்சிக்கலை ஏற்படுத்தக்கூடிய மாத்திரைகளைப் பயன்படுத்தினால் அவைபற்றி உங்கள் வைத்தியரிடம் கேட்டு அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இவற்றுக்கு உங்கள் மலச்சிக்கல் குணமடையாது விடின், வைத்தியரை நாடி உங்களுக்கு மேற்குறிப்பிட்டது போன்று வேறு ஏதாவது காரணங்கள் உண்டா என்று அறிந்து அவற்றுக்கு உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நீங்கள் உடலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் அவை என்ன எனக் குறிப்பிடப்படவில்லை. உங்களுக்கு மலச்சிக்கலுடன் நிறை அதிகரித்தல், பசியின்மை, குளிரைத் தாங்க முடியாமை, தோல் உலர்வடைந்து காணப்படல், பகலில் நித்திரைத் தூக்கம், தலைமுடி உதிர்தல் போன்றவை காணப்படின், இவை தைரொயிட் குறைபாட்டுக்குரிய அறிகுறிகளாகும். எனவே நீங்கள் வைத்தியரை நாடி அதற்கு உரிய சிகிச்சை பெற்றுக்கொள்வது சிறந்தது.

### கேள்வி:

**நாளாந்தம் பசுப்பால் அருந்துவதால் சளிபிடிக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?**

### பதில்:

சிலருக்குப் பால்குடிக்கும் போது சளிபிடிப்பது போன்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படுகிறது. இதற்குக் காரணம் பசுப்பால் குறித்து அவர்களில் ஏற்படும் ஒரு ஒவ்வாமை வகையான வெளிப்பாடாகும். பால் குடிக்கும்போது சளிபிடிக்கும் தோற்றப்பாடு ஒரு பிரச்சினையாக அமைந்தால் பசுப்பால் குடிப்பதை நிறுத்திக் கொள்வது நல்லது. எனவே நீங்கள் பால் குடிப்பதை நிறுத்திவிட்டுப் பால்மா வகைகள் அல்லது ஆட்டுப் பாலைப் பாவித்துப் பாருங்கள். அதனால் உங்களுக்கு ஒரு பிரச்சினையும் ஏற்படாவிடின் தொடர்ந்து பாவிக்கலாம். உங்களுக்கு எல்லா வகையான பால், பால்மா, பால் சேர்ந்த உணவு வகைகள் அனைத்துக்கும் ஒவ்வாமை வகையான தாக்கம் ஏற்படின், பால் உற்பத்திப் பொருள்களைப் பாவிப்பதை முற்றிலும் நிறுத்திவிட்டு வேறுவகையான புரதங்களை சோயா, முட்டை, மீன் என்பவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

*நீரிழிவு சிகிச்சை நிலையம்,*
*போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.*

உங்களது சுகாதாரம் சம்பந்தமான சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ள இது சம்பந்தமான உங்கள் வினாக்களை "நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை. யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# நாளை வெளிவருகிறது!

உங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கான
**மே மாத** அறிவியல் சஞ்சிகை

**வாசகர்கள் கருத்துக்கணிப்புக்கேற்ற பல புதிய ஆக்கபூர்வமான மாற்றங்களுடன்**




அரசியலோ
பாலியலோ
கலக்காத
ஒரு
குடும்பச்
சஞ்சிகை

**பிள்ளைகளுக்குரிய அறிவியல் விடயங்கள்**

- மூத்த முன்னணி ஆசிரியர் பி. அம்பிகைபாகனின் தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள்
- சித்திரம் பேசுதடி கண்ணம்மா [போட்டி]
- பொது அறிவுப்போட்டித் தொடர்
- விவாத அரங்கு
- குறுக்கெழுத்துப் போட்டி
- இளையோர் பூங்கா

## மே மாத அறிவுப் பயணத்தில்

04 தாய்மையைப் போற்றும் அன்னையர் தினம்
05 எமது பார்வையில் அன்னையர் தினம்
06 இம்மாத சிறப்புக் கவிஞர் [புதியது]
07 ஜோக்ஸ்
08 எல்லா குழந்தைகளும் அறிவாளிகளே!
10 உறவுகள் சுகமானது [நெடுந்தொடர்]
13 அன்னையர்தின சிறப்பு கவிதைகள்
14 தாதிச் சேவை கடவுளின் கொடை
17 அறிவியல்
18 யார் செய்த குற்றம்?
19 பத்து விரல்களும் எமது மூலதனமே [தன்னம்பிக்கை]
21 சிவகாமியின் சபதம் [சரித்திர நாவல் தொடர்] – [புதியது]
24 ஆன்மிகம்
25 அறியாமலே... [குறும்படம்]
26 நூறிலும் சாதனை
27 சந்தேகம் [நிமிடக் கதை]
28 மூடநம்பிக்கையும் ஒரு மருத்துவமாகும்
30 இருட்டில் வைத்த குறி [கிரைம் தொடர்]
34 திட்டமிடலும் விடாமுயற்சியுமே வெற்றியின் இரகசியம்
36 வறுமை சாதனைக்குத் தடையல்ல [சாதனை மாணவி]
37 அறிவியல் சிரிப்பு [புதியது]
38 சுயமருத்துவம் பேராபத்தானது
41 நலம்தானா? கேள்வி – பதில்
43 வண்ணக் கோலங்கள் [புதியது]
44 உலகம் உருவானது எப்படி?
46 ஒரு குழந்தை தாயாகின்றது
50 சோதிடம்
52 குக்கிராமம் நகரமாகிறது [கிராம அலசல்] – [புதியது]
54 அம்முவின் கேள்வி – பதில்
55 நகப்பூச்சுகளும் சுத்திகரிப்பும் [அழகுக் குறிப்பு]
56 நந்தவனப் பூக்கள் – இனிக்கும் இல்லறம்
58 பெண்களுக்கு எதிரான வன்முறை [கருத்துக்கணிப்பு]
59 சுவைக்க சமைப்பது எப்படி?
60 தையல் கலை
66 பிறந்தநாள் வாழ்த்துக்கள்

**இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்**

**உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**


விநியோகத் தொடர்புகளுக்கு:
**0718 628379 / 011 5737592**

வடமாகாண தொடர்புகளுக்கு:
**077 6569617 / 077 2772726**

# நடமாடும் பல்கலைக் கழகமாகத் துலங்கிய பேரறிஞர் வைத்தீசுவரக் குருக்கள்

பா.துவாரகன்

## ஈழத் தமிழ் மண்ணுக்கு புகழ் பரப்பிய பேரறிஞர்



“சிவத்திரு கணபதீஸ்வரக் குருக்கள் நூலகம் ஓர் ஆய்வு நூலகமாக வேண்டும். காரைநகரில் அறிஞர்கள் கூடி ஆய்வுகள் செய்யும் மொழியியற் பல்கலைக் கழகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். தாயகத்திலும் புலத்திலும் வாழும் காரைநகர் அறிஞர்களும் செல்வச் சீமான்களும் நினைத்தால் முடியாத காரியமல்ல இது. காரைநகர் கலாநிதி வைத்தீசுவரக் குருக்கள் மொழியியற் பல்கலைக்கழகம் உருவாக நாம் அனைவரும் பாடுபடுவோமாக.

தமிழ்கூறும் நல்லுலகம் பலமகோன்னத அறிஞர்களை கடந்த 100 ஆண்டுகளில் இழந்திருக்கிறது. மன்மத (2015) சித்திரை வருடப் பிறப்பு நிகழ்ந்து ஒரு வாரம் கடந்திருந்த நிலையில், காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தை உருவாக்கிய சிற்பியும் காரைநகர் மணிவாசகர் சபையைத் தோற்றுவித்தவரும் ஈழத்துச் சிதம்பரத்தை நிலைபெறச் செய்தவரும் அரிய பல தமிழ் நூல்களைப் பதிப்பித்தவரும் காரைநகருக்குத் துருவ நட்சத்திரமாகத் திகழ்ந்தவருமான கலாநிதி க.வைத்தீசுவரக் குருக்கள்சித்திரை 12ஆம் திகதி (25.04.2015) அன்று அதிகாலை ஈழத்துச் சிதம்பரத்து ஈசனின் திருப்பாதக் கமலங்களைச் சேர்ந்தார். அந்தச் செய்தி தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பரவி ஆறாத்துயரை ஏற்படுத்தியது.

மெய்வருத்தம் பாராது துவிச்சக்கர வண்டியிலே அறிஞர்களைத் தேடிச் சென்று கட்டுரைகளைப் பெற்றுப் புதுமுறைக் கட்டுரைக் கோவையை வெளியிட்டார். அமரர் வைத்திய கலாநிதி நந்தி, வித்துவான் ச. அடைக்கலமுத்து, வித்துவான் க.சொக்கலிங்கம், பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் மற்றும் தமிழறிஞர் க. உமாமகேசுவரம்பிள்ளை முதலான 25 அறிஞர்களது கட்டுரைகள் இத் தொகுப்பிலே இடம்பெற்றுள்ளன.

ஐயாஅவர்கள்,பிறரைப்பாராட்டுவதில், தனக்கு உதவியவர்களுக்கு நன்றி தெரிவிப்பதில், பெருமனதுள்ளவர். கடந்தவாரம் யாழ்.போதனா வைத்தியசாலையில் தனக்கு மருத்துவம் பார்த்த வைத்திய கலாநிதி யமுனா நந்தாவின் கரிசனையை, அன்பைப் பாராட்டி அவருக்கு நன்றி தெரிவித்து ஒரு கடிதம் எழுதவேண்டும் என்று நேற்று (24.04.2015) உடல் நலம் குன்றியிருந்த போதும் நினைவு கூர்ந்தார்.

கடந்த மார்ச் இரண்டாம் ஆம் திகதி எனக்கு ஒரு கடிதம் வரைந்திருந்தார். உங்களது பிறந்த தினம் இன்று என்று மகள் தெரிவித்தார். எனது உடல்நலக் குறைவு காரணமாக உங்களை நேரில் வந்து வாழ்த்த முடியாதுள்ளமைக்கு வருத்தப்படுகிறேன் என்று கூறி வாழ்த்தி ஒரு கடிதம் வரைந்திருந்தார்.

சிறியேனைப் பேரறிஞரும் பெரும் பண்பாளரும் வந்து வாழ்த்துவதா? கலாநிதி வைத்தீசுவரக் குருக்கள் ஐயா அவர்களைப் பெயர் சொல்லி அழைக்க மனம் வெட்கமடைகிறது. எத்தகைய அடை மொழி இட்டு அழைப்பேன். அவர் ஈழத்துச் சிதம்பரத்து ஈசன், குருவாய் வந்து வழிகாட்டியவர், மனிதப் பண்பைத் தாண்டி உயர்ந்து நிற்பவர். தன்னை அண்டி வந்த அனைவரையும் அரவணைத்த பெருந்தகை. நல்வாழ்க்கைக்கு வழிகாட்டி.

### சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்

கலாநிதி வைத்தீசுவரக் குருக்கள் ஐயா அவர்கள் சிவத்தைத் தவிர வேறொன்றும் நினையாதவர். திருவாசகமும் தேவாரமும் அவரது இரு கண்கள். சைவசித்தாந்தத்தை வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொண்டவர். “எனக்கு நினைவாற்றல் எல்லாம் குறைந்து வருகிறது. திருவாசகத்தைத் தவிர இப்போது வேறொன்றும் படிப்பதில்லை” என்று அண்மைக் காலமாகக் கூறிவந்தார். சுவாமிநாத பண்டிதருடைய திருமுறைப் பெருமையை மீளப்பதிப்பிக்க வேண்டும் என்று நினைவு படுத்துவார். வித்தகம் ஆசிரியர் தென்கோவை கந்தையா பிள்ளையையும் புன்னாலைக் கட்டுவன் வித்துவசிரோமணி கணேசையர் அவர்களையும் சிரம் மேல் வைத்துப் போற்றுபவர்.

தமிழ்வித்துவான் கணேசையாவிற்கு யாழ்ப்பாணத்தில் எடுத்த பெருவிழாவைப் போல் ஒரு விழாவைத் தாம் பார்த்ததில்லை என்றும், யாழ்ப்பாணத்தில் உள்ள அறிஞர்கள் எல்லோருமே இவ்விழாவுக்கு வருகை தந்ததையும் நினைவுபடுத்துவார். ஐயா அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கம் சென்று, தலைவராக இருந்த நாராயண ஐயங்காரிடம் தமிழ் படிக்கக் கேட்டிருக்கிறார். அதற்கு ஐயங்கார் யாழ்ப்பாணத்திலே தான் கணேசையா இருக்கிறாரே, அவரிடம் படிக்கலாமே என்றிருக்கிறார். “வித்துவான் கணேசையாவைப் போல் ஒரு பெரும் மனுசனை நான் கண்டதில்லை” என்பார் கலாநிதி வைத்தீசுவரக் குருக்கள்.

துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு சிவத்தமிழ்ச் செல்வி என்ற பட்டத்தை வழங்கி சிவத்தமிழ்ச் செல்வியை உலகறியச் செய்தவர் ஐயா. புலவர் என்றால் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரையும் பண்டிதமணி என்றால் கணபதிப்பிள்ளையையும் குறிப்பது போல் சிவத்தமிழ்ச் செல்வி என்ற நாமமும் இன்று தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடன் நிலை பெற்றுள்ளது. ஏழாலையூர்ப் பண்டிதர் கலாநிதி மு.கந்தையா அவர்தம் பெருமையை அறிந்தவர். நாவலர் பெருமானது பெரிய புராண சூசனம் காரைக்கால் அம்மையார் புராணத்துடன் நின்றுவிட இதனை எழுதி முடிக்கப் பொருத்தமானவர் பண்டிதர் கலாநிதி கந்தையாவே என்பதைக் கூறி கோலாலம்பூர் தமிழ்ச் சங்கத்தார் பதிப்பிக்க வழிகாட்டியவர்.

இறுதி மூன்று தினங்களும் ஐயா உணவேதும் அருந்தவில்லை. பால் மட்டுமே அருந்தினார். சுன்னாகத்தில் 25.04.2015 அதிகாலை 2.30 இற்கும் 3.00 மணிக்கும் இடையில் திடீரெனப் பலமான காற்று வீசியது. அதே நேரம் காரைநகரிலும் புயற்காற்று வீசியுள்ளது. காற்றினால் மரங்களிலுள்ள பச்சை இலைகளும் பட்ட கிளைகளும் வீழ்ந்தன. காற்று ஐயா படுத்திருந்த அறைக்கதவை மூடியது. புயற் காற்றைக் கண்டு பயந்து மகள் ஐயோ என்றிருக்கிறார். ஐயாவோ “அப்படிச் சொல்லாதே சிவனே சிவனே என்று சொல் என்றிருக்கிறார். அதிகாலை மூன்று மணியளவில் வைத்தீசுவரக் குருக்கள் அவர்களது ஆன்மா, சப்தமி திதியில் சிவத்தோடு சங்கமமாகியது.

### தமிழ் மொழி இலக்கணத்தில் கரிசனை

வித்தகம் ஆசிரியர் தென்கோவை கந்தையா பிள்ளையவர்களின் கையெழுத்துப் பிரதியாக இருந்த இலக்கணக் குறிப்புக்களை வெளியிட வேண்டும் என்று ஆவல் கொண்டிருந்தவர் ஐயா. கந்தையா பிள்ளையவர்களின் இலக்கணக் குறிப்பை பல ஆண்டுகளுக்கு முன்னர் ஐயாவிடம் இருந்து பெற்றுச் சென்றவர்களை அறிய முடியவில்லை. கந்தையா பிள்ளையவர்களின் இலக்கணக் குறிப்பிலே பல சிறப்புக்கள் உள்ளன. பழம் பெரும் இலக்கண நூல்களிலே உள்ள கடினமான உதாரணங்களுக்குப் பதிலாக, இலகுவான உதாரணங்களை அவரது குறிப்புக்களில் காணலாம். உதாரணமாகக் கொல்களிறு என்ற வினைத்தொகைக்கு வளர் பிறையையும், புலையனும் தின்னாப் புன்புலால் யாக்கை என்னும் இழிவுச் சிறப்பிற்கு நாயுந் தின்னாச்சோறு என்று கந்தையா பிள்ளையவர்கள் உதாரணம் காட்டுவதையும் ஐயா குறிப்பிடுவார்.

### நடமாடும் கலைக் களஞ்சியம்

தமிழ்மொழி இலக்கண இலக்கிய நூல்கள், சமய சைவசித்தாந்த நூல்கள், வடமொழியில் அமைந்த சைவ சமயக் கிரியைகள் பற்றிய நூல்கள் பலவற்றைக் கற்று உணர்ந்து பலருக்கும் அறிமுகம் செய்த பெருந்தகை. இத்தகைய நூல்களை சேகரித்தும் வந்தார். நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருக்கிறார். ஐயா அவர்கள் எழுதிய தமிழ் மொழி இலக்கணம், இலக்கியம் பண்பாடு, சமயம் சார்ந்த கட்டுரைகள் பல்வேறு மலர்களையும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் அலங்கரித்துள்ளன. தினகரன் பத்திரிகையில் பல அரசியல் கட்டுரைகளை அசோகன் என்ற பெயரில் எழுதியிருக்கிறார். பொதுமக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் குறித்து பத்திரிகை ஆசிரியருக்கு கடிதம் வரைந்திருக்கிறார். (Letter to Editor).

வாழ்க்கையைக் கொண்டு செல்லவே கடினமாய் இருந்த காலங்களில், நூல்களை சேகரிக்க ஐயா எடுத்த முயற்சி கண்ணீர் சிந்த வைக்கிறது. நூல்கள் மட்டுமன்றி பத்திரிகைகள் சஞ்சிகைகள் இவற்றையும் விலை கொடுத்து வாங்கி சேகரித்து வந்தார்.

தமிழ் நாட்டில் இருந்து வெளிவந்த சஞ்சிகைகள், நூல்கள் பலவற்றை உரியவர்களுக்குக் கடிதம் எழுதியும் பெற்று வந்தார். பத்திரிகைகளில் வெளிவந்த அறிஞர்களின் கட்டுரைகளையும் பயனுள்ள தகவல்களையும் சேகரித்து வந்தார். தெருவிலே ஒரு பத்திரிகைத் துண்டு இருந்தால் எடுத்துப் படித்து விட்டு அதனைப் பயனுள்ளதெனக் கருதின் கவனமாகக் கொணர்ந்து தமது கோவைக்குள் வைப்பார்.

யாழ்ப்பாணத்தில் வேறு எந்த நூலகத்திலும் காணக் கிடைக்காத பல நூல்கள் ஐயா அவர்களிடம் இருந்தன. ஐயா அவர்கள் சேகரித்த நூற்றுக்கணக்கான நூல்கள் இடப்பெயர்வினாலும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழலாலும் அழிந்து போயின. காரைநகரை விட்டு இடம்பெயர்ந்த வேளை வீட்டிலே விட்டுவந்த நூல்கள் ஓலைச் சுவடிகள் நிலத்திலே சிந்தப்பட்டு கறையான் அரித்ததைக் கண்டு உள்ளம் வெதும்பிக் கண்ணீர் சிந்தினார்.

தாம் சேகரித்தவற்றில் குறித்த எண்ணிக்கையான நூல்களை வவுனியா கோயிற்குளம் பிள்ளையார் கோயில் நூலகத்திற்கு வழங்கியிருந்தார். எனினும் ஐயா அவர்கள் பாதுகாத்து வந்த பல்லாயிரம் நூல்கள், பொது மக்களின் பாவனைக்காகக் காரைநகரிலே ஐயாவினது தந்தையார் சிவத்திரு. கணபதீசுவரக் குருக்கள் பெயரில் அமைக்கப்பட்ட நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

தனது 99 ஆவது வயதில் இயலாத போதும் உங்களுக்குப் படிக்க என்ன வேண்டும் என்று கேட்பார். எவராவது குறிப்பிட்ட கட்டுரை அல்லது பாடல் தேவையென்று கேட்டால் அதனை நிழற்பிரதி எடுத்து உரியவர்களுக்கு அனுப்பும் வரை ஓய்வெடுத்துக் கொள்ள மாட்டார். நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பேரன் வைத்திய கலாநிதி பாரதி, ஆஸ்திரேலியாவிலிருந்து பண்டிதை பரமேசுவரி இளமுருகனார் பற்றி ஆங்கிலத்தில் தங்கம்மா நடராசா எழுதிய குறிப்பைக் கேட்டிருந்தார். பண்டிதை பரமேசுவரி 1938 இல் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையில் முதன் மாணவியாகச் சித்திபெற்றவர். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அந்தக் குறிப்பை வெள்ளிக்கிழமை (24.04.2015) அன்று நிழற் பிரதி எடுத்து அனுப்புவதற்குத் தயாராக வைத்திருந்தார். தனது பிள்ளைகளைக் கொண்டு முத்திரையும் கடித உறையையும் வாங்கி வைத்திருந்தார்.

கலாநிதி வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் 25 இற்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். சைவக் களஞ்சியம், ஈழத்துச் சிதம்பர புராணம், ஆண்டிக் கேணி ஐயனார் புராணம், பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு, பெரிய புராணம், திருநகரப் படல உரை கலாநிதி மு.கந்தையா அவர்களின் உரையுடன் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிச்செய்த சேத்திரத் திருவெண்பா, சுவாமிநாத பண்டிதருடைய திருமுறைப் பெருமை, திண்ணபுர அந்தாதி, நன்னூற் காண்டிகை உரையும் நாவலர் பெருமானும், நாவலர் பிள்ளைத் தமிழ், காரைநகரில் சைவ சமய வளர்ச்சி, ஜோர்ச் மன்னர் இயன்மொழி வாழ்த்து, வினைத்தொகை, தொடர் மொழிக்கு ஒரு மொழி முதலான பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டவர் அவர்.

வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் தமிழ்மொழிக்கும் சைவசமயத்துக்கும் சமூகத்திற்கும் ஆற்றிய பணிகளைப் பாராட்டிப் பல்வேறு அமைப்புக்களும் நிறுவனங்களும் பட்டங்களை வழங்கிக் கௌரவித்துள்ளன. ஐயா அவர்கள் அருட் சுடர்மணி, சமூக மாமணி, கலை ஞானச்சுடர், சிவத்தமிழ் வித்தகர், செந்தமிழ் ஞாயிறு, பண்டிதமணி முதலான பல பட்டங்களைப் பெற்றிருந்தும் அவற்றை ஒருபோதும் பயன்படுத்தியதில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2002 இல் சிவத்திரு வைத்தீசுவரக் குருக்கள் அவர்களின் தமிழ்ப் பணியைக் கௌரவித்து இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்திருந்தது.

கலாநிதி வைத்தீசுவரக் குருக்கள் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட காரைநகர் மக்கள் தயாராகி வந்த வேளை ஐயா அவர்களின் இழப்பு நம் அனைவருக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# 75 ஆண்டுகளை நிறைவு செய்யும் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
(ஊடக விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்)

இலங்கை கத்தோலிக்க மக்கள் மட்டுமல்ல – இலங்கை வாழ் அனைத்து மக்கள் மத்தியிலும் – இலங்கையைத் தாண்டிப் புலம் பெயர் நாடுகளிலும் இன்று அதிகம் பேசப்படும் ஒரு பெயர் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையின் பெயர் ஆகும்.

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த இவர் 1992 ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்ட ஆயராக நியமனம் பெற்ற பின்னர் இவரது பணி, மறை மாவட்டங்களைத் தாண்டி இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் இணைக்கின்ற – அவர்களுக்காகக் குரல் கொடுக்கின்ற ஒரு பணியாகி உள்ளது.

ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி தமது 75 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டத்தின் போது ஆயர் அவர்கள், தனது சிறுபராயத்தில் இருந்தே ஏழைகள் துன்பப்பட்டவர்கள் மேல் தமக்கு அன்பும் அனுதாபமும் இருந்ததாக தெரிவித்துள்ளார். தன்னுடைய சிறு வயதில் இருந்தே துன்பப்படுவோர், துயரப்படுவோர், வேதனைப்படுவோர் வேறு எவரது உதவியும் இன்றி இருப்போர் மட்டில் கரிசனை கொண்ட இவர் தனது குருத்துவப் பணியை ஆரம்பித்த பின்னர் இவர்களுக்காக இன்னும் அதிகமாகவும் ஆழமாகவும் பணியாற்றத் தொடங்கினார்.

இவரது இந்தப் பணிக்கு வலுச் சேர்க்கும் விதமாக திருச்சபை சட்டத்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்று தனது பணிக்கு வலுச்சேர்த்துக் கொண்டார்.

மன்னார் ஆயராக பணியேற்ற பின்னர் அநீதிக்காகவும், அடக்கப்பட்டோருக்காகவும் மனிதஉரிமைமீறல்களுக்காகவும் குரல் கொடுக்கின்ற இவரது பணி முழு வடிவம் பெற்றது எனலாம்.



தன்னுடைய ஆயர் என்ற பணியை முழுமையாகப் பயன்படுத்தி அதனைப் பணயம் வைத்து பணியாற்றிய ஒரு ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை என்றால் அதில் தவறு இருக்க முடியாது.


இயேசு தமது பணியை ஆரம்பிப்பதற்கு முன்னதாக தாம் வளர்ந்த ஊராகிய நசரேத்திற்கு வந்து ஓய்வு நாளில் தொழுகைக் கூடத்தில் இறைவாக்கினர் எசேயாவின் சுருள் ஏட்டில் வாசித்த பின்வரும் வசனங்கள் இவரது வாழ்வின் வழிகாட்டும் வசனங்களாயின.

"ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது – ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் – சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். – பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் – ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் – ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார். (லூக்காஸ் 4:16–19)"

மன்னார் மறைமாவட்ட ஆயர்மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை இந்த வசனங்களைத் தம்முடைய பணி வாழ்வுக்கான வசனங்களாக்கி அவற்றுக்காகவே வாழ்ந்தார் என்றால் அதில் ஐயம் இருக்க முடியாது.

கத்தோலிக்கத் திருச்சபை ஒதுக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் உரிமை வாழ்வை இழந்தோர் போன்றவர்கள் மட்டில் என்றும் கரிசனை மிக்கதாகவே இருந்திருக்கின்றது.

உலக கத்தோலிக்க திருச்சபையின்



தலைவர்களான பாப்பரசர்கள் எல்லோருமே கத்தோலிக்க உலகில் மட்டுமல்ல உலகம் முழுவதிலும் நடக்கின்ற அடக்கு முறைகள் – மனித உரிமை மீறல்கள் – அநீதிகள் என்பவற்றுக்குஎதிராகக் குரல்கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறார்கள்.

தற்போதைய பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களும், உலகின் எந்த மூலையில் சண்டை தொடங்கினாலோ இயற்கை இடர் ஏற்பட்டாலோ அடக்குமுறை அரங்கேறினாலோ துணிவோடு குரல் கொடுத்துக் கொண்டே வருகிறார்.

கத்தோலிக்க நாடுகளில் உள்ள ஆயர்களும் உரோமை ஆயரான பாப்பரசரின் அடிச் சுவட்டில் தமது பிரதேசங்களில் நடக்கும் அநீதிகள் அட்டூழியங்கள் – மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு எதிராக இனமத நிற பேதமின்றி குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கின்றார்கள்.

அண்மையில் புனிதராக பிரான்சிஸ் பாப்பரசரால் பிரகடனப்படுத்தப்பட்ட எல்சல்வடோர் நாட்டின் ஆயர் ஒஸ்கா றொமேறோ இங்கு குறிப்பிடத்தகுதி பெற்றவர்.

எல்சல்வடோர் நாட்டின் அரச அடக்குமுறைக்கு எதிராக துணிவோடு குரல் கொடுத்த இவர் 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி திருப்பலி ஒப்புக் கொடுத்துக் கொண்டிருந்த வேளை சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் சுட்டுக் கொல்லப்பட்ட தினம் மார்ச் மாதம் 24ஆம் திகதி மனித உரிமை மீறல் பற்றிய உண்மை அறியும் சர்வதேச தினமாக பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. 2015 மே 23 ஆம் திகதி ஆயர் ஒஸ்கா றொமேறோ அருளாளர் நிலைக்கு உயர்த்தப் பட்டுள்ளார்.

இலங்கை நாட்டில் இரு இனங்களுக்கு இடையில் ஏற்படுகின்ற இன முரண்பாடுகளுக்கு நடுவில் தமிழ்க் கத்தோலிக்க திருச்சபை காத்திரமான ஒரு பணியை ஆற்றிக் கொண்டே வந்திருக்கின்றது.

இலங்கையின் நான்கு தமிழ் மறை மாவட்டங்களின் ஆயர்களும் குறிப்பாக யாழ்ப்பாணம் – மன்னார் மறை மாவட்ட ஆயர்கள் தமிழ் மக்களுக்காக – அவர்களின் அமைதியான வாழ்வுக்காக – துணிந்து குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கின்றார்கள்.

இலங்கையில் கத்தோலிக்க தமிழ் ஆயர்கள் தமது பாதுகாப்பையும் துச்சம் என மதித்து தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதற்கு இரண்டு காரணங்கள் துணை நிற்கின்றன எனலாம்.

முதலாவதாக கத்தோலிக்க மதம் இலங்கையில் சிறுபான்மை மதமாக இருந்தாலும் பெரிய அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு மதமாக இருக்கிறது. இதற்கு ஒரு காரணம் கத்தோலிக்க மதத்தில் தமிழர்களும் சிங்களவர்களும் இருப்பதாகும்.

கத்தோலிக்க மதம் இலங்கையின் இரு இனங்களுக்கும் இடையிலான ஒரு பாலமாக இருக்கின்றது. சிங்கள கத்தோலிக்க ஆயர்கள் தமிழ் கத்தோலிக்க மக்கள் மட்டில் உறுதியான துணிவான தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுக்காவிடினும் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் இணைக்கின்ற இந்தப் பாலம் பலம் மிக்கது.

இரண்டாவதாக கத்தோலிக்க திருச்சபை சர்வதேச மயப்படுத்தப்பட்டு அனைத்து விடயங்களும் உடனடியாக உலகம் முழுவதற்கும் பரவக் கூடிய தன்மையையும், உலகம் முழுவதிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தன்மையையும் பெற்றிருப்பது இன்னுமொரு விடயமாகும்.

தமிழ்க் கத்தோலிக்க ஆயர்கள் அரசியல்வாதிகள் அல்லர். அவர்கள் ஆன்மிகவாதிகள். அவர்கள் அரசியல் பேசவில்லை – அடிப்படை மனித உரிமைகளைப் பற்றியும் முழு மனித விடுதலை பற்றியும் பேசுகிறார்கள் என்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் தெளிவாகப் புரிந்துகொள்வது அவசியம் ஆகும்.



1940 ஆம் ஆண்டு பிறந்த மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை 1967 ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 1992 ஆம் ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்டத்தின் இரண்டாவது ஆயராக திருநிலைப்படுத்தப் பட்டார்.

1982 ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்டம் பிரிக்கப்பட்ட போது அதன் முதல் ஆயராக மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து 1992 ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்டத்தின் இரண்டாவது ஆயராக ஆயர் பணியை ஏற்றுக்கொண்டார்.

**எமது மக்களின் நன்மையிலும் தீமையிலும், வாழ்க்கையிலும் மரணத் தறுவாயிலும் பக்கத்தில் நின்று, இறுக்கமான ஒரு காலத்தின் போதும் எம்மக்களுக்கு அரிய பல சேவைகள் புரிந்து வந்துள்ளார். இனிவருங்காலத்தில் இறுக்கம் தளர்ந்த நிலையில் ஆனால் குழப்பம் மிகுந்த சூழலில் அடுத்த கட்டமாக தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒரு பொதுவான அரசியல் முடிவுக்கு வர உதவ வேண்டிய நிலையில் உள்ளார்.**

மன்னார் மறை மாவட்ட ஆயரின் 75 ஆவது வயது நிறைவு தினமான ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்தில் ஆயர்கள் – குருக்கள் – துறவியர்கள் – கன்னியர்கள் – விசேட அதிதிகள் மத்தியில் அவரது பிறந்த தின விழா கொண்டாடப் பட்டது. அந்த விழாவில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய உரை இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

– எமது மக்களின் நன்மையிலும் தீமையிலும், வாழ்க்கையிலும் மரணத் தறுவாயிலும் பக்கத்தில் நின்று, இறுக்கமான ஒரு காலத்தின் போதும் எமது மக்களுக்கு அரிய பல சேவைகள் புரிந்து வந்துள்ளார்.

இனிவருங்காலத்தில் இறுக்கம் தளர்ந்த நிலையில் ஆனால் குழப்பம் மிகுந்த சூழலில் அடுத்த கட்டமாக தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒரு பொதுவான அரசியல் முடிவுக்கு வர உதவ வேண்டிய நிலையில் உள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவிக்கும் போது ஆயரின் தலைமைத்துவத்தின் கீழ் புலம்பெயர் தமிழ்ப் பேசும் மக்கள், உள்நாட்டுத் தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் இனிவருங்காலத்தில் எப்பேர்ப்பட்ட ஒரு அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றார்கள் என்பதை அறிந்து வெளியிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கின்றது.

ஆயருக்கு இந்த நாட்டிலும், வெளி நாடுகளிலும் தமிழ் பேசும் மக்களிடையே ஒரு பெருமதிப்பு இருக்கின்றது. அவரது தலைமைத்துவத்தின் கீழ் ஒரு தீர்வைநோக்கிநாம்ஆராய்ந்து செல்வதில் தவறில்லை என்று கணிக்கின்றேன் என்றார் வடக்கு மாகாண



முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகை 75 ஆவது அகவையில் காலடி பதித்துள்ள வேளையில் அவர் தமிழ் மக்களுக்கு ஆற்றிவரும் பணிகளைக் கௌரவிக்கும் வகையில் மன்னார் மக்கள் சார்பாக அவருடைய பவள விழாவை எதிர்வரும் 23ஆம் திகதி அன்று மன்னாரில் கொண்டாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவின்போது வெயியிடப்படவுள்ள பவள விழா மலருக்கு மே மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்கள் அனுப்பிவைக்கும்படி அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் வேண்டியுள்ளார்.

மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை தமிழ் மக்களுக்கான பணியில் தொடர்ந்தும் பணியாற்ற இறைவன் அவருக்கு நிறைந்த ஆயுளையும் முழுமையான ஆசிரையும் வழங்கச் செபிப் போம்.

# தற்போதைய அரசும் தமிழர் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு வழங்குவது சந்தேகமே

## யாழ்.கிளிநொச்சி மாவட்ட எம்.பி.சரவணபவன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 03

தற்போதுள்ள அரசும் கூட தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து முழுமையாக அதற்குரிய தீர்வுகளை வழங்குமா என்பது கேள்விக்குறியே என்று யாழ். -கிளிநொச்சி மவாட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

நவாலி முருகானந்த சனசமூக நிலையத்தில் கலாபூஷண விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார். அங்கு அவர் தனதுரையில்மேலும்தெரிவிக்கையில்;

"100 நாள்கள் கடந்து விட்ட நிலையிலும் தமிழ் மக்களுக்குரிய பல வேலைகளை இன்னமும் புதிய அரசால் முன்னெடுக்கப்படவில்லை. குறிப்பாக சிறையிலுள்ள தமிழ் கைதிகளை விடுவித்திருக் கலாம், காணாமற்போனவர்கள் தொடர்பாக அவர்களது உறவினர்களுக்கு எதாவது ஒரு வழியைக் காட்டியிருக்கலாம், வலி.வடக்கு மக்களை அவர்களது சொந்த நிலங்களில் மீள குடியமர்த்தியிருக்கலாம் இது போன்ற பல வேலைத்திட்டங்களை செய்திருக்கலாம். சம்பூர் பிரதேசம் இன்னமும் விடுவிக் கப்படவில்லை. கேட்டால் உரிய அதிகாரிகள் அனுமதி தரவில்லை என்கிறார்கள். நான் கேட்கிறேன் அந்த நிலத்தை யாருடைய சம்மதத்துடன் எடுத்தீர்கள்? அவர்களுக்கு மன மிருந்தால் இடமிருந்திருக்கும்.

பெரும்பான்மை இன அரசு நாம் கேட்டவற்றை எல்லாம் செய்து விடும் என்று கூறமுடியாது. நாம் இந்த அரசுக்கு ஆதரவு வழங்கியது ஒரு சர்வாதிகாரியை இல்லாமல் செய்வதற்கே. தற்போது எமது தலைமைகள் இராஜதந்திர ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். கள். இதனை மாற்றுக் கட்சிகள் தவறாக பரப்புரைகள் செய்கின்றன. இதனை நீங்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். தற்காலத்தில் எல்லோருக்கும் நிலைமைகள் விளங்கும். இருந்தாலும் அதனைத் தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமை. அதனாலேயே இதனை நான் தெளிவுபடுத்தியிருந்தேன்"– என்றார்.





இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சர வணபவன் வறிய குடும்பங்களுக்கு தையல் இயந்திரமும், 2014ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு அன்பளிப்பு பணத் தொகையும், முன்பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர்க்ளுக்கும் பரிசுப் பொருள்களையும் வழங்கியிருந்தார்.

(வ)

# 40 டிராக்டர்களை வயிற்றில் ஏற்றி

## பொலன்னறுவை இளைஞன் சாதனை



பொலநறுவை, மே 03

தமது வயிற்றின் மீது 19 நிமிடங்கள் 54 செக்கன்கள் என்ற குறுகிய நேரத்தில் நான்கு சக்கர 40 டிராக்டர்களை ஏற்றி அதிசயிக்கத்தக்க சாதனையை நிகழ்த்தினார் பொலன்னறுவையைச் சேர்ந்த 26வயது இளைஞர்.

கடந்த 19 ஆம் திகதி பொலன்னறுவை உனகலாவே கெதற சாந்திபுர மகா வித்தியாலய விளையாட்டுத்திடலில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் சாந்திபுரவைச் சேர்ந்த கே.எல்.பியும்லக்மால் என்ற 26 வயதான கராத்தே வீரரே இந்த வீரதீரச்செயலைப் புரிந்துள்ளார்.

இற்றைக்கு ஓராண்டுக்கு முன்னர் உயிரிழந்த தனது குருவான ஏ.ஜீ. சேனக்க பண்டாரவை (சுதோகான் கராத்தே தோ சங்கத்தின் வட மத்திய மாகாண பயிற்சி ஆலோசகர்) நினைவு கூர்வதும், உலகின் வயதில் குறைந்த பலவான்கள் பத்துப் பேர்களிடையே தம்மையும் சேர்த்துக் கொள்ளும் நோக்குடனேயே பியும் லக்மால் இந்த தீரம்மிக்க சாதனையைப் புரிந்துள்ளார்.

தாம் கடந்த 15 ஆண்டுகளாக கராத்தே விளையாட்டில் ஈடுபட்டு வருவதோடு 2000 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையிலுமாக 2008 இல் சர்வதேச சுதோகான் கராத்தே வீரப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்றதாகவும் – 2009 ஆம் ஆண்டில் கடுமையாகத் தாக்கும் கராத்தே போட்டியில் தேசிய விருதையும் – 2011 இல் அதே போட்டியில் 2 ஆம் இடத்தையும் வென்றெடுத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கின்னஸ் புத்தகத்தில் தனது பெயரைப்பதிவு செய்து கொள்வதும் உலகிலுள்ள வயதில் குறைந்த பத்துப் பல வான்களிடையே தாமும் ஒரு வராகிவிடும் வயதில் குறைந்த விளையாட்டு வீரராகிவிடு வதுமே தமது எதிர்பார்ப்பாகி யிருப்பதாகவும் தம்மால் அது முடியும் என்றும் அவர் கூறுகிறார்.

இந்தச் சாதனையைப் புரிவதற்காக தாம் விசேடமான உணவுகள் எதையும் உண்ணவில்லை என்றும் தனது தாயார் தமக்களிக்கும் தேங்காய்ச் சம்பலுடனான சோறு மற்றும் அவரால் தமக்கு சமைத்து வழங்கப்படும் ஏனைய உணவுகளையே தாம் உண்பதாகவும் தனது தொடர்ச்சியான பயிற்சிகளின் மூலமான நம்பிக்கை தமக்கிருப்பதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

காலை 9.17 மணிக்கு முதலாவது டிராக்டரை தனது வயிற்றின் மீது ஏறச்செய்த பியும் லக்மால் 9 மணி 36 நிமிடங்கள் 54 செக்கன்கள் ஆனபோது 40 ஆவது டிராக்டரையும் தனது வயிற்றின் மீது ஏற்றி சாதனை நிகழ்த்தியிருந்தார்.

(வ–22)

# மீண்டும் புதுப்பொலிவு பெறுமா? கப்பல் ஏந்திய மாதா ஆலயம்

யாழ்ப்பாணம், மே 03

போர் மற்றும் ஆழிப்பேர லையால் முற்றாகச் சேதமடைந்த கட்டைக்காடு முள்ளியான் கப்பல் ஏந்திய மாதா ஆலய புனரமைப்புக்கு உதவு மாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1905 ஆம் ஆண்டு கட்டைக்காடு கப்பல் ஏந்திய மாதா உருவாகியுள்ளது. சுமார் 200 ஆண்டுகளைக் கொண்ட புனித கப்பலோட்டி மாதா கட்டைக்காடு முள்ளியான் பகுதி மக்களின் துன்பங்களை நீக்கியதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போரின் போது, அரச விமானத்தின் குண்டு வீச்சினால் முற்றாகச் சேதமடைந்த குறித்த ஆலயம் அந்தப் பகுதி மக்களால் 2000 ஆம் ஆண்டு மீளப் புனரமைக்கப்பட்டு, புனித வழிபாட்டுத் தலமாக மீள பூசை வழிபாடுகள் நடைபெற்றுவந்துள்ளன.

அதன்பின்னர், 2004ஆம் ஆண்டு, இடம் பெற்ற ஆழிப்பேரலையால் கப்பல் ஏந்திய மாதா சொரூபத்துக்கு எந்தவித சேதம் இன்றி ஆலயம் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

முன்னர் இருந்த ஆலயத்துக்கு அருகில் சிறிய ஆலயத்தை அமைத்து அங்கு மாதாவின் சொரூபத்தை வைத்து ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆழிப்பேரலையின்போது, ஆலயம் சேதமடைந்த நிலையில், கடற்றொழிலை நம்பி வாழும் அந்தப் பகுதி மக்கள் தமது ஆலயத்தை தமது நிதி பங்களிப்புடன் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சுமார் 380 குடும்பங்களைக் கொண்ட பிரதேசமாக இருக்கும் இந்த கட்டைக்காடு முள்ளியான் பகுதி மக்கள் இந்த ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளை 20 வட்டாரங்களாகப் பிரித்து, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஒரு வட்டாரத்தினர் ஆலய துப்புரவுப் பணிகளையும் பூசை வழிபாடுகளையும் ஒற்றுமையாகவும், திருப்திகரமாகவும் செய்து வருகின்றனர்.

குறித்த பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் என்பதுடன், மீனவ குடும்பங்கள் கடலை நம்பி வாழும் தமக்கு, கப்பல் ஏந்திய அற்புதங்களை நிகழ்த்துவதாகவும், மாதாவின் அற்புதத்தையும் தெளிவுபடுத்தியுள்ளனர்.

அவ்வாறான நிலையில், 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலை ஏற்படப்போவதற்கான அறிகுறி நிலவுவதாக, இந்து பக்தர் ஒருவருக்கு மாதா இரத்தக் கண்ணீர் விட்டு அழுததாகவும், இந்தச் சம்பவம் நடைபெற்று 3 நாள் ஆழிப்பேரலை ஏற்பட்டபோது, மாதாவின் சொரூபத்துக்கு எந்தவித சேதமும் ஏற்படாது ஆலயம் சேதமடைந்ததாகவும் சுட்டிக் காட்டினார்கள்.



எனவே புதுமை மிக்க குறித்த ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதி உதவி வழங்குமாறு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையிடம் மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

அந்தக் கோரிக்கைக்கான பதிலை இதுவரையில் யாழ். ஆயர் தமக்கு தெரிவிக்கவில்லை என்றும், துறை சார்ந்த அமைச்சுக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் தாம் ஆலயப் புனரமைப்பு பணிக்காக உதவுமாறு பல கோரிக்கைகள் விடுத்தாகவும் தொவித்தனர்.

ஆனால், தமது கோரிக்கை களை இதுவரையில் எந்த அரசியல் வாதிகளோ, எவருமோ நிதிக்கான பங்களிப்பைச் செய்யவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்கள்.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதி களில் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கட்டைக்காடு முள்ளியான் பகுதி மக்கள் அனைத்து அபி விருத்திகளிலும் தாம் புறக்கணிக் கப்படுவதாக சுட்டிக் காட்டியதுடன், தமது ஆலய புனர் நிர்மாணப்பணிக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக சேவையாளர்கள், நலன்விரும்பிகளை ஆல யப் புனரமைப்புக்கான உதவிகளை வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(வ–106)


முற் சம்பளத்துடன் மாதம்
ரூபா 60,000/- உழைப்பதற்கு
தொழில் உங்கள் நகரத்திலேயே!



வருவோம் உங்கள் நகருக்கு; கைகொடுப்போம் புது தொழிலுக்கு
நாம் தேடுவது உங்களை

'மில்விக் லங்கா' தனியார் நிறுவனத்துடன் இணைந்து டயலொக் நிறுவனத்தில் புதிய சேவைகள் அபிவிருத்திபடுத்தல் (சிம்காட் விற்பனைக்கு அல்ல) மற்றும் அறிமுகப்படுத்தும் திட்டத்துக்கு காரியாலய சிறந்த தோற்றம் கொண்டவர்களுக்கான வாய்ப்பு.

எங்களைப் பற்றி....
எங்கள் நிறுவனம் தொலைதொடர்பு நிறுவனத்துடனான தொடர்புடைய நிறுவனங்களிலொன்றாகும். விசேடமாக இலங்கை டயலொக் நிறுவனத்துடன் இணைந்து எங்களது உற்பத்திகளை அறிமுகம் செய்யவுள்ளோம்.

தேவையான தகைமைகள்....
- 20 - 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.
- ஆண் - பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.
- காப்புறுதி விற்பனைத்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- பாடசாலைக் கல்வியை விட்டவர்களுக்கு.... தமிழ், ஆங்கிலம் எழுதுதல், உரையாடக்கூடிய தகைமை (சிங்கள மொழி அறிவு விசேட தகைமையாகக் கொள்ளப்படும்)

விண்ணப்பதாரர்கள் எதிர்பார்க்கப்படும் பிரதேசங்கள்.....

Milvik
விண்ணப்பங்களுக்கு
c.rohan@milvik.se
மேலதிக விபரங்களுக்கு
Tel:0765-440 770



நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவத்தில் திருமஞ்சத் திருவிழாவின்போது சுவாமி அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீதி வலம் வந்த காட்சி. (வ–17)



ஜேர்மனியில் வசித்துவரும் சிவரூபனின் அனுசரணையில் மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினூடாக வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பாடசாலை மாணவன் ஒருவருக்கு சைக்கிள் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலர் எஸ்.முரளீதரன், பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராஜா, பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.(வ–86)





அருட் திரு செ.அன்புராசா அடிகள் எழுதிய சமூக, ஆன்மிக, அரசியல் கட்டுரைகள் அடங்கிய 'அதிர்வுகள்' நூல் வெளியீடு அண்மையில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது எழுத்தாளர் அன்புராசா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (வ–135)





வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கனகாம்பிகா அம்பாளின் தேர்த்திருவிழா நிகழ்வுகள். (வ)





அனலைதீவு ஸ்ரீசங்கரநாதர மகா கணபதிப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா புத்தாண்டு தினத்தன்று நடைபெற்றது. இதன்போது விநாயகப் பெருமான் தேரில் உலாவரும் காட்சி. (வ–9)



தமிழ் சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலய பாடசாலை யில் அதிபர் சி. நேசராசா தலைமையில் விளையாட்டுப்போட்டிகள் இடம்பெற்றன. இதில் பாரம்பரிய விளை யாட்டுக்கள் இடம்பெற்றதுடன். வெற்றி யீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.(வ)







போரால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு, ஆழியவளை மக்களில் ஒரு தொகுதியினருக்கு முதற் கட்டமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இணைந்து வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளன. முதற்கட்டமாக 30 குடும்பங்களுக்கு குறித்த உதவிகள் வழங்கும் நிகழ்வு அண்மை யில் ஆழியவளை பொதுநோக்கு மண்டபத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதேச அமைப்பாளர் தங்கராசா காண்டீபன் தலைமையில் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், திட்ட இணைப்பாளர் சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டு மேற்படி உதவிகளை வழங்கி வைத்தனர். (வ)





2014 ஆம் ஆண்டு தரம் ஐந்து புல மைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய் திய கற்பக புரம் கிராமத்தைச்சேர்ந்த மாண வர்கள் கற்பகபுரம் ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலய நிர்வாக சபை யால் கௌரவிக் கப் பட்டுள்ளார்கள். வவுனியா குடியிருப்பு பிள்ளையார் ஆலய பிரதமகுரு கந்தசாமிக் குருக் கள், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நட ராஜா மற்றும் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.(வ–402)



மன்னார், குமானாயங்குளம் புனித தோமையார் ஆலய புதிய ஆலயத்துக்கான அடிக்கல்லை வடக்கு மாகாண கிராம அபி விருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் நட்டு வைத்தார். (வ)




மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் மன்னார் முருங்கன் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத் தில் இடம் பெற்றது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் கலந்து சிறப்பித்தார். இதன் போது வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து 2 இலட்சம் ரூபா நிதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட உடற்பயிற்சி உபகரணங்களை மன்னார் மாவட்டத்தில் உள்ள 45 உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கினார். (வ–56)



வவுனியா வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் திருக்கோவில் மகோற்சவ நிகழ்வை நடத்தியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. விழாவில் பங்கு பற்றிய கலைஞர் களான வீராச்சாமி கண்ணன், அடைக்கலம் விஜயன் ஆகியோருக்கு தமி ழருவி த.சிவகுமாரன் ஆலயப் பொருளாளர் த.சிவகரன் பொன்னாடை போர்த்துவதையும் நடன நிகழ்வை நெறியாள்கை செய்த நடன ஆசிரியை திருமதி குகதீசனுக்கு ல.சதீஷ் குமார் பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிப்பதையும் காணலாம். (வ–402)







சாவகச்சேரி ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய இளைஞர் குழுவினால் நடத்தப்பட்ட புத்தாண்டு தின விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டவர்கள் ஆலய முன்றிலிலிருந்து அழைத்து வரப்படுகின்றனர். நிகழ்வில் இடம்பெற்ற நடனக் காட்சியையும் விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி க. கிருபாசக்தியை சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி க.சியாமளா பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் காணலாம். (வ-9)









காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரிக்கான அலங்கார வளைவு மற்றும் மாண வர்களுக்கான சைக்கிள் தரிப்பிடம் ஆகியவற்றைப் பாடசாலையின் பழைய மாணவரும் சுவிஸ் நாட்டில் வசிப்பவருமான எஸ்.கதிர்காம நாதன் அமைத்து வழங்கி உள்ளார். அவற்றின் திறப்பு விழா அண்மையில் பாடசாலை அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட எஸ்.கதிர்காமநாதன் அலங்கார வளைவைத் திறந்து வைத்ததுடன் தனது மகளின் 18 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு காரைநகர் பிரதேசத்தில் கல்வி பயிலும் 18 வறிய மாணவர்களுக்கு சைக்கிள்களும் வழங்கினார். நிகழ்வில் வடகடல் நிறுவனத்தின் தலைவர் தி.பரமேஸ்வரன்.காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன், பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். (வ)









சங்கானை காளி கோவிலடியில் முதியோர் நிகழ்வுகள் அண்மையில் கோலகலமாக நடைபெற்றன. நிகழ்வில் விருந்தினர்களாக வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், வட மாகாண சபை உறுப்பினர் ப.சுகிர்தன், சங்கானை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர், சமூகசேவை உத்தியோகத்தர், கிராமசேவை உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தி யோகத்தர் மற்றும் பல்வேறு அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.(வ)



பூநகரி பிரதேசத்தில் கடந்த வருடம்( 2014 ) சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத்திட்டத்தில் அதிக அளவு பயனாளிகளை இணைத்து தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற பூநகரி பிரதேச செயலக சமூக சேவைகள் அபிவிருத்தி அலுவலர் செல்லத்தம்பி சுரேந்திரா அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற சாமஸ்ரீ தேசமான்ய விருது வழங்கும் நிகழ்வில் சமூக சேவைக்கான சாம தேசமான்ய விருதைப் பெற்றுள்ளார். (வ-9)



சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் முன் பள்ளிச் சிறார்களுக்கு கைவிசேடம் வழங்கும் நிகழ்வு அண்மையில் முன் பள்ளி மண்டபத்தில் இடம் பெற்றது. முன் பள்ளி நிறுவுநர் க.மகாலிங்கம் சிறார்களுக்கு கைவிசேடம் வழங்குவதைக் காணலாம் .(வ-9)



கைதடி எழுதிடல் அ.த.க.பாடசாலை வளாகத்தில் சரஸ்வதி சிலை அமைக்க, கைதடி வடக் கைச் சேர்ந்த பரோப காரிகள் இருவர் முன் வந்துள்ளனர். சிலை அமைப்பதற் கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் இடம்பெற்றது. (வ-9)

# ...ம்பாள் தேவஸ்தானம்
# ...ண்டிலிப்பாய்
# ...வ சிறப்பிதழ் - 2015






### மகோற்சவ குருவின் ஆசிச்செய்தி



இயற்கை எழில் மிக்க சண்டிலிப்பாய் கிராமத்தில் பல அற்புதங்கள் நிறைந்த சீரணி நாகபூசணி அம்பாளின் திருவருளை அறியாதவர்கள் இல்லை பல ஊர் பக்தர்களும் பக்தியோடு நோத்தி செய்யும் புண்ணிய தலமாகிய இத்திருத்தலத்தின் சிறப்பு தனித்துவமானது. அன்னையின் தேர்த்திருவிழா இன்று. ஆயிரம் ஆயிரம் அடியார்கள் வடம்பிடிக்க இன்று தேரேறி வருகின்றாள். வானுயர்ந்த கோபுரங்களும் மணி மண்டபங்களும் சிறந்து விளங்கி ஆலய சூழல் எங்கும் சோலைகளான திருத்தலமாம் சீரணிபதி இவ்ஆலயத்தின் மகோற்சவம் 17ம் திகதி ஆரம்பித்து இன்று சித்திரா பௌர்ணமி நன்நாளில் அன்னை தன் சிங்க ரதத்தில் தேரேறி அடியார்களுக்கு அருள்புரியும் பெருநோக்கோடு இன்று தேர் வலம் வருகின்றாள் தேர் திருவிழா இனிதே சிறக்க மன நிறைவுடன் ஆசி கூறுகின்றேன்.

**பிரம்மஸ்ரீ.கு.சோமாஸ்கந்தக்குருக்கள்**
(தேவஸ்தான குரு)

### அம்பிகையின் அருள் பெருகட்டும்

சீரணி அம்பாள் அருள் புரிய உன் பாதத்தில் என் மனதை கொடுத்தேன் அம்மா. இசை மழை பொழிய இன்புற்ற மக்கள் எல்லாம் துன்பத்தை மறந்து இன்பத்தில் அலை மோதுகிறார்கள். கண்கொள்ளாக் காட்சியெல்லாம் அடியார் சந்நிதியில் ஆரணி பூரணி-அபிராமித் தாயே உன் கடைக்கண் பாராயோ நீதான் சரணம் என்று வந்தவர்க்கு அருள் கொடுக்கும் தாயே எங்களது இதய கதவை துறந்து விட்டாய். அம்மா உன் பற்றை மறந்து தவிக்கும் புழுக்கள் போல் துடிதுடித்து இறப்பதை கண்ணால் காண்பதற்கு கருணை உள்ளம் பிறக்குதம்மா. எங்கள் கனவுகளை நினைவாக்கி கொள்பவளே உன் நாமத்தை சொல்ல சொல்ல என் மேனி சிலிர்க்குதம்மா உன் பற்றை அறியாத மானிடர்க்கு உன் பற்றை புகட்டுகிறாய் அம்மா. உன் காலடியில் வந்தாலே என் கவலை தீர்ந்துவிடும் அம்மா. தேன் அருவியில் உன் இன்பத்தை காண்பதற்கு வீழ்ந்தேன் அம்மா. இது போல் உலக மக்களுக்கும் பாக்கியம் கிடைக்க வேண்டும் அம்மா. என்றும் உன் காலடியில் சரணம் அடைந்தேன் அம்மா. இறைவனின் இதயத்தை தொடுவதற்கு நாங்கள் செய்யும் தொண்டினால் தான் இறைவனின் இதயத்தைத் தொட முடியும். இத்தொண்டு செய்பவர்களுக்கு ஒரு கையால் கொடுத்தால் மறு கைக்கு தெரியாமல் இருக்க வேண்டும்.

**தம்பையா பரஞ்சோதி**
(ஆதீன கர்த்தா)
*சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்*

### ...வரலாறு

...பற்ற யாழ்ப்பாண நகரத்தில் அமைந்துள்ள பதியில் வாழ் ...இராமன் சீரணி என்னும் மண்ணில் சிறப்புற்று வாழ்ந்து ...த்தர் இனசன வழியில் பெரிய சாஸ்திரியார் தெய்வானைப் ...ல்வாகனம், பெரியபிள்ளை, சின்னப்பிள்ளை, வேலர் ... அம்பாள் வாலாயம் பெற்ற முருகேசுவிடம் சோமவாரநாள் ...ர் இவ்விடத்தில் சீரணியில் எழுந்தருள வேண்டும் என்றும் ... சைவ முறைப்படி ஒரு கொட்டகை அமைத்து அதில் பூசை ... இம்முறைப்படி இன சன மக்கள் எல்லோரும் சேர்ந்து ...ரயினர் பரிபாலித்து வருகின்றனர்.

### தங்கரத தேரேறி..........



சித்தர்கள் கூடி வாழும்
சீரணியாம் பதியினிலே
பக்தர்கள் புடை சூழ
பவனி வரும் நாயகியே
முப்பொழுதும் நமைக்காக்க
முத்து ரதத் தேரேறி
சொர்ப்பனமாய் வலம் வருவாள
சுந்தரி எம் நாகபூசணியே......

**இ.சிறிதரன்**
(தலைவர்)
இந்து இளைஞர் மன்றம்

**சீரணி அம்மன் மோட்டார் சைக்கிள் திருத்தகம்**
சீரணி, சண்டிலிப்பாய். தொ.பே : 0776176572

**கேதீஸ் பல்பொருள் வாணிபம்**
சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய்.
தொ.பே : 0777 863091

## ...ப்புற வாழ்த்துவோர்

**...MANIYAM IMPEX**
இல.(121A),
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே : 021 222 2819, 077 3632963

**பாக்கியரட்ணம் ஹாட்வெயார்ஸ்**
பிரதான வீதி, சங்கானை. தொ.பே : 0212250105

**தரன் ரேடர்ஸ்**
130, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 0212222664

**ஐடியல் அக்கடமி**
தரம் 6 முதல் A/L வரை திறமையும் அனுபவமும்
வாய்ந்த ஆசிரியர் குழுவுடன்
தலைமையகம் : சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்.
கிளை 1 : இடைப்பிட்டி, காரைநகர்
கிளை 2 : கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,

**துர்க்கா மரத்தொழிற்சாலை**
...மில் ஒழுங்கை, சண்டிலிப்பாய். தொ.பே : 0777114852

**ITALY TRAVELS**
யாழ் - கொழும்பு வான் சேவை
Tel : 00393510036666, 0777863091

**கந்தசாமி அன் சன்ஸ்**
பலசரக்குப் பொருட்களை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதான வீதி, சங்கானை.

**...கம்ஷா களஞ்சியம்**
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.



**V.K.T அரிசி ஆலை**
நீர்வேலி சந்தி நீர்வேலி Tel : 077 525 5882

**மொடோண் மற்ஸ் அக்கடமி**
பிரதேச செயலகம், அருகாமை, சண்டிலிப்பாய்
தரம் 4-11 வரை A/L கலைப்பிரிவு
O/L Day வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
நிர்வாகி : B.குகா (கணித ஆசிரியர்)

**...YASO TEX**
பிரதான வீதி, நெல்லியடி



**நாகபூசணி அரிசி ஆலை**
சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்

## நீங்கள் முடிஉதிர்வு, பொடுகு, அரிப்பு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா???

இப் பிரச்சினைகளிற்கு தீர்வாக இன்றே பாவியுங்கள் சிறந்த மூலிகைகள் அடங்கிய

"றோயல் அகஸ்தியா கூந்தல் எண்ணெய்"

தலைக்கு குளிர்ச்சியினை அளித்து தலைச் சருமத்துக்கு ஊட்டமளித்து, முடி உதிர்வைத் தடுத்து, கூந்தலை கருமையாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்து முகத்திற்கு பொலிவை அளிக்கவல்லது.

சந்தைப்படுத்துவோர்: சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்) தொ.பே: 021 222 2567
Manufactured by: Royal Industries Colombo -13

Quality Royal A Kasthiya Hair Oil Guaranteed

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துக் கடைகளிலும், மருந்தகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி/15708) (4.3.7)

## உணவகத்துக்கு வேலையாள்கள் தேவை

(1) இந்தியன் + இலங்கை சமையல் நன்கு அனுபவமுள்ள சமையலாளர் (பெண்) (புரியாணி வகை செய்யக் கூடியவர், மரக்கறி வகைகள் விதம்விதமாக.)
(2) சமையல் உதவியாளர் (பெண்கள்) (இடியப்பம், தோசை, வடை, இட்லி)
(3) மேற்பார்வையாளர் (ஆண்) (ஓய்வூதியர் விரும்பத்தக்கது)
(4) சாப்பாடு பரிமாறுபவர் (பெண்கள்)

(59202) (4.3.7) தொடர்பு: 021 224 2136

## வேலை வாய்ப்பு

சுவீடன் நாட்டு நிறுவனத்தின் யாழ். சேவை நிலையத்தில் சுயாதீன முகாமைத்துவ பதவி நிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெற்றிடம் - 12
தகைமை - O/L / A/L
வயதெல்லை - 18 இற்கு மேல் ஆண், பெண் இருபாலாரும்
பயிற்சி காலத்தில் - 10,400/=
(முன் அனுபவம் இருப்பின் 16,000/=)
பயிற்சியின் பின் - 40,000/= இற்கு மேல்

நேர்முகப்பரீட்சைக்கு கல்விச்சான்றிதழ், தகைமைச்சான்றிதழ் உள்ளடங்கலாக சுயவிவரக்கோவையுடன் 05/05/2015 மற்றும் 06/05/2015 ஆம் திகதிகளில் 10.00am - 02.00pm வரை சமுகமளிக்கவும்

**ஒறிபிளேம்**
616, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவை முன்)

## சிகிச்சை நிலைய உதவியாளர்

பற்சிகிச்சை நிலையத்தில் உதவியாளர் - பயிலுநர் பதவிக்கு A/L வரை படித்த 30வயதிற்குட்பட்ட பெண் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். ஆர்வமுள்ளோர் சுயவிவர தரவுகளுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

198, அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (59212) (9.3)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பகிரங்க ஏல விற்பனை

திகதி: 16.05.2015
இடம்: இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், மன்னார் கிளை
இல.06, தலைமன்னார் வீதி, சாவற்கட்டு, மன்னார்.

**விற்பனைக்குரிய வாகனங்கள்**
WP UC 1xxx - Bajaj CT 100 மோட்டார் சைக்கிள்
WP TP 9xxx - Bajaj CT 100 மோட்டார் சைக்கிள்
WP QJ 6xxx - Three Wheeler -Alba
முச்சக்கரவண்டி

**மின் உபகரணங்கள்:**
(தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி, போட்டோப் பிரதி இயந்திரம், கமரா, மடிக்கணினி, மின் பிறப்பாக்கி)

**தளபாடங்கள்:**
கட்டில், மெத்தை

ஏலவிற்பனைக்குரிய பொருள்கள் பின்வரும் திகதியிலிருந்து 11.05.2015-15.05.2015 வரை மேற்குறிப்பிட்ட முகவரியில் பார்வைக்கிடப்படும்.

நேரம்: காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை

**ஏலவிற்பனைக்குரிய நிபந்தனைகள்:**

நுழைவுக்கட்டணம்: ஒருவருக்குரிய நுழைவுக்கட்டணமாக ரூபா 1000.00 மும் மீளச் செலுத்தப்படாத கூடிய வைப்பிற்காக ரூபா 5000.00 மும் ஏலவிற்பனைக்குரிய திகதியில் அறவிடப்படும்.

கொடுப்பனவு: ஏல விற்பனையில் நிர்ணயிக்கப்பட்ட விலையின் 30% (மீளச் செலுத்தப்படாத) அன்றைய தினத்திலும் மிகுதி 70% 18 ஆம் திகதியி லிருந்து 20 ஆம் திகதி மே 2015 பி.ப. 3.00 மணிக்கு முன்பதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மன்னார் கிளை காரியாலயத்துக்கு செலுத்தப்பட வேண்டும்.

எந்த நேரத்திலும் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மாற்றம் செய்யவோ அல்லது ஏலவிற்பனைக்குரிய பொருள்களை ஏலத்திலிருந்து மீள எடுப்பதற்கோ (முன்னறிவித்தல் இன்றி) இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அதிகாரம் உள்ளது.

பணிப்பாளர் நாயகம், இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம்

மேலதிக விவரங்களுக்கு:
எஸ்.துகேந்திரன் கிளை நிறைவேற்று அதிகாரி
077 760 1485, 023 222 2277 இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், மன்னார் கிளை
இல.06, தலைமன்னார் வீதி, சாவற்கட்டு, மன்னார்.

## இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக விழா - 2015

இடம்: இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கம்
காலம்: 30.04.2015 - 04.05.2015 நேரம் : பி.ப 4.00 மணி

### 03.05.2015 நான்காம் நாள்

தலைவர்: கு. பாலஷண்முகம் (விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

பிரதம விருந்தினர்
கௌரவ திருமதி **விஜயகலா மகேஸ்வரன் ஐ.தே.க. (பா.உ)**
(மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர்)



* P.S. பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினர் வழங்கும்

**மங்கல இசை**

நாதஸ்வரம்
* பிச்சையப்பா ரஜீந்திரன்
* ரஜீந்திரன் சாகித்தியன்

தவில்
* R.வசந் மோகன் (சுதா)
* B.பாலசங்கர்

* மங்கல விளக்கேற்றல்
ப.சிவபாஸ்கரன்
(உரிமையாளர்-சாரங்கா நகைமாடம்)
ச.ஜெகதீஸ்வரன்
(உரிமையாளர் - நியூ நதியா நகைமாடம்)
க.ஜெயசீலன்
(உரிமையாளர் - தனம் ரெக்ஸ்ரைல்ஸ்)
* தேவாரம்: செல்வி சித்திரா கந்தசாமி
* ஆசியுரை : மௌலவி அப்துல் அசீஸ் (காசிமி)
(தலைவர், அகில இலங்கை ஜம்பியதுல் உலமா யாழ். கிளிநொச்சி மாவட்டம்)
* வாழ்த்துரை : கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவனேசன்
(ஓய்வுநிலை விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

கெஞ்சிற்கச்சேரி

| | | |
|---|---|---|
| நாதஸ்வரம் | - | P.S.பாலமுருகன் |
| வயலின் | - | S.கோபிதாஸ் |
| தவில் | - | S.செந்தில்நாதன் |
| மிருதங்கம் | - | நல்லை G. கண்ணதாஸ் |
| கடம் | - | G.வசந் |
| முகர்சிங் | - | S.சதீஸ்குமார் |

* உடுவில் திருத்திய நிகேதன் நாட்டியாலய மாணவிகள் வழங்கும்

**நாட்டிய அர்ப்பணம்**

நட்டுவாங்கம்: ஸ்ரீமதி சோபனா சுதாகரன்
பாட்டு : சி.விபிஷன்
வயலின் : அ.ஜெயராமன்
மிருதங்கம் : சி.செந்தூரன்
கீ.போட் : L. நிமலன்
உடுக்கு : K.சுதாகரன்

**குரலிசை**

பாட்டு : S.அமிர்தசிந்துஜன்
வயலின் : அ.ஜெயராமன்
மிருதங்கம் : S.அமிர்தலோஜன்
கெஞ்சிரா : சிவசுந்தரசர்மா
கடம் : க.தேசிகன்

* ஏழாலை அபிநயா கலாலய மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி

நட்டுவாங்கம் : ஸ்ரீமதி ஜெயந்தி சுகிர்தன்
பாட்டு : S.அமிர்தலோஜன்
வயலின் : அ.ஜெயராமன்
மிருதங்கம் : சி.மகேந்திரன்

* கலைஞர்கள் கௌரவிப்பு
* பிரதம விருந்தினர் உரை

இணுவில் கந்தசுவாமி கோவில் இளம் தொண்டர் சபை இசை வகுப்பு மாணவர்கள் வழங்கும்
**வள்ளி திருமணம் (இசைநாடகம்)**

* நன்றியுரை

அனுசரணை: **Gift Selected From FASHION HOUSE**
பெஷன் ஹவுஸ்
No. 203, K.K.S. Road, Jaffna. Tel: 021 222 8713
Fax: 021 222 3034 Website: Fashionhousejaffna.com
(சி.15724) (45.3.7)

## அலங்காரத் திருவிழா

வாதரவத்தை கேதுவுப் பிள்ளையார் ஆலய அலங்காரத்திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

விசேட அபிசேக ஆராதனைகளைத் தொடர்ந்து தீர்தோற்சவம் இடம்பெறும்.

அன்றையதினம் மாலை 7 மணிஅளவில் நடைபெறும் வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வருதலும் நிகழும்.

இரவு விசேட நிகழ்வுகளாக இசைச் சங்கம்,கதாப்பிரசங்கம், ,வில்லிசை, பக்திப் பாடல்கள் ஆகியனவும் - சிறப்பு நிகழ்வாக உலக சைவத்திருச் சபை மேற்படி ஆலயத்துடன்இணைந்து நடத்திய மாணவர்களுக்கான சமய அறிவுப் போட்டிப் பரீட்சை தொடர்பிலானபரிசில்வழங்கலும் இடம்பெறும். (ஒ)

உதயன் 021 5671111

உ
முத்துமாரிஅம்மன் துணை

## வல்வையின் இந்திரவிழா

வரலாற்றுச் சிறப்புமிக்க
**வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தீர்த்த உற்சவத்தை**
முன்னிட்டு வல்வை மக்களால் நாளைய தினம்
**(04.05.2015) திங்கட்கிழமை**
மிகச் சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

## இந்திர விழா

* 3 கிலோ மீற்றர் தூரத்திற்கு வீதிச் சோடனைகள்
* வானுயர தெய்வ உருவங்கள் (போட்டிக்கோ)
* அதி உச்ச மின் அலங்காரங்களுடன் மின்னொளிகள்
* புகைக்கூடுகள் வான்நோக்கிப் பறக்க விடுதல்
* சம நேரத்தில் 10 மேடைகளில் கலை நிகழ்வுகள்
* இன்னும் பல கண்கவர் காட்சிகள்/கலை அம்சங்கள்

என்பன நடைபெறவுள்ளன என்பதை மிகவும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

முக்கிய குறிப்பு:

3 பிரதான வீதிகளிலும் சைக்கிள் உட்பட வாகன பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வண்ணம்
**வல்வை மக்கள் சார்பில்**
வல்வை நெடியகாடு மோர்மட வரவேற்புக் குழு.

(58492) (4.3.5)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் லண்டன் PR உள்ள சிவில் எஞ்சினியர் மணமகன் 38 வயது உயரம் 5'8" மிருகசீரிடம் 3 ஆம் பாதம், 7 இல் செவ்வாய் (தோஷம் குறைவு) மொத்த கி.பாவம் 47 பொருத்தமான படித்த மணமகள் உடன் தேவை.

தொ.பே: 021 205 6446 (பி.ப. 3.00 மணி - இரவு 8.00 வரை)

**Email: spava09@yahoo.com**

(59491)(4.3.7)

## WE WANT YOU !!

Jaffna Branch

Trainee Marketing Executive & Managment Trainee (Marketing only)

we offer exiting income potential and career opportunities we are represented throughtout 21 cuonries in asia

* age 18 and above
* we provide basic salary traveling & commition
* overseas travel for achievers

Mr . Anthony
Contact :- 0773566835
email : jaffnapoineerhouse@gmail.com

Pioneer House
2nd Floor, 100.
Manipay Road, Jaffna

## அமெரிக்க கிரீன்கார்ட் லொத்தர் 2016

அமெரிக்க கிரீன்கார்ட் லொத்தர் 2016ஆம் ஆண்டுக்கு தெரிவானோரின் விபரங்கள் 2015 மே 5ஆம் திகதி வெளிவரவுள்ளன. இதில் தெரிவாகும் அதிர்ஷ்டசாலிகள் நிரப்பவேண்டிய படிவங்களை 2003ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்க கிரீன்கார்ட் லொத்தர் விண்ணப்பிப்பதில் அனுபவம் வாய்ந்த எமக்கூடாக பூர்த்தி செய்துகொள்வதுடன் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளவும்.

முறைப்படி படிவங்கள் பூர்த்திசெய்யாமை அல்லது தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களால் அமெரிக்க தூதரகத்தினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் உங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

**BRISTOL CYBER CAFE**
No. 8/3/4, Bristol Street, Colombo 01.
Tel: 0112 393919 / 0774 276579 www.bristolcc.biz

## நேர்முகத்தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கடந்த 27 வருடங்களாக காப்புறுதித்துறையில் மக்களுக்கு சிறந்த சேவைகளை ஆற்றிவரும் யூனியன் அஷ்யூரன்ஸ் பி.எல்.சி ஆனது மேற்படி பதவி விண்ணப்பங்களுக்கு உங்களிடமிருந்து சிறந்த விண்ணப்பங்களை எதிர்பார்க்கிறது.

பதவி வெற்றிடங்கள்:

1. காப்புறுதி ஆலோசகர் (Insurance Advisor)
   தகைமைகள்: க.பொ.த. சாதாரண தரத்தில் 06 பாட சித்திகள்
2. குழுத்தலைவர்கள் (Team Leaders)
   தகைமைகள்: க.பொ.த. சாதாரண தரத்தில் 06 பாட சித்திகள்
   க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்திருத் தல் விரும்பத்தக்கது.
   சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் விரும்பத்தக்கது.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு தகுந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதில் பகுதிநேரமாக (Part time வேலை செய்ய விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் 15.05.2015 இற்கு முன்னர் தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

தபால் முகவரி:
N.புஸ்பகுமார்
Unit Development manager,
Union Assurance Plc,
139, Stanly Road, Jaffna.

மின்னஞ்சல் முகவரி: Jaffnajobs11@gmail.com
மேலதிக தொடர்புகளுக்கு: 077 657 7701 (59410) (45.3)

## ஓய்வு பெற்றுவிட்டீர்களா?

65 வயதுக்குட்பட்ட ஆர்வமுள்ள வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு .

குறிப்பு: முழுநேரமாகவோ, பகுதிநேரமாகவோ பணியாற்றலாம்.

* 2 வாரப் பயிற்சிக் காலமுடையது
* பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
* பணி நிலையங்கள்:
  யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நெல்லியடி

**அடிப்படைத் தகைமைகள்:**

* G.C.E. (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
* 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 15.05.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 5057,
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# அரச இலக்கிய விருதுக்கு விண்ணப்பிக்க முடியும்

அரச இலக்கிய விருது வழங்கலுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து கலாசார மற்றும் கலை கள் அலுவல்கள் அமைச்சு கலாசார திணைக்களத்தின் அரச இலக்கிய குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆண்டு தோறும் இந்த அரச இலக்கிய விருது வழங்கும் நடைமுறை கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் இவ்வருடத்துக்கான விருது வழங்கு வதற்கு பொருத்தமான ஆக் கங்களை எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்பதாக செயலாளர், அரச இலக்கிய குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக் கப்பட்டுள்ளது.

இதில் சுய நாவல், சுய சிறுகதை, சுய கவிதைப்படைப்பு, சுய இளையோர் இலக்கியப் படைப்பு, சுய பாடலாக்கத் தொகுப்பு, சுய நாடகம், சுய அறிவியல், புனைகதை, சிறுவர் இலக்கியப்படைப்பு, சுய புலைமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு, மொழிபெயர்ப்பு நாவல், மொழிபெயர்ப்பு சிறு கதைத் தொகுப்பு, மொழி பெயர்ப்புக் கவிதைப் படைப்பு மொழிபெயர்ப்பு நாடகம் மற்றும் நானாவித விடய நூல்கள் என்பவற்றின் சிங்கள தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அமைந்த பிரதிகளை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–108)


## இலவசம்

கட்டட இடிபாடுகள் உண்டு. தேவைப்படுவோர் தொடர்பு கொண்டு இலவசமாக எடுக்கலாம். தொடர்பு: 071 489 3055



UK, Australia, Canada, USA, New Zealand , Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...

## வங்கியில் பணவைப்பு

Saving book, Fixed Deposit, Statement

3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)

Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

SKYWALK Visa Solutions

ஸ்கைவோர்க் வீசா சொலூஷன்

No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)

**077-7711905**

## WORK WITH ALMARAI COMPANY - SAUDI ARABIA

المراعي Almarai

2014ஆம் ஆண்டு 3.36 மில்லியன் டொலருக்கும் மேற்பட்ட வருமானத்தைப் பெற்று 35000 க்கும் மேற்பட்ட பணியாட்களைக் கொண்ட உலகின் முதற்தர பால் உணவு உற்பத்தி நிறுவனமான அல் -மராயி இல் உடனடிவேலை வாய்ப்புக்கள்

இலவச வசதிகள்-வரியற்ற சம்பளம், ஒவ்வொரு வருடமும் 33 நாட்களைக் கொண்ட வருடாந்த சம்பளத்துடன் கூடிய விடுமுறை, உணவு வழங்கப்படமாட்டாது(விற்பனையாளர் / வணிகர்கள்) ஒப்பந்தக் கால முடிவில் பிரயாணச் சீட்டு இலவசம் / ஆயுள் காப்புறுதி மற்றும் வைத்திய வசதிகள்

**விற்பனையாளர்கள் (SALESMAN) - 30 Nos**
Salary SR-1900 (Rs. 66,500)

**வணிகர்கள் (MERCHANDISER) - 20 Nos**
Salary SR-1760 (Rs. 61,600)

செல்லுபடியான வாகன அனுமதிப்பத்திரத்துடன் FMCG உணவு உற்பத்தித் துறையில் விநியோக விற்பனையாளராக குறைந்தபட்சம் 02 வருட அனுபவம்.

1 SR = Rs 35

**தொழிலாளர்கள் (LABOURER) - 50 Nos**
(Food Allowance)
Salary SR-700+400 (Rs. 38,500)

Please bring 2 sets of your type written bio-data with copies of professional qualification and experience certificates, one passport size photograph, copy of passport ON OR BEFORE 10-05-2015

**TRANS GULF (PVT) LTD.**

Corporate Recruitment Division

Since 1990 L.L.No. 0742 90,1st Floor, Chatham Street, Colombo - 01

Tel: 011 5371428-30-35-36 / 011 2541076 Fax: 011 2439622

Contact us: 0722 55 66 44

E-mail: cv@tgl.lk

CV Collection only

No fee will be Collected for CV

AL/742/Advt/25/15


## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பிள்ளைகளின் பெருமைகளை மற்றவர்களிடம் கூறி மகிழ்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் புதிய பொருள்கள் கொள்முதல் செய்வீர்கள்.

**இடபம்:** மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் புதிய பங்குதாரரைச் சேர்ப்பீர்கள். பயணங்களில் கவனம் தேவை.

**கடகம்:** தன்னிச்சையாகச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் உங்கள் கொள்கைகளில் சில மாற்றங்கள் செய்வீர்கள்.

**சிங்கம்:** சுறுசுறுப்புடன் செயற்பட்டு தேங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள். மனைவி வழியில் மதிப்புக் கூடும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கன்னி:** பழைய பிரச்சினைகள் தலை தூக்கும். உறவினர், நண்பர்களின் பேச்சும், செயற்பாடுகளும் உங்களுக்குப் பிடிக்காமல் போகும். சிலர் உதவுவது போல் உபத்திரவம் தருவார்கள்.

**துலாம்:** குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள்.

**விருச்சிகம்:** ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். நம்பிக்கைக்குரியவரை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடுகளைகட்டும்.

**தனுசு:** சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். உறவினர், நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். பயணங்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் புதிய இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள்.

**மகரம்:** புதிய முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். அக்கம்– பக்கம் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். விமர்சனங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம்.

**மீனம்:** உங்களின்திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வேற்று மதத்தவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் சந்தை இரகசியங்களைத் தெரிந்து கொள்வீர்கள்.

### நாளை

**சித்திரை-21**
**திங்கட்கிழமை**
**04.05.2015**

திதி: பூரணை
மு.ப.09.23 வரை
நட்சத்திரம்: சுவாதி
மு.ப.10.42வரை
சுபநேரம்:
11.56-01.26 வரை
இராகுகாலம்:
07.26-08.56வரை

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லம்மா சின்னப்பொடி



மீசாலையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா சின்னப்பொடி 30.04.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.05.2015) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குட்சைட் வீதி, கோண்டாவில்.
077 501 9585 (59417)(4.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி நாகரத்தினம் தம்பிராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியை)



தோற்றம் 13.12.1919 – மறைவு 30.104.2015

வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி நாகரத்தினம் தம்பிராசா 30.04.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் தம்பிராசா (விதானையார்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தெய்வானைபிள்ளை தம்பதிகளின் செல்ல மகளும் காலஞ்சென்றவர் களான அருளம்பலம்- லட்சுமிப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமக ளும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை வாத்தியார், வைத்தியர் விசயரத்தினம், வைத்தியர் தம்பித் துரை ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும் காலஞ்சென்ற திருமதி ரத்தினம்மா பொன்னுத்துரையின் மைத்துனியும் அருளானந்தம், தனலட்சுமி, சுகிர்த லட்சுமி(கனடா), காலஞ்சென்ற ஜெயலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசேஸ்வரி, சிவலிங்கம், சண்முகரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும், கௌதமி, சுபாஷினி மயூரகாந்த் (கனடா), வத்சலா, திவாகரன், கமலகாந்த், சசிகாந்த், வனஜா, கிருத்திகா (கனடா), கெவின், கீதன் (கனடா), மாலவன் (கனடா) ஆகியோரின் அருமைப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வளலாய் கூணன் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(3,9,7)

3 ஆர் கட்டைபாடி,
கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.

தகவல்:
சிதம்பரப்பிள்ளை சண்முகரத்தினம்
(அப்பன்) +14162660542, +14162664444
தம்பிராசா அருளானந்தம் +94776533283
தனலட்சுமி சிவலிங்கம் +94772227708
கமலகாந்த் சிவலிங்கம்

## திருமதி சற்குணம் வீரவாகு

(நயினாதீவு)



நயினாதீவு, 2 ஆம் வட்டாரத் தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இல.9, கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குணம் வீரவாகு 30.04.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் -இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரவாகுவின் அன்பு மனைவியும், தேவிகா (ஜேர்மனி), தேவதாஸ் (லண்டன்), காலஞ்சென்ற ரேணுகா மற்றும் மோகனதாஸ் (கல்வி வலயம் -வேலணை) ஆகியோரின் அன்புத் தாயும், சுந்தரராஜன் (ஜேர்மனி), சிவானந்தி (லண்டன்), இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியும், வள்ளியம்மை, இராசநாயகம், சண்முகரெத்தினம், கமலாதேவி, குலசிங்கம், காலஞ்சென்றவர்களான பூபதி, கனகசபை, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம், ஐயாச்சாமி, புண்ணியமூர்த்தி, சாந்தநாயகி, கனகசுந்தரம், பரமலிங்கம், புனிதவதி மற்றும் மனோன்மணி, ருக்குமணி, அமிர்தகௌரி, தனரெத்தின பூபதி, புஸ்பராணி, பூலோக சுந்தரி, ஞானசோதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுஷாந்த் (ஜேர்மனி), சந்தோஷன், பூஷணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2015) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9, கலட்டியம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 373 5959

தகவல்:
குடும்பத்தினர்.

# வணிகர் மன்ற வாகன பாதுகாப்பு நிலையம் தொடர்ந்து இயங்கும்

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிக் காணியில்

தென்மராட்சி, மே 3

சாவகச்சேரி கைத் தொழில் வணிகர் மன்ற பாதுகாப்பு நிலையம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்து இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர் பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட வர்த்த நிலையங்களில் பணியாற்றுகின்ற வியாபாரிகளின் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் இந்தப் பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்டு வந்தன. இந்த நிலையம் திடீரென மூடப்படுவதால் வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோரின் வாகனங்கள் பாதுகாப்பாக விடுவதற்கு இடம் இல்லாத நிலை காணப்படுவதால் மன்ற நிர்வாகத்தினர் டிறிபேர்க் கல்லூரி நிர்வாகத்துடன் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.

நகர்ப்பகுதி வர்த்தகர்களுக்கென நகர சபையினால் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு நிலையம், சந்தை வளாகத்தில் புதிய விற்பனைப் பிரிவுகள் நிர்மாணிக்கப்பட்டதால் வியாபார நடவடிக்கைகளுக்காகத் தற்காலிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.


புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் சந்தை விற்பனைப் பிரிவு கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதால் விரைவில் அவை வியாபாரிகளின் பயன்பாட்டுக்கு விடப்பட்டதும் பாதுகாப்பு நிலையம் வர்த்தர்களால் பயப்படுத்தப்படும்.

அதுவரை தொடர்ந்து தற்போது பாவனையில் உள்ள பாதுகாப்பு நிலையத்தை வர்த்தகர்கள் பயன்படுத்த அனுமதிக்குமாறு சங்கத்தினர் கல்லூரி நிர்வாகத்தினரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாகவும் இதனையடுத்து மறு அறிவித்தல் வரை வர்த்தக நிலையப் பணியாளர்கள் தற்போதைய பாதுகாப்பு நிலையத்தில் தமது வாகனங்களை விடலாமென மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ-௭)

# மரண அறிவித்தல்கள்

## ஐயாத்துரை தியாகராசா

CTB Bus Driver



பிறப்பு 10.10.1930 இறப்பு 30.04.2015

யாழ் தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கனடா Brampton ஐ வதி விடமாகவும் கொண்ட ஐயாத்துரை தியாகராசா 30.04.2015 வியாழக்கிழமை கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - முத்தாச்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை (மாரிசன் கூடல்) தம்பதிகளின் மூத்த மருமகனும், தெய்வானையின் அன்புக் கணவரும், ஜெயராசா, ஜெயசிங்கம் (கனடா), ஜெயக்குமார் (கனடா), ஜெகதீஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மகாலிங்கத்தின் அன்புச்சகோதரரும், புஸ்பவதி, தேவகி, பத்மராணி, பரமநாதன், சர்மிளா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தம்பையா - அன்னபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பங்கசமலர், தவபாலன் ஆகியோரின் சிறிய தந்தையும், சுவர்ணா, சுவர்ணமலர், சுவர்ணேஸ், சுவர்ணராஜி, மிலாணி, டினோஜன், அனந் தன், ஆரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2015) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: தியாகராசா ஜெயராசா (ஜெகன்)
ஸ்ரீ சுப்பிரமணிய அச்சக உரிமையாளர்.
0019052163503, 0775324572

## கனகசபை மயில்வாகனம் (குஞ்சர்)

( முன்னாள் உத்தியோகத்தர் - ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம்)



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப் பிடமாகவும், வன்னியசிங்கம் வீதி, தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை மயில்வாகனம் 01.05.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனக சபை - செல்லம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - ஆச்சிமுத்து தம்பதிகளின் மருமகனும் மனோராஜ், சகிதா, துஷிதா, லோகராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந் தினி, ஸ்ரீரமணன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், தில்லைநாதன் மற்றும் நடராசா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஸ்பகாந்தி, கணேசமூர்த்தி, மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மிதுஷன், கர்ஷனா, கிஷான் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்.

முருகமூர்த்தி கோயில் நவாலியைப்பிறப்பிடமாகவும்
வேலணை துறையூரை வசிப்பிடமாகவும் கொண்ட

## செல்லையா செல்லம்மா அவர்கள்

கடந்த 01.05.2015 வெள்ளிக்கிழமை காலமானார்



அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி செல்லையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி பொன்னாச்சி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் நல்லம்மா காலஞ்சென்ற பாக்கியம், ஆகியோரின் சகோதரியும், மகேஸ்வரி (ஓய்வுபெற்ற உப தபால் அதிபர் வேலணை துறையூர்), நடேசன் (ஓய்வுபெற்ற மின்மானி வாசிப்பாளர் யாழ்ப்பாணம்), செல்வ ரத்தினம் (ஜேர்மனி), காலஞ்சென்ற மங்களேஸ்வரராணி (முன்னாள் ஆசிரியர் - பண்ணாகம் தமிழ் கலவன் பாடசாலை), செல்வனேஸ்வரி (முன்னாள் கிளை முகாமையாளர் - வேலணை பல.நோ.கூ.ச), புஸ்பகாந்தி (சுவிஸ்), செல்வத்தவம் (லண்டன்) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற சண்முகவடிவு (ஓய்வுநிலை அதிபர் - சண்முகா ம.வி.புங்குடுதீவு), குலநாயகி(ஓய்வுநிலை தாதி - யாழ் வைத்தியசாலை), உமா(ஜேர்மனி), செல்வநாயகி, சிவரங்சராசா, வரதராசா (சுவிஸ்), சிவநேசன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான மூத்த தங்கச்சி, ஆச்சிப்பிள்ளை, கந்தையா, ஏரம்பு மற்றும் நேசமணி, இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் தயானந்(தபால் ஊழியர் - வேலணை), பிரசாந்(யாழ் இந்துக்கல்லூரி), கிருசா (பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை), சுபிதா, சூர்யா, சுரீஸ், நிவேதா, அருந்ததி, ஜவகர், சஜானா, மதுஷா, லக்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 03.05.2015 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் தாளயங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

துர்க்கா நாவான் வீதி,
வேலணை,
துறையூர்.

தகவல்:
குடும்பத்தினர்
078 740 6082

# பாவனைக்குதவாத தேயிலையுடன் 4 பேர் கைது

கொழும்பு, மே 03

கடுகன்னாவ – பெலும்கல பகுதியில் ஒரு தொகை கழிவுத் தேயிலையுடன் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 20 ஆயிரம் கிலோ கிராம் கழிவுத் தேயிலை கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர்களை எதிர்வரும் 6ஆம் திகதி கண்டி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# நம்பொடையில் தீ விபத்து

கொழும்பு, மே 03

கொத்மலை இறம்பொடை நகரத்தில் நேற்று முன் தினம் இரவு 7.00 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாகக் கடை ஒன்று முற்றாகச் சேதமானதுடன் பகுதி அளவில் 2 கடைகள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. அயலவர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இறுதி நேரத்தில் நுவரெலியா மாநகர சபையின் தீயனைக்கும் பிரிவின் உதவியும் நாடப்பட்டுள்ளது.

பாதிப்புக்களின் பெறுமதி குறித்து இதுவரை கணக்கிடப்படாத நிலையில், தீக்கான காரணம் குறித்து கொத்மலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மின் ஒழுக்கு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கும் எனவும் சந்தேகிக்கபடுகின்றது. (த)

## நிவாரணப் பொருளுடன் நேபாளத்துக்கு விமானம்

கொழும்பு, மே 3
நேபாளத்தில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட நிலஅதிர்வில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்களுடன் விமானப் படைக்குச் சொந்தமான மற்றுமொரு விமானம் சென்றுள்ளது.
நேபாளத்தின் காத்மண்டு நகரத்தை நோக்கி நேற்றுச் சனிக்கிழமை காலை குறித்த விமானம் நிவாரணப் பொருள்களுடன் புறப்பட்டுச்சென்றுள்ளது.
உலருணவு பொருள்கள், குடிதண்ணீர், மருந்து பொருள்கள் அடங்கலாக சுமார் 13,000 கிலோகிராம் அளவிலான நிவாரண பொருள்கள் இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (த)

## கட்சி தாவல் படலம் மீண்டும் ஆரம்பம்

சிறிலங்கா சுதந்திர கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் எட்டுப் பேர் ஐக்கிய தேசிய கட்சியில் இணையவுள்ளதாக தகவல் வெளியாகி யுள்ளது.
குறித்த உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்காக உயர் மட்ட தலைவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
இது தொடர்பாக பல்வேறான கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுவதோடு எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
குருணாகல், புத்தளம், கம்பஹா, மாத்தறை, களுத்துறை மற்றும் கொழும்பு மாவட்டங்களை பிரதிநிதித் துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது. (த)

## பொதுத் தேர்தல் தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் முரண்பாடு

கொழும்பு, மே 3
எதிர்வரும் பொதுத் தேர்தலை எந்த முறையின் கீழ் நடத்துவது என்பது தொடர்பில் ஆளும் கட்சியின் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.
தற்போது நடைமுறையில் உள்ள மாவட்ட அடிப்படையிலான விருப்பு வாக்கு முறையில் நடத்துவதா? அல்லது தொகுதி மற்றும் மாவட்ட விகிதாசார என்ற கலப்பு முறையில் நடத்துவதா? என்பது தொடர்பிலே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.
எதிர்வரும் பொதுத் தேர்தல் மாவட்ட மட்டத்திலான விருப்பு வாக்கு முறையிலேயே நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி என்பன தெரிவித்துள்ளன.
கடந்த வாரம் நடைபெற்ற தேசிய நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தில் இது பற்றிக் கலந்துரையாடப்பட்டுள்ளது.
அந்த கூட்டத்தில் கலந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், நவசமசமாஜக் கட்சி என்பன தேர்தல் தற்போதைய முறையிலேயே நடத்தப்பட வேண்டும் எனகூறியுள்ளன. எனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 20 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் நடைமுறைப் படுத்தப்படும், புதிய தேர்தல் முறையின் கீழ் அடுத்த பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகிறது.
இதே நிலைப்பாட்டை ஜாதிக ஹெல உறுமயவும் கொண்டுள்ளதாக அதன் தேசிய அமைப்பாளர் நிஷாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதே நிலைப்பாட்டிலேயே இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (த)

## திருட்டுப் பொருள்கள் மீட்பு



சுன்னாகம் பகுதியில் வெவ்வேறு இடங்களில் மின் மோட்டர் உள்ளிட்ட திருடப்பட்ட பொருள்களைக்கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
அவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 4 பேரைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
மயிலங்காடு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைத்திருந்த போது அவற்றை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். தமக்குக்கிடைத்த தகவலின்படி அங்கு சென்று மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மின் மோட்டர்கள், தொலைக்காட்சி, கைத்தொலைபேசி உள்ளிட்ட பல பொருள்கள் அவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. கைதானவர்கள் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## சமாதானத்தைச் சீர்குலைக்கும் கடுமையான முயற்சியில் சிலர்

### ராஜித குற்றச்சாட்டு

கொழும்பு, மே 3
சமாதானத்தை ஏற்படுத்த அரசு முயற்சிக்கும் போது, முன்னாள் தலைவர்கள் சிலர் அதனை சீர்குலைக்க முயற்சித்து வருவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.
நாட்டில் வாழும் சகல இன மக்களையும் ஒன்றிணைத்து தேசிய சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது.
எனினும், தற்போதைய ஜனாதிபதி சூழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டு வருவதாக முன்னாள் தலைவர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.யார் என்ன சொன்னாலும் வடக்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு இடையில் ஒற்றுமையை உருவாக்க முடிந்துள்ளது. கொள்ளையடிக்கப் பட்ட வடக்கு மக்களின் ஆயிரம் ஏக்கர் காணிகள் மீள வழங்கப்பட்டுள்ளன.
வடக்கில் உரிமைகளை கேட்கும் போது அவர்களை கொழும்பிற்கு அழைத்து வந்து இளமைக் காலம் முழுவதும் சிறையில் அடைக்கும் காலம் முடிவடைந்துள்ளது.வடக்கு மக்களின் உரிமைகளை உறுதிப் படுத்தும் போது புலிகள் மீள தலை தூக்குவதாக பிரச்சாரம் செய்யப் படுகின்றது.
அந்தக் காலத்தில் புலித் தலைவர்களுடன் ஒன்றாக சாப்பிட்டு குடித்துக் கும்மாளம் அடித்ததனை மறந்து, இவ்வாறு முன்னாள் தலைவர்கள் குற்றம் சுமத்தி வருவதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (த)

## ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டும் பாசிசவாதம் தொடருகின்றது

### விக்கிரமபாகு கருணாரட்ன குற்றச்சாட்டு

கொழும்பு, மே 3
மஹிந்த ராஜபக்ஷ அரசைத் தோற்கடித்தாலும் நாட்டில் பாசிசவாதம் தொடர்கின்றது என புதிய இடதுசாரி கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள் ளார்.
குணசிங்கபுர பெரைஸ் மைதானத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
கடந்த அரசைத் தோற்கடிப்பதற்காக நாம் மத்தியில் இருந்து போராடினோம். கடுமையான பாசிசவாதத்தை இல்லாதொழிப்பதே எமது நோக்கம். 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் குறைக்கப் பட்டுள்ளன.
நிறைவேற்று அதிகாரத்தை முற்று முழுதாக ஒழிக்கவே முயற்சிக்கப் பட்டது எனினும் தற்போது அதிகார குறைப்பு மட்டுமே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.சிறுபான்மை சமூகத்துடன் இணைந்து நாம் போராடியது வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளவல்ல.
ஜனாதிபதி தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.
இல்லாவிட்டால் மீளவும் போராட்டம் நடத்த நேரிடும். அரசியல் அமைப்புத் திருத்தங்களின் ஊடாக அதிகாரத்தை அதிகரிக்க ரணில் முயற்சிக்கவில்லை. தமக்குக் கிடைத்ததைக் கொண்டு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள ரணிலுக்கு தெரியும். சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருவர் நாட்டின் தலைமைப் பதவியை பொறுப் பேற்றுக்கொண்டுள்ளார்.
மஹிந்த தோற்கடிக்கப்பட்டாலும் பாசிசவாதம் சமூகத்திற்குள் ஊடுருவும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது இதனை முறியடிக்க வேண்டுமென விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். (த)

### தமிழக

சுமுகமாக வாழ ஜனநாயக வழியில் நடவடிக்கை மேற்கொள்வது தான் எங்கள் அரசின் கொள்கை. தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதோ, இந்தியாவுக்கு எதிராகச் செயல்ப்டுவதோ எங்கள் நோக்கமல்ல.
இரு நாட்டு மீனவர்களும் வங்கக் கடலில் சுமுகமான முறையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட இரு நாட்டு அரசுகளும் பேச்சு மூலம் தீர்வுகாணும் என்ற நம்பிக்கை உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

### வாக்குதிகளை

நிலையத்தை வந்தடைந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் தலைமையிலான குழுவினரை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர , அமெரிக் காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம் மற்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர்.
அதையடுத்து பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை வழியாக ஜோன் கெரி தலைமையிலான குழு வினர் கொழும்பு நகருக்கு அழைத்து வரப்பட்டனர்.
இதன் பின்னர் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி தலைமையிலான குழுவினரும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழுவினரும் இரு தரப்புப் பேச்சுக்களை நடத்தினர். வெளிவிவகார அமைச்சில் முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பித்த பேச்சுக்கள் சுமார் ஒரு மணி நேரம் வரை இடம்பெற்றன.
இந்தப் பேச்சுக்கள் ஆக்கபூர்வமானதாக இருந்தன என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பேச்சாளர் மேரி ஹாப் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கும், அமெரிக்க இராஜாங்கச் செயலருக்கும் இடையிலான சந்திப்பில், இருதரப்பு உறவுகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டன என்று இந்தப் பேச்சுக்களில் பங்கேற்ற அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஸா பிஸ்வால் குறிப்பிட்டுள்ளார்.
அத்துடன், இலங்கை அரசால் ஜனநாயக அரசாட்சி, நல்லிணக்கம், ஊழல் எதிர்ப்பு ஆகிய விடயங்களில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும், ஜோன் கெரி கலந்துரையாடினார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
மேற்படி சந்திப்பின் பின்னர் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் இணைந்து ஊடகவியலாளர்கள் முன்பாக கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றினர்.
இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, இலங்கையில் கடந்த சில மாதங்களில் பல முன்னேற்றங்கள் இடம் பெற்றுள்ளன என்று குறிப்பிட்டார்.
இது இலங்கைக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு என்றும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசு தனது அனைத்து வாக்குறுதிகளையும் செயலில் காட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (த)

### வடக்கில்

திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அரச தரப்புத் தெரிவித்துள்ளது.
யு.என்.டி.பி இதற்கான நிதியை வழங்கவுள்ளது. செயல் நுணுக்க சூழல் மதிப்பீட்டின் கீழ் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் யானை மனிதன் மோதலைக் கட்டுப்படுத்தல், ஈரலிப்பு நிலத்தைப் பாதுகாத்தல், புலம்பெயர் பறவைகளின் பயண வழிப்பாதையைப் பாதுகாத்தல், உயிரியல் பல்வகைமையைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் சூழல் அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றம் என்பனவற்றை மைய மாகக் கொண்டு வன ஜீவராசிகள் ஒதுக்கிடங்களாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டிய பிரதேசங்கள் இனங்காணப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

### பொறுப்புக்

புதிய இலங்கையின் நல்லிணக்கச் செயல்முறைகளின் முக்கிய கூறாக, பொறுப்புக்கூறலை உறுதிப் படுத்திக்கொள்ளும் விடயம் அமைந்திருக்கும்.
எமது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தபடி, பொறுப்புக் கூறுவதற்கான உள்நாட்டுப் பொறிமுறையை அனைத்துலகத் தொழில் நுட்ப உதவியுடன் உருவாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.
பல்வேறு பகுதிகளைக் கொண்ட இந்த விடயத்தில், உள்ளூர்த் திறனை விரிவாக்குவதற்கும், தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குவ தற்கு அமெரிக்கா எமக்கு உதவ முடியும்.
அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, இலங்கையில் நடத்தும் பேச்சுக்கள், இரண்டு தரப்பும் தமது முன்னுரிமைகள் குறித்து புரிந்துகொள்வதற்கான வாய்ப்பை வழங்கும் என்று நம்புகிறேன்.
இந்தப் பேச்சுக்கள், தற்போதுள்ள நெருக்கமான நட்புறவை மேலும் உச்சத்துக்கு கொண்டுசெல்லும்– என்றார்.

**ரணிலுடனும் பேச்சு**

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்தும், இலங்கை அரசின் தற்போதைய, எதிர் காலத் திட்டங்கள் குறித்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி நேற்றுப் பேச்சு நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பு பிரதமரின் அதிகார பூர்வ அலுவலகமான அலரி மாளிகையில் நேற்று நண்பகல் இடம் பெற்றது.
இந்தப் பேச்சுக்களில், அமெரிக்க இராஜாங்கச் செயலருடன், தெற்கு மத்திய ஆசியாவுக்கான உதவிச் செயலர் நிஸா பிஸ்வால் உள்ளிட்ட அமெரிக்க அதிகாரிகளும் பங்குபற்றினர். (த)

### மைத்திரிக்கு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது மைத்திரிபாலவின் வெற்றிக்கு ஜோன் கெரி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.
ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கை –அமெரிக்க இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும், இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. (த)

### இலங்கையின்

எதிர்வு கூறியிருந்தது.
சீரற்ற வானிலை நிலவியதால் விவசாயத்துறை நடவடிக்ககள் பலவீனமடைந்தமையே, எதிர் பார்க்கப்பட்ட வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான முக்கிய காரணம் எனவும் மத்திய வங்கி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
2013 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 4.7 வீதமான வளர்ச்சியைக் காட்டிய விவசாயத்துறை, 2014 ஆம் ஆண்டில் 0.3 வீதமான வளர்ச்சியை காட்டியுள்ளது. கைத்தொழில் துறையில் 11.4 வீதம் சேவைகள் துறையில் 6.5 வீத வளர்ச்சி காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
ஆயினும், 2013 ஆம் ஆண்டில் 7.2 வீதமாக இருந்த இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, 2014 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (த-4)

# கைமாறியது கிண்ணம்

மாங்குளம் மே 3

யாழ்.மாவட்டப் பாடசாலைகளிற்கிடையிலான பெண்களிற்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கடந்த காலங்களில் மாகாண மட்டத்தில் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிய சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியை எதிர்த்து கடந்தாண்டு மாகாண மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தேனுசா 23 ஓட்டங்களையும், டிலானி 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி சார்பாக தயாளினி ஒரு இலக்கைக் கைப்பற்றினார்.

45 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களம் இறங்கிய வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணியினர் விக்டோரியா கல்லூரி அணியின் பந்து வீச்சிற்கு முகம்கொடுக்க முடியாமல் திணறினர். இதனால் முதல் மூன்று பந்துப் பரிமாற்றங்களும் இவர்களிற்கு சவாலாக அமைந்த போதும் விக்டோரியா அணியினர் உதிரி ஓட்டங்களை தராளமாக வழங்கிக் கொண்டிருந்தனர். இதனால் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணியினரின் ஓட்டம் முயற்சியில்லாமல் தானாகவே உயர்ந்து கொண்டு சென்றது. இறுதிப் பந்துப்பரிமாற்றத்ததில் 10 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணிக்கு நெருக்கடி கிடைத்தது. இறுதிப் பந்துப்பரிமாற்றத்தை வீசிய விக்டோரியா அணியின் சோபிகா 5 பந்துகளில் 2 உதிரி அடங்கலாக 6 ஓட்டங்களை கொடுத்தார். இதனால் இறுதிப் பந்தில் 4 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்ட வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணியின் வீராங்கனை அபிசாளினி மிகச் சிறப்பாக பந்தைக் கணித்து சிக்சராக மாற்ற 8 இலக்குகளால் யாழ்மாவட்டச் சம்பியனாகியது மத்திய மகளிர் கல்லூரி அணி.

(த-ரி-422)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணத் தொடர்

யாழ். உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைப்பந்தாடத் தொடரின் ஆட்டங்கள் உரும்பராய் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென் நீக்கிளஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-ரி-23)

மன்னார் தொடர்

மன்னார் உதைப்பந்தாட்ட லீக் நடத்தும் முதற் தர அணிகளுக்கான லீக் முறையிலான உதைப்பந்தாட்டத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்த்தில் தோட்டவெளி ஜக்கியம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அடம்பன் ஜக்கிய விளையாட்டுக் கழக அணி ஜோசவாஸ்நகர் விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ளது. (த-ரி-23)

## கரப்பந்தாட்ட தொடர்; கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், மே 3

வடக்கு மலையக கரப்பந்தாட்டச் சங்கம் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 17வயது மற்றும் 19வயதுப்பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரை நடத்தவுள்ளது. மேற்படி தொடர் தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை ஹற்றனில் அமைந்துள்ள தொண்டமான் விளையாட்டு அபிவிருத்தி நிலையத்தில் இடம் பெறவுள்ளது. (த-ரி-23)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## பிற்போடப்பட்டுள்ளது

இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த அளவெட்டி கும்பளாவளைப்பிள்ளையார் ஆலயதொண்டர் சபை பொதுக்கூட்டமானது தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 17.05.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**தொண்டர் சபை**
**கும்பளாவளைப் பிள்ளையார் ஆலய**

## மரண அறிவித்தல்கள்



### திருமதி நாகம்மா கந்தையா


வவுனியா இரணை இலுப்பைக் குளத்தைச் சேர்ந்த திருமதி நாகம்மா கந்தையா நேற்று (02.05. 2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும், கமலாதேவி, சுசிலாதேவி, நாகராசா, தியாகராஜா (குணா, வடபிராந்திய பார ஊர்திச்சங்கம், உரிமையாளர் பாலதர்ஷி ஸ்ரோர்ஸ்), புஸ்பவதி, நந்தினி, ஸ்ரீதேவி, சரோஜினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுதா ஆகியோரின் அன்புத் தாயாரும், முருகேசு, கணேஸ், றஞ்சினி, பாலதர்ஷினி (ஆசிரியை, யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), வினோகரன், சுரேஸ் (பிரான்ஸ்), உதயன், டினேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அண்ணாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு செட்டிக்குளம், சண்முகபுரத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
க. தியாகராஜா (குணா(மகன்)
பாலதர்ஷி ஸ்ரோர்ஸ், கோப்பாய்).

### கணபதிப்பிள்ளை தனிநாயகம்



நெடுந்தீவு மேற்கு, முதலாம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை தனிநாயகம் (இளைப்பாறிய தபால் ஊழியர்) நேற்று (02.05.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவமணியின் அன்புக் கணவரும், தருமலிங்கம், சிரோன்மணி ஆகியோரின் சகோதரரும், சியாமளாதேவி, கோசலாதேவி, வினாயகமூர்த்தி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் தம்பிராசா (நெடுந்தீவு-பிரதேச சபை), புண்ணிய மூர்த்தி (ஸ்கந்தபுரம்), கலைஅரசி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், தர்மினி, சதன், மயூரன், சுஜீவன் நிரோஜன், துஷ்யந்தன் அனுஜன், விதுஜன், பாரதிதாசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இல.01, பென்ரிக் கோஸ்லேன், கண்டி வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சித்துபாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
021 2224424 குடும்பத்தினர்.


A/L தொழில் நுட்பப் பிரிவிற்கு வடக்கில் தனித்துவமான ஒரே ஒரு முதற்தர தனியார் கல்வி நிறுவனம்
விஸ்டம்
விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
A/L 2015 பொறியியல் தொழில்நுட்ப மாணவர்களுக்கு மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்
அலகு 03 : வீட்டு நீர்வழங்கலும் கழிவு முகாமைத்துவம்
அலகு 07 : கணிய அளவீடு (BOQ)
P.சண்முகதாசன் (சண்) Rtd.Instructor (Buildings)
அலகு 06 : நிலஅளவையும் மட்டங்காணலும்
அலகு 08: முயற்சியாண்மையும் முகாமைத்துவமும்
K.ரவிக்குமார் Dip.in.Tech (Technology) N.C.T.T, PGDE
ஆரம்பம் : 03.05.2015 தொடர்புக்கு 0772487774 / 021 221 7860
"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"


## மரண அறிவித்தல்கள்

### இரத்தினசபாபதி சுந்தரலிங்கம்



வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி சுந்தரலிங்கம் நேற்று (02.05.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதி மற்றும் கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான நடராசா- இராசம்மா தம்பதியரின் மருமகனும், சிறிரஜனியின் அன்புக் கணவரும், சுஜிந்தனின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2015) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CCTM பாடசாலை ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
0776673066, 0771799794

### அரியரத்தினம் எலிசபெத் அபிராமிப்பிள்ளை



வடமாரட்சி கிழக்கு, ஆழியவளையைப் பிறப்பிடமாகவும் தம்பசிட்டி வீதி, பருத்தித்துறையில் வசித்தவருமான திருமதி அரியரத்தினம் எலிசபெத் அபிராமிப்பிள்ளை நேற்று (02.05.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விக்டர் அரியரத்தினத்தின் அன்பு மனைவியும், வடிவேலுவின் அன்புச் சகோதரியும், அரியகுமார் (ஓய்வுநிலை அதிபர்), அருள்நேசன் (திருச்சி), அரியறஞ்சினி, அரியராணி (ஆசிரியை, திருகோணமலை நாமக்ள் வித்தியாலயம்), அரியறஞ்சன் (ஆசிரியர், அல்வாய் றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும், இராஜமனோகரி, கன்னிகாராணி (திருச்சி), பொன்னம்பலம் (இளைப்பாறிய தபாலதிபர்), காலஞ்சென்ற பெஞ்சமின், அன்ரனிற்றா (ஆசிரியை, யா/வட இந்துமகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், சிறீகரன் (பொறியியலாளர்), யசீகரன் (பிரதம உதவி ஆசிரியர், சுடரொளி), சதீஸ்கரன் (ஏசியன் அலையன்ஸ், யாழ்ப்பாணம்), கரிகாலன், பிரியா, தவசினி, கல்பனா, தினேஸ்குமார் (பிரான்ஸ்), ஜீவிதா (சாள்ஸ்ஸரட் பல்கலைக்கழகம், மெல்போன்), தர்சாயினி (யாழ். பல்கலைக்கழகம்), தனுஷியா (யாழ். தொழிநுட்பவியல் கல்லூரி), ஐஸ்சுவா, குட்வின் தேவப்பிரியன், யோய் நிக்சலா, நிரோஜினி (பொறி யியலாளர்), சுபேஸ் (ஆஸ்திரேலியா), மேரி ஆன் றொசற்றா (பிரான்ஸ்) ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (03.04.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பருத்தித்துறை இரண்டாம் குறு க்குத் தெரு, மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
தம்பசிட்டிவீதி, பருத்தித்துறை. 077 3059878 குடும்பத்தினர்.

### முத்தையா செல்லையா



டச்சு வீதி, அளவெட்டியைச் சேர்ந்த ஓய்வுநிலை கனிஷ்ட அதிபர் (யா/அருணோதயக் கல்லூரி, அளவெட்டி) முத்தையா செல்லையா நேற்று (02.05.2015) சனிக்கிழமை சிவபத மடைந்த ார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி முத்தையா-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் புத்திரரும், காலஞ்சென்றவர்களான தம்பையா-லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மரு மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சேதுப்பிள்ளை, கனகம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோ தரரும், கணபதிப்பிள்ளை, நாகலிங்கம், பழனிவேல் ஆகியோரின் மைத்துனரும், சிறீ றஞ்ஜனி, ஜெகந்நாயகி, செல்வவினாயகன், சிறீகாந்தன், கருணாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்கந்தேஸ்வரன், பத்மநாதன், ஜீவராணி, திராவிடமலர், மீரா ஆகியோரின் அன்பு மாமனும், விசித்தா, சுதாகரன், கஜானன், ரகுவரன், லட்ஷணா, பவன், இலக்ஷன், பங்கஜன், பிரதீஸ், திவாம்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், லதுர்ஷன், நயனிகா, தேஜஸ்வி, றேஷ்மன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2015) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி, மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
பொ.ஸ்கந்தேஸ்வரன் 077 6032559







# ஆட்டம் சமநிலையில் பாகிஸ்தான் ஏமாற்றம்



பங்களாதேஷ் எதிர் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட்ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் நேற்றையதினம் நிறைவுக்கு வந்தது.

முதலாவதாகத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ்தனது முதல் இன்னிங்ஸிற்காக 332 ஓட்டங்களை எடுத்தது. பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக ரிஜாஸ், சாஜ் தலா மூன்று இலக்குகளையும் ஹபீஸ், பாபர் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஹபீஸின் இரட்டைச் சதத்தின் உதவியுடன் 628 ஓட்டங்களைக் குவித்து 296 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது. பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக இஸ்லாம் 6 இலக்குகளையும் கொம் 2 இலக்குகளையும் சகிப் அல் ஹசன், ஷகிட் தலா ஒரு இலக்கையும் கைப் பற்றினார்கள்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 297 ஓட்டங்களைக் கட்டாயம் பெறவேண்டும் என்ற நெருக்கடியில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி இலக்குகள் இழப்பின்றி 273 ஓட்டங்களைக் குவித்திருந்த நிலையில் இறுதி நாளுக்காக களத்தில் இக்பால் 138 ஓட்டங்களுடனும் கயீஸ் 132 ஓட்டங்களுடனும் களமிறங்கினார்கள். மேலதிகமாக 18 ஓட்டங்களைக் குவித்திருந்த வேளையில் கயிஸ் 150 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். மத்திய வரிசை வீரர்கள் சுமாரான பங்களிப்பைக் கொடுக்க இக்பால் இரட்டைச் சதத்தை பதிவு செய்து ஹபீஸின் இரட்டைச் சதத்துக்கு தக்க பதிலடி கொடுத்தார். சஹிப் அல் ஹசன் நிதானிக்க ஆரம்பிக்க இரட்டைச் சதம் கடந்து விடைபெற்றார் இக்பால். பின்வரிசை வீரர்களும் இரட்டை இலக்க ஓட்டங்களுடன் சுமாரான பங்களிப்பை வழங்க ஐந்தாம்நாள் ஆட்ட நேர முடிவில் பங்களாதேஷ் 555–6 என்ற நிலையில்இருந்தது ஆட்டம்சமநிலையானது. பந்துவீச் சில் பாகிஸ்தான் சார்பாகயுனைட்கான், ஹபீஸ்தலா 2 இலக்கு களையும் பாபர், ஷபிக் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக சிறந்த சராசரியில் இரட்டைச்சதத்தை விளாசிய இக் பால்தெரிவானார். (ரி)

# தடுமாறுகிறது இங்கிலாந்து



இங்கிலாந்து எதிர் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக் கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் நேற்று முன்தினம் தீவுகளில் ஆரம்பமானது.

ஏற்கனவே நடந்துமுடிந்த இரண்டு ஆட்டங்களில் முதலாவது ஆட்டம் சமநிலை யில் முடிவடைந்தது. இரண் டாவது ஆட்டத்தில் இங்கி லாந்து வெற்றி பெற்றது. இந்த நிலையில் மூன்றாவது ஆட்டத்தின் முடிவு எதுவாக இருந்தாலும் கிண்ணம் இங்கி லாந்துக்கு செல்லும். ஆனால் தீவுகள் இந்த ஆட்டத்தில் வெற் றிபெற்றால் கிண்ணத்தை இங்கிலாந்துடன் பகிர்ந்து கொள்ளலாம். எனவே சொந்த மண் ணில் கிரிக்கெட்டின் தாய கத்தை வெற்றி கொள்வது என்ற கட்டாயத் தில் களமிறங்கியது தீவுகள்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்கக் களத்தில் குக்குடன் ட்ரொட். பீற்றர்சனை அணியில் இணைத்துக்கொண்டு ட்ரொட்டை செ [illegible]ரியேற்றவேண்டும் என்ற கருத் [illegible]கள் சமீபகாலமாக வலுப்பெற் [illegible]வரும் நிலையில் அதற்கேற்ப [illegible]க்'குடன் பவிலியன் திரும்பினார் ட்ரொட். ஓட்டங்களைப் பெறாத நிலையில் இங்கிலாந்தின் முதல் இலக்குச் சரிக்கப்பட்டது. பெலன்ஸ் சரிவை பலன்ஸ் செய்யத்தவறி பதின்மத்துடன் பவிலியன் திரும்ப கிரிக்கெட்டின் தாயகம் ஆட்டம் காண ஆரம்பித்தது. ஒருமுனையில் குக் அற்புதமாக விளையாடிக் கொண்டிருந்தார் ஆனால் மறுமுனையில் வீரர்கள் வருவதும் போவதுமாக மாறிமாறி அரங்கேறிக் கொண்டிருந்தது. பெல்லும் 'டக்'கில் வெளியேறி அதிர்ச்சியளிக்க ரூட் சற்று நிலைத்தார். ஆனாலும் நீடிக்கவில்லை. குக்குக்கு ஆறுதல் தந்தார் அலி. இருவருமாக இணைந்து சரிவைச் சரிசெய்தனர். ஆளுக்கொரு அரைச்சதமும் கண்டனர். இணைப்பாட்டமாக 98 ஓட்டங்கள் பகிரப்பட்ட வேளையில் அலி ஆட்டத்தை நிறுத்திக்கொள்ள இங்கிலாந்து 189–5. தொடர்ந்தும் நிலைத்து நின்ற குக்நீண்டகால இடைவேளைக்குப் பின்னர் சதத்தை நிறைவுசெய்து ஆட்டமிழந்தார். முதலாம்நாள் ஆட்டநேரமுடிவில்இங்கிலாந்து240–7. பந்துவீச்சில் மே.தீவுகள் சார்பாக கபிரியேல், ஹோல்டர் தலா 2 இலக்குகளையும் சாமுவேல்ஸ், பேர்மூல் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (த–ரி)

# எனது முடிவை நானே தீர்மானிப்பேன்!

எனது வேகம் காயம் காரணமாகத்தான் கட்டுப்பட்டது. உடற்தகுதி (போர்ம்) இல்லாமல் கட்டுப்படவில்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்திய அணியின் வேகப் பந்துவீச்சாளர் ஷகீர்கான்.

இந்திய அணியின் நட்சத்திர வேகப் பந்துவீச்சாளர் ஷகீர்கான், காயம் காரணமாகசில வருடங்களாக அணியில் இருந்து ஒதுங்கி இருந்தார். காயம்குணமடையாமல் ஷகீர்கான் தொடர்ந்து அவதிப்பட்டுவந்த நிலையில் படிப்படியாக அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டார். ஷகிர் காயத்தால் அவதியுற்று இருந்த போதிலும் டெல்லிஅணி அவரில் நம்பிக்கை வைத்து அவரை ஏலத்தில் எடுத்தது. ஐ.பி.எல்.தொடரிலும் ஆரம்பித்த பின்னரும் தொடர்ந்து நீண்டகாலமாக காயத்தால் அவதிப்பட்ட அவர் பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டத்தில் களமிறங்கினார். இந்த ஆட்டத்தில் 4 பந்துப்பரிமாற்றங்களை வீசி 18 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இந்த நிலையில் தனது மீள்வருகை தொடர்பாக ஷகீர்கான் தெரிவித்ததாவது 'முன்னைய காலங்களைப் போல் தொடர்ந்தும் சிறப்பாக பந்து வீச என்னால் முடிகிறது. சகலவிதமான பந்துவீச்சுக்களையும் சிறப்பாகவே முயற்சிக்கிறேன். காயம் என்னை தொடர்ந்து ஆட்கொண்ட பொழுது எனது கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டது என்றே பலர் நினைத்தார்கள். ஊடகங்களும் அவ்வாறே எழுதித்தள்ளின. எனது முடிவை நானே தீர்மானிப்பேன். ஆனால் எனது முடிவு தொடர்பான தீர்மானத்துக்கு இன்னும் பலகாலங்கள் உள்ளன. ஏனெனில் எனது வேகம் காயம் காரணமாகத்தான் கட்டுப்பட்டது. உடற்தகுதி (போர்ம்) இல்லாமல் கட்டுப்படவில்லை–என்றார். (த–ரி)





# சந்திமலின் சராசரி எகிறப் போகின்றது



இலங்கைக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும் இலக்குக்காப்பாளருமான டினேஸ் சந்திமலுக்கு நேற்றுமுன்தினம் திருமணம் நடைபெற்றது.

இலங்கைக் கிரிக்கெட் வீரர்களில் சங்கா, மஹேல, மத்தியூஸ், இவ்வாறான மிக பிரதானமான வீரர்களின் சராசரி திருமணத்துக்கு முன்பு இருந்ததைவிட திருமணத்துக்கு பின்பு மிகவும் அதிகம். இந்த நிலையில் சந்திமல் எப்பொழுது திருமணம் செய்துகொள்ளப் போகிறார் அவர் சராசரி எப்பொழுது உயரப்போகிறது என்று ரசிகர்கள் ஏங்கித்தவித்துக் கொண்டிருந்தனர். சில ஆட்டங்களில் விமர்சகர்கள் இதை ஒரு விடயமாக எடுத்து நகைச் சுவையாக விமர்சிக்கவும் தவறவில்லை. இந்த ஏக்கங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து நேற்றுமுன்தினம் திருமணம் செய்து கொண்டார் சந்திமல். சந்திமலின் திருமணத்துக்குப் பின்னர் 'எதிர் வரும்ஆட்டங்களில் சந்திமலின் சராசரி உயர்ந்துவிடும்' என்று தற்பொழுது அவரது ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் கேலி செய்யத் தொடங்கியுள்ளனர். (ரி)

# பெங்களூரிடம் கோட்டைவிட்டது கொல்கத்தா



பெங்களூர் எதிர் கொல்கத்தா அணிகளுக்கிடையிலான ஆட்டம். பெங்களூர் அடித்து நொறுக்குவதற்கென்றே உருவாக்கப்பட்ட அணி. கொல்கத்தா சென்னையையே அடித்து நொருக்கிய அணி. ஆக ஐஜு மத்தத்தில் ஆட்டத்தில் விறுவிறுப்பென்பது ஆரம்பமாக முன்னரே ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துவிட்டது.

மழையின் ஆதிக்கம் அதிகரித்து ஆட்டம் 10 பந்துப்பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டதன் காரணத்தினால் ஆட்டத்தில் விறுவிறுப்பு இரட்டிப்பாக ஆட்டம் ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் முதலில் களத்தடுப்பை தீர்மானிக்க களத்தில் உத்தப்பாவுடன் கம்பீர். பத்துப்பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டத்துக்கு உத்தப்பாவின் அதிரடி போதாது. அதிரடியாக ஆட முயற்சித்த கம்பீர் நிலைக்கவில்லை மொத்தத்தில் கொல்கத்தாவின் ஆரம்பம் சுமார். கடந்த ஆட்டத்தில் சென்னையைப் பந்தாடிய ரசல் நேற்றைய ஆட்டத்தில் பெங்களூரை வெளுத்துவாங்கத் தவறவில்லை. பவுண்டரிகள், சிக்சர்கள் என்று மாறிமாறி அதிரடிகாட்டிக் கொண்டிருந்தார். இன்னும் சொல்லப்போனால் ரசலின் துடுப்பாட்ட வாழ்வில் சிறந்த அதிரடி இந்த இன்னிங்ஸ்தான் என்று சொல்லிவிடலாம். 17 பந்துகளில் 43 ஓட்டங்களைக் குவித்து பவிலியன் திரும்பினார். ரசல் ஆட்டமிழந்தாலும் டஸ்செற்றிக்கும் யூசொப் பதானும் விடுவதாக இல்லை. கிடைத்த ஒருசில பந்துகளிலும் சிக்சர்களை அடித்து நொறுக்க முடிவில் கொல்கத்தா 111–4.

60 பந்துகளில் 112 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. எட்டமுடியாத இலக்கு என்று சொல்லிவிட முடியாது. கெயில், வில்லியர்ஸ், டினேஸ் காரத்திக், ஹோக்லி, மன்டீப் சிங் அதிரடிப்பட்டாளத்தால் நிச்சயம் இந்த இலக்கை எட்டமுடியும். எனவே ஐம்பதுக்கு ஐம்பது வாய்ப்புக்களுடன் களத்தில் கெயிலுடன் ஹோக்லி. அனைவரும் வில்லியர்ஸையே எதிர்பார்த்தனர் ஆனாலும் ஹோக்லியின் அதிரடியும் கிட்டத்தட்ட வில்லியரஸிக்கு நிகராகவே சென்றுகொண்டிருந்தது. முதலாவது சிக்சரை ஹோக்லி ஆரம்பித்து வைத்ததுதான் தாமதம் அடுத்தடுத்து தொடர்ச்சியாக மூன்று சிக்சர்களை விளாசித்தள்ளினார் கெயில். வழக்கம்போல் நகத்தைக் கடிக்க ஆரம்பித்தார் கம்பீர். 9 பந்துகளில் 21 ஓட்டங்களுடன் கெயில் ஆட்டமிழந்தார். களத்தில் வில்லியர்ஸ். வில்லியர்ஸிக்கு கெயில் எவ்வளவோ பரவாயில்லை. ஆனாலும் விட்டுவைக்கவில்லை சாவ்லா. போல்ட் முறையில் வெளியேற்ற கொல்கத்தாவின் பக்கம் காற்றுவீசத் தொடங்கியது. இறுதி ஐந்து பந்துப்பரிமாற்றங்களில் 60 ஓட்டங்களைப் பெறவேண்டும். ஹோக்லி ஆட்டமிழந்தாலும் நம்பிக்கை தந்தார் மன்டீப்சிங். இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 12 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்றிருந்தபொழுது இரண்டு சிக்சர்களை ஊதித் தள்ளினார் மன்டீப் முடிவில் கொல்கத்தா 7 இலக்குகளால் கோட்டை விட்டது. (ரி)


## வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர் சுற்று வட்டாரத்தில் அல்லது அதனை அண்டிய பகுதியில் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 739 3427

## தென்னந்தோட்ட காணி விற்பனைக்கு உண்டு

இயக்கச்சி பகுதியில் அமைந்த சுத்தம் செய்து வேலி அடைக்கப்பட்ட தென்னந்தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்து கொடுக்கப்படும்.

தொடர்பு:- 0771615694

## வீடு விற்பனைக்கு

வல்வெட்டித்துறை சந்தியில் மரக்கறி சந்தைக்கு முன்பாக இரண்டு கடைகளுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு. மொத்தம் 1¼ பரப்பு கொண்டது. வியாபார நோக்கத்துக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு:- 077 3284200

## வீடு வாடகைக்கு

புது வீடு கொய்யாத்தோட்டத்தில் புதிதாக புனரமைக்கப்பட்ட 3 அறைகளுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு, வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 076 8619947

## மணமகள் தேவை

R.C, வயது 41, உயரம் 5'5'', நிறம் வெள்ளை, எந்தவித தீய பழக்கவழக்கமும் அற்றவர். பிரான்ஸ் PR உடைய மணமகனுக்க தகுந்த மணமகள் தேவை.

தொடர்பு:- 076 6688505

## காணி விற்பனைக்கு

நுணாவில் கல்வயல் வீதியில் 4¾ பரப்பும், 4½ பரப்பும் உள்ள இரு காணிகள் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
076 8041764, 0776034626

## செய்து கொடுக்கப்படும்

Sapari Boquets Centre

மலர்வளையங்கள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: 51, கே.கே.எஸ்.வீதி, (மனோகரச்சந்தி) யாழ்ப்பாணம். (59412) (4.3.7)

077 400 5023, 077 942 4011

## விற்பனைக்கு

253-XXXX ஹயஸ் வான் LH 103,3L Eingeene 12 A/C, விற்பனைக்கு உண்டு.

T.P: 0777238615

## வேலைவாய்ப்பு

FR ADVERTISING கொம்பனியில் புதிதாக திறக்கவுள்ள கிளைகளில் வேலைவாய்ப்பிற்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தகைமை O/L அல்லது A/L போதுமானதாகும். முன் அனுபவம் அவசியம் அல்ல. பயிற்சியளித்து இணைத் துக்கொள்ளப்படுவர். தகைமையுள்ளவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு:

0772083140, 0772803773, 0775267295

கிளைகள்: யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை.

## காணி விற்பனைக்கு

தென்மராட்சி சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கொல்வில்லைப் பெருமானம் மறு பிரிவுகளும் நிலப்பரப்பு பத்து (10) உடைய காணி விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் பகுதியாகவும் பிரித்துத் தரப்படும்.

தொடர்பு:- T.P:0779672690

## கடை வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதி, நியூ மார்க்கட் முன்னால் 181' நீளம் கடை பின் வீதி பாவிக்கக்கூடிய வசதியுள்ளதால் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: T.P: 077 4670284

## வாடகைக்கு

சுண்டுக்குளிக்கு அண்மையில் அமைதியான சூழலில் 2 Room வாடகைக்கு உண்டு.
(பெண்பிள்ளைகள் விரும்பத் தக்கது)

T.P: 0750698608, 021 222 5349

## தேவை

மருந்தக அனுபவம் உள்ள பெண் வேலையாள் தேவை.

077 24 97 082

## வேலைவாய்ப்பு
Diamand Innovation Group

தகைமைகள்:-
O/L மற்றும் A/L

சலுகைகள்:-
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
0772854882, 0775585904, 0771770263

## புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்

O/L DAY CLASS

பிரிவு-II ஆரம்பம்
04.05.2015
திங்கள் 8.00மணி
ஒவ்வொரு பிரிவிலும் 50 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

## வீடு வாடகைக்கு உண்டு

732, ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரேசன் சந்திக்கு அண்மையில் மூன்று அறைகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-
0771736689, 0772844970

## மருந்தாளர் தேவை

பிரபலமாக இயங்கிவரும் மருந்தகத்துக்கு மருந்தாளர் தேவை.

(சி/15718)(4.3.7)
தொடர்புகளுக்கு: 077 172 8141

## FRENCH LANGUAGE CENTRE FOR FRENCH FRENCH
FLC

FRENCH CLASSES

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

இதுவரையில் எமது ஆசிரியரிடம் 920 பேர் கற்று சென்றுள்ளனர்

Register now : 0779 789 456 / 021 221 7781

| No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி | சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை |
|---|---|---|

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af

- வட மாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
- உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
- INTERNATIONAL DIPLOMAS.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

## Vacancy

கட்டுமான வேலைக்கு கீழ்காணும் தொழில் அனுபவம் வாய்ந்த வேலையாள்கள் உடனடியாக தேவை.

பலகையடித்தல (Shuttering)
கொங்கிறீற்றுக்கு கம்பி கட்டுதல்
மேசன்
கூலி ஆள்கள்
வெல்டர் (ஒட்டுநர்)

மேற்குறிப்பிட்ட வேலைக்கு அனுபவம் வாய்ந்த தகுதியுடையவர்கள் தொடர்புகொள்ளவும்.

Visvakarma (Pvt) Ltd,
Np: 28, Maari Amman Lane, Thirunelvely, Jaffna.
Tel: 021 2226781, Fax : 0212219976

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Food City ஒன்றுக்கு கீழ்க் காணும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.

| | |
|---|---|
| * முகாமையாளர் | - ஆண்கள் மட்டும்<br>க.பொ.த.உயர்தரம்<br>வயதெல்லை 30-50 வயது<br>கணினி அனுபவமுள்ளவர்கள் |
| * காசாளர் | - பெண்கள் மட்டும்<br>வயதெல்லை 18-30 வயது<br>கணினி அனுபவமுள்ளவர்கள் |
| * களஞ்சியப் பொறுப்பாளர் | -ஆண்கள் மட்டும்<br>வயதெல்லை 40 வயதுக்குட்பட்டவர்கள்<br>கணினி அனுபவமுள்ளவர்கள் |
| * விற்பனை உதவியாளர் | - இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்<br>வயதெல்லை 18-30 வயது |
| * அலுவலக சுத்திகரிப்பாளர் | - இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் |

தகைமையுடையவர்கள் கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது அலுவலக முகவரிக்கு புகைப்படத்துடன் சுயவிவரக் கோவையை அனுப்பிவைக்கவும்

மின்னஞ்சல் முகவரி : jffoodcity@gmail.com
அலுவலக முகவரி : 108 A. நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 0702102101

10.05.2015 இற்கு முன்பு விண்ணப்பிக்கவும்

## நியாயமான கட்டணத்தில் தரம் வாய்ந்த கல்விச் சேவை

Spoken English With Grammar 120 Hours

Diploma in English 200 Hours

Benefits of Dip in English

- பல்கலைக்கழக கல்வி, வெளிநாட்டில் உயர்கல்வி, ஏனைய கற்கை நெறிகளினை வினைத்திறனுடன் வெற்றிகரமாக கற்கமுடியும்.
- வேலைவாய்ப்பினை இலகுவாக பெறமுடியும்
- Cambridge English இன் KET, PET, FIRST பரீட்சைகளுக்கு தோற்ற முடியும்
- A1, A2, B1, B2 பரீட்சைகளுக்கு தோற்ற முடியும்.

New Batches Start on B1: 07-05-2015 at 9am B2: 09-05-2015 at 9am B3: 13-05-2015 at 2pm B4: 16-05-2015 at 2pm

Study IELTS at CIL & Get 6+ Band

CIL
Cambridge Institute of London
No :17, 3rd Lane, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
(புதிய HNB, ராசி சில்க்ஸ் அருகாமையில்)
Tel : 021 2217774, 0777382108

We Provide Quality Education With Reasonable Fee


இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்

# சூரியகாந்தி

ஞாயிறு சிறப்பிதழ்
03.05.2015



## தமிழினத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என தந்தை செல்வா எப்பொழுது கூறினார்?

# தமிழினத்தை கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என தந்தை செல்வா எப்பொழுது கூறினார்?

■ நப்பின்னை

தமிழினத்தைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறி மறைந்தார் தந்தை செல்வா என்று பலரும் எழுதியும், பேசியும் வருகின்ற னர். உண்மையில் தந்தை செல்வா எப் பொழுது அதைக் கூறினார்? அவ்வாறு கூறிய பின் அவர் இறந்து விட்டாரா என்றால் அது உண்மையல்ல. தந்தை செல்வாவின் சாவு எப்படி நடந்தது என்று அறிந்தவர்கள் இவ்வாறு அவர் இறக்கும் பொழுதுதான் இதைக் கூறினார் என்று எழுதமாட்டார்கள்.

தந்தை செல்வா தெல்லிப்பழையில் தனது வீட்டில் காலை உணவு உண்ட பின் எழுந்த பொழுது வீழ்ந்துவிட்டார். பார்க்கின்சன் நோயினால் பல ஆண்டுகள் பாதிக்கப்பட்டிருந்தும் தளராது மன உறுதியுடன் தமிழ் மக்களுக்காக உழைத்த அரசியல்ஞானி அவர். தள்ளாடித் தள்ளாடியே கால்களை எடுத்து வைக்கும் அவருக்கு நடக்கும் பொழுது உதவிக்கு ஒருவர் தேவை. ஆனால் அன்று அவர் எழுந்த பொழுது யாரும் இல்லாததால் தடுமாறி விழுந்துவிட்டார். தலையில் பலத்த அடி பட்டது. அவர் உடனடியாக யாழ்ப்பாண மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். யாழ்ப்பாணம் மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர் உட்பட அனைத்து ஊழியர்களும் தந்தையைக் கவனித்தார்கள். கொழும்பிலிருந்து நரம்பியல் அறுவைச்சிகிச்சை நிபுணர் சுப்பிரமணியம் உடனடியாக இங்கு வந்து அறுவைச் சிகிச்சை செய்தார். தன்னுடைய உதவி.மருத்துவரை தந்தை செல்வாவின் அறையில் இருந்து கவனிக்கச் செய்தார். நோய் தொற்று ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக வெளி ஆள்கள் கண்டபடி அனுமதிக்கப்படவில்லை. (இதைப் பற்றி விவரிக்கப் பல பக்கங்கள் வரும்) இந்தியாவின் தலை சிறந்த நரம்பியல் நிபுணர் ராமமூர்த்தி இங்கு உடனடியாக வந்து மருத்துவ முறைகளைப் பார்த்துத் திருப்தி தெரிவித்துச் சென்றார்.

தந்தை செல்வாவின் அறையில் அவருக்குப் பிடித்தமான நாதஸ்வர ஓசை மெல்லியதாக இசைக்கப்பட்டது. ஆனால் தந்தை செல்வா 27ஆம் திகதி ஏப்ரல் 1977 இல் இயற்கை எய்தி விட்டார். அவர் இறக்கும் பொழுதோ அதற்கு சில நாள்களுக்கு முன்னரோ தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறவில்லை. கூறி இருக்கவும் முடியாது. அப்படியானால் அவர் எப்பொழுது இவ்வாறு கூறினார்?



தந்தை செல்வா கடவுளின் மேல் பொறுப்பைப் போட்டுவிட்டு அரசியல் செய்ய முயற்சிக்கவில்லை. அரசியலில் தமிழ் மக்களுக்கு ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டது. அப்பொழுது ஏற்பட்ட நிலைமையில் அவ்வாறு கூறினார் என்பது உண்மை. ஆனால் அவ்வாறு கூறிவிட்டு ஓய்ந்தாரில்லை. அதன் பின்னர்தான் பிளவுபட்டிருந்த அரசியல் கட்சிகளை ஓரணிக்குள் கொண்டுவர முழு முயற்சி எடுத்தார். தமிழ் மக்களுக்கான தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்று இறுதி முடிவும் எடுத்தார். அது உண்மை. சோர்ந்து போகவில்லை அவர். உள்ளத்திலே உறுதியான எண்ணம் கொண்டார். அதுதான் வட்டுக்கோட்டைத் தீர்மானம். மக்களை ஏமாற்றவோ, வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் செல்வதற்காகவோ அவர் அந்தத் தீர்மானத்தை எடுக்கவில்லை.

1970 ஆண்டு மே திங்களில் நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் வந்தது. அப்பொழுது ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாசக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன இணைந்து ஐக்கிய முன்னணி என்ற பெயரில் போட்டியிட்டன. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இலங்கையின் அரசமைப்பை மாற்றி ஒரு குடியரசு அரசமைப்பைத் தயாரித்து இலங்கைத் தீவை ஒரு குடியரசாக்குவோம் என்பதை மக்கள் முன்வைத்து ஆணைகோரினர். 1970 மே 27இல் தேர்தல் நடைபெற்று அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இலங்கைத் தமிழரசுக்கட்சி பெரும் வெற்றி பெற்றிருந்தாலும் நல்லூரில் மருத்துவர் நாகநாதனும் வட்டுக்கோட்டையில் அ.அமிர்தலிங்கமும் தோல்வி அடைந்தனர்.

யாழ்ப்பாணத் தொகுதியை முதன் முதலாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தனதாக்கிக் கொண்டது. ஆனால் தென்னிலங்கையில் ஐக்கிய முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பெருவெற்றியைப் பெற்றது. இந்தப் பெரும்பான்மை அரசமைப்பை மாற்றுவதற்கான ஆணையாகவே கருதப்பட்டது. 28ஆம் திகதி அதிகாலை காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதி முடிவுகள் அறிவிக்கப்பட்டன. தந்தை செல்வா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

முடிவுகள் அறிவிக்கபட்டவுடன் அந்தத் தொகுதியில் வெற்றி பெற்றவர் மக்களுக்கு நன்றி தெரிவிப்பது வழக்கம். தோற்றவர்களும் உரையாற்றலாம். அதே போன்று காங்கேசன்துறைத் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் திரண்டிருந்த மக்கள் முன் தோன்றி உரையாற்றினார். மூன்றில் இரண்டுக்கும் மேலான தொகுதிகளில் வெற்றி பெற்றதன் மூலம் இலங்கைத் தீவின் அரசமைப்பை புதிதாக வரைந்து ஶ்ரீலங்காவைக் குடியரசாக மாற்றும் நடவடிக்கைகளில் ஐக்கிய முன்னணி ஈடுபடும், அப்போழுது நடைமுறையில் உள்ள சோல்பரி அரசமைப்பிலுள்ள சிறு பாதுகாப்பான 29ஆவது விதிகூடத் தூக்கி எறியப்படும், ஶ்ரீலங்காவைப் பௌத்த சிங்களக் குடியரசாக மாற்றுவார்கள் என்பதை உணர்ந்து கொண்ட தந்தை செல்வா தமிழ் மக்களுக்கு ஏற்படப் போகின்ற பெரிய ஆபத்தை மக்களுக்கு விளக்கும் பொழுது சிங்கள பௌத்த ஆபத்திலிருந்து தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறினார். அவ்வாறு கூறியதன் மூலம் தனது தமிழினத்துக்கான தலைமைப் பொறுப்பை அவர் தட்டிக் கழித்தாரில்லை. சிலர் இவர் இப்படிக் கூறலாமா என்று அப்பொழுதும் கேலியும் செய்தனர்.

தந்தை செல்வா வேறு எங்கும் எப்பொழுதும் இவ்வாறு கூறவில்லை. விழுந்து படுக்கையில் இருக்கும்பொழுது அவர் பேச முடியாத நிலைமையிலேயே இருந்தார். எனவே அவர் இறக்கும்பொழுது இவ்வாறு கூறினார் என்பது தவறாகும்.

தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று 1970 மே 28இல் கூறிய செல்வா தமிழர்களின் அரசியல் விடுதலைக்காக முன்பிலும் பார்க்கத் தீவிரமாக உழைத்தார். தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக அனைத்துக் கட்சிகளையும் இணைக்க முயற்சித்தார். வெற்றியும் கண்டார். தமிழர் கூட்டணி தோன்றியது. தமிழ் மக்களின் உரிமைகளை அரசமைப்பு அவையில் முன்வைத்தார். தமிழரசுக் கட்சியினதும், தமிழர் கூட்டணியினதும் ஒரு திருத்தத்தைக்கூட சிறிமாவோ அரசு ஏற்க மறுத்துவிட்டது. இந்த நிலையில்தான் அரசமைப்பு அவையில் இருந்து வெளியேறி அரசுக்குச் சவால் விட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகி தமிழ் மக்கள் இந்த அரசமைப்பை நிராகரிக்கிறார்கள் என்று நிறுவ முனைந்தார்.

தேர்தலை நடத்தாமல் அரசு பின்போட்டது. இரண்டு ஆண்டுகளின் பின்னர் தேர்தல் நடத்தப்பட்டது. செல்வா பெருவெற்றி பெற்றார். இவை எல்லாம், அவர் தமிழ் மக்களைக் கடவுள் காப்பாற்றட்டும் என்று பேசிய பின்னர்தான் நடைபெற்றவை. அவர் தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வு என்ன என்பதில் உறுதியாக இருந்தார். 1970இல் கடவுள் காப்பாற்றட்டும் என்று அவர் கூறியதை மட்டும் கூறுபவர்கள் அவர் அதன் பின்னர் ஏழு ஆண்டுகள் என்ன இலட்சியத்துக்காக உழைத்தார் எதனை வலியுறுத்தினார் என்பதை மேலோட்டமாகவும் இலேசாகவுமே தொட்டு எழுதுகின்றனர்.

தமிழ் மக்களின் விடிவுதான் தந்தை செல்வாவின் கனவு. வட்டுக்கோட்டைத் தீர்மானம் தான் அவரது உயிர் மூச்சு. இதைத்தான் தந்தை செல்வா தமிழ் மக்களுக்கு விட்டுச் சென்ற உயில் என்று அவருக்குப் பின்பு வந்தவர்கள் கூறினார்கள். இன்று அதையெல்லாம் மறந்துவிட்டு கடவுள் காப்பாற்றுவார் என்று கூறிக்கொண்டு தந்தை செல்வா தொடக்கம் முதலே எதிர்த்த ஒற்றையாட்சி அரசியலுக்குள் தீர்வு காணமுயல்வது செல்வாவுக்கும் இனத்துக்கும் செய்யும் துரோகமாகவே கருதப்படும்.

1976 மே 22 ஆம் நாள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை விநியோகித்து நடந்த போராட்டத்தில் தன் தள்ளாத வயதிலும் தந்தை செல்வா பங்குபற்றினார். அமிர்தலிங்கம், துரைரத்தினம், நவரத்தினம், பண்டிதர் இரத்தினம் ஆகியோர் அந்தப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டபொழுது தன்னையும் கைது செய்யும்படி கோரினார். அவர்கள் விநியோகித்தது மாதிரியே தானும் அதை விநியோகித்தார் எனவும் தன்னை ஏன் கைது செய்யவில்லை என்றும் வினா எழுப்பியவர் செல்வா.


1970இல் ஏற்பட்ட தேர்தல் முடிவுகளை வைத்து கடவுள் காப்பாற்றட்டும் என்று கூறினாரேயன்றி போராடாமல் உரிமைகளை அடைய முடியாது என்றதனால்தான் அவர் வாழும் வரை போராடினார். அதுமட்டுமல்ல இப்பொழுது எம்முடன் பேசித் தீர்க்கத் தவறினால், எமது இளைஞர்கள் பேச்சு மேசையில் ஆயுதங்களுடன் தான்இருப்பார்கள். அப்பொழுதுதான் பேச்சு நடக்கும் என்றுதான் செல்வா கூறியிருந்தார்.

"தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்" என்ற வள்ளுவனின் கூற்றுப்படி முயற்சித்தால் திருவினையாகும். ■



“ பௌத்த சிங்களக் குடிய ரசாக மாற்றுவார்கள் என்பதை உணர்ந்து கொண்ட தந்தை செல்வா தமிழ் மக்களுக்கு ஏற்படப் போகின்ற பெரிய ஆபத்தை மக்க ளுக்கு விளக்கும் பொழுது சிங்கள பௌத்த ஆபத்திலிருந்து தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறினார்.

# பஸில் ராஜபக்ஷவுக்கு ஒரு பகிரங்க மடல்!



**பஸில் ராஜபக்ஷ அங்கிளுக்கு வணக்கம்!**

நாங்கள் நலம்.

ஆனால், நீங்கள் நலமா என்பது தேசிய வைத்தியசாலையின் மேர்ச்சன்ட் வார்ட் அறை இலக்கம் 15இன் சுவர்களுக்கு மாத்திரமே தெரிந்த விடயம். தூரதிருஷ்டவசமாக நீங்கள் இந்த மடலை வைத்தியசாலைக் கட்டிலில் வைத்தோ வெலிக்கடை சிறைச்சாலைக் கம்பிகளுக்கு பின்னால் வைத்தோதான் படிக்க வேண்டி நேர்ந்திருப்பது எனக்குக் கவலை தருகிறது.

கடந்த தை மாதம் 8ஆம் நாள் வரை பரமசிவன் கழுத்துப் பாம்பு நீங்கள். ஜனாதிபதித் தேர்தலில் சனி பகவான் தனது காலை தூக்கியதன் காரணமாக உங்களுக்கு இராகு காலம் பிறந்ததையடுத்து நாட்டை விட்டு வெளியேறியிருந்தீர்கள். பின்னர் அண்ணனின் தோல்விக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியையும் தூக்கி எறிந்திருந்தீர்கள். அமெரிக்காவிலிருந்து வருகை தந்த மறுநாளே விசாரணை அதிகாரிகளுக்கு வாக்குமூலம் அளிக்கச் சென்ற உங்களை மேலதிக நடவடிக்கைகளுக்காக நீதிமன்று தற்பொழுது தடுத்து வைத்திருக்கிறது!

தம்பி உள்ளான் படைக்கு அஞ்சான் எனும் முதுமொழிக்கு இணங்க முன்னை நாள் ஜனாதிபதி மஹிந்தவுக்குத் தம்பியாகவும் அவருக்கான பிரதான பரப்புரைப் பீரங்கியாகவும், அவரது மூத்த ஆலோசகராகவும் சிறிலங்கா சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளராகவும் தேசியப் பட்டியல் வழி அரசியலில் நுழைந்து பின் அதிக விருப்பு வாக்குகள் பெற்ற கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும், வடக்கு மாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதியின் விசேட செயலணியின் தலைவராகவும், கடந்த அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும் விளங்கிய உங்களின் 'திவிநெகும' கிணற்றை தோண்ட முயற்சித்தபோதுதான் பூதங்கள் சில புறப்பட்டு தலைகாட்ட ஆரம்பித்தன.

அதுவே அமெரிக்காவிலிருந்த உங்களை கூப்பிட்டு குறிப்பொன்று எடுக்க வேண்டிய தேவையையும் இந்நாள் சட்டத்துறைக்கு ஏற்படுத்தியது.

முன்னர் நீங்கள் மகாவலி அபிவிருத்தி அமைச்சில் ஈட்டிக்கொண்ட திருவாளர் 10 விழுக்காடு (Mr. 10 percent) என்ற பெயருக்குப் பின்னால் புதையுண்டு போயிருக்கும் மர்மத்தையும் தொடரும் விசாரணைகள் வெளிக்கொண்டுவரும் என்கிற நம்பிக்கை எனக்குண்டு.

தட்டிக்கேட்க ஆளில்லாத தம்பி எப்படியிருப்பார் என்பதை நன்கு நிரூபித்திருக்கும் நீங்கள், அண்மைக் காலமாக அரசியல்வாதிகளுக்கும் ஊழல் பேர்வழிகளுக்கும் வயிற்றுப்போக்கை ஏற்படுத்திவரும் நிதிசார் குற்றத்தடுப்பு பிரிவினருக்கு முன்னால் 7 மணித்தியாலங்களுக்கு மேலாக வாந்தி எடுத்தவைகளில் சரியாக சமிபாடடையாத உள்ளடக்கங்களும் சில இருக்கின்றமை உங்களை இன்று விளக்கமறியலில் வைக்கக் காரணமாயிருக்கின்றது.

பொதுமக்களின் நிதியைக் கையாடிய விவகாரம் உங்களுக்கான பிணை வழங்கலுக்கான சந்தர்ப்பத்தையும் தடுத்திருக்கிறது. போதாக்குறைக்கு நீதிமன்றம் வேறு இரவிரவாக அமர்வை நடத்தியிருக்கிறது.

வரலாற்றில் கி.மு. கி.பி. எவ்வாறு தெளிவான பிரிகோடாகக் கொள்ளப்படுகிறதோ, அவ்வாறே இலங்கையின் அரசியல் புல நிலைப்பாடுகளையும் தை 8 ஜனாதிபதித் தேர்தலை மிகத் தெளிவான பிரிகோடாகக் கொண்டு வகைப்படுத்த முடியும். அதில் சமல் ராஜபக்ஷ தவிர்ந்த ஏனைய ராஜபக்ஷ சகோதரர்களின் நிலவரமும் பிரிகோட்டுக்கு முன் பின் என்று ஒப்பிட்டு நோக்கினால் முரணாகவே விளங்குகிறது. அமெரிக்கா சென்று திரும்பிய பின் உங்களிடம் குரக்கன் நிற சால்வையும் தலைமறைவாகியிருக்கிறது. அதுவும் கூர்ந்து நோக்கத்தக்கது.

அண்மையில் நிறைவேறிய சட்டமூலம் கோத்தபாய உள்ளிட்ட இரட்டைப் பிரஜாவுரிமையாளர்களைத் தேர்தலில் போட்டியிட தடைவிதித்துள்ள போதிலும், அமெரிக்காவின் பச்சை அட்டைதாரியான (நீங்கள் பச்சை அட்டைதாரியா? குடியுரிமைவாதியா? என்பதும் தெளிவில்லை என்கி றார்கள்) உங்களுக்கு அது எதுவித கெடுதியையும் ஏற்படுத்தவில்லை. எனவே அரசியல் புலத்தில் உங்களுக்குத் தடை இருப்பதாகவும் தெரியவில்லை. முன்னொரு பொழுதில் உங்களுக்கு பிரதமர் கதிரைக்கான சாத்தியமிருப்பதாக வெளிவந்த தகவல்களை இப்போது நினைத்துப்பார்க்கிறேன். பரிதாபம், இப்போது ஒருவர்கூட அதைப்பற்றிக் கதை எடுக்கிறார்கள் இல்லை.

நிரந்தர நண்பனையோ எதிரியையோ கொண்டிராத அரசியல்புலத்தில் நல்லாட்சி என்னும் பெயரில் நாளை நீதிமன்றத் தீரப்புகள் பொதுமக்கள் நலனை கருத்தில்கொண்டு வெளியாகும்போது அவை சற்றுக் கசப்பானவையாகக்கூட இருக்கலாம். நாளை மறுதினம் வரை விளக்க மறியலுக்கு உத்தரவு இடப்பட்டுள்ள நிலையில் நீதித்துறையின் அடுத்த நகர்வு பற்றிய ஆவலுடன் விடைபெறுகிறேன்!

நன்றியுடன்,
*-ஸ்டோஸ்வாமி-*

# தயவோடு வாழ்ந்தால் நூறு வயதோடு வாழலாம்'

கே.எஸ்.சிவஞானராஜா

தயவு என்பதை இரக்கம், கருணை, அன்பு, பரிவு, மனிதாபிமானம், ஆறுதல், அரவணைப்பு, பரோபகாரம் ஆத ரவு, ஈகை, அறம் இது போன்ற இன் னும் பல சொற்களால் விளங்குவதற்கும், விளக்குவதற்கும் எம் மால் முடிகிறது. தயவுக்கு அதிபதியாக இறைவனையும், அடுத்ததாக பெற்றதாயையும் நாம் இனங் கண்டுள்ளோம். வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளலார் போல, ஆண்களிலும் பெருவாரியானோர் இனங் காணப்படுகின்றனர். பூமியும், பூமியில் வாழுகின்ற ஒரு சில பிராணிகளும் எம்மிடத்தே மிகுந்த பரிவுடன் இருக்கின்ற உண்மையை எம்மால் உணர முடிகிறது. அதனாலன்றோ பூமியில் மனிதரது வயது வெல்லப்படுகிறது. ஜப்பான், சீனாவைப் போன்று இலங்கையிலும் 100 வயதைத் தாண்டிய வர்கள் பலர் உள்ளனர். இவ்வறான வர்கள் நாட்டில் இருக்கின்ற போதும், சம்பந்தப்பட்ட பகுதியி னர் அவர்கள் தொடர்பான பொக் கிரங்களைத் தேடுவதிலும், ஆவணப்படுத்துவதிலும், வெளியிடுவதிலும் சட் டத்தைப் பிரயோகிக்கிறார்களேயொழிய, 100 வயது உடையவரைத் தேடிப்போய் தயவுடன் அவரது வாழ்வைப் பகிர்ந்து கொள்ள, கதிரைகளில் இருந்து இறங்குவதற்கு யாருமே தயாராக இல்லை. சுருங்கச் சொன்னால் தயவுடன் சந்திக்கப் பதவிகள் விடுவதில்லை. ஒரு சிங்களப் பத்தி ரிகை 100 வயதைக் கொண்டாடிய ஒரு புலவரை, அவரது படத்துடன் பிரசுரித்திருந்தது. அதேபோல சந்நிதியான் ஆச்சிரம ஞானச்சுடரும் அவரைப் படத்தோடு பிரசுரித்திருந்தது. விளம்பரமாகவும், செய்தியாகவும் இரண்டு பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்திருந்தன. ஏனையவை?

இலங்கை உட்பட, உலகெங்கணும், நடைபெறுகின்ற இயற்கை இடர், தொடர்பான இழப்புக்களில் பங்குகொண்ட, பகிர்ந்து கொண்ட, மக்களையும் இரங்கிய நாடுகளையும் எம்மால் வணங்க முடிகிறது. கார ணம் அவர்கள் எம்பால் கொண்ட தயவுதாட்சணியத்துக்காகவே. எப்போது இரங் குதல் ஒருவனுடைய இதயத்தில் ஊற்றெடுக்கிறதோ அப்போதே இறைவன் அந்த இதயத்தில் குடிபுகுந்து விடுகின்றான்.

போர் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நாடுகளில் இறக்கின்ற, அகதிகளாகின்ற, காயப்படுகின்ற, காணாமற்போய் விடுகின்ற அத்தனை பேருக்குமாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் பிரார்த்தனை செய்வதை நாம் கடமையாகக் கொள்ள வேுண்டும். இதனால், இயற்கை சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்க, ஏதோ வொரு வழியைக் கண்டு பிடித்து ஆவன புரியும். இது குறித்து யாருமே சந்தேகப்பட வேண்டாம்.

கொலை, பசி, தாகம், வறுமை, வருத்தம், துன்பம், இச்சை, இன்மை, பலாத்காரம் இவற்றால் ஓர் உயிர் துடிக்குமானால் அந்த வேதனையை இயன்ற வகையில் நிகழாத வண்ணம். ஆவன புரிவதே தயவு என்று அடையாளப்படுத்திக் கொள்ளலாம். எந்தவித பேதமும், வேறுபாடும் காட்டாமல் உண்மையாகவே பாதிக்கப்பட்ட உயிரை தம்முயிராக எண்ணுவதும் அந்த உயிர் படுகின்ற துன்பத்தை தன்னுடைய துன்பமாக எண்ணுவதும், அதை எண்ணி வருந்துவதும், உள்ளம் உருகிக் கரைந்து சொல்லாலும், பொரு ளாலும், உடலாலும், மனத்தாலும், பிரார்த்த னையாலும், அதன் தாக்க, ஏக்கத்தைப் போக்குவதே தயவு ஆகும். இதன் பயனாகவே முன்னையோரின் ஆயுள் நூறாகியதெனலாம். தற்போதைய ஒரு மனிதனின் சராசரி வயது எழுபதுக்கு முன்பின்னாகவே காணப்படுகிறது. அதனாலன்றோ கலியுகத்தைக் காண்கின்றோம்.

தயவு இல்லாத கலியுகம் எப்படி இருக்கும்? அதனை இப்போது பார்ப்போம்:!

1.கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்பன அதியுச்சமாக நடைபெறும்.

2. தாய், தந்தை, மகள், மகன், மாமா, மாமி, மருமகன், மருமகள், உறவுகள் முறிவடையும், அல் லாமலும், முறைகேடு இடம் பெறும் அவமானப்படுவர்.

3. குரு!சிஷ்ய பாரம்பரியக் கோட் பாடு தகர்த் தெறியப்படும். அல்லா விடின் வித்தைகள் வீண் விரயம் செய்யப்படும். இலஞ்ச மயமாகி குருவித்தை தெரு வோரம் விமர் சிக்கப்படும்.

4.குழந்தைகள் , இளம்பெண்கள், சிறு வர்கள், தாய்மார்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவோர் அல்லது தீண்டப் படுவார்கள்.

5. பணமே குணமாக்கப்படும். குணம் விமர்சிக்கப்படும், மணம் சீரழிக்கப்படும்.

6. விவாக ரத்துக்கள் சர்வ சாதார ணமாகி விடும்.பல தார மணம் மலிந்து காணப்படும். மானம்,வெட்கம்,ரோசம் இருக்காது.

7. உடை, நடை, பாவனை யாவுமே கண்களால் பசியாற விருந்தாக்கப்படும்.

8. மது, மாது, போதை வேண்டியது கிடைத்திடும். எது வேண்டுமோ கைத்தொலைபேசிகள் வரங்கொடுக்கும்.

9. குற்றவாளிகள் கம்பீரமாக உலாவர, சுற்றவாளிகள் ஒதுங்க வேண்டியிருக்கும்.

10. வீதிகளும், வாகனங்களும், நாகரிகங்களும் விதியாக அமையும். சதியாகவும் மாறும்.

11. ஓரினச் சேர்க்கையாளர்களின் அங்கத்துவம் நாள் தோறும் அதிகரிக்கும். சங்கம் அமைக்கப்படும்.

12. ஆஸ்திகம் குறைந்து நாஸ்திகம் மேம்படும்.

13. படிப்பது தேவராம் இடிப்பது கோயிலாக இருக்கின்ற நடத்தையில் மாற்றம் ஏற்படும்.

14. மனித! மிருக! ஊர்வன உறவுகள் வாலாயமாகும். குடும்பமாக மாறும்.

15. விமான, புகையிரத, நீர் மூழ்கி விபத்துக்கள் ஏற்படும்.

16. மத முரண்பாடுகள் ஏற்படும்.

17. இன, மத, மொழி அடிப்படையில் தனித்தனி இராஜ்ஜியங்களாகப் பிரிதல் உண்டாகும்.

18. குழந்தைகள், முதியோர்கள் அநாதரவாக விடப்படுதல், சர்வ சாதாரணமாகிவிடும்.

19. வேலிகளே பயிர்களை மேய்தல் நடக்கும். மாறாக பயிர்களும் வேலிகளில் படரும்.

20. சூதாடி இழத்தல் பந்தயம் பிடிப்பர்! கெடுவதற்காக மனித உறுப்புக்களை விற்பனை செய்தல், நோய் பரப்புதல், நஞ்சூட்டல் ஆகிய மேலே கூறப்பட்ட அத்தனை விடயங்களும் தயவு இன்றி தற்போதைய கலியுகத்தில் நடைபெறுமென, பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னமே சொல்லப்பட்டு விட்டது. ஆதலால் இதனின் இருந்து மீளுவதற்கு அனைவரும் வழிதேடியே தீரவேண்டும். அதற்கு பல வழிகளுண்டு.

1.பணம், படிப்பு, பதவி, புகழ், பேராசை, பொருளாசை, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகியவற்றினால் உண்டாகும் அதீத வெறியைப் பையப் பைய குறைத்துக் கொண்டு வருதல் வேண்டும்.

2. ஈசனோடாயினும் ஆசை அறுமின் என்பது பழமொழி. ஆசை மிதமிஞ்சினால் அதுவும் வெறிகொண்டு சொல்லுக் கேட்காது. ஆதலால் அதுவும் அளவோடு இருப்பதே தயவுக்கு வழிவகுக்கும்.

3. மனத்துக் கண்ணிருக்கும் அழுக்குகளை அகற்றியே தீரவேண்டும். அழுக்காறு, அவா, வெகுளி, வெருளித்தனம், புரளி, இன்னாச் சொல், பழிதீர்த்தல், வஞ்சகம் செய்தல், திட்டுதல், தீர்த்துக் கட்டுதல், புறஞ்சொல்லல் ஆகியவற்றை முற்றாக நீக்கி, இறை நாமத்தைப் பயிரிடவேண்டும். தாய்ப்பால் போல இரக்கத்தை உள்ளத்தில் சுரக்கச் செய்வதற்குக் குழந்தைகளின் சிரிப்பில் மனத்தைப் பறிகொடுங்கள். வைத்தியசாலை விடுதிகளில் வருந்தும் நோயாளிகளைப் பார்த்து வாருங்கள். தயவும், வயதும் நிரம்பிவிடும்.



# திருந்தி வாழும் உரிமை மறுக்கப்பட்ட மயூரன்

## இந்தோனேசியாவின் மோசமான அரக்கத்தனம்

அதிரன்

சாவுத் தண்டனை என்ற பெயரில், ஒரு மனிதனின் உயிரை அரசு பறிப்பதற்கான அதிகாரம் மிகவும் கொடூரமானது என்று சமூக ஆர்வலர்களும் சிந்தனையாளர்களும் பல ஆண்டுகளாக தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஒரு மனிதன் தவறிழைப்பதற்காகவே பிறப்பதில்லை எனவும், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அவன் தவறிழைத்து விட்டால், அத்தவறை நினைத்து வருந்தி அவன் திருந்தி வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை சமூகம் அவனுக்கு வழங்க வேண்டும் எனவும் அவர்கள் வாதிடுகிறார்கள். காட்டுமிராண்டித் தனமான ஒரு குற்றச் செயலை செய்த ஒருவரை தூக்கில் போடுவதன் மூலம், நாமும் பழிக்குப் பழி என்னும் காட்டுமிராண்டித் தனமான நிலைக்குத் தாழ்ந்து விடுகிறோம் என்கிறார் ஆஸ்திரேலிய அரசியல்வாதியான ஆண்ட்றூ பாட்லெட்.

ஒரு மனிதன் செய்த தவறுக்காக அவனை அழித்துவிடுவதன் மூலம், அவனிடமிருக்கக் கூடிய அனைத்து ஆளுமைகளையும் அழித்துவிடுவது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பது அவருடைய வாதம். காலத்திற்கொவ்வாத, மனிதத் தன்மை சிறிதுமற்ற இத்தகைய தண்டனை முறையை வரலாற்றின் குப்பை தொட்டிக்குள் வீசியெறிய வேண்டும் என்று லண்டனிலிருந்து வெளிவரும் கார்டியன் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

2005ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் பாலியிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு போதைவஸ்துக் கடத்த முயன்றார்கள் என்ற குற்றச் சாட்டில் 9 ஆஸ்திரேலியர்கள் பாலியில் கைது செய்யப்பட்டார்கள். அந்த ஒன்பது ஆஸ்திரேலியர்களில் இருவரை அந்தக் குழுவின் தலைவர்கள் என்று குறிப்பிட்ட இந்தோனேயா அவர்களுக்குச் சாவுத் தண்டனை விதித் தது.

அவர்கள் செய்த குற்றத்துக்காக சாவுத் தண்டனையைத் தவிர்த்து வேறு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள் என்று வாதிட்டது ஆஸ்திரேலியா. அந்த சாவுத் தண்டனையை தடுத்து நிறுத்துவதற்காக ஆஸ்திரேலிய அரசு எவ்வளவோ முயற்சித்தும், பலவிதமான ராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டும் இந்தோனேசிய ஜனாதிபதி அந்த இருவரையும் கொன்றே தீருவேன் என்று விடாப்பிடியாகக் கூறி விட்டதன் விளைவு, கடந்த 10 வருட சிறை வாழ்க்கைக்குப் பின்னர் அவர்கள் இருவரும் இந்தோனேய அரசால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் மட்டுமல்லாது, அவர்களுடன் சேர்த்து மொத்தம் 8 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட அநியாயம் நடந்துள்ளது.

இது இந்தோனேசியாவின் உள்நாட்டுச் சட்டத்துக்கு அமைய நடந்ததால் அதில் தலையிடமுடியாத இக்கட்டான நிலை ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டது.

இந்த அநியாயத்தை தடுத்து நிறுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலையில் ஆஸ்திரேலியா, இதற்கான பலனை இந்தோனேசியா அனுபவித்தே தீரும் என்று எச்சரித்துள்ளது. எதிர்காலத்தில் அது தனது அயல் நாடான இந்தோனேயாவுக்கான உதவிகளை நிறுத்தவும், ராஜதந்திர முட்டுக் கட்டைகள் போடுவதற்கும் தன்னைத் தயார்ப்படுத்தியுள்ளது. இதன் வெளிப்பாடாகத் தனது தூதுவரை இந்தோனேசியாவிலிருந்து திருப்பி அழைத்துள்ளது ஆஸ்திரேலியா.

முழு ஆஸ்திரேலியாவையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ள இந்தக் கொடூரத்தால் கொல்லப்பட்ட அந்த இரு ஆஸ்திரேலியர்களும் மயூரன் சுகுமாரன் மற்றும் ஆண்ட்ரூ சான் ஆகியோராவர்.

மயூரன் ஆஸ்திரேலிய தமிழ்ப் பெற்றோருக்கும், ஆண்ட்ரூ சான் அவுஸ்திரேலிய சீனப் பெற்றோருக்கும் பிறந்தவர்கள்.

மரணம் கொடுமையானது. அதிலும் ஒரு மனிதனுக்கு அவனுக்கான மரணம் சம்பவிக்கப் போகும் நேரத்தை இன்னொரு மனிதன் தீர்மானிப்பதும், அதை அவனுக்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்பு கூறிவிட்டு அவனைச் சுட்டுக் கொல்வதும் நாகரீகமான, அறிவியலில் வளர்ச்சியடைந்த மனிதர்களால் ஏற்றுக் கொள்ள முடியாதது.

மனிதர்கள் தவறிழைப்பது, அதுவும் இளம் வயதில் தவறு செய்வது இயல்பானது. ஆனால் அதற்கான தண்டனையாக மரணம் இருக்கக் கூடாது. அவர்களுக்கு தங்களின் பிழைகளை உணர்ந்து திருந்தி நல்ல வாழ்வு வாழ்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதில் மேற்குலகமும் ஆஸ்திரேலி யாவும் உறுதியாகவுள்ளன. ஆனால் இந்தோனேயா மனித உயிர்களுக்குப் போதிய மதிப்பளிப்பதில்லை என்பதுதான் சாபக்கேடு.

இந்தோனேசிய ஜனாதிபதிக்கு கருணை மனு அளிக்கப்பட்டு ,பல்வேறு மனித உரிமை நிறுவனங்கள் சாவுத் தண்டனைக்கு எதிராக குரல் கொடுத்தன. எனினும் அவை எதுவும் சாத்தியப்படவில்லை. மயூரன் நுசா கம்பங்கனி லுள்ள சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது, சிறைக் கைதிகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். அடிப்படையில் கராத்தே பயின்று பட்டம் பெற்றவர் மயூரன். சிறைச்சாலையில் ஏனைய கைதிகளுக்கு ஆங்கிலம், கணினிக் கல்வி, போட்டோ வடிவமைப்பு ஆகியவற்றைப் பயிற்றுவித்ததுடன் சித்திரம் வரைதலில் நுட்பங்களையும் கற்றுக் கொடுத்தார்.

இவ்வாண்டு பெப்ரவரி மாதம் கர்ட்டின் பல்கலைக் கழகம் மயூரனுக்கு வரைகலை பட்டத்தை வழங்கியது.

அனைத்துக் கைதிகளுக்கும் முன்னு தாரணமாகத் திகழ்ந்ததால் சிறைச்சாலையில் 20 கைதிகளை வழி நடத்தும்தலைமைப்பொறுப்புமயூரனுக்குக்கிடைத்தது.

அன்று சான் தன்னை மாற்றிக்கொண்டார். நிறைய மனமாற்றமடைந்து மதபோதகராக விரும்பினார். அவர் கிறிஸ்தவத்துக்கு மதம் மாறியிருந்தார். கணினியில் அசாதாரண அறிவுடனிருந்தவர், சிறைச்சாலை கைதிகளுக்கும் அதனை கற்றுக் கொடுத்தார்.

மயூரன் நிறைய சித்திரங்களை வரைய வேண்டும் என இறுதியாக ஆசைப் பட்டார். அதன்படி தன்னுடைய படங்களை வரைந்து இதயத்தில் குண்டு துளைப்பது போலவும் கவலையை வெளிக் காட்டுவது போல வும் பல சித்திரங்களை வரைந்தார். மயூரனின் பெற்றோர் சகோதரன், அவரது மனைவி, சகோதரி மற்றும் உறவினர்கள் சிலருடன் திறந்த வெளியில் சில மணி நேரம் கழிப்பதற்கு அவகாசம் வழங்கப்பட்டது. அது போல அன்று சான் தனது குடும்பத்தாருடன் தேவாலயத்தில் பொழுதை கழிக்க வேண்டும் என விரும்பினார்.

இவ்விருவருக்கும் இருதயத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தி சாவுத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதே நீதிமன்றத்தின் உத்தரவாகும். சாவுத் தண்டனை நடைமுறை இவ்வாறுதான் அமைவது வழக்கம். நுசாகம்பங்கன் சிறையிலுள்ள சாவுத் தண்டனை வழங்கப்படும் வளாகத்துக்கு கைதிகள் அழைத்துச் செல்லப்படுவர். அவர்கள் நிற்க விரும்புகிறார்களா, அல்லது உட்கார்ந்திருக்க விரும்புகி றார்களா என விசாரிக்கப்படும். அதன் பின்னர் வெள்ளை உடை அணிவிக்கப்பட்டு கை, கால்கள் கட்டப்படும். அவர்கள் தியானம் செய்வ தற்காகச் சரியாக மூன்று நிமிடங்கள் வழங்கப்படும். கைதிகள் சுடப்படும்போது கண்கள் மூடியிருக்க வேண்டுமா அல்லது திறந்திருக்க வேண்டுமா என்பதை அவர்களே முடிவு செய்ய வேண்டும்.

என்னைச் சுடும்போது கண்களை திறந்திருப்பதையே விரும்புகிறேன். நான் தைரியசாலியாக இவ்வுலகை விட்டுப் பிரியவே ஆசைப் படுகிறேன் என மயூரனின் நெருங்கிய நண்பரும் சித்திர ஆசிரியருமான பென் குவால்டியிடம் மயூரன் குறிப்பிட்டுள்ளார்.

மயூரன் சிறைக்குள்ளே ஒரு முன்னுதாரணமான மனிதராக விளங்குகிறார் எனவும், அவர் செய்த தவறை மீண்டும் செய்ய மாட்டார் என தாம் முழு மனதுடன் நம்புவதாகவும், அவருடைய மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும் எனவும் பாலியின் கெரபொக்கான் சிறைச்சாலையின் பிரதம பொறுப்பதிகாரி இந்தொனேசிய உயர் நீதிமன்றத்தில் வேண்டினார். மயூரன் சக கைதிகளுக்கு ஓவியம் வரையக் கற்றுக் கொடுப்பதுடன் தானும் ஓவியம் தீட்டுகிறார். பாலியின் தலைநகரத்தில் ஒரு ஓவியக் கண்காட்சியை ஏற்பாடு செய்து சிறைக்குள் வரையப்பட்ட ஓவியங்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த வருமானத்தில், போதைப் பொருள் பாவனையிலிருந்து மீள விரும்புவர்களுக்கான உதவி நிலையம் ஒன்றை பாலியில் இயங்கச் செய்கிறார்.

வாழ்க்கையின் நோக்கங்கள் எவை என்று புரிந்து கொள்ளாமல் வாழ்ந்தமைக்காக நான் கவலைப் படுகிறேன்; சிறை எனக்கு பல பாடங்களை கற்றுத் தந்து விட்டது, என்கிறார் மயூரன். எனது தவறுக்காக நான் இந்தோனேசிய மக்களிடமும் ஆஸ்திரேலிய மக்களிடமும் மன்னிப்பு கோருகிறேன் என்றார் அவர்.

அவரை தூக்கிலிடுவதன் மூலம் அவர் மட்டும் இறக்கப் போவதில்லை என்றார் மயூரனின் தங்கை பிருந்தா சுகுமாரன். அப்பா, அம்மா, நான், தம்பி மற்றும் அவரது நண்பர்கள் அனைவரும் ஒரு நிரந்தரமான இழப்புடன் வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு விடுவோம். அந்த இழப்பிலிருந்து எங்களால் என்றும் மீள முடியாது. எனது மகனுக்கு திருந்தி வாழ்வதற்கு இன்னொரு வாய்ப்பு கொடுங்கள். அவன் செய்த தவறுக்காக அவனை மன்னித்து இன்னொரு வாய்ப்பு கொடுங்கள் என்று மன்றாட்டமாக வேண்டினார் மயூரனின் அம்மா ராஜினி.

அவர்கள் பொதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டார்கள் தான். அவர்களின் செயலால் பலர் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதும் உண்மைதான். ஆனால், இதில் குற்றம்சாட்டப்பட்ட மயூரன் மற்றும் அன்று ஆகியோர் புனர் வாழ்வுக்குட்படுத்தப்பட்ட நிலையில் உள்ள தாக சிறையதிகாரியே சான்றிதழ் வழங்கியிருந்தார். உண்மையில் அவர்கள் முன்னுதாரணம் மிக்கவர்களாக மாறியிருந்தார்கள்.இந்தத் தண்டனையின் மூலம், அவர்களின் திருந்தி வாழும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

# நேபாளத்துக்கு நேர்ந்த எதிர்பாராத இழப்பு

## ஆயிரக்கணக்கான உயிர்கள் சொத்துக்கள் புராதன சின்னங்கள் நாசம்



■ ரெங்கன்

சமீப காலம் வரை உலகிலேயே ஒரே ஓர் இந்து ராஜ்யமாக விளங்கி வந்த நேபாளம் பல்வேறு அரசியல் புரட்சிகளின் பின்னர் மக்கள் ஆட்சிக்கு உட்பட்டிருக்கிறது. அரசியல் கொந்தளிப்பு ஓரளவு தணிந்துள்ள நிலையில் இயற்கையின் சீற்றத்துக்குள்ளாகி பல ஆயிரம் உயிர்களையும் புராதன சின்னங்களையும், சொத்துக்களையும் இழந்து பிறநாடுகளின் உதவி ஆதரவை எதிர்பார்த்து நிற்கின்றது.

எதை நினைத்து நான் அழுவது! அழவேண்டிய விடயங்களின் எண்ணிக்கையே மறந்துபோய் விட்டது. தன் வீட்டுடன் அயல் முழுக்கவும் உடைந்து நொறுங்கி ஒரு குப்பை மேடு போன்று காட்சியளிக்கும் இடத்தில் விடியற்காலை நேரத்தில் கடும் பனிப்படலத்தில் குளிரினால் நடுங்கிக் கொண்டே இப்படிக்கூறினார். புண்ய ராம் கவாங் என்ற ஆசிரியர். அவரது அயலவரான 70 வயது பெண்மணி தன் சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்தபடி அழுது கொண்டிருந்தார்.

அருகில் பலராலும் பூசிக்கப்பட்டுவந்த நான்கு கோயில்கள் இருந்த இடம் தெரியவில்லை. யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்டிருந்த புராதன சின்னங்கள் வெறும் செங்கல் குவியல்களாகக் காணப்படுகின்றன. இந்தப் பகுதியில் பலராலும் வணங்கப்பட்ட பெறுமதி மிக்க தெய்வச் சிலையொன்றும் செங்கற்களால் மறைக்கப்பட்டுவிட்டது. அந்தப் பகுதிக்குச் செல்லும் வழியில் காவல் செய்வது போல் நிறுத்தப்பட்டிருக்கும் கம்பீரமாக தோற்றமளிக்கும் கருங்கல்லிலான சிங்கங்களின் சிலைகள் அப்படியே காட்சியளிக்கின்றன. இனி அவை எதனைக் காவல் செய்யப் போகின்றன என்பது தெரியவில்லை.

ஆசிரியர் புண்யராம் கூறுகையில்;

எதை நினைத்து அழுவது என்று எனக்குத் தெரியவில்லை. எங்கள் புராதன கோயில்களை நினைத்து அழுவதா, எனது அயலவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிர்க்கதியைப் பார்த்து அழுவதா, எனது நண்பர்கள், எனது சொந்த வீடு இவைகளை எண்ணி அழுவதா? எல்லாம்அழிந்துபோய்விட்டனவே என்றார்சோகத்துடன்.

நேபாளத்தை முற்றுமுழுதாக அசைத்தெடுத்த பயங்கர பூகம்பத்தின் அழிவின் வெளிப்பாடுகள் இப்போது சிறிது சிறிதாக தெளிவாகிக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பூகம்பத்தில் 4,200 க்கும் மேற்பட்டவர்கள் இறந்திருக்கலாம் என்று ஒரு கணிப்பீடு. உயிர் அழிவு இன்னும் அதிகமாக இருக்கலாம். பல நூற்றாண்டு பழைமையான புராதன சின்னங்கள் மண் மூடிப் போய் காணப்படுகின்றன. இமயத்தின் எவரெஸ்ட் சிகரத்தின் அடிவாரத்தில் காணப்பட்ட முகாம் ஒன்று, நழுவி வந்த மண்மேடுகளால் புதைக்கப்பட்டுவிட்டது. நேபாளத்திலுள்ள 75மாவட்டங்களில் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளில் 30 மாவட்டங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் இடைஞ்சல்கள் இருப்பதால் அழிவுகளின் சரியான தகவல்களைப் பெறுவதில் கடினமாக இருந்தது. சேவ் த சில்ரன் (குழந்தைகளைக் காப்பாற்றும்) சர்வதேச நிறுவனத்தின் கணிப்பின்படி இந்தப் பூகம்பத்தினால் 10 லட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் அனேகமும் மழையிலும் பனிக் குளிரிலும் திறந்த வெளிகளில் உறவினர்களுடன் தங்கியிருக்க நேர்ந்தது என்று யுனெஸ்கோ கூறியது.

தலைநகர் கத்மண்டுவிலுள்ள 5 ஆம் நூற்றாண்டு பசுபதிநாதர் கோயிலின் அருகே இறந்தவர்கள் அனேகரின் சடலங்கள் எரிக்கப்படுவதைக் காணமுடிந்தது. பாக்மதி ஆற்றின் கரை எங்கும் இறந்தவர்களின் சிதைகள் எரிக்கப்படுவதால் அந்தப் பிரதேசமெங்கும் கடும் புகையும் மனித உடல்கள் எரியும் நெடியும் காற்றில் பரவிக் கொண்டிருந்தது. ஏனைய இடங்களிலும் இறந்தவர்களின் உறவினர்கள் சவங்களின் அருகில் இருந்து அழுது கொண்டிருந்தார்கள். பூகம்பம் ஏற்பட்ட மூன்றாம் நாள் கோயில் பொறுப்பில் 286 சடலங்கள் எரியூட்டப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. தகனக்கிரியைகளுக்கும் தகன மயானத்துக்கும் பொறுப்பான அதிகாரி சம்பு பிரசாத் பவுடல் என்பவர் மேலும் கூறுகையில்;

இன்னும் டசின் கணக்கான உடல்கள் தகனத்துக்காகக் காத்திருக்கின்றன என்றார்.

தகனக்கிரியைகளை விரைவாக நடத்தி முடிக்க எமக்கு போதிய அளவு ஆள் அணியும் மற்றும் நிர்வாக ஒருங்கிணைப்பு வசதிகளும் இல்லாமலிருக்கிறது என்றார். பல உறவினர்கள் கோயில் சடங்குகளை எதிர்பார்க்காமல் ஆற்றின் கரைகளில் சடலங்களை எரித்துவிட்டு செல்வதைக் காணமுடிந்தது.

சரித்திர முக்கியத்துவமான இந்தக் கோயில் பூகம்பத்துக்குத் தாக்குப்பிடித்து தப்பியிருக்கிறது என்றாலும் சரித்திர முக்கியத்துவமான இந்தப் பகுதியின் பல இடங்கள் தகர்ந்து போயுள்ளன. தலைநகரின் தர்பார் சதுக்கம் தகர்ந்துபோயுள்ளது. அதேபோல் பிரசித்தமான தரஹரா கோபுரம் இடிந்து விழுந்துள்ளது.

பூகம்பத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சர்வதேச உதவிகள் திங்கட்கிழமை வந்து தொடங்கின. மீட்புப் பணியாளர்கள் ஹெலி ஹொப்டர்கள் மூலம் மலைப்பகுதிகளில் சிக்குண்டு இருப்பவர்களைக் காப்பாற்றுவதில் இறங்கினார்கள். தூர இடங்களில் இராணுவம் மீட்புப் பணிகளில் இறங்கி உயிருடன் சிலரை மீட்டுள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் பல இடங்களிலும் தற்காலிக கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். காத்மண்டுவிலுள்ள மருத்துவமனைகள் காயமடைந்தவர்களால் நிறைந்து வழிவது போல் அங்குள்ள சிறிய விமான நிலையமும் விமான போக்குவரத்துகளால் நிரம்பி வழிகின்றன.

# உலக நடப்பு

### 5 பத்திரிகையாளர்கள் ஐ.எஸ்.ஐ. படுகொலை

லிபியாவின் கிழக்குப் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. லிபிய தொலைக்காட்சி நிறுவனத்துக்காக பணியாற்றும் 5 பத்திரிகையாளர்களை இஸ்லாமிய அரசு தீவிரவாதிகள் கொன்றிருக்கிறார்கள். பத்திரிகையாளர்களின் தொண்டைகளை அறுத்து இந்தக் கொலை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப் பத்திரிகையாளர்கள் ஐவரும் நாட்டின் நாடாளுமன்ற திறப்புவிழா செய்திகளைத் தொகுத்து வழங்கிய பின் பெங்காஸிக்கு போவதற்காக கடந்த ஆகஸ்டில் தப்ருக் நகரிலிருந்து புறப்பட்டுச் சென்ற பின் காணாமற்போய் இருந்தார்கள்.

குரல் வளைகள் அறுக்கப்பட்ட நிலையில் 5 பேரின் சடலங்கள் ஒரு காட்டுப் பகுதியில் கிடக்கக் காணப்பட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். கிழக்கு லிபியாவில் செயற்படும் ஒரு தொலைக்காட்சி நிறுவனத்துக்கு இவர்கள் சேவையாற்றியவர்கள் நால்வர் லிபியர்கள் மற்றவர் எகிப்தியர்.

### சீன அச்சுறுத்தலை எதிர்கொள்ள ஜாப் தற்காப்பு நடவடிக்கை

ஆசியாவில் அதிகமாக அக்கறை காட்டித் தொடர்புகளை அதிகரித்துக் கொண்டுவரும் சீனாவின் போக்கை உத்தேசித்து ஜப்பான் தன் பாதுகாப்பு மற்றும் வழிகாட்டு முறைகளை சீர் அமைப்பதில் இறங்கியுள்ளது. இந்த வகையில் சர்வதேச மட்டத்தில் இன்னும் அதிக வலுவான பங்கு பணிகளை மேற்கொள்ள ஜப்பான் விரும்புகின்றது. எனவே ஜப்பானும் அமெரிக்காவும் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான புதிய வழி காட்டும் முறையொன்றை வகுத்துள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச மட்டத்தில் சீனாவின் பலம் விரைவாக வளர்ந்துவருவதும் வடகொரியா அணு ஆயுதத்தை தன் வசம் கொண்டிருப்பதும் ஜப்பானுக்குக் கவலைய்ய ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பானின் பாதுகாப்பு தொடர்பான அமெரிக்காவின் அர்ப்பணிப்பானது இரும்புக் கவசம் பூண்டதாக இருக்கிறது என்று அமெரிக்கா, ஜப்பானிய தலைவர்களுக்கு உறுதியளித்துள்ளது. இந்த பாதுகாப்பு ஏற்பாடானது டோக்கியோவின் நிர்வாகத்துக்குட்பட்ட கடல் பிராந்தியங்கள் முழுமையையும் உள் அடக்குவதாகக் கூறப்பட்டுள்ளது. இதில் கிழக்கு சீன கடற்பகுதியில் சீனாவுடன் முரண்பாட்டுக்குள்ளாகியுள்ள சிறு தீவுகளும் உள்ளடங்குவதாகும்.

ஆசியப் பிராந்தியத்தில் சீனா தன் இராணுவபலத்தை நவீனப்படுத்த விரிவுபடுத்திக் கொண்டுவருவதால் இப்பொழுது ஜப்பான் இந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்பில் அதிக பொறுப்பை ஏற்றுக் கொள்ள ஜப்பானிய பிரதமர் அபே விரும்புகிறார். இரு தரப்புக்கும் இடையிலான பாதுகாப்பு வழிகாட்டல் திட்டமானது இராணுவ ரீதியில் நெடுந்தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகள், சைவர்தாக்குதல்கள், விண்வெளி தாக்குதல்கள் மற்றும் கடற்பிராந்திய பாதுகாப்புகளை உள்ளடக்கு வதாக இருக்கும்.

### சீனாவுக்கு ஒபாமா எச்சரிக்கை

ஆசிய அண்டை நாடுகளுடனான தனது கடல் எல்லைகளை விரிவுபடுத்திக்கொள்ளும் வகையில் சீனா தன் பலத்தைக் காட்டி பயமுறுத்தப் பார்க்கிறது என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா குற்றஞ் சாட்டியிருக்கிறார். அதேசமயம் ஜப்பானின் சீனாவுடனான தகராறுக்குள்ளாகியிருக்கும் தீவுகள் உட்பட அனைத்துக் கடல் பிராந்தியத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அமெரிக்காவின் கடப்பாடுகளையும் உறுதிப்படுத்தினார். வெள்ளை மாளிகையின் றோஸ் பூங்காவில் இடம் பெற்ற கூட்டுப் பத்திரிகையாளர் சந்திப்பில் பேசிய ஒபாமா, ஜப்பான், அமெரிக்கா கூட்டமைப்பை சீனாவை ஆத்திரமூட்டும் செயலாக பார்க்கலாகாது. ஆனால் சீனாவுடன் ஏதும் மோதல் ஏற்படும் சந் தர்ப்பத்தில் டோக்கியோவுடன் பக்கத்தில் அமெரிக்கா நிற்கும் என்பதையே குறிப்பிட விரும்புகிறேன் என்றார் ஒபாமா.



# 19: படபடப்புக் கணங்கள்

ஆர்.சனத்

இலங்கை அரசியல் களத்தில் அரசமைப்பின் திருத்தம் 19 ஏற்படுத்திய அதிர்வலை மிகப் பெரிது. உச்ச நீதிமன்றம் நிராகரித்ததுபோக எஞ்சிய திருத்தங்கள், மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது. இது ஜனநாயகத்துக்கும் நல்லாட்சிக்கும் கிடைத்த வரலாற்று முக்கியத்துவம்மிக்க வெற்றி என்கின்றனர் அரச தரப்பினர். ஆனால், 19 உருவாக்கப்பட்டபோதிருந்த வீரியத்துடன் நிறைவேற்றப்படவில்லை என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள். உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் எதிரணியின் விடாப்பிடி என்பவற்றால் அது நீர்த்துப் போய் விட்டது என்றும் தூக்கிப் போடுகின்றனர் அதனை.

ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்குரிய ஷரத்துகள் மற்றும் 18ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக நீக்கப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்களை மீள அமைப்பது தொடர்பான ஷரத்துகள் உட்பட ஜனநாயகத்துக்குரிய முக்கிய அம்சங்கள் அடங்கிய 19ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ளன. ஏப்ரல் 10ஆம், 11ஆம் திகதிகளில் விவாதத்துக்கு உட்படுத்தி அதை 11ஆம் திகதி மாலை நிறைவேற்றுவதற்கு அரசு முன்னதாக திட்டம் வகுத்திருந்தது. ஆனால் '20' ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தை எதிரணி கையிலெடுத்து ருத்ர தாண்டவம் ஆடியது.

இதனால், '19' மீதான விவாதம் 20ஆம், 21ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. 20ஆம் திகதி அதை விவாதத்துக்கு எடுக்க முற்பட்டபோது மீண்டும் தடங்கல். விவாதம் 27ஆம் திகதிக்கு ஒதுங்கியது. 28ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்துவது என்பதில் ஜனாதிபதியும் பிரதமரும் உறுதியானார்கள்.

### நேரடியாகக் களமிறங்கினார் மைத்திரி

இப்படியே போனால் வேலைக்காகாது என்பதைப் புரிந்துகொண்ட மைத்திரிபால, 2ஆம் திகதி நேரடியாகக் களமிறங்கினார். எப்படியாவது 19ஐ நிறைவேற்றிவிடுங்கள் என்று தனது கட்சிக்காரர்களை வேண்டிக் கொண்டார். அந்தப் பக்கத்தில் மஹிந்த காத்துக்கொண்டிருக்கிறார் 19இன் தோல்விக்காக என்பதை அழுத்தம் திருத்தமாக சுதந்திரக் கட்சியினரிடம் பதிவு செய்தார்.

இந்தப் பின்னணியில் 27ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதம் ஆரம்பமானது. மைத்திரிபாலவே அதனை ஆரம்பித்து வைத்தார். திருத்தத்தை ஆதரித்து புண் ணியத்தையும் கௌரவத்தையும் தேடிக்கொள்ளுங் கள் என்றார்.

சாம, தான, தண்ட வழிமுறைகள் எல்லாவற்றையும் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டார்கள். எனினும் இறுதி வரையில் 19 நிறைவேறுமா என்ற அதிஉச்சபட்சப் பதற்றம் நாடாளுமன்றத்தில் நிலவிக்கொண்டே இருந்தது. பெரும் பான்மை ஆதரவு கிடைத்தாலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்குமா என்ற சந் தேகம் இறுதிவரை நீடிக்கவே செய்தது.

இறுதி நேரத்தில் அரச தரப்பு மேற்கொண்ட புத்திசாதுரியமான நடவடிக்கை நிலைமையில் விவாதத்திலன்று பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. 19 மீதான விவாதம் தொலைக்காட்சியில் அப்படியே ஒளிபரப்புவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை நம்ப முடியாத மாற்றத்தைக் கொண்டு வந்தது என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர். "குழப்பத்தை விளைவிக்க விரும்பியவர்கள் பயந்தார்கள். ஒவ்வொரு தடவையும் அவர்களில் யாராவது குழப்ப முற்படுகையில், அடுத்தவர் கவனம் லைவ் போகுது என்று அவரை உசார்ப்படுத்தினார்."

28ஆம் திகதி காலை 9.30 மணியளவில் நாடாளு மன்றத்துக்கு வந்த ஜனாதிபதி மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நள்ளிரவில் முடிவடையும்வரை நாடாளுமன்றிலுள்ள தனது அலுவலகத்தில் காந்திருந்தார். ஒவ்வொருவரின் நகர்வுகளையும் அவதானித்துக் கொண்டிருந்தார். காய்களை நகர்த்தினார்.

ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளுக்கிடையில் நிலவிய முரண்பாடுகளைத் தீர்ப்பதில் அவர் முக்கிய கவனம் செலுத்தினார். முரண்களைக் களைய அனைத் துத் தரப்பினரையும் உள்ளடக்கிய குழு ஒன்றையும் நியமித்தார். தமிழர்களும் அந்தக் குழுவுக்குள் அடக் கப்பட்டனர். சுதந்திரக் கட்சியின் அதிருப்திக் குழுவை யும் சமாளிக்கும் முயற்சியில் தீவிரம் காட்டினார். பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட ஏனைய கட்சித் தலைவர்களுடன் மாறி மாறி சந்திப்புகளை நடத்தினார். அவர்களை பொது இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவந் தார். சபையில் நடப்பவற்றையும் தனது அலுவலகத்தில் இருந்தவாறு அவர் கண்காணித்தார்.

காலையில், அரசமைப்புச் சபைக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களையும், துறைசார் நிபுணர்களையும் நியமிப்பதென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணக்கப்பாடு காணப்பட்டது. எனினும், எந்த விகிதத்தில், இவர்களை நியமிப்பது என்பதில் இணக்கம் ஏற்படவில்லை. இழுபறி ஏற்பட்டது.

அரசமைப்புச் சபைக்குத் துறைசார் நிபுணர்கள் மட்டும் நியமிக்கப்படவேண்டும் என்பது அரசின் நிலைப்பாடாக இருக்கின்ற அதேவேளை, அதில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இடம்பெறவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிடிவாதம் பிடித்தது.

இந்த விடயம் தொடர்பில் மதியம் 12 மணியளவில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சிறப்புப் பேச்சுகள் நடத்தப்பட்டன. அதையடுத்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களுடன் மைத்திரிபால சிறிசேன பேச்சு நடத்தினார். இரு தரப்புகளுக்கும் இடையில் இணக்கப்பாடொன்றை எட்டுவதற்கு அவர் முழுமூச்சில் பாடுபட்டார். இறுதியில் சாதித்தார். ஆனால் சுதந்திரக் கட்சியின் பக்கமே வெற்றி சாய்ந்தது.

ரணில் விக்கிரமசிங்கவை மைத்திரிபால சிறிசேனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். மாலை 6 மணியளவில், 19ஆவது திருத்தம் மீது வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதற்கான ஆதரவை உறுதிப்படுத்தி, திருத்தங்கள் தொடர்பான முரண்பாடுகளைக் களைந்து, நிறைவேற்றும் முயற்சியில் மைத்திரிபால சிறிசேன கடும் முயற்சிகளைச் செய்தார். அதனால் வாக்கெடுப்பு ஒரு மணிநேரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. அந்த இடைவேளையில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக்கூட்டி விடயத்தை அலசினார் மைத்திரி. ஒருவழியாக 10 பேர் கொண்ட அரசமைப்புச் சபையில் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

### எதிரணி விட்டுக்கொடுக்காத இரண்டு விடயங்கள்

19ஆவது திருத்தச் சட்டத்தில், ஆளும் கட்சியால் 63 திருத்தங் களும், எதிர்க்கட்சியால் 11 திருத்தங்களும் வைக்கப்பட்டன. அதிகமான திருத்தங்களைப் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க முன்வைத்தார். அவர் 55 திருத்தங்களை முன்வைத்தார்.

> ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்குரிய ஷரத்துகள் மற்றும் 18ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக நீக்கப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்களை மீள அமைப்பது தொடர்பான ஷரத்துகள் உட்பட ஜனநாயகத்துக்குரிய முக்கிய அம்சங்கள் அடங்கிய 19ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ளன.

டக்ளஸ் தேவானந்தா, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தலா 8 திருத்தங்களையும், சஜின் வாஸ் குணவர்த்தன, சிறியாணி விஜேவிக்கிரம 2 திருத்தங்களை யும், தினேஷ் குணவர்த்தன மற்றும் கீதாஞ்சன குணவர்த்தன ஆகியோர் தலா ஒரு திருத்தத்தையும் முன்வைத்தனர். இவற் றுள் சில திருத்தங்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்பட்டன.

(....பக்கம் பார்க்க)

# 19: படபடப்புக் கணங்கள்

அரசமைப்புச் சபைக்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் விடயத்திலும், அமைச்சர்களை நியமிக்கும் ஜனாதிபதியின் அதிகாரம் தொடர்பான சரத்திலுமே அதிக சிக்கல் ஏற்பட்டது. அத்துடன், தேசிய அரசு அமைத்தல், அதில் அமைச்சர்களின் எண்ணிக்கை ஆகிய விடயத்திலும் இழுபறி ஏற்பட்டது. அரசமைப்புச் சபைக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவமே அதிகமாக இருக்க வேண்டும் என எதிரணி விடாப்பிடியாக நின்றது. அரசமைப்புச் சபை அரசியல் சார்பற்றதாக இருக்க வேண்டும் என்று அரச தரப்பு வாதிட்டது.

நீண்ட சமரசங்களுக்குப் பின்னர், 7 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், 3 துறைசார் நிபுணர்களையும் கொண்டதாக அரசமைப்புச் சபை விளங்கும் என்று தீர்வு காணப்பட்டது.

அமைச்சர்கள் நியமனத்துக்குப் பிரதமரின் அனுமதியை ஜனாதிபதி பெற வேண்டும் என்ற விதிமுறையையும் மாற்ற வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இந்த இரண்டு முக்கிய திருத்தங்களும் செய்யப்படாமல் 19ஆவது திருத்தத்தை ஆதரிக்க மாட்டோம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இடித்துரைத்தனர். இதனால் அந்த சரத்தும் மாற்றப்பட்டது.

**மஹிந்த குடும்பமும் ஆதரவு**

மாலை 6.30 மணியளவில் '19' ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான இரண்டாம் வாசிப்புமீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல பெயர்கூவி வாக்கெடுப்பு நடத்துமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்ததார். அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சபையில் பார்வையாளர் பகுதி நிரம்பியிருந்தது. சபாநாயகர் விருந்தினர் பகுதியிலும் பிரமுகர்கள் காணப்பட்டனர். வெளிநாட்டுப் பிரமுகர்களும் சபை நடவடிக்கைகளை அவதானிக்கவந்திருந்தனர்.

2ஆம் வாசிப்புமீதான வாக்கெடுப்பின் இறுதியில் அதற்கு ஆதரவாக 215 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் விழுந்தன. எல்லோருக்கும் பெரும் நிம்மதி. "அவ்வளவு உச்சப்பட்டப் பதற்றத்திற்குப் பின்னர். வெற்றி கிடைத்ததும் எல்லாம் காற்றுப்போன பலூன் போன்று சட்டென்று அமைதியானது" என்று வர்ணித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

'19' இற்கு எதிராக வாக்களித்த ஒரேயொருவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மட்டும்தான். "19 சிங்கள, பௌத்தர்களுக்குப் பாதகமாக அமைந்துள்ளது" என வாதிட்டார்.

வாக்கெடுப்பின்போது, நடுநிலை வகித்தார் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முற்றாக நீக்கப்படவேண்டும் என வலியுறுத்தி அந்த நிலைப்பாட்டை எடுத்தார்.

7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. மஹிந்தவின் மகனான நாமல் ராஜபக்ஷ, தங்கையான நிருபமா ராஜபக்ஷ ஆகியோரும் 19 திருத்தத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

**ஆளுங்கட்சியினரின் மகிழ்ச்சி நீடிக்கவில்லை**

2ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு முடிந்ததும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேசை யில் கைதட்டி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அதன் பின்னர், திருத்தங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக சபை குழு நிலைக்குச் சென்றது. அங்கு ஒழுங்குப் பிரச்சினை கிளப்பினார் தினேஷ் குணவர்தன. ஆளுங்கட்சியினரின் மகிழ்ச்சி கொஞ்ச நேரம் கூட நீடிக்க வில்லை. மீண்டும் பதற்றம் தொற்றிக் கொண்டது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்கள் தொடர்பான விவரம் அடங்கிய அறிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கவில்லை. அதை அவர்களுக்கு வாசிக்கக்கூடிய மொழியில் வழங்க வேண்டும். அதுவரை சபை நடவடிக்கைகளை ஒத்திவையுங்கள் என்று தினேஷ் குணவர்த்தன சபாநாயகரிடம் கோரினார். சபை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சபை மீண்டும் கூடியபோது ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார் பிரபா கணேசன். திருத்திய 19இன் பிரதி தனக்குத் தமிழில் கிடைக்க வில்லை என்றார். ஒன்றும் புரியவில்லை, நிலைமை இப்படி இருக்கையில் சபையை எப்படி கொண்டுநடத்துவது என வினவினார்.

**ஆத்திரமடைந்தார் பிரதமர்**

ஆவேசமாக எழுந்தார் பிரதமர். நாடாளுமன்ற உறுப்பினர் பிரபாவை நோக்கி நீங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளில்தான் வந்துள்ளீர்கள், குழப்பம் விளைவிக்காது அமருங்கள் என்றார். எனினும், பிரபா ஓயவில்லை. மீண்டும் மீண்டும் தனக்குத் தமிழ்ப் பிரதி வேண்டும் என்றார். குறுக்கீடு செய்த யோகராஜன் உறுப்பினருக்கு ஆங்கிலமொழி புரியவில்லையெனில், மொழி பெயர்ப்புக் கருவியைக் காதில் மாட்டிக்கொண்டால் தமிழில் செவிமடுக்க முடியும் எனக் கூறினார். இதனையடுத்து சர்ச்சை முடிவுக்கு வந்தது.

7.45 மணி முதல் 10.40 வரை திருத்தங்கள் தனித் தனியாக முன்வைக்கப்பட்டன.

மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பும் பெயர்கூவி நடத்தப்பட்டது.

திருத்தங்கள் முன்வைப்பின்போது ஆளும், எதிரணி உறுப்பினர்களிடையே சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

மூன்றாம் வாசிப்புக்கு ஆதரவாக 212 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டன. அஜித்குமார மீண்டும் நடுநிலை வகித்தார். 10 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

ஒரு வழியாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேறியது. ஒத்துழைப்பு வழங்கிய அனைத்துத் தரப்பினருக்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார். இதை முன்நின்று செய்த ஜனாதிபதிக்கும் நன்றி தெரிவித்தார்.

அதன் பின்னர், கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, "19இற்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்கின. எனவே, தேர்தல் முறைமைமாற்றம் தொடர்பான 20ஆவது சட்டவரைவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்க வேண்டும்" எனக் கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து 11.10 மணியளவில் சபை நடவடிக்கைகள் மே மாதம் 19ஆம் திகதி வரை ஒத்திவைக் கப்பட்டன.



**நாடாளுமன்ற வளாகத்தில் வானவேடிக்கை**

19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேறிய பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் பட்டாசு கொளுத்தப்பட்டு, வானவேடிக்கை நிகழ்த்தப்பட்டது.

1978ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி முறைமை உருவாக்கப்பட்டது. அன்று முதலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அந்த முறைமையை எதிர்த்து வருகிறது. எனினும், அந்தக் கட்சி ஆட்சிபீடத்தில் இருந்தபோது நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. குறிப்பாக, நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு எதிராகத் தொடர் போராட்டங்களை நடத்திய மஹிந்த ராஜபக்ஷகூட அதிகாரங்களைக் குறைக்க முன்வரவில்லை. மாறாக, நிறைவேற்று அதிகாரங்களைப் பலப்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகளிலேயே அவர் இறங்கினார். 18ஆவது திருத்தச் சட்டம் இதற்குச் சிறந்த சான்றாகும்.

**1999 இல் ஐ.தே.க. தீர்மானமும் 2015 இல் கிடைத்த வெற்றியும்**

உருவாக்கி 21 வருடங்களுக்குப் பிறகு 1999ஆம் ஆண்டு அம்பாந்தோட்டையில் நடைபெற்ற மாநாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி முதல்தடவையாகத் தீர்மானம் நிறைவேற்றியது. இன்று நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு அக்கட்சி தலைமைத்துவம் வழங்கியுள்ளது.

19ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்குரிய முக்கிய பல அம்சங்கள் இருக்கின்றன. சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்படும். தேர்தல் ஆணைக்குழு நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டிய நிலை ஏற்படாது. ஏனைய ஆணைக்குழுக்கள் நாடாளுமன்றத்துக்குத் தங்கள் செயற்பாடுகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். பொலிஸ் ஆணைக்குழு, பொதுச் சேவைகள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழ, லஞ்ச ஊழல் புலனாய்வு ஆணைக்குழு ஆகியவற்றுக்கு மேலதிகமாக கணக்காய்வு ஆணைக்குழு, தேசிய பெறுகை ஆணைக்குழு ஆகியனவும் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

ஜனாதிபதியின் பதவிக்காலம் இரண்டு தடவைகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. 18ஆவது திருத்தச் சட்டத்தினூடாக ஜனாதிபதியொருவர் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் பதவிவகிக்க ஏதுவான வகையில் மஹிந்த ராஜபக்ஷ செய்த திருத்தம் நீக்கப்பட்டுள்ளது.

ஒரு வருடம் முடிந்ததும் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரமும் பறிக்கப்பட்டுள்ளது. நான்கரை வருடங்களுக்கு பிறகே நாடாளுமன்றத்தை ஜனாதிபதியால் இனிக் கலைக்கமுடியும். இதன்மூலம் மக்களின் இறைமைக்கு உத்தரவாதம் கிடைத்துள்ளது. அரசியல் உறுதிப்பாட்டுக்கும் இது உதவியாக இருக்கும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

1978ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி முறைமை உருவாக்கப்பட்டது. அன்று முதலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அந்த முறைமையை எதிர்த்து வருகிறது. எனினும், அந்தக் கட்சி ஆட்சிபீடத்தில் இருந்தபோது நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. குறிப்பாக, நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு எதிராகத் தொடர் போராட்டங்களை நடத்திய மஹிந்த ராஜபக்ஷகூட அதிகாரங்களைக் குறைக்க முன்வரவில்லை. மாறாக, நிறைவேற்று அதிகாரங்களைப் பலப்படுத்திக்கொள் வதற்கான நடவடிக்கைகளிலேயே அவர் இறங்கினார். 18ஆவது திருத்தச் சட்டம் இதற்குச் சிறந்த சான்றாகும்.

08
03.05.2015
சூரியகாந்தி
ஞாயிறு சிறப்பிதழ்



# நீராடிய பொய்கை நஞ்சாகியது

நீராடிய பொய்கைகள் எல்லாம் நீக்கமற நிறைந்தன நஞ்சுகள்
அழகாய் பூத்த தாமரைகள் எல்லாம் அலங்கோலமாய் பூக்கின்றனவே ஐயகோ!
நீண்ட வயல்கள் எல்லாம் நீண்டு செல்கின்றது கொடூர வறட்சி
நிமிர்ந்து நின்ற நெற் பயிரெலாம் வீழ்ந்து மாண்டன வேறு வழியின்றி
மலரின் மணம் வீசி மயக்கிய மஞ்சனத் தென்றலிலே இப்பொழுது
மக்கிப்போன குப்பைகளின் மட்ட கரமான மணம்
கருங்குயில்களின் கூவல்கள் எல்லாம் காணாமற் போக
காகங்களின் கர்ண கடூர ஒப்பாரியோ காதைப் பிளக்கின்றது
செம்மண் ஆடிய வீதிகள் எங்கும் செம்மையான காப்பெற் அடடா!
செப்பவாய் பலியெடுத்து விட்டன
மனிதரையும் மரங்களையும் ஐயோ!
குடிக்கிற ஒயில் சேர் தண்ணீர்க்கோ
அடிக்கடி பஞ்சம் வரும்
அடிக்கிற அல்ககால் சேர்
"தண்ணிக்கோ" ஒரு நொடியும்
பஞ்சமில்லை
காணாமற் போன மகனின்
தகவலுக்காய் ஏங்கும் தாய் போல்
காலம் முழுதும் ஏங்க வேண்டும் இனி
கனிவான மழைக்கு
வளமான குருவிகளின் மெல்லிசை
எல்லாம் மங்கிப் போக
வாகனங்களின் இரைச்சலோ
காதைக்கிழிக்கின்றது.
மாமி வைத்த கத்தரிக்காய்க் கறியிலும்
உரநெடியாம்
மாமரம் காய் குறைக்க மருந்தடித்த
மாம்பழப் பிஞ்சுகள் மனதை
அள்ளுகிறதோ
மாமனிதர் போல் மரங்கள் கைகள் நீட்டி
பசுமை செய்ய
மரமனிதர்கள் நாம் மரங்களை
வேரறுத்துக் கொடுமை செய்தோம்
செந்தணலாய் எரிகின்றது எம்
செம்மையான ஊர்
செகம் முழுதும் வெப்பமேறி
செந்தீயாய் அனல்கிறது
ஆலய ஒலிபெருக்கிகளின்
அலறல்களுக்கு அளவேயில்லை.
ஆவின் அழைப்பினை அதன் கன்று
அறிய வழியுமில்லை.
அம்மா வாங்கித்தந்த சட்டை
அழகில்லை அடுத்த வீட்டான்
போடுவது அழகோ அழகென்பது போல
அருமையான எம்மூர் உணவுகள்
"அழுகல்" என்கிறோம்
அந்நிய நாடடு அசிட் கலந்த
உணவுகளை "அருமை " என்கிறோம்
அடிபட்டவனை அனுப்ப அம்புலன்சை
அழைக்காமல் அதிரடியாய்
அதைப் படமெடுத்தேற்றி "பேஸ்புக்கில்"
"லைக்"குகள் அள்ளுவது போலே
கிளை இழந்த மரங்களை நீர்பாய்ச்சி
வளர்க்காமல்
முழுவதுமாய் தறித்து வீழ்த்தி அற்ப
தேவைகளுக்காய் அள்ளுகிறோம்.
பிச்சை எடுத்தவன் "பீசா" சாப்பிட
பிச்சையிட்டவன்
பிட்டுக்கு வழியின்றி இருப்பது போலே
மனிதர் வீடுகுள் எல்லாம் கூரை நிமிர
கொடைகொடுத்த
பனைகள் எல்லாம் நிலம் சாய்ந்தன
"இயற்கை மீது கொடுமைகள்
குறைவின்றிப் பெருகிப்போனால்"
நீலக் கடல் சூழ் நிலவுலகு
நிலைகுலைந்து போயிடுமோ?
நீயின்றி நானில்லை என்ற நிலாவும்
நிலமகளை விட்டு ஓடிடுமோ?

மாதகல் மயூரன்

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**03.05.2015 முதல்**
**09.05.2015 வரை**



## மேடம்

வேதாந்தம், சித்தாந்தம் பேசி மற்றவர்களை வழி நடத்தும் நீங்கள், தன் விடயத்தில் தடுமாறுவீர்கள். வெளியூர் சென்று வருவீர்கள்.
நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்த உறவினரைச் சந்தித்து மகிழ்வீர்கள்.
யாராக இருந்தாலும் நெருங்கிப் பழகுவதை தவிர்க்கவும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் காலநேரமில்லாமல் உழைக்க வேண்டி வரும்.



## இடபம்

திறமைகள் குவிந்திருந்தும் குடத்திலிட்ட விளக்காக இருக்கின்றோமே என சில நேரங்களில் நினைப்பீர்கள். நெருக்கடிகளை சமாளிக்கும் சக்தி கிடைக்கும். உறவினர், நண்பர்கள் உங்களுக்கு ஆதரவாக பேசுவார்கள். திடீர் பயணங்கள், செலவுகள், வேலைச்சுமை அதிகரிக்கும். முன்கோபம், சகோதர வகையில் மனத்தாங்கல், சிறுசிறு விபத்துகள், நெருப்புக் காயங்கள் வந்துச் செல்லும். உத்தியோகத்தில் அலட்சியம் வேண்டாம்.



## மிதுனம்

கடினமான வேலைகளையும் எளிதாக முடிப்பீர்கள். வழக்கு சாதகமாகும். வேலைச்சுமை, தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வரக்கூடும். திடீர் பயணங்கள், சகோதர வகையில் அலைச்சல், சொத்து சிக்கல்கள் வந்து செல்லும்.
உங்களுடைய புதிய முயற்சிகளை பெற்றோர் ஆதரிப்பார்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வுக்காக உங்களுடைய பெயர் பரிசீலிக்கப்படும்.



## கடகம்

வாதாடும் குணம் கொண்ட நீங்கள், இயற்கையை அதிகம் நேசிப்பீர்கள். மூடநம்பிக்கைகளை ஒதுக்கித் தள்ளுவீர்கள். புது பொறுப்பும், வேலையும் தேடி வரும். பழைய கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். நட்பு வட்டம் விரியும். ஜென்ம குரு தொடர்வதால் திடீரென்று அறிமுகமாகுபவரை நம்பி எந்த காரியத்திலும் ஈடுபடாதீர்கள். பெற்றோரை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும்.



## சிம்மம்

மொழிப் பற்று அதிகமுள்ள நீங்கள், சுதந்திர மனப்பான்மை உள்ளவர்கள், சுகபோகங்களுக்கு அடிமையாக மாட்டீர்கள். உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வேற்றுமதத்தவர் உதவுவார். வீண் வாக்குவாதம், செலவுகள், முதுகுத் தண்டில் மற்றும் பல்லில் வலி வந்து போகும். வழக்கால் நிம்மதி இழப்பீர்கள். சிலரின் ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும்.



## கன்னி

உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். நல்லவர்களின் நட்பால் முன்னேறுவீர்கள். சிறுசிறு நெருப்புக் காயங்கள் ஏற்படக்கூடும். தடைகள் நீங்கும்.
வெளிநாட்டிலிருப்பவர்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகளின் மனநிலையைப் புரிந்துக் கொண்டு செயற்படத் தொடங்குவீர்கள்.



## துலாம்

சுற்றுப்புற சூழல்நிலையை புரிந்து கொண்டு அதற்கேற்ப காய் நகர்த்துவதில் வல்லவர்கள் நீங்கள். துணிச்சலாக சில முடிவுகள் எடுப்பீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர், நண்பர்கள் எதிர்பார்ப்புகளுடன் பேசுவார்கள். உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். வியாபாரத்தில் பற்று வரவு சுமார்தான். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். தட்டுத்தடுமாறி முன்னேறும் வாரமிது.



## விருச்சிகம்

சிகரத்தைத் தொட்ட போதும் தலைக்கனம் கொள்ளாத நீங்கள், அடித்தட்டு மக்களுக்காக அயராது உழைப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். உறவினர், நண்பர்களுடன் இருந்து வந்த மோதல்கள் விலகும். எதையும் முழுமையாக யோசிக்க முடியாமல் ஒருவித தடுமாற்றம் வந்து போகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டுக் கிடைக்கும். .



## தனுசு

எத்தனைப் பிரச்சினைகள், சிக்கல்கள் வந்தாலும் சமாளிக்கும் சக்தி உண்டாகும். கொஞ்சம் பிடிவாதமாக இருப்பார்கள். தொண்டைப் புகைச்சல், கழுத்து வலி, சளித் தொந்தரவு, காய்ச்சல் வந்து நீங்கும். நரம்புச் சுளுக்கு, வேலைச்சுமை, வீண் பதற்றம் வந்து போகும். உறவினர், நண்பர்களில் சிலர் உதவி கேட்டுத் தொந்தரவு தருவார்கள். நட்பு வட்டம் விரிவடையும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை உணருவீர்கள்.



## மகரம்

யாரையும் புண்படுத்தாமல் நயமாகப் பேசும் நீங்கள் சபை நாகரீகம் அறிந்தவர்கள். சமயோஜிதமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பூர்வீக சொத்துப் பங்கை கேட்டு வாங்குவீர்கள். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்த உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள்.
நீண்ட காலமாக கிடைக்காமல் இருந்த விசா கைக்கு வரும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்காக பரிந்து பேசுவீர்கள்.



## கும்பம்

நல்லதே செய்து நலிந்த நீங்கள் நாலுபேர் நாலுவிதமாகப் பேசினாலும் கலங்க மாட்டீர்கள். மனோபலம் அதிகரிக்கும். சொத்து சிக்கல்கள் சுமுகமாக முடியும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். மறைந்து கிடப்பதால் மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். சந்தேகத்தால் நல்லவர்களின் நட்பை இழந்துவிடாதீர்கள். பெற்றோருக்கு சில ஆலோசனைகள் வழங்குவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.



## மீனம்

வலுவான கொள்கை, கோட்பாடுகளுடன் வாழும் நீங்கள் வழுக்கி விழுபவர்களை வாழ வைப்பவர்கள்.
நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வேற்றுமதத்தவரால் ஆதாயம் உண்டு. உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

# கோடையில் குளிர்ச்சி தரும் குளியல்கள்



கோடைகால தட்பவெப்ப நிலைக்கு தகுந்தவாறு உட லைப் பலப்படுத்தி உடலின் நச்சுத் தன்மை நீங்க புத்துணர்ச்சி தர குளியல் முறைகள் மிக அவசியம்.

**வேப்பிலை குளியல்**

வேப்பிலை இயற்கையிலேயே நல்ல கிருமி நாசினி. இந் தக்குளியல் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுப்பதுடன் உடலில் உள்ள அனைத்து நச்சுக் கிருமிகளை அழிக்கவும் பயன்படுகிறது. உடல் துர்நாற்றத்தைப் போக்கவும், தோல் வியாதிகளை குணப்படுத்தவும் நல்ல மருந்தாகும். வேப்பிலையை முன்தினம் இரவே தண்ணீரில் போட்டு வைத்து மறுநாள் அந்த நீரில் குளித்து வந்தால் கோடை வெயிலுக்கு சருமம் பாதுகாக்கப்படும்.

**சூரிய குளியல்**

இந்த குளியல் காலை 6 மணி முதல் 8 மணி வரை மாலை 4 மணி முதல் 6 மணி வரை மட்டுமே உடலுக்கு நன்மை பயக்கும்.

**மண் குளியல்**

உடலுக்கு குளிர்ச்சியைத் தருகிறது. நீரிழிவு நோய், இரத்த கொதிப்பு, மன அழுத்தம், தூக்கமின்மை முதலிய வற்றை குறைப்பதுடன் உடல் நிறத்தை பொலி வாக்குகிறது.

# சுடிதாரில் அசத்தலாக தெரிய டிப்ஸ்



இன்றைய பெண்கள் தங்களின் அழகிலும், உடைகளை அணி வதிலும் மிகுந்த ஆர்வம் காட்டு கிறார்கள். பெண்கள் பொது வாகவே மிகவும் ஆசைப் படு வதும், அதிகம் செலவழிப் பதும் நகைகளுக்கும், துணிக ளுக்கும் மற்றும் அழகுசாதன பொருள் களுக்கும் தான்.

தான் தேர்ந்தெடுக்கும் சுடிதார்களோ, அல்லது புடைவைகளோ மிகவும் புது வரவாகவும், புது டிசைன்களிலும் இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். நாம் அணிந்து செல்லும் உடைகளை வைத்தே நமக்கு மரியாதை கொடுக்கிறார்கள். ஆகவே மற்றவர் களின் முன் எம்மை பெருமையாகவும், அடுத்தவர்களை திரும்பி பார்க்க வைப்பதும் எம்முடைய ஆடைகள் தான். ஒரு சிலர் அதிக ஆடம்பர டிசைன்களை விரும்பமாட்டார்கள். தான் உடுத்தும் சுடிதார் மற்றவர்களைக் கவர வேண்டும். ஆனால் நிறைய டிசைன்கள் இருக்க கூடாது என்று தான் எண்ணுவார்கள். ஒரு சிலர் அதிக வேலைப்பாடுகள் இருந்தால் தான் பிடிக்கும். முதலில் நாம் எடுக்கும் சுடிதார் கலர் நம்முடைய டிசைன் களுக்கு ஒத்துவருமா ? என்று பாருங்கள்.

அதை விட்டுட்டு, தேவையில்லாமல் டிசைன்களுக்கு ஆசைப் பட்டால், என்னதான் அதிக விலை கொடுத்து வாங்கியிருந்தாலும், மற்றவர் களின் முன் உங்களை டல்லாக தான் காட்டும். எனவே அதை முதலில் தெரிந்து கொள்வது அவசியம். முதலில் கருப்பு நிறமாக உள்ள வர்கள், லைட் நிறத்தில் உள்ள ஸ்டோன் வேலைப்பாடுகள் செய்த சுடிதாரை தேர்ந்தெடுக்கலாம்.

லைட் கிரீன், எலுமிச்சை நிறத்தில் உள்ள மஞ்சள் கலர், லைட் வைலட், லைட் சாண்டில், ஒயில் அல்லது ஏதாவது காமினேஷன் கலர் இது மாதிரி லைட் நிறத்தில் உள்ள சுடிதார்களை தேர்வு செய்யுங்கள். கொஞ்சம் கலராகவோ அல்லது மாநிறமாகவோ உள்ளவர்கள் மெரூன், இங்க் புளூர், பிங்க் கலர், ஆஷ் கலர், வெள்ளை அல்லது ஏதாவது பொதுவான நிறத்தைத் தேர்வு செய்யலாம்.

நிறமாக உள்ளவர்களுக்கு டார்க் கலரில் எந்த நிறவகையான சுடிதார்கள் போட்டாலும் அழகாக தெரியும். பெரும்பாலும் நிறத் துக்கு ஏற்றார்போல் தேர்வு செய்வதை காட்டிலும், அவ ரவர் உடல் வாகுக்கு தகுந்தாற்போல் சுடிதார்களை எடுக்க வேண்டும். குண்டாக உள்ளவர்கள் காட்டன் சுடிதார் அணிந் தால், அது மேலும் அவர்களை குண்டாகத்தான் காட்டும்.

அதற்கு பதில், அவர்கள் நிறைய ஆடம்பர வேலைப்பாடுகள் செய்யாத சிம்பிளாக உள்ள சல்வார்களைப் போட்டாலே அழ காக தெரியும். ஒல்லியாக உள்ளவர்கள் கொஞ்சம் அதிக வேலைபாடுகள் செய்த காட்டன் அல்லது சில்க் கொட்டன் சுடி தாரைத்தெரிவு செய்யலாம். அது அவர்களைசற்று குண்டாகக்காட்டும்.

கோடை காலத்தில் சிந்தடிக் வகை சுடிதார்களை உபயோகிக்க வேண்டாம். அதுமட்டுமல்ல, என்னதான் சுடிதார்களை தெரிவு செய்தாலும், அவர்கள் தைக்கும் முறை அந்த துணியின் அழகை கெடுத்து விடுகிறது. முடிந்த வரையில், சுடிதார்களை குடை வடிவில் தைத்தால், பார்ப்பதற்கு பூக்கள் விரிந்திருப்பது போன்று அழகாக தெரியும். தெரிவு செய்யும் சுடிதாரை நாம் அழகாக தெரிய தைக்கும் முறையும் மிக மிக அவசியம்.

# இலகுவான மைசூர் போண்டா



மாலை வேளையில் தேநீர் குடிக்கும் போது, நன்கு சூடாக வடை, பஜ்ஜி அல்லது போண்டா செய்து சாப்பிட்டால் அற்புதமாக இருக்கும். அதில் போண்டா என்றால் பலரும் உருளைக்கிழங்கு போண்டாவைத் தான் செய்து சாப்பிடுவார்கள். ஆனால் மிகவும் பிரபலமான மைசூர் போண்டாவைச் செய்து சுவைத்தால் இன்னும் நன்றாக இருக்கும். இங்கு அந்த மைசூர் போண்டாவை எப்படி மிகவும் இலகுவாகச் செய்வதென்று கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து மகிழுங்கள்.


**தேவையான பொருள்கள்**

*உளுத்தம் பருப்பு - 1/2 கப், கறிவேப் பிலை - சிறிது (பொடியாக நறுக்கியது), பச்சை மிளகாய் - 1 (பொடியாக நறுக் கியது), மிளகு - 1 தேக்கரண்டி, தேங் காய் - 2 மேசைக்கரண்டி (பொடியாக நறுக்கியது), அரிசி மாவு - ஒரு தேக்க ரண்டி, பெருங்காயத் தூள் - ஒரு சிட் டிகை, உப்பு - தேவையான அளவு, எண் ணெய் - பொரிப்பதற்கு தேவையான அளவு*

**செய்முறை**

முதலில் உளுத்தம் பருப்பை நீரில் 2 மணிநேரம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதனை நன்கு கழுவி, மிக்ஸியில் போட்டு, கொஞ்சமாக தண்ணீர் ஊற்றி நன்கு மென்மையாகவும், ஓரளவு கெட்டியாகவும் அரைத்துக் கொள்ள வேண்டும். பின்பு அதில் அரிசி மாவு, பச்சை மிளகாய், கறிவேப்பிலை, மிளகு, தேங்காய் மற்றும் பெருங்காயத் தூள் சேர்த்து நன்கு பிசைந்து கொள்ள வேண்டும். பின்னர் ஒரு சட்டியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்குத் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடேற்ற வேண்டும். பின்னர் நெருப்பை மிதமாக வைத்து, எண்ணெயில் பிசைந்து வைத்துள்ள மாவை சிறு உருண் டைகளாக எடுத்து போட்டு, பொன்னிறமாக பொரித்து எடுக்க வேண்டும். இதே போன்று அனைத்து மாவையும் பொரித்து எடுத்தால், சுவையான மைசூர் போண்டா தயார்.

# பரிவட்ட அர்த்த சந்திராசனம்



**செய்முறை**

முதலில் விரிப்பின் மீது காலை அகற்றி வைத்து நேராக நின்று கொள்ள வேண்டும். இடது கையை தோள்பட்டைக்கு நேராக நீட்டி உள்ளங்கை வானத்தை நோக்கி இருக்குமாறு வைத்துக் கொள்ள வேண்டும். வலது கையையும் இடது காலையும் தரையில் ஊன்றி இடது கையை மேல் நோக்கி நீட்டியபடி வைத்து அதற்கு இணையாக வலது காலை நேராக நீட்டவும்.

படத்தில் உள்ளபடி தலைமுதல் கால் வரை ஒரே நேர் கோட்டில் இருக்க வேண்டும். ஆரம்பத்தில் இந்த ஆசனம் செய்வது சற்று கடினமாக இருக்கும். கால், கை முட்டிகளை மடக்க கூடாது. இந்தநிலையில் மூச்சானது சாதாரண நிலையில் இருக்க வேண்டும். இவ்வாறு ஒருசில நிமிடங்கள் இருந்து விட்டு பின் பழைய நிலைக்கு திரும்ப வேண்டும். இதே போல் கால்களை மாற்றி 5 முதல் 7 முறை செய்யவும்.

**பயன்கள்**

உடலின் முதுகுத் தண்டு இடப்புறமும், வலப்புறமும் மாறி, மாறி வளைவதால் உடலுக்குப் புத்துணர்வு கிடைப்பதுடன் நரம்புகள் வலுப்பெறும். கழுத்துவலி, தோள்பட்டை வலி போன்றவை நீங்குவதுடன் உடல் பலமடையும். தொப்பையைக் குறைக்கும். இடுப்பு பகுதி வலுப்பெறும். நன்கு பசியைத் தூண்டும், அஜீரணத்தைப் போக்கும். உடலில் உள்ள தேவையற்ற நீர்களைப் போக்கும். சிறுநீரகத்தை சீராக செயல்பட வைக்கும்.

இந்த ஆசனத்தை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் செய்யலாம்

# முகச்சுருக்கம் நீங்க எளிய குறிப்புகள்

கோசு இலைகளின் சாற்றை எடுத்து அத்துடன் ஈஸ்டை கலந்து ஒரு தேக்கரண்டி தேன் போட்டு நன்றாக பேஸ்ட் மாதிரி கலந்து அதை முகத்தில் தடவி ஒரு 20 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் முகம் வாஷ் செய்து கொண்டு பின்னர் குளிர்ந்த நீரை முகத்தில் மறுபடியும் தடவவும்.

சாத்துக்குடி சாறில் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து முகத்துக்கு நல்ல திக் ஆக பூசி 20 நிமிடம் கழித்து அலம்பி விடவும். கொஞ்ச நாள் இப்படி செய்தால் முகத்தில் இருக்கும் சுருக்கங்கள் மறையும்.

பப்பாளிப் பழச் சாற்றுடன் காய்ச்சாத சாதாரண பால் அல்லது தயிரின் மேல் இருக்கும் ஆடையை எடுத்து நன்றாக பேஸ்ட்போல் கலந்து முகத்தில் இருக்கும் சுருக்கங்கள் மேல் போட்டு வந்தால் ஆரம்ப நிலையில் இருக்கும் சுருக்கங்கள் காணாமல் போய் விடும்.

10

சூரியகாந்தி
ஞாயிறு சிறப்பிதழ்



# வலைப் பக்கம்



அப்பாங்கற
மரியாதை
இல்லாம என்
முன்னாடியே
தண்ணி
அடிக்கிறியா?
நான் உனக்குப்
பின்னாலதான்
நின்னு
குடிச்சிட்டி
ருந்தேன், நீதான்
படார்னு
திரும்பிட்ட!

— — — — —

நம் மன்னர் ஒரு
ஏழைப்பங்காளன்
இருக்கட்டும்..
அதுக்காக,
மீன்பாடி
வண்டியில்
நகர்வலம் செல்வது நல்லாயில்லை

— — — — — — — — — — — — — —

இதுவரை சின்னச் சின்ன திருட்டுக்களே பண்ணிக்கிட்டிருந்த நீ, திடீர்னு பெரிய கொள்ளையில ஈடுபட்டத்துக்குக் காரணம் என்ன?
சின்னவன் இன்ஜினீயருக்கும், பெரியவன் மெடிக்கலுக்கும் படிக்க ஆசைப்படுறான். எசமான்.

## ஐய்யையோ... மாட்டீட்டாங்களா?

பேஸ்புக் வராமல் ஒருநாளும்
இருக்க வேண்டாம்
ஒருவருக்கும் கொமெண்ட்
பண்ணாமல் இருக்க
வேண்டாம்
லைக் பண்ணும் நண்பர்களை
மறக்க வேண்டாம்
கொமெண்ட் பண்ணாத
நண்பர்களோடு சேர
வேண்டாம்.
காலை எழுந்தவுடன் பேஸ்புக்
பின்பு! மகிழ்ச்சி கொடுக்கும்
நல்ல வோல் போஸ்ட் மாலை
முழுதும் சற்றிங் -என்று
வழக்கப்படுத்திக்
கொள்ளு
பாப்பா........???



குழந்தைகள் மருத்துவமனையில் 'சைலன்ஸ் ப்ளீஸ்' போர்ட் இருப்பதுகூட ஒருவித வன்முறைதான்...

பெண்களிடம் லூசு என்று பேச்சை வாங்காத ஆண்கள் தானே வல்லவர்கள்

"உன்னைப்பற்றி எனக்குத் தெரியாதா?" என்று சண்டையில் கேட்பவர்கள் தெரிந்திருந்தும் ஏன் பழகினார்கள் என்றுதான் தெரியவில்லை.

நாளை என்பது நம்மை நாமே இன்னும் அழகாய் நேசிக்கப்பிறக்கும் மற்றொரு நாளே!

ஒன்னுமில்லையே என்பதில் இருக்றது சொல்ல நினைத்த அத்ததனையும்!!

"இத நீயா உடைச்ச?" எனக்கேட்டு குழந்தை ஆமாம் என்று உண்மையை சொன்னால் அடிக்கததீர்கள். பிறகு உண்மை பேசினால் அடிப்பார்கள் என பயந்து பொய்பேச பழகும்.

உண்மையில் சமாதானத்துக்கு தயாராயிருப்பவர்கள் மட்டுமே 'நான் கோபமா இருக்கேன்' என்கிறார்கள்.



## இதெல்லாம் இல்லாம பொண்ணுங்க லவ்வா?? சான்சே இல்லை.....

ஐயோ அப்பா காலிங் டா சோ ப்ளீஸ் கால் லேட்டர்
உனக்கு இத விட்டா வேற கதையே கிடையாதாடா
எல்லாம் கல்யாணத்துக்கு அப்பறம்தான்
டேய் போன் பண்ணா எடுக்க மாட்டியா..ஏன் ஃபோன் எடுக்க இவ்ளோ நேரம்
லூசு, நான் மாட்டேன்பா, ம்கூம் ம்கூம், வச்சிடட்டுமா,
போடா, உனக்கு அறிவே இல்லையா?
எப்பப் பாரு அந்த நெனப்புதானா??




நான் ஒரு ஜோக்
சொல்றேன்;
ஆனா நீ சிரிக்கக்கூடாது!
சொல்லு... சொல்லு...
முகத்த பார்த்து பதில்
சொல்லுடா..
(ஏய் பாக்குற மாதிரி
இருந்தா செய்ய
மாட்டோமா?)
அட பர்ஸ மறந்துவச்சுட்டு
வந்துட்டேன் டா
(அப்பிடியே எடுத்துட்டு
வந்துட்டாலும் )
இன்னிக்கு என்ன ஆச்சு
தெரியுமா.
உன்ன போய் லவ்
பன்னுனேன் பாரு.
அப்புறம் உன் இஷ்டம்.



மடத்துக்கடவை
த.மோகன்ராஜ்.

# பேச்சுக் கால்...!



பகல் முழுவதும் இயந்திரமாய் உழைத்தவன் அலுப்பு மேலிட தோளிலே கிடந்த சால்வையால் நிலத்தைத் தட்டிவிட்டு பிள்ளை யாரப்பா! என்றவாறு தரையிலே சரிகின்றான் கந்தசாமி. பங்குனி புழுக்கம் தேகத்தை நனைக்க அங்குமிங்குமாய் புரள்கின்றான்... தூக்கம் வந்த பாடில்லை. பங்குனிப் புழுக்கத்தை விட அவனின் மனப் புழுக்கம் தூக்கத்தைத் துரத்த... முற்றத்து திண்ணையிலே வந்து அமர்கின்றான். அவனது மனம் ஆகாயமாய் பரந்து விரிந்து வலிகாமத்தை வட்டமிடுகின்றது.

அரிசி, தேங்காய், காய்கறிகள், மீன்.... நீர் வளம்? நில வளம்?பஞ்சமே இல்லை. கடின உழைப்பின் உத்வேகத்தோடு ரேகாவுக்கு என எண்ணி ஆசை! ஆசையாய் கட்டிய புதுவீடு! எண்ணி ஆறு நாள்கள் மட்டும்... ஆசை தீர குடியிருக்கவும் இல்லை!

உடுத்த உடையோடு வெளிக்கிட்டு வடமராட்சிக்கு வந்து இன்று இருபது வருடங்களையும் தாண்டிவிட்டது. பாவம்! என்ரை பொம்பிளப் பிள்ளை! ஊர்ல மட்டும் இருந்திருந்தா எவ்வளவு செழிப்பாக வாழ்ந்திருக்கும்? அதுக்கு தன்ரை ஊர் கூட வடிவாத் தெரியாது. இங்க இடம்பெயர்ந்து வந்து ஓலைக் கொட்டிலுக்கையும், மண் புழுதிக்குள்ளயும் ஆற்றேனும் வளவுக்குள்ள இருந்து எவ்வளவு துன்பப் படுகுதுகள்? கலியாண வயதும் வந்திட்டுது நாள்க் கூலிக்கு மாரடித்து எப்பிடி என்ரை பிள்ளையை கரைசேர்க்கிறது? கடவுளே நீ தான் துணை! என்றவாறு கந்தசாமியின் மன அலை மீண்டும் மீண்டும் பழைய வாழ்வைத் தொடுகிறது.

என்னப்பா இப்ப நேரம் என்ன? ஒரு மணியைத் தாண்டிட்டுது. ஏன் வெளியில இருக்கிறியள்? வந்து தூங்குங்கோவன். அப்போதுதான் கமலத்தின் குரல் கந்தசாமியை சுய நினைவுக்குத் திருப்புகிறது. இல்லையப்பா சரியான வெக்கையாக் கிடக்கு அதுதான் என்றவாறு எழுந்து சென்று மீண்டும் தரையில் மருந்து குடிக்க கள்ளப்படும் பிள்ளையப் போல வில்லங்கமாய் சரிகின்றார். நெஞ்சிலே பெரியதோர் பாறாங் கல்லை வைத்துவிட்டது போல் ஓர் உணர்வு!

கமலமும் பாவம்! இடம்பெயர்ந்து வந்த நாளில இருந்து என்னையும் பிள்ளையையும் சீறிச் சினக்காமல் எல்லாத் துன்பத்தையும் சகிச்சுக் கொண்டுதான் குடும்பத்தை ஓட்டுகிறாள். அவளுக்கும் மனதில இப்ப எங்கட கஷ்டத்துக்கு மேலாலா பிள்ளையின்ர கலியாணத்தைப் பற்றிய கனவுதான். ஆனால் வெளியில என்ரை மனசு நோகும் என்பதால் காட்டிக்கொள்ள மாட்டாள். எனக்கு ஒரே ஆறுதல் கமலம் மட்டும்தான். இவ்வாறாக சிந்தனைப் பயணம் தொடர்கையில் சேவல் கூவுகிறது....

படுக்கையை விட்டு எழுந்தவன் மனம் அழுத்தமாக இருக்கிறதே என எண்ணி வேலைக்குப் போகவில்லை என்றால் அன்று வீட்டில் அனைவரது மனமும் அழுத்தமாகும். அத்தோடு சமயலறையில் அடுப்பும் எரியாது என எண்ணி அவசர அவசரமாக வேலைக்குச் செல்லத் தயாராகின்றான்.

அப்பா! தேத்தண்ணி குடிச்சிட்டுப் போங்கோ என்றவாறு தேநீரை நீட்டினாள் ரேகா. ரேகா ஏ.எல் படித்துவிட்டு வேலையின்றி வீட்டிலேயே இருக்கிறாள். மெல்லிய அவளது உடலும் தேசிப் பழம் போன்ற நிறமும் சுமாரான அவளது தோற்றம் போன்றவை பார்ப்போரின் கண்களை மங்கள கரமாக்கும். கதை, பேச்சு, பழக்க வழக்கங்களும் அப்படித்தான். ஒரு நாளும் பிறரது மனம் நோகும்படி அவள் நடப்பதில்லை. இடம்பெயர்ந்து வந்திருக்கிற இடத்தில கூட எல்லாச் சனமும் அவளைப் பற்றி நல்லதாகத்தான் கதைக்கிறதுகள். இப்போதய காலத்துப் பொம்பிளப் பிள்ளைகளுக்குள்ள கந்தசாமி அண்ணேன்ர பெட்ட ஒரு தங்கம்! அவளின்ரை வடிவுக்கும் குணத்துக்கும் எத்தினை பொடிப் பிள்ளையள் போட்டி போட்டினம்? அவள் வீட்டைவிட்டு வெளியில கூட வாறேல்ல. கஷ்டம் எண்டாலும் தாயோட சேர்ந்து ஒரு கொள்கையோட நாகரிகமா வாழுதுகள். "அவளின்ரை பொறுமைக்கு எங்கயாவது ஒரு நல்ல வாழ்க்கை வந்து அமையும்" என்ற சனங்களின் பேச்சு கந்தசாமியின் மனத்திரையில் ஞாபகத்துக்கு வர ரேகாவை மீண்டும் உற்றுநோக்கி யவாறு வீட்டிலிருந்து விடைபெறுகின்றார்.

வேலைத் தளத்தில் பலதும் பத்தும் கதைப்பார்கள் கவலையைச் சற்றுநேரம் மறக்கும் இடம் கந்தசாமியண்ணைக்கு அதுதான். கந்தசாமியண்ணை என்ன உங்கட இடத்துக்கு எல்லாரையும் விடப்போறாங்களாம், என்று குமார்

> வேலையிலிருந்து வீடு திரும்பிய கந்தசாமி கமலத்திடம் இந்த மகிழ்ச்சியான செய்தியைக் கூற, வீடே மகிழ்வு வெள்ளத்தில் மிதந்தது அப்ப கமலம் இனி பிள்ளையின்ர விசயத்தில ஒரு பேச்சுக்கால் வைப்பம். இன்னும் ஒரு கிழமையில விட்டிடுவாங்களாம்.

கூறிய வார்த்தைகள் கந்தசாமியின் வலிக்கு ஒத்தடம்கொடுத்ததைப்போன்றிருந்தது. வேலை செய்யவே கால், கை, ஓடுதில்லையடா குமார் அவ்வளவு சந்தோசமாய் இருக்கு! இனி மகளின்ரை கலியாண விடயத்தில நம்பி இறங்கலாம் அவளுக்கென்ன? ஊர்ல பெரிய கல் வீடென்ன கிணறென்ன, தோட்டம் துரவென்ன என்றவாறு கந்தசாமியண்ணையின் புராணம் மகிழ்ச்சியில் பரந்து விரிகிறது...பத்துவருட பழக்கத்தில் கந்தசாமியண்ணையின் பூரிப்பை இன்றுதான் நேரே கண்டிருக்கின்றான் குமார். ஏதோ பாவம் எல்லாச் சனமும் நல்லா இருந்தா சந்தோசம் தானே என எண்ணியவனாக குமார் வேலையைத் தொடர்கின்றான்.

வேலையிலிருந்து வீடு திரும்பிய கந்தசாமி கமலத்திடம் இந்த மகிழ்ச்சியான செய்தியைக் கூற, வீடே மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தது அப்ப கமலம் இனி பிள்ளையின்ர விசயத்தில ஒரு பேச்சுக்கால் வைப்பம். இன்னும் ஒரு கிழமையில விட்டிடுவாங்களாம். ஏதோ மிச்சத்தை ஊரில போய் தாலிகட்டு, கலியாண வீடு போன்றவற்றைச் செய்வம். இப்ப அவளின்ரை பேரில இருக்கிற அந்த மூன்று இலட்சத்தையும் ஊரில இருக்கிற வீடு வளவுகளையும் தாறம் எண்டு சொல்லி நல்லையா புறோக்கரோட போய் கதைப்பம். ஒரு நல்ல பெடியனா பார்க்கச் சொல்லி என்று கூறிய கந்தசாமி கூட்டிலிருந்து விடுபட்ட பறவையாய் நல்லையா வீடுநோக்கி விரைந்தார்.

நல்லையாவுடன் பேசி இணக்கத்துக்கு வந்தவர் வடமராட்சியிலேயே நல்ல பெடியனா பார்த்து முடிக்கிறதுக்கு கமலம்,ரேகா போன்றோரின் சம்மதத்தோடு அருமையான பெடியனைப் பார்த்தாச்சு! பெடியன்ரை பக்கமும் சரியான கஷ்டம். பாவம் எங்கட சீதனம் அவருக்கு போதாது அது நியாயம் என்றாலும் ஊருக்கு போனா ஏதோ தோட்டம் துரவைச் செய்து முன்னேறலாம் என்ற நம்பிக்கையில பெடியனும் சம்மதிச்சிட்டுது. ஏதோ இறைவனுக்குத்தான்வெளிச்சம் என்ற கந்தசாமியின் மனதில்இப்போதுஇருதோணிப்பயணமுனைப்பு. கைகளைக் கழுவியவாறு சாப்பிடுவதற்குத் தயாரானான். அப்போது அங்கு திடீரென குமாரின் தரிசனம் கந்தசாமிக்கு களிப்பூட்டுகிறது. ஏதோ ஒரு நல்ல செய்தியோடு வந்திருப்பான் குமார் என்ற நம்பிக்கை. இருவரும் உணவருந்தியவாறு உரையாடல் தொடரவே... கமலம் குமாரை நோக்கி என்னதம்பி அப்ப நாளைக்கே ஊருக்கு போறதுக்கு எல்லா ஆயத்தத்தையும் செய்வம். நீங்களும் ஒருக்கா வாங்கோவன் எங்கட இடத்தையும் ஒருக்கா பாத்தமாரியும் இருக்கும். உதவியாகவும் இருக்கும் என்றவள் கணவனை நோக்கி எனப்பா ரேகாக்கு பேசியிருக்கிறவரையும் ஒருக்கா குமாரை கூட்டிக்கொண்டு வரச் சொல்லுங்கோவன் நாளைக்கு பெடியனும் தன்ரை வீடு வளவுகளை ஒருக்கா பாத்திட்டு திருப்திப்படட்டும்.

ஓமப்பா நல்ல யோசினைதான் சரி குமார் அப்ப எல்லாருமாச்சேர்ந்து நாளைக்கு போவம் என்றவனுக்கு இரவு கண்ணோடு கண் ஒட்டவில்லை இது நிஜமா, கனவா என எண்ணியவாறு இருக்கையில் மீண்டும் கமலத்தின் ஞாபகமூட்டல் எல்லோருமாகச் சேர்ந்து காலையில் புறப்பட்டார்கள் வலிகாமம் நோக்கி...

கந்தசாமிக்கு வீடு, வளவு, கிணறு, மகளின் திருமணம் எல்லாம் கண்முன் நிழலாடுகிறது. கமலத்துக்கோ ஒரு நின்மதிப் பெருமூச்சு. ரேகாவின் மனதிலும் திருமணப் பூரிப்பு, தனக் குக் கிடைக்கப் போகும் சீதனச்சொத்துக்களைப் பார்ப்பதில் மாப்பிள்ளையின் முனைப்பு, குடும்ப நண்பன் குமாரும் ஏதோ இவளவு காலத்துக்குப் பிறகெண்டாலும்.....?என்றவாறு பயணத்தை விட சிந்தனைகள் வேகமாகப் பயணிக்கின்றன.

பயணத்தின் முடிவிடம்! ஊரின் நுழைவாயில் வரை வந்தவர்களுக்கு இன்னும் சற்றுத் தொலைவில் வீடு என உணர முடிந்தது. இருப்பினும் நீண்டகால இடைவெளி மனதிலும் இடைவெளிகளை ஏற்படுத்துகிறது சில பல மாறுதல்களால் நீண்டுயர்ந்த தென்னைகளை நோக்கி எமது வீட்டுக் குறிப்பை தேடலாம் என எண்ணிய கமலத்துக்கு முதலாவது ஏமாற்றம்! தென்னைகள் இல்லை? சரி போரில் சரிந்திருக்கலாம்...! என்றவாறு வீட்டைத்தேடி ஒற்றையடிப்பாதைப் பயணம் தொடர்கிறது.

வீட்டு வளவினுள் சென்றவர்களுக்கு ஏமாற்றம் காத்திருந்தது! வீடு இருந்த இடத்தில் கூரைகள், சுவர்கள் ஏதுமின்றி தரை மட்டமாக்கப்பட்டு அத்திபாரங்களை சுற்றி பற்றைகளும், புதர்களும் ஆக்கிரமித்திருக்கின்றன! கிணறுகள் கற்களாலும் குப்பைகளாலும் நிறைக்கப்பட்டிருந்தன.

பயன்தருமரங்கள் பாகங்களை இழந்து இறப்பை எதிர்பார்த்திருக்கின்றன... கந்தசாமி மருமகனுக்குக் கூறிய கதைகளெல்லாம்..? நொருங்குண்டு போனது! மீண்டும் அதிர்ச்சியில் உறைந்தவராய் வீடு, வளவு, திருமணம்.. என பிதற்றத் தொடங்கவே அனைவரையும் நிறைக்கிறது முகாரி... ஊருக்குப் புதியவன் சபிக்கப்பட்ட எமது இனத்தின் சாபங்களை ஏற்ற வனாக...ரேகாவை கைத்தலம் பற்றுகின்றான்....!கந்தசாமியின் கண்கள் ஆறாய் பெருகிறது... ஆனந்தக் கண்ணீரால்....!

# நல்ல சிரிப்புத்தான்?



என்னென்ன நிறுவனங்கள் உண்டோ அத்தனையிலும் பங்காற்றியவர், கட்சியிலும் உறுப்பினர், எங்கெங்கு நிகழ்ச்சிகள் நடக்கிறதோ அங்கெல்லாம் அவரின் தரிசனம் உண்டு. கடவுள் பக்தி – காலையில் வீட்டுச் சுவாமிக்கும் கோயில் சுவாமிக்கும் பூப் போட்டுக் கும்பிடுவார். பெயர் தவராசா – ஊருக்கும் ராசாவாகவே வாழ்ந்தார். வலது கைகொடுப்பதை இடது கை அறியாது? அப்படியொரு தர்மவான். தர்மராசா என்றே பொருத்தமாகப் பெயர் வைத்திருக்கலாம்.

பலரின் பிரச்சினைகளையும் புத்திசாதுரியத்தால் தீர்த்து வைப்பவர். அதனால் "பெரியவர்" என்னும் அடைமொழியும் அவருக்கு உண்டு.அகிலஇலங்கை சமாதான நீதிவான். ஆச்சிரமங்களுக்கும் நன் கொடை வழங்குபவர். பிள்ளைச் செல்வம் அரிதாக இரண்டேதான்? பெண்பிள்ளைக்குச் சீதனம், ஆதனம் என்று வைத்துக் கொள்ளாமல் எல்லாமே "தர்மராச்சியம்" மகள் திருமகள் அவளைக் கொத்திக் கொண்டே போய் விடுவர் என்னும் எண்ணம் தவராசாவின் மனதில்– ஆமாம். அவள் காதல் திருமணம் –எனினும் பெற்றோரின் சம்மதத்துடன் மகனும் வெளிநாட்டில் – உழைப்பின் ஒரு பங்கு அம்மையப்பனுக்கும் வந்து கொண்டிருந்தது. செலவு செய்யத்தயக்கமேன்? தனது மனைவிக்கும் பொண்ணுக்கும் "புன்னகை" ஒன்றே போதுமே என்று எண்ணிய தவராசா பின் முன் யோசியாமல் செலவு செய்து கொண்டிருந்தார். மனைவியோ பேசாமடந்தை? வாய்திறந்து எதுவுமே கூறமாட்டாள்.

ஓடி ஓடி உழைத்து என்னத்தைக் கண்டது? குடித்து முடிப்போம் என்று குடிக்கத் தொடங்கினார். பணம் குடியில் கரைந்து கொண்டிருந்தது! அவரின் உடலும் நோயில் உழலத் தொடங்கியது. ரி.வி. விளம்பரம் காட்டுகிறது காட்சிகளின் இடையே – அது தன்பாட்டில் காட்டிக்கொண்டிருக்கும். "புகைக்காதே குடிக்காதே" என்று அதுபற்றி நமக்கென்ன? குடியின் சுவை தெரியுமா ரி.விக்கு?

நோய் முற்றியது. மண்டையைப் போட்டார் தவராசா என்னும் தர்மவான்! எல்லா நிறுவனங்களிலுமிருந்து அஞ்சலிகள் அனுதாபக் கூட்டங்கள் – அவரின் அருமை பெருமை பற்றி பலரும் உரையாற்றினர். மகன் கொள்ளி வைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. மருத்துவபீடத்துக்கு கொடுக்கும்படி முன்பே கூறியிருந்தார். வாகனம் வந்து உடலை ஏற்றிச் சென்றது.

இதோ அந்தியேட்டி வந்து விட்டது. சாப்பாடெல்லாம் தடல்புடாலிற்றி தான்? வடையென்ன – பாயாசமென்ன அப்பப்பா? எல்லாம் முடிந்து "சுபம்" போட்டாயிற்று.

அதன் பின்னர்தான் தவராசா தன்னிடம் கடன் வாங்கியதாக ஒருவர் வந்து நின்றார்? கடனைத் தரும்படி, அதேநேரம் மரணமானவர் விட்டுச் சென்ற சொத்து விவரம் கேட்கப் பட்டது பத்திரமொன்றில் அப்போது மகனும் வெளிநாட்டில் இருந்து வந்து விட்டார். மகளும் அருகே.

அம்மா? என்றபடி மகள் ஓடி வந்தாள் – அப்பா இருபது பவுண் நகை விட்டுப் போயிருக்கிறார் என்று அண்ணா எழுதுகிறார் என்றாள். அம்மா மகனருகே சென்று கேட்டாள். உனக்கென்ன விசரே? இருபது பவுண் நகையைக் கடையிலை வாங்கியே சொத்தென்று காட்டப் போகிறாய்? என்றபோது...

அப்பா ராசாபோல செல்வந்தமாய் வாழ்ந்தவர். சொத்தொன்றும் இல்லையென்றால் அப்பாவுக்கு மரியாதையில்லை! என்றான் மகன். எழுதிப்போட்டியோ? கடன் விட்டுப்போட்டுப் போனவர் என்று எழுது என்றான் அம்மாக்காரி நான் இன்னும் எதுவும் எழுதவில்லை! என்று கூறிச் சிரித்தான் மகன். கூடவே தாயும் மகளும் சிரியோ சிரியென்று சிரித்துக் கொட்டினர்.

*நல்ல சிரிப்பு.*

தவபாக்கியம் கிருஷ்ணராசா,
*பலாலி றோட் ஒஸ்காலேன் உரும்பிராய்*
*தெற்கு உரும்பிராய்.*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 367

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ✿ | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | ✿ | 9 | |
| | ✿ | 10 | | | 11 | | ✿ |
| ✿ | 12 | | | | | ✿ | 13 |
| 14 | | | ✿ | | ✿ | 15 | |
| 16 | | ✿ | 17 | ✿ | 18 | | |
| | ✿ | 19 | | | | ✿ | |
| 20 | | | | ✿ | 21 | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

பூரணமாக தபால் விலாசம்: ..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. ஒரு தமிழ் மாதம்
4. இறந்தவர்களுக்குச் செய்யும் சடங்கு
7. கிறிஸ்தவர்கள் கடவுளை இப்படிக் குறிப்பிடுவர்
9. நிலம்
10. நேர்த்திசையில் மாற்றம்
12. பரவுதல்
14. நஞ்சு
15. குளிர்மை
16. சில பழங்களில் தனித்தனியாகப் பிரிக்கக் கூடிய சதைப் பகுதி
18. பூமி
19. பிரதிக்ஞை
20. மகள்
21. சடலம்

### மேலிருந்து கீழ்

1. விடியற்காலம்
2. மழை முகில்
3. ஓவியம்
4. கருக்கொண்ட நிலைமை
5. திங்கள்
6. மேடையை மறைப்பது
8. வழங்கும்
11. வெள்ளைப் பூண்டின் தனித்தனியான பகுதி
12. உரம்
13. கனவான்தன்மை
14. வான்
15. பெருக்கல் குறி
17. மிகையான
18. இளைய சகோதரன்
19. தீங்கு ஏற்படுத்தும் நோக்கில் தீட்டப்படும் திட்டம்.

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன். அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 365 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அபரிமிதம் (6) வடு (7) கரி (8) கல
(9) மக்கு (11) சுபாவம் (13) திகைப்பு
(15) தலை (16) பித்தம் (19) புகை (21) திரி
(22) பண் (23) விவரிப்பு (26) பேரிகை (27) புள்ளடி

**மேலிருந்து கீழ்**

(1) அவமதிப்பு (2) படுக்கை (3) மிக (4) தரிசு
(5) தலம் (8) கவலை (10) குப்பி (12) பாதம்
(14) புத்திரி (17) தரிப்பு (18) கண்ணாடி
(20) கைவிரி (24) வகை (25) புள்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

**1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**
**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**
**3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**
**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**
**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி இல.367 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (13.05.2015 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.367 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 17.05.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 365 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
**அ. டனுஜன்,**
தரம் 10 E,
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

**2 ஆம் பரிசு**
**இராசசிங்கம் ஸ்ரீதரன்,**
வற்றாப்பளை, முள்ளியவளை,
முல்லைத்தீவு.

**3 ஆம் பரிசு**
**செல்வி பா. யதுஷா,**
செம்பாட்டோலை, இமையாணன்
கிழக்கு, உடுப்பிட்டி.

**4 ஆம் பரிசு**
**செல்வி மஞ்சரி பாலமுரளி**
துவாரகை,
நாவலடி, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

**5 ஆம் பரிசு**
**மெ. இங்கிதை,**
கிருஷ்ணபதி,
அல்வாய் வடக்கு, அல்வாய்.

**பாராட்டுப் பெறுவோர்**

**வி. கணேசலிங்கம்,**
களபாவோடை,
ஏழாலை தெற்கு, ஏழாலை.

**மு. கந்தையா,**
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

**ந. பொன்னம்பலம்,**
உப தபாற்கந்தோர்,
மல்லாகம்

சொற்சிலம்பம் போட்டி 365 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

# மேட்டு நிலத்து ஊற்று

தொடர்கதை

தேவி பரமலிங்கம்



"ஆ... அப்ப நல்லதாப்போட்டுது... நான் வீட்டை போறன்...." நடக்க ஆரம்பித்த கணேசனை மூர்த்தி தடுத்து நிறுத்தினான்.

"நில் மச்சான்....நானும் வாறன்...."

வீட்டுள் நுழைந்த மூர்த்தி, சேட்டைப் போட்டு வர இருவருமாய் நடந்தனர். நிலவும் காலித்து கிராமத்தை அழகாக்கிக் கொண்டிருந்தது. வீட்டுக்குப் போகும் ஒழுங்கையில் இடையூறுகள் ஏற்படாமல் போய்ச் சேரவும் முடிந்தது.

"உதாருது...ஆய்...ஆ...ஹா கணேசனே அப்பாடா...வா... வா. இஞ்சால வா..."

படலையைத் திறந்து வளவில் கால் வைத்த கணேசன் அதிர்ந்தே போனான். சுகவீனம் அடைந்துள்ளதாக நம்பி வந்த தாய் திண்ணைக் குந்தில் சுங்கானைப் பத்திக் கொண்டிருந்து எழும்பிக் கதைத்தது ஆச்சரியத்தைக் கொடுத்தது.

கணேசன் திரும்பி மூர்த்தியைப் பார்த்தான். எதிர்பார்த்த அவன் பார்வையைத் திருப்பி மெதுவாக நெளிந்தான்.

"எதுக்காக இப்ப....சுகமில்லையெண்டு தந்தி அடிச்சு என்னைக் கூப்பிடுவிச்சனி...."

கையில் வைத்திருந்த சூட்கேசை திண்ணையில் ஏறி வைத்து நிமிர்ந்த கணேசன் தாய் மீது சீறிச்சினந்தான். அவனுக்கு இந்தச் செய்கை மனதில் எரிச்சலை மூட்டி விட்டது.

"கொழும்புக்குப் போனது ஒரேயடியா என்னை மறந்திட்டாய்.. ஒருக்காப் புள்ளையைப் பாப்பமெண்ட சோட்டேலைதான்.. மூத்தீட்டைச் சொல்லிக் கூப்பிடுவிச்சன்..."

கணேசன் சீறிச் சினந்ததேம் பொருட்படுத்தாமல், பூரித்த தாய்மை உணர்வுடன் சொன்னாள் சின்னத் தங்கம் இவற்றைக் கேட்டும் பார்த்தும் முற்றத்திலேயே நின்றான் மூர்த்தி.

அதுக்கிப்புடித்தானா.... சுகமில்லை உடனே வாவெண்டு தந்தி அடிக்கிறே....என்ர மனம் எவ்வளவு பதறிப் போச்செண்டு உங்களுக்கு விளங்குமே.... "இன்னமும் எரிந்து விழுந்தான் கணேசன்.

"தம்பி மூத்தி ஏனதிலை நிக்கிறாய் இஞ்சால வாவன்... இப்புடி இரு..." திண்ணையில் பாயைப் போட்டு விட்டுச் சொன்னாள் சின்னத்தங்கம்...

"மச்சான் கணேஸ்...இப்ப என்ன நடந்திட்டுது... உன் மேல் அம்மா சுகமில்லாமல் கிடக்கிறதையா....விரும்புறாய்.. நீ எதிர்பார்த்ததைவிட நல்லாதானை கண்டு கொண்டிருக்கிறாய்"

பாயில் வந்துஅமர்கையில் மூர்த்தி சொன்னான்.

"அது சரி தான்ராப்பா.. ஆனா... என்ர மனம் எவ்வளவு பதறிட்டுது தெரியுமே... அதால நிக்க மாட்டன் விடியப்புறம் வெளிக்கிடப் போறன்...ஓ..."

"ஏனப்புடி...வந்தனி லீவு போடாமலே வந்திருப்பாய்...சரி அங்க போய்த்தான் என்ன செய்யப்போறாய்...."

அவ்விதம் மூர்த்தி கேட்டதுந்தான் கணேசனின் நினைவில் பாமாவின் உருவம் தோன்றியது. இருவரும் கதைப்பதை சின்னத் தங்கம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அங்கை எனக்கு என்ன வேலை இருக்காவா சொல்லுறன்... அம்மா.... மூர்த்தியைக் கூட்டிக்கொண்டே விட்டிட்டு வாறன்... இருந்து கொள்... என்ன"

கணேசன் கூறி விட்டு மூர்த்தியையும் அழைத்துப் போனான்.. அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தாள் சின்னத்தங்கம்.

கிழக்கில் வானம் வெளுத்து வந்த வேளையில் கொழும்பு வந்து சேர்ந்த மெயில் ரயிலில் வந்திறங்கினார் வேலுப்பிள்ளை மாஸ்டர். அவர் இரண்டொருவேலைகளை முடித்துக் கொண்டு மினக்கெடாமல் யாழ்ப்பாணம் திரும்ப வேண்டிய பிரச்சினைகள் இருந்தன.

முதலில் கந்தையர் வீட்டுக்குப் போய் விட்டு கல்வி அமைச்சுக்குச் சென்று மகளின் ஆசிரியப் பதவிக்கான அலுவல்கள் செய்து முடிக்கவே கொழும்புக்குப் பிரயாணம் வைத்துக் கொண்டார். கணேசன்யாழ்ப்பாணம்போன செய்தியைஅவர்தெரிந்திருக்கவில்லை. ரயில் நிலையத்தால் கந்தையரின் வீட்டுக்கு வந்தபோது கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார். நேரம் காலை ஏழுமணி முப்பது நிமிடங்களாகி இருந்தது.

"வாருங்க மாஸ்டர் வாருங்க.... என்ன சங்கதி....திடீரெண்டு வந்தே....."

கந்தையர் வேலுப்பிள்ளை மாஸ்டரை முகம் மலர வரவேற்றார். கந்தையர் வேலைக்குப் போக ஆயத்தப் படுத்திக் கொண்டு நிற்பதை மாஸ்டரால் உணர முடிந்தது.

"கணேசன் இங்கதான தங்கியிருக்கான் எங்கையாளைக் காணேல்ல...." கந்தையரிடம் கேட்டார் மாஸ்டர்.

"என்ன இப்புடிக் கேக்கிறள்.... தாய்க்குச் சுகமில்லையெண்டு..... தந்தி வந்து நேற்று மத்தியானமே யாழ்ப்பாணம் போயிட்டுதே" அப்புடியே சங்கதி... அவர் சின்னத் தங்கத்துக்குச் சுகமில்லையெண்டு நானறியல்லை... மகனைப் பாக்க வேணுமெண்ட நோய் தான்... கடிதம் போட்டுப்பார்த்திருப்பாள்... இவன் போகேல்லை... தந்தியை அடிச்சிருக்கிறாள்... மெய்லில் வெளிக்கிட்டதாலை நானவனைச் சந்திக்கேம் முடியேல்லை"

கணேசன் இல்லை என்பதை அறிந்து மாஸ்டர் நீண்ட கதையைக் கூறி முடித்து முகம்கால்கழுவக்கொல்லைபக்கம்போனார்.

"விசாலம்..வேலுப்பிள்ளையர் வந்து நிக்கிற தோடை பெடியனைப் பற்றியும் கேட்டறிஞ்சா நல்லே...."

நடு அறைக்கு விசாலாட்சி வந்த வேளை அவளின் காதுகளில் போட்டார் கந்தையார். காதில் வாங்கியவள் சொல்லிக் கொண்டே குசினியை தேடிப் போனாள்.

"ஓமோம்...விசாரிச்சுப் பாத்தா நல்லே தானை..."

"எதுக்காக இப்ப...சுகமில்லையெண்டு தந்தி அடிச்சு என்னைக் கூப்பிடுவிச்சனி...."
கையில் வைத்திருந்த சூட்கேசை திண்ணையில் ஏறி வைத்து நிமிர்ந்த கணேசன் தாய் மீது சீறிச்சினந்தான். அவனுக்கு இந்தச் செய்கை மனதில் எரிச்சலை மூட்டி விட்டது.

பாத்ரூமால் வந்த வேலுப்பிள்ளையருக்கு தேனீர்கொண்டு வந்து கொடுத்தாள் பாமா. அவளுடைய வளர்ச்சியில்தான் எவ்வளவு கெதி. கடந்த முறைவந்து போகையில் இல்லாத பொலிவை அவளில் கண்ணுற்ற மாஸ்டர் தேனீரைப் பருகினார்.

"அப்ப மாஸ்டர் இண்டைக்கு நிண்டுதானா போறே...."

"இல்லை.... இல்லை நானிண்டைக்கே வேலையை முடித்துக் கொண்டு வெளிக்கிட்டிடுவன்...."

"ம்.... கன கதை கிடக்கு.... அதுதான்...."

"அப்ப அதை இப்ப கதையன்....ஆ....."

வேலுப்பிள்ளையர் சொன்னதும் கந்தையரால் எதையும் தீர்மானிக்க முடியாமல் திணறினார். ஒருவாறு கந்தையர் சமாளித்துக் கொண்டு சொன்னார்.

"வேலைக்குப் போக நேரமாகுது.... மாஸ்டர் ஒண்டு செய்வம்... உங்கட வேலையளை முடிச்சு மத்தியான றெயில்ல போகேலாது...."

"ஓம்..."

"இரவு ரெயில்லதான் போகக் கிடைக்கும்... ஆப்டைம் லீவ் போட்டுவாறன்... நீங்களும் வேலைகளைப் பாத்துக் கொண்டு வாங்கோ... கதைச் சிட்டுமெயில் ரெயினில் போகலாம்...."

"ஓமோம்... அது நல்லது"

தீர்வெடுத்துக் கொண்ட கந்தையரும் வேலுப்பிள்ளை மாஸ்டரும் கருமங்களைப் பார்க்கச் சென்றனர். பேச்சு வார்த்தைகளைப் புரிந்து பாமாவும் கதைத் தெடுக்கும் தீர்மானத்தை அறியும் ஆவலுடன் நேரத்தை எதிர்பார்த்து இருந்தாள்.


# அப்பம் தின்ற எலி

பொ.பூமணி



செட்டியார் வீட்டு அடுக்களையில் சென்ற தீபாவளி அன்று இரவதனில்
வட்டிலில் அப்பம் இருந்ததம்மா அதை வாசத்தினால் அறிந்து ஓர் எலி தான்
நெய்யினில் சுட்ட பணியாரம் இது நேர்த்தியாய் சுட்ட பணியாரம்
பையப்பையக் கடித்துண்பதற்கு வெகு பக்குவமான பணியாரம்
யார்க்கும் கிடையாப் பெரு நிதியாம் இதை நான் இன்று பெற்றதென் பாக்கியமே
பார்க்கும் பொழுது நீர் வாயதனில் ஊறி பாய்கின்றதே பசி ஆகின்றதே
(அப்போது அதன் இளைய எலிகள் வரும் சத்தம் கேட்டு)
என்ன சத்தம் ஓகோ தம்பிமார்கள் கூடி இங்கு விளையாட வந்தனரோ
அன்னவர் ஓடி வருமுன்னமே நானும் அப்பத்தைக் கொண்டு மறைந்திடுவேன்
ஏதும் ஒரு பொடியாகிலும் நான் அவர்க்கு ஈந்திடேன் முற்றுமே தின்றிடுவேன்
என்று சொல்லி அந்த அப்பத்தினை வாயில் ஏந்தி கடித்திழுத்தோடிடவே
கன்றப் பசித்த இளையர் எல்லாம் கூடி கால் கடுக்கத் தேடிப் போயினரே
யாரும் அறியாத மூலையிலே அந்த அப்பத்தை அவ்வெலி கொண்டு வைத்து
கூரிய பற்களால் நறுக்கி ஒரு பொடி கூடச் சிதறாமல் தின்றதம்மா
மட்டுக்கு மிஞ்சிப் புசித்ததனால் மூச்சு வாங்க வருந்தி வயிறூதி
கஷ்டப்படுவதை சுற்றத்தார் எல்லோரும் கண்டொரு பண்டிதர்க்கு ஆளும் விட்டார்
பண்டிதர் வந்து கை பார்த்தனர்
அவ்வெலி பண்டமுழுவதும் உண்ட கதை விண்டதும் கேட்டு
குறிகளும் நோக்கி விதிப்படி ஆய்ந்து விளம்பினரே
அப்பம் முழுவதும் நீதின்றனையே அதை அன்புக்குரிய நின் தம்பியர்க்கு
ஒப்பவே பங்கிட்டு அளித்திருந்தால் துன்பம் ஒன்று வந்துன்னை அணுகாதே
அன்றியும் உன் தம்பிமாரும் கடும்பசி ஆறி களித்திருப்பார்கள் அன்றோ
இன்று நீ செய்தது இவ்வுலகம் விட்டு யாத்திரை போவது திண்ணம் என்றார்.
ஆதலினாலே கிடைத்த உணவை நாம் ஆகுமட்டும் பகிர்ந்துண்ண வேண்டும்
ஈனமாம் தன்னலம் துன்பம் விளைத்திடும் இன்பம் அளிக்கும் பொது நலமே


உ.கரோசன், தரம்-4
புனித ஜோன்
பொஸ்கோ ம.வி.





# பள்ளிக்கூடம் போகலாம் வா பாப்பா...

பள்ளிக்கூடம் போகலாம் வா பாப்பா...
நல்ல பாடங்களைப் படிக்கலாம் வா பாப்பா...
புது நண்பர்கள் கிடைப்பர் வா பாப்பா...
புதிய உலகத்தைக் காண வா பாப்பா..!
வீட்டில் இருந்தது போதும் வா பாப்பா...
விரைந்து நீ எழுந்து வா பாப்பா...
ஒழுங்காய் தினமும் பள்ளி சென்று
ஒழுக்கமதை கற்போம் வா பாப்பா...
தாய் தமிழ் கற்கலாம் வா பாப்பா...
தரணி மீதில் நடந்திட வா பாப்பா...
இலக்கணத்தை கற்போம் வா பாப்பா..
இலக்கணமாய் வாழ்வோம் வா பாப்பா..!
இலக்கியம் கற்போம் வா பாப்பா...
இயல்பாய் வாழ்வோம் வா பாப்பா
இயற்கையை அறிவோம் வா பாப்பா...
அதனுடன் இயைவோம் வா பாப்பா..
அயல் மொழி கற்போம் வா பாப்பா...
அகிலத்தை அறிவோம் வா பாப்பா..!
கணிதம் படிப்போம் வா பாப்பா..!
கணக்காய் வாழ்வோம் வா பாப்பா..!
அறிவியல் படிப்போம் வா பாப்பா...
அறிவைப் பெருக்குவோம் வா பாப்பா..!
வரலாறு படிப்போம் வா பாப்பா..!
வாழ்ந்து காட்டுவோம் வா பாப்பா..!
புவியியல் படிப்போம் வா பாப்பா..!
பல புதிர்களை அவிழ்ப்போம் வா பாப்பா..!
வானியல் படிப்போம் வா பாப்பா..!
வானில் நடப்போம் வா பாப்பா..!
கடலியல் படிப்போம் வா பாப்பா..!
கருத்தாய் வாழ்வோம் வா பாப்பா..!
உடலியல் படிப்போம் வா பாப்பா..!
நோயின்றி வாழ்வோம் வா பாப்பா..!
கல்வி கற்க வா பாப்பா..!
கற்பூரமாய் நீ படி பாப்பா..!
பாடம் படிக்க வா பாப்பா..!
பகுத்தறிவை வளர்க்க வா பாப்பா..!



கொ.அன்ரனி நிசான்
தரம்-3
சென். ஜோன்ஸ் கல்லூரி



சி.பிருந்தவி
வளர்மதி முன்பள்ளி
கொக்குவில்



# பதவியும், குதிரையும்

நலன் (நளன் அல்ல) என்ற மன்னன், வேட்டையாடப் போனான். ஒரு மானைத் துரத்தி நெடுந்தூரம் போனதில், குதிரைகள் களைத்துப் போயின. அதனால், எவ்வாறு நாடு திரும்புவது என்று யோசித்த மன்னரின் பார்வையில், வாமதேவ முனிவர் அகப்பட்டார். முனிவரை வணங்கிய அரசர், மாமுனிவரே... உங்களிடம் உள்ள இரண்டு குதிரைகளைத் தந்தால், நான் நாடு திரும்பிய பின், குதிரைகளை திருப்பி அனுப்பி விடுவேன்... என்று, வேண்டினான். முனிவரும் சம்மதித்து, குதிரைகளை கொடுத்தார். நாடு திரும்பிய மன்னனுக்கு, முனிவர் அளித்த குதிரைகளின் அழகு, கம்பீரம் மற்றும் வேகம் ஆகியவை மனதைக் கவர்ந்ததால், குதிரைகளைத் தானே சொந்தமாக்கிக் கொள்ள முடிவு செய்தான்.

நாள்கள் வாரமாகி, வாரங்கள் மாதங்களாகின. குதிரைகள் திரும்பாததால், வாமதேவர் தனது பணியாள்களை அனுப்பி, குதிரையை திரும்ப அழைத்து வரப் பணிந்தார். ஆனால், மன்னன் குதிரைகளைத் தர மறுத்து விட்டதால், முனிவரே நேரில் வந்து கேட்டார். காட்டில் ஆச்சிரமத்தில் வாழும் உங்களுக்கு குதிரைகள் எதற்கு? வேண்டுமானால், அவற்றுக்குப் பதிலாக, என் குதிரைகளில் இரண்டைத் தருகிறேன்; வாங்கிக் கொள்ளுங்கள்... என்று கூறினான் மன்னன்.

அதை ஏற்க மறுத்த முனிவர், மன்னா... தவறு செய்யாதே... நீ தவறு செய்தால், உன்னைப் பார்த்து, உனது நாட்டு மக்களும் கெடுவர்; அதன்பின் நாடே கெட்டுப் போகும்... என்றார். ஆட்சி செய்யும் எனக்கு, ஒரு ஆண்டி அறிவுரை கூறுவதா... யாரங்கே... இவரைக் கொல்லுங்கள்... என்று கட்டளை பிறப்பித்தான் மன்னன். பொறுமை இழந்த முனிவர், தனது தவ சக்தியால் அரசரையும், அவரைக் கொல்ல வந்த வீரனையும் கொன்றார்.

நலன் இறந்த பின், அவன் தம்பி பதவிக்கு வந்தான். அண்ணனை விட, நயவஞ்சகன் இவன். எதிர்பாராமல் கிடைத்த அரச பதவி, அவனுள் ஆணவத்தை வளர்த்தது. அவனிடம் சென்று, முனிவர் தனது குதிரைகளைத் திருப்பித் தருமாறு கேட்டார். இவனோ, அண்ணனைப் போல ஆளை அனுப்பாமல், தானே முனிவரைக் கொல்ல, வில்லை எடுத்து, அதில், அம்பைத் தொடுத்தபோது, கோபமடைந்த முனிவர் சாபம் கொடுத்தார். அதன்படி, அரசனின் கைகள் அப்படியே செயலற்றுப் போக, அவன் பயந்து, முனிவரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். கூடவே, முனிவரின் குதிரைகளை அவரிடம் ஒப்படைத்தான். அதன்பின், முனிவரின் அருளால், அவன் கைகள் இயங்கின. குதிரைகளுடன் ஆச்சிரமம் திரும்பினார் முனிவர். ஆபத்தில் உதவியவர்களுக்கு தீங்கு செய்ய நினைப்பவன் அரசனாக இருந்தாலும், அழிந்து போவான்!



# நம்பினால் நம்புங்கள்


- அடி முதல் நுனி வரை நம் நகங்கள் வளர 6 மாத காலம் ஆகிறது.
- தும்மலின் வேகம் மணிக்கு 160 கிலோமீற்றர்
- கார் ரயரை விடவும் பெரிதான மலர், இந்தோனேஷிய மழைக் காடுகளில் மலர்கிறது. இதுவே உலகின் மிகப்பெரிய மலர்.
- நம் உடலின் 10 ஆயிரம் செல்களை ஒரே ஒரு குண்டூசி முனையில் நிரப்பி விடலாம்!
- மூளை அனுப்பும் செய்திகள் நரம்புகள் வழியாகப் பயணிக்கும் வேகம் மணிக்கு 312 கிலோமீற்றர்
- இந்த நொடியில் உங்கள் வாயில் 10 லட்சத்துக்கும் அதிக பாக்டீரியாக்கள் குடியிருக்கின்றன.
- கரப்பான பூச்சிகளால் நீருக்கடியிலும் 15 நிமிடங்கள் தாக்குப் பிடித்து உயிர்வாழ முடியும்.
- 5 ஆயிரம் ஆண்டுகள் வயதான பிரமிடுகள் மட்டுமல்ல... அதே வயதான மரமும் பூமியில் உள்ளது.

# வெப்பத்தை வெல்லும் விலங்குகள்



## யானை

நீண்ட காதுகளை விசிறி உடலைக் குளுமைப்படுத்திக் கொள்ளும். ஈரமான தரையில் புரண்டு ஈர மண்ணைப் பூசிக்கொள்ளும். யானையின் உடம்பில் பூசப்பட்ட இந்த ஈர மண் சூரியனிலிருந்து வரும் அதிக வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் கவசமாக அமைகிறது. பகல் நேரங்களில் மர நிழலில் ஒதுங்கி ஓய்வெடுக்கும். துதிக்கையில் நீரை நிரப்பி, அதை தங்களின் மேல் தெளித்துக்கொள்ளும்.



## ஒட்டகம்

பொதுவாகப் பாலூட்டிகளுக்கு உருண்டையான மிகப் பெரிய இரத்தச் செல்கள் இருக்கும். ஆனால் ஒட்டகத்துக்கு உள்ள இரத்தச் செல்லின் அளவு மிகச் சிறியது. இதனால், ஒட்டகத்தின் உடம்பில் 35 - 40 சதவீதம் வரை நீர்ச் சத்து குறைந்தாலும், அவற்றின் இரத்த ஓட்டம் சீராகவே இருக்கும். கோடை காலத்தைப் பற்றி அதிகம் கவலைப்படாத விலங்கு ஒட்டகம்தான்.

15
03.08.2015
சூரியகாந்தி
ஞாயிறு சிறப்பிதழ்



# பனையோலை இராமன் க(ா)தைகள்

## வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் தொடர்

## திருவிளையாடற் காதை

ம.பா.மகாலிங்கசிவம்

பனையோலை ராமன் சேர் தனது க(ா)தைகளைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருந்தார். அவரிடம் காதற் கதைகளும் எவையாவது இருக்குமா என்று அறியும் ஆவல் எனக்கு ஏற்பட்டது. (அதென்னமோ பாருங்க, ஒருத்தன் காதலிக்கிறதைவிட இன்னொருத் தரின்ரை காதற்கதையை நோண்டிக் கேக்கிறதிலை தான் "கிக்" அதிகம்)

"சேர் நீங்க சின்ன வயதிலை காதல் கீதல் ஒண்லையும் அகப்படேல்லையே?"

முகத்திலை ஒரு சிரிப்பு. அதுக்குத் தொடக்கமும் முடிவும் இல்லாம "ஸ்ரில்" லை விட்ட படம் மாதிரி எழுதி ஒட்டியிருந்தது. எங்கையோ ஆழக் கிணத்துக்கை நினைவுகள் இறங்கிப் போறது மாதிரியும் தெரிஞ்சுது. போய்க் கொண்டே இருந்தார். இருந்தாற் போல, தேடப்பட்ட அறுந்த வாளி பாதாளக் கரண்டியிலை கொழுவினது மாதிரி ஒரு பிரகாசம். "ஓம் தம்பி நானும் அந்த இழவிலை (LOVE?) மாட்டுப்பட்ட னான் தான். ஒரு பிள்ளை நல்ல பணக்காரி. "ரொனிக்" விளம்பரங்களிலை வருமே அந்த மாதிரி. "அப்ப அந்த மாதிரித்தான் எண்டு சொல்லுங்கோவன். அந்த ரொனிக் அழகியை எங்கை முதலிலை சந்திச்சனீங்க?" "ஒரு பஸ் ராண்டிலைதான்"

தனது முதுமைச் சுருக்கம் விழுந்த முகத்துக்கு ஒத்துவராத இளமை கலந்த சிருங்கார முறுவலுடன் சொல்ல தொடங்கினார். "பஸ் ராண்டிலை அந்தப் பிள்ளை நிண்டு கொண்டிருந்தது. அதுக்கு முதல், நான் அந்தப் பிள்ளையை பார்த்ததில்லை. அவள் குதி உயர்ந்த 'ஹீல்ஸ்' போட்டிருந்தாள். ஹீல்ஸில் குதிக்காலுக்கும் முன் பாத பகுதிக்கும் இடையே பெரிய இடைவெளி. நாய்க்குட்டி யொண்டைக் கடிக்கிறதுக்காக நாய் ஒண்டு துரத்திக் கொண்டு வந்தது. உயிர்தப்ப வேகமாக ஓடிவந்த அந்த நாய்க் குட்டி ஹீல்ஸின் இடைவெளிக்குள் ஒருபக்கத் தாலை நுழைஞ்சு மற்றப்பக்கத் தாலை ஓடிவிட்டது. நாய் அதுக்குள்ளால் போக முடியவில்லை. நாய்க்குட்டி தப்பி விட்டது.

தன்னை அறியமலே தனது ஹீல்ஸின் இடைவெளி மூலம் ஒரு நாய்க்குட்டியைக் காத்த ஜீவகாருண்யக் கன்னிமேல் அவருக்குக் காதல் ஏற்பட்டுவிட்டது.

இறுக்கமான பாவாடையில் முன்னங்காலும், பின்னங்காலும் பிணைக்கப்பட்ட நாம்பன் மாதிரி நடக்க முடியாமல் அவள் நடந்த கம்பீரநடை தன்னைக் கவர்ந்து விட்டதாகக் கூறிய அவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். "தம்பி, இறுக்கற் பாவாடையோடை நடந்து வந்த அந்தப் பிள்ளை வைரவர்கோயிலுக்குப்போனா என்ன நேர்த்தி வைக்கும்?"

"என்ன நேர்த்தி வைக்கும்?" விடை தெரியாமல் அவரிடமே கேள்வி யைத் திருப்பி விட்டேன். "வைரவா, என்னை நாய் கலைக்கக் கூடாது" அவரது கற்பனா சக்தி என்னைப் பிரமிக்க வைத்தது.

சீதையின் அங்க அடையாளங்களை அங்குலம் அங்குலமாக அனுமானுக்கு வருணித்த இராமனைப் போல் அந்தப் பிள்ளையின் அங்கங்கள் ஒவ்வொன்றாகப் புகுந்து விளையாடத் தொடங்கி விட்டார். கம்பன் மாதிரி அதை வரிக்கு வரி எழுதுவது எனக்கு நாகரிகம் இல்லை.

அவரது வர்ணனைகள் அவரது காதலியின் முதல்நாட்கள் சந்திப்பை எனக்கு "றீ–பிளே" போட்டுக் காட்டுவது போல இருந்தன. இறுதியாக,

"ஒன் த்ஸ்பொட் லவ் தம்பி. ஒன்தஸ்பொட் லவ்" எண்டார் மிகுந்த படபடப்புடன். (அவரது ஆங்கில அறிவு, வார்த்தைப் பிரயோகம் பற்றி முன்னரே சொல்லியிருக்கிறேன்.)

ஒன் தஸ்பொட்டிலேயே (சகவாச தோசம் மன்னிக்கவும்) அவளிடம் தனது காதலைச் சொல்லிச் சம்மதம் கேட்டார், அதிரடி மன்னன் பனையோலை ராமன். அவர் சிறுவயதிலிருந்தே இலக்கிய ஆர்வம் மிக்கவராக இருந்ததால் இலக்கிய வழக்கில் தனது காதலைத் தெரிவித்தார். "அன்பே, என் இதய அறை வெறுமையாக இருக்கிறது அங்கே குடியிருக்க வருவாயா?" "செருப்பைக்கழட்டிறதே?" "இதயம் கோயில் இல்லை. நீ செருப்புட'னேயே வரலாம்" எண்டார் அவர்.

அதுக்கு அந்தப் பிள்ளை எந்தக் கதையும் கதைக்காமல் பஸ்ராண்டுக்கை இருந்த ஒரு கடையிலை யானைப்போத்தல் சோடா ஒண்டு வாங்கி 'மடக் மடக்' எண்டு குடிச்சிட்டுப் போட்டுதாம்.

"வாடா போடா எண்டு பேசினாலும் தாங்கியிருப்பன். சோடாவோடை போனதை மறக்க ஏலுதில்லை" எண்டு சொல்லேக்கை அவற்றை நாக்குத் தளதளத்தது.

அவர் எவ்வளவோ மடக்கிக் கதைச்சும் அந்தப் பிள்ளை மடங்கவே இல்லை எண்டு மிகக் கவலையோடை சொன்னார். "உங்கடை உடுப்பு நடப்புக்கு ஆர்தான் மடங்குவாளவை" மெதுவாக முணுமுணுத்தேன். "என்ன தம்பி சொன்னனீர்?" மனிசனுக்குப் பாம்புக்காது. கேட்டுவிட்டது. "இல்லைசேர் உங்கடை காதல் நிறை வேறாத படியால் எனக்கு நல்லகதை கிடைச்சிருக்கு" எண்டு சொல்லிச் சமாளிச்சன்.

காதலைக் கட்டுப்படுத்த முடியாமல் அவள் படிக்கிற ரியூசனிலை போய் எடுபிடி வேலையாளாச் சேர்ந்தார். அந்த வேலைக்குத் தெரிவு செய்வதற்கு அங்கு இயக்குநராக இருந்த தமிழாசிரியர் வைச்ச நேர்முகத் தேர்வு மிகவும் எளிமையானது. தனது புத்தகப்பையை எடுத்து வரச் சொல்வதற்கு "தம்பி உறியிலை என்ரை பறி கிடக்குது. எடுத்துக் கொண்டு வா– என்றார். தனது குறியீட்டு மொழியைப் புரிந்து கொள்ளும் திறமை இவரிடம் இருக்கிறதா என்று பரிசோதிப்பதே நேர்முகத் தேர்வின் நோக்கம். "உறியிலை கிடக்கிற பறிக்குள்ளை என்னகறியேகிடக்குது?" எதுகைமோனைகளுடன் தன்னையும் தாண்டி மேலே ஒருபடி போய்விட்ட பனையோலை ராமனை அவருக்குப் பிடித்துக் கொண்டுவிட்டது. வேலைக்குச் சம்பளம் கிடைப்பதுடன் காதலியையும் பார்க்க முடிவதால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் விழுத்தின புளுகம் அவருக்கு.

என்றாலும் அவரது வாய்த்துடுக்குக் காரணமாக ஒரு மாதத்துக்குள்ளேயே வேலையால் துரத்தப்பட வேண்டி ஏற்பட்டு விட்டது. ஒரு நாள் அவரது காதலியின் வகுப்புக்கள் முடிந்து மாணவர் எல்லோரும் போனபின்பும் அவள் வகுப்பிலே தனித்து இருந்தாள். அடுத்த வகுப்பில் கற்கும் தனது அயல்வீட்டுப் பிள்ளையே அழைத்துச் செல்வதே அவளது நோக்கம். அவளைக் கண்ட பனையோலை ராமனுக்கு அவள் தனக்காகத் தான் காத்திருக்கிறாள் என்ற நப்பாசை. உடல் எங்கும் புல்லரிக்கத் தொடங்கியது. அவள் அருகில் சென்று,

"ஏன் வீட்டை போகாம தனிய இருக்கிறீர்?" என்று கேட்டார்.

அவர் முகத்தைப் பார்த்துக் கதைப்பதே பிடிக்காத வெறுப்புடன் மற்றப்பக்கம் பார்த்துக் கொண்டே "பிள்ளை வரோணும்" என்றாள் சுருக்கமாக. "நடுவகுப்புக்கை இருந்து கொண்டு பிள்ளை வரோ ணும் எண்டால் என்னெண்டு வரும்? அங்காலை ஆக்கள் இல்லாத இடமாய் போய் ட்றை பண் ணிப் பாரும்." அவர் இந்த முயற்சியுடன் தன்னைச் சம்பந்தப்படுத்தி பேச வில்லை, என்றாலும் இது பெரிய கதையாகி அவர் வேலைக்கே உலை வைத்துவிட்டது.

அதுக்குப் பிறகும் பனையோலை ராமன் சேர் விடேல்லையாம். அந்தப் பிள்ளை அவர் வீட்டடியால் அடிக்கடி போய் வருமாம். தன்னை அவள் நிமிர்ந்தோ, திரும்பியோ, கடைக் கண்ணாலோ பாக்காவிட்டாலும் தன்னைக் காணாவிட்டால் அவள் கவலைப்படுவாள்(?) என்பது தனக்கு நிச்சயமாகத் தெரியும் எண்டும் சொன்னார். (அந்தப் பிள்ளையின் பெயரை அவர் எனக்குச் சொல்லிருந்தாலும் இப்போது ஆச்சியாக இருக்கிற அந்தப் பிள்ளையின் பேரப்பிள்ளைகள் நக்கல் விடும் எண்டதர்லை அதைச் சொல்லவில்லை.)

ஒருநாள் அவள் இவர் வீட்டடியாலை தன்ரை 'பிறெண்ட்ஸ்' மாரோடை கதைச்சுக் கொண்டு போனாள். தன்னை எப்பவும் ஒரு ராணியாக கற்பனை செய்யும் அவள்,

"நானடி ஞாயிற்றுக்கிழமையிலைதான் உடுப்புத் தோய்க்கிறனான். அண்டைக்கு எல்லா உடுப்பையும் ஒண்டாப் போட்டுத் தோய்ப்பன்" எண்டு வலுவிலாசமாகக் கதைவிட்டாள். அதைக் கேட்ட பனையோலை ராமனால் தன்ரை வாயை அடக்க முடியேல்லை. தன்னை மறந்தார். தன் நாமம் கெட்டார். "எல்லா உடுப்பையும் ஒண்டாப் போட்டுத் தோய்ச்சா, வீட்டுக்கு என்னத்தோடை நிப்பியள்?" கேட்டு விட்டு ஒரே வறுகா வறுகிவிட்டார்.

அவளோ அதை அப்படியே விட்டுவிடத் தயாரில்லை. இவரது வீட்டுக்கே 'கோள் மூட்ட(?)' வந்து விட்டாள், வந்து தாயுடன் கதைச்சுக் கொண்டிருந்தாள்.

வீட்டுக்கு வந்தவளை உபசரிக்க நினைத்த, தாய் முந்தானை முடிச்சிலிருந்து மூண்டு ரூபாவை எடுத்துக் கொடுத்து பிஸ்கட் வாங்கிவர இவரை அனுப்பினாள். தனது குடும்பத்தின் வறுமை நிலையை உணர்ந்த இவர் விலை குறைந்த 'மலிபன்' பிஸ்கற்றையே வாங்கினார். அதை றேயில் வைத்துக் கொண்டு வந்து (றே எங்கை கிடக்குது? தங்கச்சின்ரை சாப்பாட்டுக் கோப்பைதான்) அவள்முன் பயபக்தியோடை வைச்சார். அப்போது தனது பணத்திமிரை [illegible]படுத்திய அவள் "நாங்க எங்கடை வீட்டை நாய்க்குத்தான் மலிபன் பிஸ்கற் போடுறனாங்கள்" எண்டு நக்கலாய்ச் சொன்னாள்.

தனது ஏழ்மை அவமானப்படுத்தப்பட்ட கொதிப்போடு கண்கள் சிவக்கப் பனையோலை ராமன் சொன்னது, "இப்ப, நாங்களும் நாய்க்குத்தான் மலிபன் பிஸ்கற் வச்சிருக்கிறம்"

*தொடரும்...*

## வைத்தியர்

அந் நாட்களில்
வைத்தியர்
கை நாடி
பிடித்தால்
காய்ச்சல் போம்
சளி போம்
நோச்சல்
உடம்பிலும்
நோய் போம்

இந் நாட்களில்
வைத்தியர்
கை நாடி பார்க்க
முன்னாடியே
லட்சம் போம்
எச்ச
சொச்சம் போம்
ஏக்கத்தில்
மிச்சமிருந்த
உயிரும் போம்
மொத்தத்தில்
எல்லாம் போம்
போம்! போம்!!



*வேலணையூர் சுரேஷ்*



# ஆண் மயமான பணியிடத்தில் பெண்

**தலைமைச் செயல் அதிகாரியாக இருக்கும் பெண்களின் சதவீதம் ஒற்றைப் படை எண்ணாகத்தான் உள்ளது. அமைப்பு சார்ந்த தொழிலில் கூட ஆரம்ப நிலை முதல் இடைப்பட்ட நிலைகளில் மட்டும் தான் பெண்கள் ஆண்களுக்கு இணையாகப் பணிபுரிகிறார்கள்.**

பெண்களுக்கு நிறைய வேலை வாய்ப்புகள் வந்து விட்டதாகவும் ஆணுக்குப் பெண் சரிசம வளர்ச்சி அடைந்து விட்டதாகச் சொல்வதெல்லாம் பொய். அடிமட்டத் தொழிலாளிகளிடையே ஆண்களுக்கு அளிக்கும் கூலியை விடப் பெண்களின் கூலி உலகமெங்கும் குறைவு. கட்டிட வேலை முதல் அனைத்து வேலைகளிலும் இதுதான் நிதர்சனம். அதே போல் பெரும் நிறுவனங்களின் உயர் மட்டப் பதவிகளில் பெண்களின் பங்கும் மிகக் குறைவு தான். தலைமைச் செயல் அதிகாரியாக இருக்கும் பெண்களின் சதவீதம் ஒற்றைப் படை எண்ணாகத்தான் உள்ளது. அமைப்பு சார்ந்த தொழிலில் கூட ஆரம்ப நிலை முதல் இடைப்பட்ட நிலைகளில் மட்டும் தான் பெண்கள் ஆண்களுக்கு இணையாகப் பணி புரிகிறார்கள். திறமையும் அனுபவமும் இருந்தாலும் ஒரு நிலையில் பெண் என்ற காரணத்தாலேயே அவள் புறக்கணிக்கப்படுகிறாள் என்பதுதான் உண்மை. குடும்பச் சுமை காரணமா? என்ற கேள்வி வந்தது. பெண் எல்லா காலங்களிலும் குடும்பத்தைச் சுமந்தவாறு தான் வேலைப்பொறுப்பை பார்த்து வந்திருக்கிறாள். இது புதிதல்ல. ஆனால் பெண் தலைமையின் கீழ் வேலை செய்வதில் இன்னமும் பெரும்பான்மையான ஆண்களுக்கு உளவியல் சிக்கல் உள்ளது. அதே போல் உயர் பதவிகளுக்கு வரும் பெண்களிடமும் ஒரு அதிகாரத்துவம் எதிர்பார்க்கப்படுகிறது. அரச,தனியார் துறை எல்லா இடங்களிலும் பெண் தலைமைப் பொறுப்புக்கு வர சில ஆண்களின் துணை அவசியப்படுகிறது. அதை லாவகமாகப் பெற்று சேதப்படாமல் மேலே போவதுதான் பெண்களுக்கான முக்கிய சவால். ஓர வஞ்சனை, பாலின நச்சரிப்பு, கேலிப் பேச்சு எனப் பல அவதூறுகளைத் தாண்டியும் மீண்டு எழுந்துதான் பெண் தலைமைப் பொறுப்புகளுக்கு வர முடியும். அதற்கு அவர்கள் தங்களைச் சற்று அதிகாரத்தன்மை கொண்டவர்களாக மாற்றிக் கொள்வது அவசியமாகிறது.

ஆண் மயமான பணியிடத்தில் ஒரு பெண் எப்படித் தன்னைப் பாதுகாத்து முன்னேறுவது என்பது பற்றியெல்லாம் கல்விக் கூடங்களிலிருந்து விவாதிக்க வேண்டும். ஆண்களையும் பெண்களையும் பிரித்து வைத்துப் பாடம் நடத்தும் நிலை மாறி உறவுகள் பற்றிய உளவியல் பாடங்கள் நடத்த வேண்டும். சாதித்த பெண்மணிகளை அழைத்து பேசச் செய்ய வேண்டும். தற்காப்புக் கலை முதல் அடிப்படைச் சட்டம் வரை போதிக்க வேண்டும். தன்னைப் பற்றி தாழ்வாக நினைத்து ஆண்களின் மதிப்பீடுகளில் தன் வாழ்க்கையைத் தொலைக்காமல் சுயமாகச் சிந்திக்கும் திறன்களை நம் பெண்களுக்குக் கற்றுத் தருதலே பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஆற்ற வேண்டிய முதல் கடமையாகும். எல்லாக் காலங்களிலும் மாற்றத்துக்கு வித்திட்டவள் பெண். வேட்டைத் தொழில் புரிந்த ஆணுக்கு விவசாயத்தைக் கற்றுத் தந்தவள் பெண். நாடோடி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து குடும்ப அமைப்பும் நாகரிகமும் பிறந்தது பெண்ணால். பெண்ணின் அறிவும் உழைப்பும் நம் பூமியின் வரலாறு முழுக்கப் பொதிந்து கிடப்பவை. பெண்ணடிமைத்தனம் மனித இனத்தை அழிக்கும் என்பதை உணர்வதுதான் பேரறிவு. ஆற்று மணலைத் திருடுபவனும் வன்புணர்ச்சி செய்பவன் மட்டும் குற்றவாளிகள் அல்ல. பெண்ணுக்கு வர வேண்டிய சம வாய்ப்புகளைத் தட்டிப் பறித்து அரசியல் செய்யும் அனைவரும் குற்றவாளிகள்தான். அடுப்படியிலும் அடிமட்ட வேலைகளிலும் மட்டும் பெண் அறிவை பூட்டி வைப்பதை விடுத்து அனைத்துத் தொழில்களிலும் பெண்களின் பங்களிப்பை வளர்க்க வேண்டும். ஆரம்பக் கல்வியில் ஆண்களுக்கு இணையாக உள்ள பெண்கள், உயர் கல்வியிலும், வேலைகளில் தலைமைப் பொறுப்புகளிலும் சரி சமமான எண்ணிக்கையில் வலம் வரும் நாள் தான் பெண் நிஜமாக விடுதலை பெற்ற நாள்! பெண் வாழப்பிறந்தவள் மட்டும் அல்ல. ஆளப்பிறந்தவள்!

## வீட்டில் பெண்களின் பொறுப்புக்கள்

வேலைக்குச் செல்கிற பெரும்பாலான பெண்களை, அவர்களது கணவர்களும், கணவர் வீட்டாரும் விரோதியாகவே பார்ப்பது சகஜம். வேலைக்குப் போற திமிரு, சம்பாதிக்கிற கொழுப்பு என்கிற விமர்சனங்கள் சர்வ சாதாரணமாக வரும். அவற்றைப் பெரிதுபடுத்த வேண்டாம். கணவர், அவரது பெற்றோர், கணவரது உடன் பிறப்புகள் என உங்களுக்கு நெருங்கிய வட்டத்துடன் நல்ல நட்பை வளர்த்துக் கொள்வதுதான் முதல் தீர்வு. வேலைக்குச் செல்கிற எல்லா பெண்களுக்கும், குழந்தைகளை யார் பொறுப்பில் விடுவது என்கிற கவலை பெரிதாக இருக்கும். பிள்ளைகளுக்கு ஏதேனும் பிரச்சனை என்றால், பெற்றோருக்கு அடுத்து, உடனடியாக தாத்தா– பாட்டிகளின் மனசு தான் பதறும். எனவே அம்மா – அப்பா அல்லது மாமனார் – மாமியாரின் தயவைத் தக்க வைத்திருப்பது நலம். சம்பளத்திலிருந்து ஒரு தொகையை அவர்களிடம் கொடுத்து, தேவையானதை வாங்கிக் கொள்ளச் சொல்லலாம். இன்னும் ஒருபடி மேலே போய், மொத்த சம்பளத்தையும்கூட அவர்களிடமே கொடுத்துவிட்டு, தேவைக்கேற்ப அவ்வப்போது பணம் வாங்கிக் கொள்ளலாம். அன்பாலும், பொறுப்பாலும் கட்டிப்போடுகிற இந்த டெக்னிக், உங்களுடைய பலவிதமான மன அழுத்தங்களைக் காணாமல் போகச் செய்யும். வேலை முடிந்து களைப்பாக வருவீர்கள்... அதுவரை குழந்தைகளைப் பார்த்துக் கொண்ட களைப்பில், சலிப்பில், விட்டால் போதும் என உங்களிடம் பிள்ளைகளைக் கொடுத்துவிட்டு, வெளியே போவார்கள் பெரியவர்கள். என்ன சம்பாதிச்சு என்ன சுகத்தைக் கண்டோம்.... என்ன வாழ்க்கை என அலுப்பு வருவது இயற்கைதான். அதை கோபமாக வார்த்தைகளிலோ, செயல்களிலோ யாரிடமும் வெளிப்படுத்தாதீர்கள். அம்மா என்றாலே இப்படித்தான்.... எரிஞ்சு விழுவாங்க என்கிற எண்ணம் உங்கள் பிள்ளைகளுக்குப் பதிந்து விடும்.

நீங்கள் வேலைக்குப் போகத்தானே உங்கள் பிள்ளைகளை அவர்கள் பார்த்துக் கொள்கிறார்கள்... அவர்கள் உதவியின்றி அது உங்களுக்கு சாத்தியமாகுமா என மாற்றி யோசித்துப் பாருங்கள். கோபத்தை ஓரங்கட்டி விட்டு, அவர்களுக்கும் ஒரு கப் காபி கொடுத்து விட்டு, நீங்களும் காலை நீட்டிக் கொண்டு காபி குடியுங்கள்.

அரக்க, பரக்க அடுத்த வேலைகளைப் பார்க்க ஓடாமல், 10 நிமிடங்கள் ரிலாக்ஸ் செய்யுங்கள். கணவருக்கும், உங்களுக்குமான தாம்பத்ய உறவை சுமுகமாக வைத்திருக்க வேண்டியதும் முக்கியம். சின்னச் சின்ன ஸ்பரிசமும், அரவணைப்பும் முத்தமும் ஸ்ட் ரெஸ்சை பெரியளவில் விரட்டியடிக் கும் என்பது பலருக்கும் தெரியாத உண்மை.

ஸ்ட்ரெஸ்சை விரட்டுவதில், உங்கள் பாடி லேங்வேஜுக்கும் இடமுண்டு. முடிந்த போதெல்லாம் உங்கள் குழந்தைகளைக் கட்டியணைத்து, முத்தமிடுங்கள். கணவன் உட்பட யாரிடமும், உதட்டுச் சுழிப்பிலோ, கண் அசைவிலோ கோபத்தையோ, வெறுப்பையோ வெளிப்படுத்தாதீர்கள்.

நீங்கள் எத்தனை பெரிய பொறுப்பில், பதவியில் இருந்தாலும், வீட்டுக்குள் அன்பான மனைவியாக, எளிமையான அம்மாவாக உங்கள் ரோலை முழுமையாக அனுபவியுங்கள்.

# அற்புதமானது பாட்டி வைத்தியம்



ரம்யன்

குடும்ப வைத்தியம், வீட்டு வைத்தியம், பாட்டி வைத்தியம், கைமருந்து என்பவையெல்லாம் மேல்நாட்டு வைத்தியத்தில் எடுபடமாட்டாது.

தலைவலியென்று வைத்துக் கொள்வோம் உடனே இரண்டு பனடோல். பெரசிட்டமோல் எதையாவது பழக்க தோசத்தில் விழுங்கி குணமாக்கிக் கொள்கிறோம். இவைகளிலும் காலத்துக் காலம் மாற்றங்கள். சில சமயம் குளிசைகள் அல்லது வேறு மருந்து உடலுக்கு கெடுதி விளைவிப்பதாக அறிவிக்கப்படுகின்றது. பாவிப்பதும் தடை செய்யப்படுகின்றது. சந்தையிலிருந்தும் ஒதுக்கப்படுகின்றது.

சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் காய்ச்சல், தலைவலியயன்றால் வின்சன்ட் ஏ.பி.சி. என்றொரு குளிசை கடைகளில் விற்கப்பட்ட மாத்திரை பயன்பட்டது. அதே காலத்தில் ஆஸ்ப்ரின் என்ற குளிசையும் கிடைத்தது. பின்னர் டிஸ்ப்ரின் வந்தது. சாதாரண காய்ச்சல், தலையிடிகளுக்கு இது கண்கண்ட மருந்தென்று வீடுகளில் கதைப்பார்கள். பின்னர் இதில் பக்க விளைவுகள் அதிகம் இருந்தமையால் நீக்கிவிட்டு பனடோல், பெரசிட்டமோல் போன்ற மருந்துகள் அறிமுகமாகின.

பொதுவில் எந்த மருந்தாக இருந்தாலும் மருத்துவரின் ஆலோசனை இன்றி எடுப்பது புத்திசாலித்தனமில்லை என்கிறார்கள். ஏனென்றால் நோயின் தன்மை, அந்தநோயாளியின் உடல் மற்றும் மனநிலைகள் மற்றும் காரணிகளை மருத்துவர்களால் இந்தக் காலத்தில் இலகுவாக கண்டுபிடித்துவிடக் கூடிய கல்வியும் அதனுடன் கூடிய சாதனங்களும் உரிய வைத்திய முறைகளும் இப்போது கிடைக்கின்றன. வைத்தியமுறைகளும், மருந்துகளும் என்னதான் முன்னேறியிருந்தாலும் அவை களை சாதாரண மக்களால் இலகுவில் பெற்றுக்கொள்ள முடிகிறதா என்பது கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றது.

உண்மையில் நாட்டு மக்களின் நலனுக்காக இலங்கை அரச மருத்துவத்துறையில் பெரும் அளவில் நிதி செலவிடுகின்றது. அதில் பணக்காரன், ஏழை என்ற பாகுபாடு இல்லை. ஆனால் அங்கேயும் சிலபல வேளைகளில் ஊழல்களும் பாரபட்சங்களும் இடம்பெறுவதைக் காண்கின்றோம்.

பெரும்பாலான வைத்தியர்கள் பணம் அறவிடுவதிலேயே குறியாக இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுமுண்டு. இது பற்றி எழுதுவது என்றால் நிறையவே எழுதலாம். ஆனால் சேவை மனப் பான்மையுடன் பணியாற்றுபவர்கள் பற்றி யும் எழுதுவதற்கு விடயங்கள் உண்டு. வேறு ஒரு சந்தர்ப்பத்தில் அது பற்றி எழுதுவோம். நாம் சொல்ல வந்தது என்னவென்றால், கைவைத்தியத்திலும் சிலபல நன்மைகள் விளைகின்றன என்பதைப் பற்றித்தான்.

உதாரணத்துக்கு அன்பர் ஒருவர் கூறிய பின்வரும் சம்பவத்தைப் பார்ப்போம்.

நான் சிறுவயதில் மலையகத்தில் வாழ்ந்தேன். நாங்கள் இருந்த இடத்தின் ஒரு பக்கம் கடைத்தெருவும், மறுபக்கம் இருந்த மலைச்சரிவில் ஒரு சிங்களக் கிராமமும் இருந்தன. அந்தக் கிராமத்தவர்கள் நாங்கள் வாழ்ந்த பகுதியின் வழியாகவே கடைத் தெருவுக்குப் போய் வருவார்கள்.

எனக்கு ஒரு கண்ணில் ஒரு சிறு பரு ஏற்பட்டு மிகவும் வேதனை கொடுத்தது. அதன் பருமன் ஒரு சிறு மிளகின் அளவுக்கு வளர்ந்துவிட்டது. கண்ணும் சிவந்து வீங்கிப்போய் விட்டது. குடும்பத்தில் உள்ளவர்களும் ஏனையவர்களும் மருத்துவமனைக்கு என்னைக்கொண்டு போவது பற்றி யோசித்தார்கள். இன்னும் சிலர் கண்ணில் அறுவைச் சிகிச்சை செய்வார்கள்.

> சாதாரண காய்ச்சல், தலையிடிகளுக்கு இது கண்கண்ட மருந்தென்று வீடுகளில் கதைப்பார்கள். பின்னர் இதில் பக்க விளை வுகள் அதிகம் இருந்த மையால் நீக்கி விட்டு பனடோல், பெரசிட்டமோல் போன்ற மருந்துகள் அறிமுகமாகின.

ஆசைபோட ஒருவிடயம்



சிலசமயம் கண்பார்வையே போய்விடும் என்று அச்சுறுத்தியதால் உறவினர்கள் என்ன செய்வதென்று அறியாது கலங்கிப் போய் இருந்தார்கள்.

நான் சிறுவனாக இருந்தமையால் கண் உபாதையைப்பற்றி கவலை கொள்ளாமல் ஏனைய சிறுவர்களுடன் சேர்ந்து விளை யாட்டில் ஈடுபட்டிருந்தேன்.

ஒரு தினம் மாலைப்பொழுது சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது அந்த வழியாக கையில் ஓர் ஓலைப் பையுடன் (உமல்) கடைத்தெருவிலிருந்து சிங்கள நாட்டுக்குச் செல்வதற்காக ஒரு மூதாட்டி வந்தார். நான் கண் உபாதையுடன் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்ட அந்த வயதான தாய் மகனே இங்கே வா கண்ணில் என்ன?" என்று பரிவுடன் சிங்களத்தில் கேட்டார். எனக்கு விளங்கினாலும் பதில் சொல்லத் தெரியவில்லை. பக்கத்தில் நின்ற ஒருவரிடம் இந்தப் பையனை நாளை காலையில் ஆறு மணிபோல இங்கே நிற்கச் சொல்லுங்கள் நான் வருகிறேன் என்று கூறி இவ்வாறு அந்த அன்பர் சொன்னார்.

இவ்வாறு பல சம்பவங்களை பலர் சொல்ல கேட்டிருக்கிறேன். ஆனால் அது பழைய பாட்டிமாருடன் மறைந்து விடுகின்றது. இன்னுமொருவர் சொன்ன சம்பவம்.

கண்ணில் கதவு இடித்து கண் வீங்கிப் போனதுடன் இரத்த சிவப்பாகவும் மாறி விட்டது. எங்கள் குடும்பப் பெரியவர் வளர்ப்புக் கோழியின் கால் நகத்தை அறுத்து அதிலிருந்து வந்த இரத்தத்தை இரண்டு சொட்டு கண்ணில் விட்டார். கண் உபாதையும் தீர்ந்தது. கண் சிவப்பும் நீங்கியது என்றார் அவர்.

இவ்வாறு கிராமங்களில் ஏராளம் இயற்கை மற்றும் பாட்டி வைத்தியங்கள் உண்டு. அவைகள் அந்தந்த சந்ததியுடன் மறைந்துபோக விடுவது துரதிர்ஷ்டம். இவைகளை முறையாகக் கண்டறிந்து தொகுத்து வைப்பதில் யார் இறங்குவார்கள்.


## மேதினத்தில் ஒரு விதி செய்வோம் மேதினியில் நொந்தவர்க்கு



கோடியிலே குடிசையிலே குமிறி
நிற்கும்
குப்பனையும் சுப்பனையும் மாடி
சேர்ப்போம்
வாடுகின்ற மீனவர்க்கும்
தாழ்த்தப்பட்டு
வதைபவர்க்கும் வாரியத்தால்
வீடமைப்போம்
ஓடியிங்கே உழைக்கின்ற
தொழிலாளர்க்கே
ஊதியங்கள் நிர்ணயிக்கக்
குழுக்கள் வைப்போம்
நாடெங்கும் கணவனை
இழந்துள்ள
விதவையர்க்கு
நலமான உதவிகள்
வழங்கும் தீர்வு
வைப்போம்

பனை ஏறும் தொழிலாளி
விழுந்திறந்தால்
படகேறும் மீனவனும் கடலில்
மாய்ந்தால் வினை உழவன்
மருந்தங்கே
தெளிக்கும்போது
வேதனையால் மாண்டு
விட்டால் நிதி கொடுப்போம்
மன மொடிந்த ஊனமுற்றோர்
மறுமலர்ச்சி
வாழ்வு பெறப் புதுத்திட்டம்
வைத்திடுவோம் இனத்
தொழிலாளர் மே நாளில்
இவற்றுக்காக ஏற்றமுடன்
சபதம் செய்து
வாழ்வழிப்போம்

*மதுரகவி காரை.*
*எம்.பி.அருளானந்தன்.*



# கூரையைப் பிரிக்கும் ஏவற்பேய்கள்

சந்திரசேகர ஆசாத்

> மந்திரவாதிகள் அதிகாரத்திலிருந்து விரட்டப்பட்டு விட்டபோதிலும் அவர்களின் ஏவற்பேய்களும் சுக்குமாந்தடிகளும் நாட்டிலும், நாடாளுமன்றத்துக்குள்ளும் அரச இயந்திரத்துக்குள்ளும் பதவியிலிருந்து நயவஞ்சகமான முறையில் கூரை களை பிரித்துக்கொண்டே இருக்கின்றன.

கமண்டலங்களுடனும் சுடலைச் சாம்பல் பொதியுடனும், எலும்புத் துண்டுகளுடனும் பலிக் கோழிகளின் வாயால் உறுஞ்சிக் குடித்த குருதி இன்னும் காயாத நிலையில், மந்திரவாதிகள் விரட்டப்பட்டு விட்டனர். ஆனால் அவிழ்த்து விடப்பட்ட ஏவற்பேய்கள் இன்னும் மந்திரவாதிகள் வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் கொட்டம் அடங்கி விடாமல் கூத்தாடிக் கொண்டிருக்கின்றன. வெகு விரைவில் சக்தி இழந்து விடும் நிலையில் உள்ள சுக்குமாந்தடியைப் பலமூட்டிவிடும் நோக்குடன் முடிந்த வரையில் கூரைகளைப் பிரித்துக் கொண்டிருக்கின்றன.

இலங்கை அரசியலில் இப்போது இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்து மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் பதவிகளை இழந்து அதிகாரம் பறிக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். அவர்கள் ஆட்சியிலிருந்தபோது மேற்கொண்ட அக்கிரமங்கள் மெல்ல மெல்ல அவர்களைத் துரத்தித் துரத்திக் கௌவ ஆரம்பித்து விட்டன. ஆனால் அவர்களின் ஆதரவாளர்களும் அவர்களின் குடை நிழலில் நின்று முறைகேடுகளில் ஈடுபட்டவர்களும், மீண்டும் அவர்களை அதிகாரத்தில் ஏற்றி விடப் படாதபாடுபட்டு வருகின்றனர்.

மஹிந்தவைப் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட வைப்பதற்காக ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் உட்படப் பெரும் பரப்புரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மஹிந்த ராஜபக்ஷ ஊழல் மோசடி எதிர்ப்பு விசாரணைக் குழுவினால் விசாரிக்கப்படுவதை எதிர்த்து நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் அதற்கு வெளியேயும் பெரும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. நாடாளுமன்றச் செயற்பாடுகள் முடக்கப்பட்டு 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றம் கூட ஒத்தி வைக்கப்பட்டது. அதேபோன்று கோத்தபாய விசாரிக்கப்படுவதை எதிர்த்து ஊழல் மோசடி ஆணைக்குழுவின் முன் நீதிமன்ற உத்தரவையும் மீறி ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அதிகாரங்களை இழந்துவிட்ட இவர்களிடம் இப்போது இருப்பதெல்லாம் நாடாளுமன்றப் பெரும்பான்மை என்ற வளைந்து நெளிந்து பலவீனமடைந்து விட்ட சுக்குமாந்தடி ஒன்றுமட்டுத்தான். ஆட்சி மாற்றத்தின் பின்பு இன்னும் பரீட்சித்துப் பார்க்கப்படாத இந்த சுக்குமாந்தடியின் பலத்தை நம்பியே ஏவற் பேய்கள் கூரைகளைப் பிரித்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக மஹிந்த ஆதரவாளர்களால் பல தடங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் பல விதமான தடைகளையும் மீறி நீண்ட இழுபறியின் பின்பு 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. எனினும் அது முன்வைக்கப்பட்ட இலக்கை முழுமையாக எட்ட முடியாதவாறு மாற்றங்கள் உட்புகுத்திய வகையில் மஹிந்த ஆதரவு சக்திகள் வெற்றி பெற்றுள்ளன என்றே கூற வேண்டும்.

அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் சபாநாயகர் ஆகியோருடன் ஏனைய அரசியல் சாராத நிபுணர்கள் 7பேர் நியமிக்கப்படவேண்டும் என்பது மாற்றப்பட்டு, அந்த எழுவரையும் நாடாளுமன்றமே நியமிக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவைத்தவிர, ஏனைய ஆணைக்குழுக்கள் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அரசியல் நிர்ணய சபை, பொலிஸ், நீதி, பொது நிர்வாகம் என்பவற்றில் சுதந்திரமான ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுதல் என்பதில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி மீறப்பட்டு அவை நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்ல வேண்டிய அளவுக்கு அவற்றின் சுதந்திரம் பறிக்கப்பட்டு விட்டது. இது மஹிந்த ஆதரவாளர்களின் நாடாளுமன்றப் பெரும்பான்மை என்ற சுக்குமாந்தடியைச் காட்டிக் காட்டியே பெற்றுக்கொண்ட சாதனையாகும். எனினும், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பது சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிப்பது போன்ற ஜனநாயக அம்சங்கள் நிறைவேற்றப்படுவதை அவர்களால் தடுத்துநிறுத்திவிட முடியவில்லை. எனினும் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஜனநாயக அம்சங்களைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்த மஹிந்த ஆதரவாளர்கள் இடையூறுகளை விளைவிக்கமாட்டார்கள் என்று சொல்லிவிட முடியாது.

ஒரு நாட்டின் அரசு எவ்வளவு காத்திரமான சட்டங்களையும் திட்டங்களையும் முன்வைத்தாலும் கூட அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரச இயந்திரத்தின் பங்கு மிக மிக முக்கியமானதாகும். அரச இயந்திரம் இழுத்தடிப்பு, மழுங்கடிப்பு, என்பன மூலம் சூழ்ச்சிகளை மேற்கொள்ள முடியும்.

கடந்த பத்து வருடங்கள் ஆட்சி அதிகாரத்திலிருந்த மஹிந்த ராஜபக்ஷ குழுவினர் அரசு இயந்திரத்தைத் தமக்கு ஏற்ற வகையில் தமது பந்தங்களைக் கொண்டு நிரப்பி வைத்துள்ளனர். பொலிஸ், முப்படைகள் வெளிநாட்டுச் சேவை, அமைச்சு செயலகங்கள், என எதிலும் தமது கையாள்களையே அதிகாரத்தில் வைத்துள்ளனர். தமக்கு வேண்டாதவர்களை அதிகார மட்டங்களிலிருந்து படியிறக்க எந்தவித தயக்கத்தையும் அவர்கள் காட்டியதில்லை. மேலும் அதிகாரத்தில் உள்ளவர்கள் ஊழல், மோசடி அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றில் எந்த வித தங்கு தடையுமின்றி ஈடுபடும் வாய்ப்புகளும் தாராளமாகவே அமைந்திருந்தன. இப்படியான அரச இயந்திரத்தை சீர்செய்வது இலகுவல்ல. சிலர் தற்சமயம் உள்ள அரசின் ஆதரவாளர்கள் போல் காட்டிக்கொண்டு, சதிவேலைகளில் ஈடுபடலாம். அரசின் மீது மக்களுக்கு வெறுப்பூட்டும் வகையிலான நடவடிக்கைகளைக்கூட மிக லாவகமாக மேற்கொள்ள முடியும்.

அண்மையில் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் மீதும் அவருடன் சேர்ந்த சிலர் மீதும்! மஹியங்கனை பிரதேச சபை உறுப்பினர் விஜிததேரர் மீதும் தாக்குதல் நடத்தி, அவரின் ஆவணங்களைப் பறித்துக் கொண்டமை தொடர்பான வழக்கு கொழும்பு நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. அதில் பிரதிவாதிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமை தொடர்பாக நீதிவான் கேள்வி எழுப்பிய போது பொலிஸார் சட்ட மா அதிபரின் அனுமதியைப் பெறப்படவேண்டும் என்று தெரிவித்தனர். உடனடியாகவே நீதிவான் அப்படியான அனுமதி தேவையில்லை எனவும் அடுத்த தவணையே குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் எனவும் கண்டிப்பான கட்டளையை விடுத்துள்ளார். மஹிந்த பதவி இழந்த பின்னும் அவரால் உருவாக்கப்பட்ட பொறிமுறை எப்படிப் பலமாக உள்ளது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

பொதுபல சேனா என்பது முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் அனுக்கிரகம் பெற்றஅமைப்பு என்பதும்! அவர்கள் எந்தவித வன்முறைகளில் ஈடுபட்டாலும் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்பதும் கடந்த கால அனுபவங்கள்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகள் கடந்த காலங்களில் திருப்தி அளிக்கும் வகையில் இருக்கவில்லை என்பது ஒரு பரவலான குற்றச்சாட்டு. அது பல விடயங்களில் பக்கச்சார்பான முடிவுகளை எடுத்து! நீதிக்கு விரோதமாகச் செயற்பாட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் உண்டு.

பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பாக இருவர் கைதுசெய்யப்பட்டனர். ஒருவர் தடுப்பில் இருக்கும் போதே இறந்துவிட்டார். அடுத்த பிரதிவாதியான இராணுவத்தைச் சேர்ந்தவர் மீது வழக்குத் தொடர ஆதாரங்கள் இல்லையென சட்ட மா அதிபர் தெரிவித்த நிலையில் அவரும் விடுதலை செய்யப்பட்டார். எனினும் நீதிவான் வழக்கை முடித்துவிடாமல் தொடரும்படி கட்டளையிட்டு விட்டார்.

இது மட்டுமன்றி முன்னாள் ஜனாதிபதி ஆலோசகர் பாரத் லக்ஷ்மன் கொலை வழக்கு, மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா மீதான இராணுவ அதிகாரியை தாக்கிய வழக்கு என்பவற்றில் எல்லாம் சட்ட மா அதிபர் திணைக்களம் பக்கச் சார்பாக நடந்ததாகத் தகவல்கள் வெளிவந்தன.

அதுமட்டுமன்றி லசந்த விக்கிரமதுங்க கொலை, பாரத லக்ஷ்மன் கொலை என்பவற்றின் பின்னணியில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இருந்தார் எனக் முன்னால் அமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் குற்றஞ்சாட்டியிருந்தார். அவர் ஒரு காலத்தில் ராஜபக்ஷ குடும்பத்தின் செல்லப்பிள்ளையாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படியாகச் சட்ட மா அதிபர் திணைக்களம் அரசியல்வாதிகளாக இருந்த அதிகார பீடத்தின் விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில் நீதியை கேலிக்குள்ளாக்கி இருப்பதாகப் பலரும் குற்றஞ்சாட்டி வந்தனர். அதேவழிமுறையிலேயே தற்சமயம் ஞான சார தேரர் மீது குற்றப் பத்திரம் தாக்கல் செய்யவும் தயக்கம் காட்டப்படுகிறது. அதைச் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குள் போட்டு நீர்த்துப்போக வைக்கும் முயற்சியே இதுவென சந்தேகம் உண்டு.

வெளிநாடுகளிலிருந்து திரும்பி வந்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 15 பேர் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வடபகுதியில் ஊடகவியலாளர்கள் உட்பட பல்கலைக்கழக மாணவர்கள் வரை கைது செய்யப்படும் நடவடிக்கைகள் இன்னும் தொடர்ந்து கொண்டே உள்ளன. அடுத்தடுத்து இடம்பெற்றுவரும் வாள்வெட்டுப் பயங்கரங்களைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இது திட்டமிட்ட வகையில் புதிய அரசின் மேல் தமிழ் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற சதிகளோ என்றே கருத வேண்டியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு பகிரங்கமாகவே தமக்குக் பாதுகாப்பு அமைச்சும் சிறைச்சாலைகள் திணைக்களமும் ஒத்துழைப்பு வழங்கவில்லையெனக் குற்றஞ்சாட்டியுள்ளது. அதே வேளையில் அந்த ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை திட்டமிட்டவகையில் இராணுவத்தைக் காப்பாற்றவும், விடுதலைப் புலிகளைக் குற்றஞ்சாட்டவும் ஏற்ற வகையில் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு இருப்பது தெளிவாகவே புலப்பட்டுள்ளது.

மந்திரவாதிகள் அதிகாரத்திலிருந்து விரட்டப்பட்டு விட்டபோதிலும் அவர்களின் ஏவற்பேய்களும் சுக்குமாந்தடிகளும் நாட்டிலும், நாடாளுமன்றத்துக்குள்ளும் அரச இயந்திரத்துக்குள்ளும் பதவியிலிருந்து நயவஞ்சகமான முறையில் கூரைகளை பிரித்துக்கொண்டே இருக்கின்றன.

1953 தொடக்கம் இன்று வரை இனவாத மயமாக்கப்பட்டுவரும் அரசியல்வாதிகள், அரசு இயந்திரம் என்பன கழுவிச் சுத்தப்படுத்துவது அவ்வளவு இலகுவானது அல்ல. அதற்கான நேர்மையும்! துணிவும் புதிய அரசுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. அதுவரை ஏவற்பேய்கள் கூரைகளைப் பிரிப்பதை எவரும் தடுத்துவிட முடியாது.



# அட்டகாச எறும்பு தயார்

இரா. முருகன்

இயற்கையைப் பார்த்து அதன் அடிப்படையில் இயக்கத்தை வடிவமைத்துக் கொள்வது பயானிக்ஸ் துறை. சுருக்கமாகச் சொன்னால், கண்ணதாசன் பாடிய, பறவையைக் கண்டான், விமானம் படைத்தான் ரகம். தமிழில் இதை உயிர் மின்னணுவியல் என்கிறார்கள்.

எறும்புகளின் உடல் இயக்கத்தை மாதிரியாகக் கொண்டு பயானிக் எறும்புகளின் தொகுதி அண்மையில் ஜெர்மனியில் உருவாகியிருக்கிறது. எறும்புகள்போல விரைவாக நகர, ஆறு கால்கள் கொண்ட உடலமைப்பு இது. ஒவ்வொரு எறும்பின் தலைப் பகுதியில் கேமராவும், என்ன மாதிரியான தரை என்று உணர உணரியும் (சென்சார்) உண்டு. பயானிக் எறும்பு செயல்பட வழி செய்யும் லித்தியம் மின்கலங்களை சார்ஜ் செய்யவும் இந்த அமைப்பு வழி செய்யும். அசல் எறும்புகள்போல, பொருட்களைப் பற்றி எடுத்துப் போக, பற்றுவான்களும் (க்ரிப்பர்) உண்டு. எந்தப் பளுவை நகர்த்த வேண்டுமோ அதை எப்படிப் பற்ற வேண்டும் என்று முடிவு செய்யும் ஆற்றல் மிகுந்தவை இந்த பயானிக் எறும்புகள்.

**பயானிக்ஸ் எறும்பின் வேகம்**

எறும்புகள் கூட்டாக வாழ்பவை. ஒற்றை எறும்பால் இழுத்துப் போக முடியாத உணவுத் துண்டைக்கூட, கூட்டமாக வந்து நகர்த்திப்போக அவற்றால் முடியும். பயானிக் எறும்புகளும் இதேபோல் ஒன்றோடு ஒன்று தொடர்புகொண்டு ஒருங்கிணைந்து பணிசெய்யும் ஆற்றல்கொண்டவை. இப்படியான தொடர்புக்கான ரேடியோ தொகுதி எறும்பின் வயிற்றுப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதம் ஹனோவரில் நடந்த உலகத் தொழில்நுட்பக் கண்காட்சியில் பயானிக் எறும்புகள் அறிமுகமாகியிருக் கின்றன.

**பயானிக்ஸ் பார்வை**

விபத்தில் கை உடைந்துபோவதோ, அலட்சியப் போக்கினால் நோய் முற்றிக் காலை அகற்ற வேண்டியிருப்பதோ சோகமானது மட்டுமில்ல; ஓடியாடிப் பரபரப்பாக நடத்திய வாழ்க்கையை முடக்கிவிடலாம் அது. முறிந்து விழுந்த உறுப்பை மறுபடி முளைக்க வைக்க முடியாது. ஆனால், அந்தக் குறை அநேகமாகத் தெரியாமல் வாழ்க்கை தொடர பயானிக்ஸ் தொழில்நுட்பம் கைகொடுக்கும். பயானிக் பார்வை முன்னெடுத்துச் செல்லப்படும் ஒரு கட்டமைப்பாகும். பார்வை இழந்தவர்களின் விழியில் சிறு மின்முனைகள் (எலெக்ட்ரோடு) பதிக்கப்படும். உடலில் இணைத்த சிறு கேமராக்கள் அவர்களுக்கு முன்னால் விரியும் காட்சியைப் படம் பிடித்து, அந்தப் படத்தை மின்னணு அலைகளாக அனுப்பும். மின்முனைகள் அவற்றை வாங்கி நேரடியாக மின் தூண்டுதலாக மூளைக்கு அனுப்பும். மூளை அந்த மின்தூண்டலைப் பகுப்பாய்வு செய்து, விழி இழந்தவருக்குக் காட்சியை உணர்த்தும். ஏற்கெனவே பார்வை இருந்து, திடீரென்று பார்வை போனவர்கள் என்றால் மூளைக்கு இந்தப் பகுப்பாய்வு முன்பே பழக்கமாகியிருக்கும். புதிதாகக் கற்றுத்தர வேண்டியதில்லை.

**பயானிக்ஸ் போதை**

பயானிக் நாக்கு அடுத்தது. மிகச் சிறிய நானோ உணரிகள் இந்த நாக்கில் பதிக்கப்பட்டிருக்கும். திட உணவோ திரவமோ நாக்கில் படும்போது; உணரிகளால் அது பகுத்தறியப்படும். அந்த விவரம் ஒரு கணினிக்குப் போகும். ஒவ்வொரு வகை வேதியியல் அணுத் திரளுக்குமான ஒரு சுவை கணினியில் ஏற்கெனவே பதிவாகியி ருக்கும். வந்த தகவலை அதோடு ஒப்பிட்டு, என்ன சுவை

> எறும்புகள் கூட்டாக வாழ்பவை. ஒற்றை எறும்பால் இழுத்துப் போக முடியாத உணவுத் துண்டைக்கூட, கூட்டமாக வந்து நகர்த்திப்போக அவற் றால் முடியும். பயானிக் எறும்புகளும் இதேபோல் ஒன்றோடு ஒன்று தொடர்புகொண்டு ஒருங்கிணைந்து பணிசெய்யும் ஆற்றல்கொண்டவை. இப்படியான தொடர்புக்கான ரேடியோ தொகுதி எறும்பின் வயிற்றுப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கிறது.

என்று கணினி உடனே சொல்லி விடும். இது எங்கே பயன்படும்? ஒயின் போன்ற மது உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் சுவைஞர்கள் உண்டு. இவர்களின் வேலை, உற்பத்தியாகும் மதுவை அங்கே கொஞ்சம் இங்கே கொஞ்சம் என்று நாள் முழுக்க ருசி பார்ப்பது. தொடக்கத்தில் சந்தோ–மான வேலையாக இருந்தாலும், சீக்கிரமே வெறுக்க வைத்து விடும் இந்தப் பணிக்கு, பயானிக் நாக்கு சம்பளமில்லாத வேலைக்காரன். சொந்த நிறுவனத் தயாரிப்பைச் சுவைப் பதோடு நிறுத் தாமல், போட்டி நிறுவனங்களின் தயாரிப் புகளோடு சொந்தச் சரக்கைப் போதை யின்றி ஒப்பிடவும் இதை ஏவலாம். பயானிக் கணையம் உடலில் பொருத் தப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை. இந்தச் செயற்கை உறுப்பு ரத்தத்தில் சர்க்கரை அளவை சதா கண்காணித்து, அதன் அடிப்படையில் இன்சுலின் சுரப்பைக் கூட்டும் அல்லது குறைக்கும். பயானிக் சிறுநீரகம் இது போன்றே இயற்கைச் சிறுநீரகத்துக்கு மாற்றாகலாம்.

**பயானிக்ஸ் நடை**

பயானிக் கையும் உண்டு. செயற்கைக் கரத்தில் மின்முனைகள் பதித்தது இது. இந்த மின்முனைகள் மூளையோடு பிணைக்கப்படும். கையை உயர்த்த வேண்டும் என்று தோன்றும்போது, அதற்கான நரம்பு அதிர்வுகளை மின்முனைகள் பெற்றுக் கையை இயக்கும். பயானிக் கால் நடக்க உத வுவதும் இது போன்ற ஒரு உயிர் மின்னணு அமைப்பே. காலில் பதித்த உணரிகள் எவ்விதமான தரையில் நிற்கிறோம் என்பதை உணர்ந்து மூளைக்கு அறிவிக்க, நடை சீராகும். இயற்கைக் கைகால் போல் பயானிக் கைகால்கள் இயல் பாகவும் நுட்பமாகவும் செயல் பட தொழில்நுட்பம் இன்னும் மேம்பட வேண்டியிருக்கிறது. குறைபட்ட அங்கத்தை மாற்றி வைக்க மட்டும் உடல் உறுப்பு அடிப்படையிலான பயானிக்ஸ் பயனாகும் என்றில்லை.

பயானிக் மூக்கு இந்த இனம். சகலவிதமான வாடைகளும் பல்லிழை இயற்பியல் (பாலிமர் ஃபிஸிக்ஸ்) அடிப்படையில் கணினியில் பதிந்து பயானிக் மூக்கோடு இணைக்கப்படும். காற்றில் மாசு, வாயு கசிவதால் எழும் நச்சுத் தன்மை போன்ற வற்றை உடனடியாக இந்த மூக்கு கண்டுணர்ந்து எச்சரிப் பதால், நச்சு வாயுக் கசிவு போன்ற உயிர்க்கொல்லி விபத்துகள் நிகழாமல் தடுக்கலாம்.

உடல் பாகங்களை இயக்கக் கட்டளையிட, மனித மூளை, முதுகுத் தண்டின் ஒத்துழைப்பைப் பெரிதும் சார்ந்திருக்கிறது. சில விபத்துகளால் முதுகுத் தண்டு பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு. அப்போது மூளை கட்டளையிட முடியாமல் போய், அசைவு நின்றுவிடும். பேச்சும் வராது. முதுகு இப்படி பாதிக்கப்பட்டாலும், மகா மோசமான விபத்துகள் தவிர, மற்றவற்றில் நாக்கு சேதமின்றித் தப்பிவிடலாம். நேரடியாக மூளையோடு நரம்பு வழியாக இணைக்கப்பட்டிருக்கும் ஒரே மனித உறுப்பு நாக்கு. உடம்பே மரத்த நிலையிலும், நாக்கு அசையும்.

முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கை யானவரும் நடமாட தொழில்நுட்பம் துணைபுரிகிறது. நோயாளி நாக்கில் ஒரு சிலிக்கன் சில்லு பதித்து, அவர் அமர ஒரு சக்கர நாற்காலி ஏற்பாடு செய்யப்படும். நாக்கை மடித்தாலோ அல்லது இடம் வலமாக அசைத் தாலோ மட்டும் போதும். அசைவை நாக்கில் பதித்த சில்லு என்ன என்று பொருள் உணர்ந்து, அதை சக்கர நாற்காலியில் பொருத்திய சென்சாருக்குக் கட்டளையாக அனுப்பும். கட்டளைப்படி நாற்காலி நகரும்.


எல்லாம் சரி, பயானிக் மூளை? ரொம்ப கஷ்டம். தற்காலிகமான நினைவுகளைப் போட்டு வைத்துக் கொள்ளும் மூளையின் பாகத்தை சில்லில் வடித்திருப்ப தாகத் தெரிகிறது. ஒருவேளை, நூறு வருடம் சென்றபின் நம் சந்ததியினர் அவர்களுடைய பரம்பரை மூளையைத் தூர எறிந்து விட்டு ஐன்ஸ்டைன் மூளையைப் பொருத்திக் கொள்ளலாம்.



# கங்காரு

## வேகமற்ற பாய்ச்சல்

சர்ச்சைகளுக்குப் பேர்போன இயக்குநர் சாமி இந்த முறை அண்ணன் - தங்கை பாசத்தைக் கையாண் டிருக்கிறார். அண்ணன் - தங்கை பாசத்தைப் பல கோணங்களில் அணுகிய தமிழ் சினிமாவில் கங்காருவின் பாசமும் ஒருவிதம்.
ஒரு வயதுத் தங்கையை மார்போடு அணைத்துக்கொண்டு அந்த மலையூருக்கு வந்து சேர்கிறான் பத்து வயது முருகேசன். அம்மா, அப்பாவை இழந்து நிராதரவாக நிற்கும் அவனுக்கு ஒரே பிடிமானம் தங்கை அழகு (ஸ்ரீ பிரியங்கா). இவனுக்கு அடைக்கலம் கொடுக்கும் அந்த ஊரின் சிறு வணிகர் கருப்பசாமி (தம்பி ரமைய்யா). தங்கையை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கும் பாசத்தைப் பார்த்து அவனை கங்காரு என அழைக்க ஆரம்பிக்கிறார். ஊரும் அதையே பிடித்துக் கொள்கிறது. அண்ணனும் தங்கையும் வளர்ந்து ஆளாகிறார்கள்.
தங்கை ஒருவனைக் காதலிக்கிறாள். அவனை மணம் முடிக்க நினைக்கும்போது அவன் மர்மமாக இறந்துபோகிறான். ஒரு இடைவெளிக்குப் பிறகு மற்றொரு மாப்பிள்ளையைப் பேசி முடிக்கிறார்கள். அவனுக்கும் அகாலச் சாவு சம்பவிக்கிறது. அதற்கு மேலும் அந்த ஊரில் அவர்கள் வசிப்பது நல்லதல்ல என எண்ணும் விஸ்வநாதன் (ஆர். சுந்தரராஜன்) பக்கத்திலிருக்கும் தனது ஊருக்கு அண்ணன் தங்கையை அழைத்துச் செல்கிறார்.
ஆதரவு கொடுத்த உரிமையில் தனது உறவுக்காரப் பையனுக்கு முருகேசனின் தங்கையைத் திருமணம் செய்துவைக்கிறார். இம்முறை அவளது கணவனை அடையாளம் தெரியாத நபர் தாக்கிக் கொல்ல முயற்சிக்கிறார். அழகுவைத் திருமணம் செய்துகொள்ள இருந்தவர்கள் அடுத்தடுத்து இறந்துபோனதன் பின்னணியைக் கிளற ஆரம்பிக்கிறது காவல்துறை. அழகுவின் வாழ்க்கையில் விளையாடியது யார் என்று துப்பு துலங்கியதா என்பதுதான் கங்காருவின் கதை.
அசைவக் காட்சிகளோ இரு பொருள் வசனங்களோ இல்லாமல் படத்தை இயக்கியதற்காகவே இயக்குநர் சாமியைப் பாராட்ட வேண்டும். ஆனால் திரைக்கதை பின்னிய விதத்தில் பெரும் சறுக்கல். முதல் பாதியில் புதுமையோ சுவாரஸ்யமோ இல்லாத தங்கையின் காதலும், தம்பி ராமையா - கருப்பு கூட்டணியின் வறண்ட நகைச்சுவையும் கழுத்தை அறுக்கின்றன.
இரண்டாம் பாதியோ அதற்கு நேர் மாறாகப் பரபரவென்று நகர்கிறது. அதற்குக் காரணம், கதையின் மையமாக இருக்கும் பின்கதையும், காவல் ஆய்வாளர் சாமியின் விறுவிறு புலன் விசாரணையும். பின் கதைக் காட்சியில் முருகேசனின் தங்கையான அழகு அவனது உடன்பிறந்த சகோதரியா என்பதில் இயக்குநர் வைத்த திருப்பம் நெகிழ வைக்கிறது.
அதீத பாசம் எந்த எல்லைக்கும் பயணிக்கும் என்ற இயக்குநரின் பார்வையும், அது மனப் பிறழ்வாக மாறுவதை எளிமையாக விளக்கியதும் நச்சென்று இருக்கின்றன. ஆனால் பெரும்பாலான காட்சிகள் நாடகத் தன்மையுடன் சித்தரிக்கப்பட்டிருப்பது காட்சியுடன் ஒன்றவிடாமல் தடுக்கிறது.
கங்காரு முருகேசனாக நடித்திருக்கும் அர்ஜுனா, கதாபாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார். ஆனால் எல்லாக் காட்சிகளிலும் முறுக்கிக் கொண்டு திரிவது ஒரு கட்டத்தில் மிகை நடிப்பாக மாறிவிடுகிறது. முருகேசனின் தங்கையாக நடித்திருக்கும் ஸ்ரீ பிரியங்கா தவிப்பான தங்கையாக நடிப்பில் கவர்கிறார். காவல் ஆய்வாளராக நடித்திருக்கும் இயக்குநர் சாமியும் அலட்டல் இல்லாமல் தன் அடையாளத்தைப் பதிக்கிறார்.
படத்தில் தனித்துத் தெரியும் அம்சம் பாடகர் ஸ்ரீனிவாசின் இசை. எல்லா பாடல்களும் கேட்கும்படி இருக்கின்றன. ஸ்வேதா மேனன் பாடியிருக்கும் பேஞ்சாக்க மழைத்துளியோ மண்ணோடு என்று தொடங்கும் பாடலின் இசையும் வைரமுத்துவின் வரிகளும் அதைப் புதிய காதல் கீதமாக ஒலிக்க வைக்கின்றன. இந்தப் பாடலைப் படமாக்கிய விதத்தில் ஒளிப்பதிவாளர் ராஜரத்னம் கவர்கிறார்.
இரண்டாம் பாதியில் திரைக்கதையில் காட்டியிருந்த வேகத்தை முதல் பாதிக்கும் கொடுத்திருந்தால் கங்காருவின் பாய்ச்சல் இன்னும் வேகமாக இருந்திருக்கும்.




# யூகன்



**இது** பேய்ப் படங்களின் காலம். இந்த வகைப் படங்களின் மிரட்டும் காட்சியமைப்புக்குப் பெரிதும் கைகொடுப்பது கிராபிக்ஸ். ஆனால் கிராபிக்ஸ் உதவி இல்லாமல் கேமரா மற்றும் படத்தொகுப்புத் தந்திரங்கள், ஒப்பனை, ஒளியமைப்பு, பின்னணி இசை ஆகிய அம்சங்களை அதிகம் நம்பி ரசிகர்களைப் பயமுறுத்த முயன்றிருக்கிறார் அறிமுக இயக்குநர் கமல்.
வினய், டேவிட், ராகுல், அமீர், அருண் (யஸ்மித், சித்து, ஷாம், பிரதீப் பாலாஜி, மனோஜ்) ஆகிய 5 நண்பர்களும் ஐ.டி. நிறுவனத்தில் வேலை செய்கின்றனர். 5 பேருமே வாழ்க்கையைக் கொண்டாட நினைப்பவர்கள். இவர்களில் இருவர் மர்மமான முறையில் கொலையா கின்றனர். மற்ற 3 பேரையும் தனது சந்தேக வளையத்துக்குள் கொண்டுவருகிறார் போலீஸ் உதவி ஆணையர் சக்தி (தருண் சக்கரவர்த்தி).
இதற்கிடையில், தற்கொலை செய்து கொண்ட பூஜாவின் (சாக்ஷி அகர்வால்) செல்போன் எண்ணில் இருந்து அடுத்து கொல்லப்பட இருப்பது யார் என்று இந்த 3 நண்பர்களுக்கும் குறுஞ்செய்தி வருகிறது. அதில் குறிப்பிட்டபடியே கொலையும் நடக்கிறது. தற்கொலை செய்து கொண்ட பூஜாவுக்கும் 5 நண்பர்களுக்கும் என்ன தொடர்பு? போலீஸைக் குழப்பும் இந்தக் கொலைகளைச் செய்வது பேயா, மனிதனா? இந்தக் கேள்விகளுக்குப் பதிலாக விரிகிறது யூகன்.
ஆண்களால் பழிவாங்கப்பட்டு இறக்கும் பெண் கண்டிப்பாகப் பேயாக வந்து பழிவாங்குவார் என்பது விட்டலாச்சார்யா காலத்துக் கதை. ஆனால் பேயாக வரும் பெண் எந்தச் சூழ்நிலையில் பழிவாங்கப்பட்டாள் என்பது புதுமை. ஆள் அரவம் இல்லாத பகுதியில் இருக்கும் வீடு, பாழடைந்த பங்களா ஆகியவற்றை வைத்துப் பின்னப்படுவதுதான் பேய்ப் படம் என்ற நியதியை உடைத்து ஐ.டி. நிறுவனத்தையும் அதில் வேலை செய்யும் நண்பர்கள் வசிக்கும் அதிநவீன வீடுகளிலும் காட்சிகளை நகர்த்தியிருக்கும் இயக்குநர் கமல் பாராட்டுக்குரியவர். பேய் தோன்றி மறையும் பல காட்சிகளைப் படத்தொகுப்பு மூலம் அமைத்திருக்கும் விதம் பார்வையாளர்களை அலற வைக்கிறது யூகன்.
சம்பவங்களைக் கலைத்துப் போட்டாலும் குழப்பம் இல்லாமல் நம்மைக் காட்சிகளுக்குள் இழுத்துக்கொள்கிறது திரைக்கதை. ஆரம்பத்தில் ஒவ்வொருவரும் இறப்பது மட்டும் காட்டப்படுகிறது. எப்படி இறந்தார்கள் என்பது புலனாய்வு செய்யும் காவல்துறை அதிகாரியின் ஊகத்திலேயே காட்சிப்படுத்தப்பட்டிருப்பது புதுமை.
பூஜாவின் தற்கொலைக்கான பின்னணிக் காரணத்தை அழுத்தமாக அமைத்த இயக்குநர், பயன்பாட்டில் இல்லாத செல்போன் எண்ணில் இருந்து எப்படி குறுஞ்செய்தி வரமுடியும் என்பது போன்ற கேள்விகளுக்கும் கச்சிதமான பதில்களைத் தந்திருக்கிறார். ஆனாலும் ஆங்காங்கே சில ஓட்டைகள். சாக்ஷி இறந்து 2 ஆண்டுகள் ஆனதாகச் சொல்லப்படுகிறது. உங்கள் மகள் போன வருஷம் எங்கு வேலை பார்த்தாள் என்ற கேள்வி அடுத்த காட்சியிலேயே வருகிறது. வரைதல் புத்தகம் 2 ஆண்டுகளாக அப்படியே இருக்கிறது. மடிக்கணினி 2 ஆண்டுகளாக சார்ஜில் இருக்கிறது. இதற்கெல்லாம் விளக்கம் இல்லை. பார்த்துப் பழகிய பேய் தோற்றம், ஆவி வரும் காட்சிகள் ஒரே மாதிரி அமைவது ஆகியவை படத்தின் சுவாரஸ்யத்தைக் குறைக்கிறது.
முக்கிய வேடம் ஏற்றிருக்கும் அனைவரும் அறிமுக நடிகர்களாக இருந்தாலும் கச்சிதமான நடிப்பைத் தந்திருக்கிறார்கள். துரத்தல் காட்சியும், சண்டைக் காட்சியும் யதார்த்தமாக இருப்பதால் நம்பகத் தன்மை கூடுகிறது. திகிலுக்கு நடுவே இளைப்பாறலாக வினய்-சாக்ஷி காதல்.
திகில் படங்களுக்கு முதுகெலும்பாக அமைவது ஒளிப்பதிவும் இசையும். ரவி ஆறுமுகத்தின் ஒளிப்பதிவும், அலெக்ஸ் பிரேம் நாத்தின் பின்னணி இசையும் படத்துக்கு நல்ல பலம். ஆக மொத்தத்தில், பழைய பேயை புதிய புட்டியில் அடைத்துக் காட்டியிருக்கின்றனர்.



# தேவை நிதானமே தவிர உணர்ச்சி வெடிப்பல்ல

■ மருத்துவர் இ.சிவசங்கர்

சுன்னாகத்து நீரில் ஒயில் கலந்ததை விட அரசியல் கலந்துள்ளது அதிகம் என்று வடமாகாண முதலமைச்சர் குறிப்பிட்டார். அரசியல் கலப்புடன்தான் போராட்டம் தொடங்கப்பட்டதா அல்லது தூய்மையாக தொடங்கப்பட்ட போராட்டத்தில் அரசியல் உள்நுழைந்ததா? அதைவிட மேலாக ஓர் அரசியல் போராட்டத்தை உள்நோக்குடன் தொடங்க அரசியல் இறுதியில் உட்புகுந்து போராட்டபலனை தமதாக்கிக் கொண்டதா? இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒன்றுக்கும் மேற்பட்ட அரசியல்கள் சமாந்தரமாக இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வந்து போராட்ட பலனை தத்தமதாக்கிக் கொள்ள ஒருவரை ஒருவர் வெட்டி விளையாடுகின்றனரா? இதைத்தான் சித்திரை எட்டாம் திகதியான உண்ணாவிரதம் முடித்து வைத்த விதம் வெளிப்படுத்தியதா? நிலத்தடி நீரின் அரசியல் கலப்பு எல்லோருக்கும் தலையை சுற்றி காதில் பூவைக்கும் செயற்பாடாக முன்னெடுக்கப்படுகின்றதா? எண்ணுக் கணக்கற்ற கேள்விகள் இப்போது எழுகின்றன.

தத்தமது அரசியல்தந்திரோபாய நகர்வுகளுக்காக செயற்படுபவர்களா கட்டும் போராட்டத்தின் பலாபலன் களைத் தட்டிப் பறிக்கும் எத்தனிப்பு டையவர்களாகட்டும் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டியது இதில் பந்தாடப்படுவது இந்தப் பிரதேச பொது மக்களே யாவர் என்பதைத்தான். மக்களின் வாழ்வில் கைவைத்து தத்தமது வாழ்வை வளப்படுத்திவிட முடியாது என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏற்பட்டுவிட்ட அழிவுஏற்பட்டுவிட்டது. வெறும் ஆக்ரோசமிக்க உணர்ச்சிகர அணுகுமுறை, தேவைப்படும் இலக்கை கூட்டாக அடைவதற்கு தடைகளாகவே அமையும். மாசடைதல் தொடராத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. எனவே எமக்கு முன்னுள்ள உடனடி பொறுப்பு இரண்டு மட்டுமே. ஒன்று ஏற்பட்ட மாசடைதலை அகற்றுதல், இரண்டு நீர் மாசை அகற்றும் வரையான காலத்துக்கு மக்களுக்கான நீர் வழங்கலை உத்தரவாதப்படுத்தல்.

இதில் இரண்டாவதான மாசை அகற்றும் வரையில் நீர் வழங்கலை உறுதிப்படுத்தல் என்பதே உடனடி அவசிய செயற்பாடாக முன்னணியில் நிற் கின்றது. பாதுகாப்பான நீர் வழங்கலை உறுதி செய்வதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தமக்கிடையே புரிந்துணர்வு ஒத்துழைப்பு மனப்பாங்குடன் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இவர்களுடன் இதில் அக்கறை கொண்டுள்ள பொது அமைப்புகளும் தனிநபர் களும் சேர்ந்து இயங்குவது சமூக கட மையாகும்.

விரோத மனப்பான்மையுடன் குற்றம் காணும் அணுகுமுறை என்பது மேற்கூறிய அவசர அவசிய விடயத்தை நடைமுறைப்படுத்துவதில் தடைகளையே ஏற்படுத்தும். அது மக்களுக்கு கெடுதலாகவே முடியும். இதை கவனத்தில் கொள்வோம்.

நீர் வழங்கல் உறுதிப்படுத்தப்பட்டதும் எம்முன்னுள்ள அடுத்த பொறுப்பு மாசடைந்த பிரதேச விஸ்தீரணத்தை வரையறை செய்து உறுதிப்படுத்தி அதன் தொடர்ச்சியாக மாசை அகற்றும் நடைமுறை நடவடிக்கைகளை தொடங்கி செயற்படுத்துவதாகும்.

இதுவரையில் இது சார்ந்த அனைத்து தரப்பினரும் சுமுகமான கைகோர்த்த ஒரு முனைப் பட்ட நகர்வுக்கு வரமுடியவில்லை என்பதே கவலையளிக்கும் சந்தேகங்களை தோற்றுவிக்கும் விடயமாக அமைகின்றது.

பொறுப்பான பதவிகளிலும் சமூக உணர்வுடனுமுள்ள கற்றறிந்தவர்கள் வழிகாட்டுபவர்களாக இருக்கவேண்டிய காலகட்டத்தில் குற்றம்சாட்டி குழப்பம் விளைவிப்பவர்களாக இருப்பது ஏற்புடையதல்ல.

தத்தமது அறிவினாலும் திறமையினாலும் மக்களிடையே தெளிவையும் அதன் விளைவாக அமைதியையும் ஆரோக்கியத்தையும் உறுதிப்படுத்தவேண்டும்.

அழிவு காலங்களில் செயலின்மையும், திட்டமிடப்படாத அதீத செயற்பாடும் சமூகக் குழப்பங்களுக்கும் கெடுதல்களுக்கும் இட்டுச் செல்லும். தவறுகள் நடப்பதற்கு ஒழிப்பு மறைப்பு அணுகுமுறையும் மக்களை கிலி கொள்ள வைப்பதில் அதீத வெளிப்படுத்தல் தன்மையும் காரணங்களாகின்றன.

நிபுணர்கள் தமக்கிடையே கலந்தாலோசனை கலந்துரையாடல்களை நடத்தி முடிவுகளை (மட்டும்)மக்களுக்கு அறிவிப்பதே பொருத்தமானதும் தேவையானதும் ஆகும்.

மக்களுக்கு எதுவும் தெரியப்படுத்த வேண்டாம் என்ற நிலையும் நிபுணர்கள் தமது கலந்தாலோசனை விடயங்களை நிபுணர்களிடையேமேற்கொள்ளாதுநேரடியாக மக்கள் மன்றத்தில் முன்வைப்பதும் இரண்டுமே குழப்பத்தை ஏற்படுத்தும்.

நீர் மாசடைதல் நிகழ்ந்துள்ளதை அனைத்துத் தரப்பும் ஏற்றுக்கொண்டு விட்ட நிலையில் அதை அகற்றும் பொறிமுறையை இனம் கண்டு நடைமுறைப்படுத்துவதே நிர்வாகத்தினரதும் நிபுணர்களினதும் கடமையாகும்.

விரைந்து ஒரு முடிவுக்கு வருதல் அனைவரினதும் அவசர கடமையாகும். இதன் மூலமே நீர் மாசை விரைந்து நீக்கி மக்களுக்கு சுமுகமான வாழ்வை விரைந்து வழங்க முடியும்.

கடந்த சில மாதங்களாக மக்கள் முன் வைக்கப்படுபவை உண் மைகள் மறைக்கப்படுகின்றன, உண்மைகள் ஊதிப் பெருப்பிக்கப்படுகின்றன என்ற கருத்துக்களே. இரண்டுமே மக்களுக்கு கெடுதலை ஏற்படுத்துபவையாகும். இருவேறு முகாமைத்துவத்தில் கிலி கொள்ளாத தயார்பட்ட மனநிலையே மக்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது. அழிவு காலங்களில் வெருண்டு பயந்து ஒடுங்கிக் கொள்ளும் பொறுப்பாளர்கள் மக்களை தயார்ப்படுத்தத் தவறும் பொழுது, வெருட்சியின் விளைவாக பொறுப்பாளர்களிடம் ஏற்படக் கூடிய கட்டுப்பாடற்ற அதீத செயற்பாடு மக்களை கிலிகொள்ள வைத்துவிடும்.உண்மைகள் மறைக்கப்படாத பெருப் பித்து காட்டப்படாத ஒரு நிலையை உறுதிப் படுத்துவது அனைத்து தரப்பினரின் கடமையாகும்.

நிபுணர்கள் எனப்படுவோர் அனைத்து தரப்பு ஆய்வுகளையும், முடிவுக ளையும் விஞ்ஞான மனப்பாங்கில் கேள்விக்குட்படுத்தும் நேர்மையான நடுநிலை நடத்தைகளை வெளிப்ப டுத்த வேண்டும். இதுவே மக்கள் நலன் சார்ந்த நிலையாகும்.

தம்பக்க சார்பான முடிவு எதிர்பக்கச் சார்பான முடிவு என்ற நோக்கில் ஆய்வு முடிவுகளை எதிர்ப்பதும் ஆதரிப்பதும் நிபுணத்துவ தகைமைக்கு களங்கம் சேர்ப்பவை. எமது பக்கம் எதிர்பக்கம் எனும் பக்க சார்பிலிருந்து வெளி வந்தாலே மக்கள் நலனில் பங்களிப்பு செய்யலாம். பக்கச் சார்பான நிலைப்பாடுகள் சந்தேகங்களை தோற்றுவிக்கும்.

நிலத்தடி நீர் மாசடைவதன் நிலவரங்களை நாம் விளங்கிக் கொள்வது இதை எதிர்கொள்ளும் மனநிலையை எமக்கு ஏற்படுத்தலாம். தற்போதைய நிலையில் மாசடைதல் நிறுத்தப்பட்டுள்ளது என்பது நம்பிக்கையளிக்கும் விடயம் ஆகும்.

சுன்னாகம் மின் நிலையத்தை சூழ்ந்த நிலத்தடி பரப்பில் தேங்கியிருந்த ஒயில் கடந்த மாரிகால மழை வெள்ளத்தினால் அடித்து செல்லப்பட்டதாலேயே ஏனைய பிரதேசங்களுக்கு சடுதியான பரவுதல் ஏற்பட்டமைக்கான காரணமாக இருக்கலாம் என ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மகிழ்ச்சி தரும் பக்கம் என்னவெனில் இத்தகைய மழை வெள்ளம் காரணமாக இந்த நிலத்தடி ஒயில் இயல்பாகவே அப்புறப்படுத்தப்பட்டு கடலை அடைவதனூடாக தீங்கு நீங்கலாம். ஒயில் நில கீழாக கடலை அடையும் பயணத்தில் புதிய பிரதேசங்களின் நிலத்தடி நீரை மாசுபடுத்தும் சாத்தியமும் மறுப்பதற் கில்லாத நிலையாகும். இதற்கான முற்தயாரிப்பு நடவடிக்கைகள் உருவாக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீரில் பெற்றோல் ஒயில் கலப்பு என்பது பல்வேறு இடங்களில் நடைபெறுவது காணப்படுகின்றது. பெற்றோல் நிரப்பு நிலையங்களும், வாகன சேவிஸ் நிலையங்களும் இத்தகைய ஆபத்துக்களை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த விடயங்கள் பலமுறை பல மட்டங்களில் முன் வைக்கப்பட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

மேலும் இதனுடன் சேர்த்து தோட்டங்களில் பயன்படுத்தும் கட்டுப்பாடற்ற உரம், கிருமிநாசினி பாவனைகளும் நிலத்தடி நீரை மாசாக்கி வருகின்றமை அரை நூற்றாண்டாகத் கூறப்பட்டு வருகின்றது. எத்தகைய நடத்தை மாற்றமும் ஏற்பட்டதாக அறியமுடியவில்லை.

சுற்றுச் சூழல் சார்ந்த எமது அக்கறையின்மையும், சுயநல நோக்கங்களே எமது சுற்றாடல் நஞ்சான மைக்கானமூலகாரணம்என்பதை உணர்ந்து ஏற்றுக் கொண்டு நட வடிக்கைகளில் இறங்குவோமாக! சூழல் மாசடைதலை சுயலாப அரசியலின் நோக்கிற்கு பயன்படுத்த முனையாது மக்கள் நலனை முன்னேற்ற ஒன்று சேர்வோம். ஒன்று சேர்ந்தால் உண்டு வாழ்வு.


## ஆசியாவின் அதிசய அப்பம்

ஆசியாவின் அதிசயமோ
அன்னாட்டு அப்பம் விற்றாலும்
அதையுண்டு ஏப்பம் தான் விட்டாலும்
அழியாத வடுவாச்சு
வட்டமாய் சுட்டனரோ
வளைத்துப் போடச் சுட்டனரோ
வசியமாய் சுட்டனரோ
பூச்சியமாய் சுட்டனரோ
குண்டாளமாய் சுட்டதனால்
குளிபறித்துப் போனாரோ
பாலப்பம் உண்டதனால்
பாழ்பட்டு ரெண்டானார்
ஒன்றாகி உண்டனரே
இரண்டாகி விட்டனரே
நக்குண்டார் நாவிழந்தார்
நாளெல்லாம் பேசுகிறார்
அப்பம் சுட்ட சட்டி ஆறும்
ஆறா அதையுண்டவடு

*சிவதயா, தண்ணீரூற்று.*

# நடுங்கிய நேபாளம் சிதறியது

என்.ஆர்.துரை



பூமியின் மிக ஆழத்தில் ஏற்படும் நிகழ்வுகளால் சில்லுகள் நகர்ந்து, நிலநடுக்கம் உண்டாகிறது!

நேபாளத்தில் கடந்த 25ஆம் திகதி அன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பின்ன திர்வுகள் நீடித்துக் கொண்டிருக்கின்றன. சுருங் கச் சொன்னால், வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்தியத் துணைக் கண்டம் நேபாளத்தின் அடிநிலப் பாறைகள் மீது செலுத்திவரும் நெருக்குதல் காரணமாகவே நேபாளத்தில் நிலநடுக்கம் நிகழ்ந்துள்ளது. அப்படியானால், இந்தியத் துணைக் கண்டம் நகர்கிறதா? அது எப்படிச் சாத்தியம் என்று கேட்கலாம். இதுபற்றி விளக்க பூர்வ கதைக்குச் சென்றாக வேண்டும்.

நாடுகளைக் காட்டும் அட்லஸ் படத்தை நீங்கள் கவனித்தால் இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியா எங்கோ தொலைவில் இருப்பது புலப் படும். ஆபிரிக்காவும் அப்படித்தான். பனி மூடிய அண்டார்க்டிகா கண்டமோ இன்னும் தொலைவில் இருப்பதை அறிய முடியும். ஆனால், சுமார் 20 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தென் அமெரிக்கக் கண்டமானது ஆபிரிக்கக் கண்டத்தின் மேற்குப் புறத்தில் இணைந்திருந்தது. ஆபிரிக்காவின் கிழக்குப் புறத்தில் இந்தியத் துணைக் கண்டம், ஆஸ்திரேலியா, அண்டார்க்டிகா ஆகியவை இணைந்திருந்தன. இவை அனைத்தும் சேர்ந்து ஒரே கண்டமாக விளங்கின. விஞ்ஞானிகள் இதற்கு கோண்டுவானாலாந்து என்று பெயர் வைத்துள்ளனர்.

## உயரும் இமயம்

கோண்டுவானாலாந்துக்கு வடக்கே லௌராசியா என்ற கண்டம் இருந்தது. வடஅமெரிக்கா, ஐரோப்பா, ரஷ்யா, சீனா முதலியவை ஒன்றிணைந்து இவ்விதம் ஒரே கண்டமாக விளங்கின. அப்போது உலகில் மனித இனம் கிடையாது. சுமார் 12 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் கோண்டு வானாலாந்து உடைய ஆரம்பித்தது. கண்டங்கள் விலகிச் செல்ல ஆரம்பித்தன. இந்தியத் துணைக் கண்டம் வடக்கு நோக்கி நகர ஆரம்பித்தது. இதற்குள் லௌராசியாவும் உடைய ஆரம்பித்தது. இந்தியத் துணைக் கண்டமானது சுமார் 4 கோடி ஆண்டுகளுக்குமுன்னர்ஐரோப்பா, ரஷ்யா, சீனா ஆகியவற்றை உள்ளடக்கிய யுரேசியாவுடன் தென்பகுதியில் வந்து ஒட்டிக்கொண்டது. மோதியது என்றும் சொல்லலாம். இந்த மோதலின்போது விளிம்புகள் மேல் நோக்கிப் புடைத்துக்கொண்டன. இப்படியாக இமயமலை உண்டாயிற்று. இந்தியத் துணைக் கண்டம் தொடர்ந்து நெருக்குவதால் இமயமலை இன்னமும் உயர்ந்து வருகிறது.

கடலில் மிதந்து செல்லும் கப்பல்கள் அல்ல கண்டங்கள். அவை எப்படி இடம் மாறும் என்று கேட்கலாம். சிதறு காய் போடுவதுபோல ஒரு தேங்காயை ஓங்கித் தரையில் அடிக்கிறீர்கள். அது பல துண்டுகளாகச் சிதறும். இவ்விதம் சிதறிய சில்லுகள் அனைத்தையும் பொறுக்கி ஒன்றோடு ஒன்று பொருத்தி மறுபடியும் அதை முழுத் தேங்காயாக ஆக்குகிறீர்கள். இப்போது அந்தத் தேங்காய் பல சில்லுகளால் ஆனதாக இருக்கும். பூமியின் மேற்புறமானது இவ்விதம் பல சில்லுகளால் ஆனதே. மொத்தம் ஏழு எட்டுச் சில்லுகள் உள்ளன. சிறிய சில்லுகள் பல உள்ளன. பூமியின் மீதான இந்தச் சில்லுகள் மீதுதான் கண்டங்களும் கடல்களும் அமைந்துள்ளன. இந்தச் சில்லுகள்தான் நகர்கின்றன. ஆங்கிலத்தில் இவை பிளேட்ஸ் எனப்படுகின்றன. சில்லுகள் இடம்பெயர்வதை பிளேட் டெக்டானிக்ஸ் என்கிறார்கள். பூமியின் உட்புறத்தில் மிக ஆழத்தில் ஏற்படும் நிகழ்வுகளால் சில்லுகள் நகர்கின்றன. பொதுவில் சில்லுகள் சந்திக்கும் இடங்களில் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

## இந்திய - ஆஸ்திரேலியச் சில்லு

இந்தியத் துணைக் கண்டம், ஆஸ்திரேலியா இந்து மாக்கடல் ஆகிய அனைத்தையும் சேர்த்து இந்திய – ஆஸ்திரேலிய சில்லு என்று குறிப்பிடுகின்றனர். இந்தியச் சில்லு பல கோடி ஆண்டுகளாக யுரேசிய சில்லுக்கு அடியில் அதாவது, நேபாளத்துக்கு அடியில் செருகிக் கொண்டு வடக்கே நகருகிறது. ஆகவேதான் மேற்குக் கோடியிலிருந்து கிழக்குக் கோடி வரை இமயமலை அடிவாரம் நெடுக அவ்வப்போது நிலநிடுக்கங்கள் நிகழ்கின்றன. இந்தியச் சில்லு நெருக்குகிறது என் றால் வாரா வாரம், தினம் தினம் ஏன் நிலநடுக்கம் நிகழ்வதில்லை என்று கேட்கலாம். ரயில் வண்டியில் செல்லும்போது இரவு இரண்டு மணி வாக்கில் பார்த்தால் எதிர் பெஞ்சில் பச்சை சட்டை போட்டவர் தமக்கு அருகே அமர்ந்துள்ள மஞ்சள் சட்டைக் காரர் மீது மெல்லச் சாய்வார். தொடர்ந்து மேலும் மேலும் சாய்வார். ஒரு கட்டத்தில் விலுக் என்று இருவருமே விழித்துக்கொள்வர்.

அதுபோல இந்தியத் துணைக் கண்டத் தின் நெருக்குதல் மேலும் மேலும் சேர்ந்து கொண்டே போகும்போது ஒருகட்டத்தில் விலுக் ஏற்பட்டு கடும் நிலநடுக்கம் நிகழும். ஏப்ரல் 25ஆம் திகதி ஏற்பட்ட கடும் நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.9 என்று அளவிடப்பட்டுள்ளது. இந்த ரிக்டர் அளவுகோலில் குறிப்பிடத்தக்க அம்சம் ஒன்று உண்டு. ரிக்டர் அளவில் 6 என்று சொல்லப்படுகிற நிலநடுக்கத்தைவிட, ரிக்டர் அளவில் 7 என்ற நிலநடுக்கமானது 30 மடங்கு கடுமையானது. ரிக்டர் அளவில் 8 என்பது அதைவிட 30 மடங்கு கடுமையானது.

## தெரியாத ரகசியம்

ஓரிடத்தில் நிலநடுக்கம் ஏற்படுமா என்று முன்கூட்டி அறிந்துகொள்ள இதுவரை வழி கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், பிராணிகள் முன்கூட்டி அறிந்து கொள்கின்றன. ஓரிடத்தில் நிலநடுக்கம் ஏற்படப் போகிறது என்றால் ஏராளமான தவளைகள், பாம்புகள் ஆகியவை பல மணி நேரத்துக்கு முன்பே வெளியேறிவிடுகின்றன. இதன் ரகசியத்தை நம்மால் அறிய முடியும் என்றால், ஏராளமான உயிர்களைக் காக்க இயலும். ஆனால் ஒன்று, நிலநடுக்கங்கள் மனிதர்களைச் சாகடிப்பதில்லை. கட்டிடங்கள் தான் மனித உயிர்களைப் பலி கொள்கின்றன என்று சொல்வதுண்டு. அது பெருமளவுக்கு உண்மை.

நிலநடுக்கம் ஏற்படும் வாய்ப்பு அடிப்படையில் இந்தியா ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இமயமலை அடிவாரத்தில் உள்ள மாநிலங்கள் உட்பட அசாம், பிஹார், இமாசலப் பிரதேசம் முதலியன ஐந்தாவது மண்டலத்தில் இடம் பெற்றுள்ளன. அதாவது, க்டும் நிலநடுக்க வாய்ப்பு உள்ள இடங்கள் என்று பொருள். முதல் மண்டலம் என்பது நிலநடுக்க வாய்ப்பு அனேகமாக இல் லாதது. அடுத்து, இரண்டாவது மண்டலம். தமிழகம் முன்பு இரண்டாவது மண்டலத்தில் இருந்தது. ஆனால், இப் போது சென்னை மற்றும் கோவையை அடுத்த பகுதி ஆகியன மூன்றாவது மண்டலத்துக்கு மாற்றப்பட்டுள்ளன. ஓரளவு நிலநடுக்க வாய்ப்பு உள்ளது என்பது இதன் பொருள். கட்டிடங்களைக் கட்டும் விடயத்தில் எந்தெந்த மண்டலத்தில் எவ்விதமான வழிமுறைகள் பின்பற்ற வேண்டும் என விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த விதிமுறைகள் வெறும் ஏட்டளவில்தான் உள்ளன. ஆகவே தான், நிலநடுக்கம் ஏற்பாலயே அடுக்கு மாடிக் கட்டிடங்கள் இடிந்து விழுகின்ற நிலைமை உள்ளது.

## எச்சரிக்கை விளக்குகள்!

இந்தியாவில் வீடுகளைக் கட்டி விற்கும் நிறுவனங்கள், தங்களது விளம்பரங்களில் இந்த வசதி உண்டு, அந்த வசதி உண்டு எனப் பிரமாதமாக வர்ணித்துக்கொள்கின்ற அதே நேரத்தில், நிலநடுக்கத்தைத் தாங்கி நிற்கும் வகையில் கட்டப்பட்டவை என்ற வாசகத்தைச் சேர்ப்பதே கிடையாது. ஏன்? உண்மையில், நிலநடுக்கத்தைத் தாங்கி நிற்கின்ற வகையில் 50 மாடிக் கட்டிடங்களையும்கூடக் கட்ட முடியும். அமெரிக்காவிலும் ஜப்பானிலும் இப்போது நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிலநடுக்கத்தைத் தாங்கி நிற்கின்ற வகையில் அடுக்கு மாடிக் கட்டிடங்களைச் சர்வ சாதாரணமாகக் கட்டிவருகின்றனர். நிலநடுக்கம் ஏற்பட்டால் இவ்விதக் கட்டிடங்கள் முன்னும் பின்னுமாக லேசாக அசைகின்றன. ஆனால், கட்டிடத்தில் விரிசல் கிடையாது. தகர்ந்து விழுவதும் கிடையாது. உலகில் பெரும் ஜனநெருக்கடி மிக்க நாடுகளில் ஒன்றான இந்தியா, கட்டிடக் கட்டுமான விடயத்தில் கண்டிப்புடனும் தொலைநோக்குடனும் புது விதிமுறைகளை வகுத்து அமல்படுத்துவது அவசியம். ஒருவகையில், இதுபோன்ற சம்பவங்கள் நம்க்கான எச்சரிக்கை விளக்குகள்!





# இந்த வருடமும் வந்தது மே 03 மாற்றங்களின்றி...!

தட்சா.ஜோ

உலக ஊடக சுதந்திர நாள் இன்று. பத்திரிகை சுதந்திரத்தைப் பரப்பும் நோக்கிலும் 'மனித உரிமைகள் சாசனம்' பகுதி 19 இல் இடம்பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசுகளுக்கு நினைவூட்டவும் ஐக்கிய நாடுகள் அவையினால் சிறப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது இந்த மே 03. 1993 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி ஒவ்வோர் ஆண்டும் மே 3ஆம் திகதி பத்திரிகை சுதந்திர நாளாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆபிரிக்கப் பத்திரிகைகளால் கூட்டாக 1991 ஆம் ஆண்டு இந்த நாளில்தான் 'பத்திரிகை சுதந்திர சாசனம்' முன்வைக்கப்பட்டது. இது 1991 ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பினால் நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் 26 ஆம் அமர்வில் சிபாரிசு செய்யப்பட்ட 'உலகின் சகல பிராந்தியங்களுக்குமான பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டுச் சுதந்திரத்திற்கானதும், ஊடகச் சுதந்திரத்தினதும் பாதுகாப்பிற்கும் மேம்படுத்தலிற்குமான ஆணை' என்ற தொனிப் பொருளில் பரிந்துரைக்கப்பட்ட கட்டளையின் நிமித்தமாக உருவானது.

2015ஆம் ஆண்டு எடுகோளாக "தரம்மிக்க செய்தி அளிக்கை தொழிலில் பால் சமத்துவம் மற்றும் கணிப்பொறி யுகத்தில் பாதுகாப்பு நோக்கி ஊடகவியலில் வெற்றியை நகர்த்திச் செல்வோம்" அமைகிறது.

உள்நாட்டுப் போர் முடிவுற்ற நிலையிலும் ஊடகத்துறை மீதான அச்சுறுத்தல் தொடர்கின்றது. ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதுஇ அச்சுறுத்தப்படுவதுஇ காணாமல் போவது போன்ற விடயங்கள் இன்றும் நடைபெறுகின்றன. இவை குறித்து பல முறைப்பாடுகள் உரிய தரப்பினரிடம் தெரியப்படுத்தப்பட்டிருந்தும் இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை. சொல்லப் போனால் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவோ அல்லது ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காகவோ ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதனையும் அரசு முன்னெடுக்கவில்லை.

ஊடகங்கள் மீது மற்றும் ஊடகவியலாளர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டும் ஒருவர் கூட கைது செய்யப்பட்டுச் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்படவில்லை. இவை தவிர எத்தனையோ ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார்கள்.

ஊடகத்துறை மோசமாக அடக்கப்படும் 20 நாடுகளில் ஒன்றாக இலங்கையும் உள்ளது என்ற ஆய்வு முடிவு சர்வதேச ரீதியாக இலங்கையின் ஊடக சுதந்திரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதை உறுதிப்படுத்துகின்றது.

தகவல் அறியும் சுதந்திரம் குறித்து அரசு கருத்து வெளியிட்டு வந்தாலும் அதனைச் சட்டமாக்குவதற்கு தயங்குகின்றது. தெற்காசியாவிலுள்ள பல நாடுகளிலும் தகவல் அறியும் உரிமை சட்டமாக்கப்பட்டுள்ளது. பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் போன்றே தகவல் அறியும் உரிமையும் பொதுமக்களின் உரிமையாகும்.

பல ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களின் கொலை, பல ஊடகவியலாளர்களின் கைது, காணாமற்போதல், அச்சுறுத்தல் போன்றன இன்றும் நடைபெறும் நிலையில் உலகெங்கும் உள்ள ஊடகவியலாளர்கள் ஊடக சுதந்திர தினத்தை இன்று சந்திக்கின்றனர். உண்மைகளை உலகிற்கு சொல்ல முற்படும் ஊடகவியலாளர்கள் உலக நாட்டு அரசுகளால், ஆயுதக்குழுக்களால், அரசியல் குழுக்களால் இலக்கு வைக்கப்படுகிறார்கள். உலகில் ஆபத்து நிறைந்த தொழில் என்ற பட்டியலில் விமான பணியாளர்களே முன்னணியில் இருந்த நிலை மாறி தற்போது ஆபத்து நிறைந்த தொழில் என்ற பட்டியலில் ஊடகத்துறையே ஆபத்து நிறைந்தது என கணிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஊடகங்கள் மீது மீண்டும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள்,சுந்திரமான ஊடகப் பணிகளை கேள்விக் குறியாக்கியுள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலமாக தொடரும் ஊடக அடக்கு முறைமைகளால் பல ஊடகவியலாளர்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள்.

சிலர் காணாமல் போயிருக்கின்றார்கள். இன்றும் பலர் ஊடகப் பணியிலிருந்து விலகி, நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். அவர்களுள் காணமல் போன ஊடகவியலாளர்களது நிலை இன்று வரை மர்மங்கள் நிறைந்ததாக இருந்து வருகின்றது.

ஊடகங்கள் மீது மற்றும் ஊடகவியலாளர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டும் ஒருவர் கூட கைது செய்யப்பட்டுச் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்படவில்லை. இவை தவிர எத்தனையோ ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி யிருக்கின்றார்கள்.

இந்த நாளில் ஊடக சுதந்திரத்துக்காகப் பங்களிப்பு செய்யும் ஒருவருக்கு ஆண்டுதோறும் யுனெஸ்கோ நிறுவனத்தினர் யுனெஸ்கோ கிலெர்மோ கானோ உலக பத்திரிகை சுதந்திர விருது வழங்கிக் கௌரவிக்கின்றனர். இவ்விருது கொலம்பியப் பத்திரிகையாளர் கிலெர்மோ கானோ இசாசா என்பவரின் நினைவாக வழங்கப்பட்டு வருகிறது. இவர் 1986 ஆம் ஆண்டு டிசம்பர் 17 இல் அவரது அலுவலகம் முன்பாக வைத்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அவரின் கொலையின் பின்னரே பத்திரிகை சுதந்திரம் தொடர்பான பேச்சு வலுப்பெற்றது.

மே 03 இல் உலக அமைதிக்காகவும், பேச்சுச் சுதந்திரத்திற்காகவும் மற்றும் பத்திரிக்கை தர்மத்தினூடாகவும் பல இன்னல்களைத் தாண்டிப் போராடிய பத்திரிகை எழுத்தாளர் ஒருவருக்கு 25இ000 டொலர் பெறுமதியான பரிசு வழங்கப் படுகின்றது. சுமார் 14 நபர்களைக் கொண்ட குழுவால் குறிப்பிட்ட இத்தெரிவு நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஊடக சுதந்திரம் கிடைத்ததோ இல்லையோ துறைசார்ந்த ஊடகவியாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் அனைவருக்குமான நாளாக அமையட்டும் இந்த நாள்...!



# தேறப்போவது யார்?



இந்தியத் தேசிய அணித் தெரிவில் வருடா வருடம் பிரதான பங்கை வகிப்பது ஐ.பி.எல். தொடர். ஐ.பி.எல். தொடர் ரசிகர்களுக்கு கொண்டாட்டமாக இருக்கின்ற போதிலும் விரர்களுக்கு நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டும் அக்கினிப் பரிட்சையாகத்தான் உள்ளது என்றால் அது மிகையில்லை. ஜடேயா, தவான், அக்சர் பட்டேல், மொகித் சர்மா, ரஹானே, ராயிடு இவ்வாறான வீரர்கள் இந்திய அணியில் இடம்பிடிக்க காரணமாக இருந்த இதே ஐ.பி.எல் தொடர்தான் யுவராஜ், சேவாக், கம்பீர், ஹர்பஜென்சிங், ஷகிர்கான் போன்ற வீரர்கள் அணியில் இருந்து ஓரங்கட்டப்படக் காரணமாக இருந்தது. இவர்களில் யுவராஜ், கம்பீர், ஷகீர்கான் இவர்களுக்கான வாய்ப்புக்கள் தொடர்ந்து இருந்துவந்த நிலையில் நடப்பு ஐ.பி.எல். தொடரில் தேர்ச்சிபெற்று மீண்டும் தேசிய அணியில் இடம்பிடிக்கப்போகிறவர்கள் யார் என்பதை சற்று ஆராய்ந்தால் யுவராஜ் அணியில் இருந்து தொடர்ந்தும் புறந்தள்ளப்படப்போகிறார் என்றே எண்ணத்தோன்றுகிறது. அதேநேரம் ஷகிர்கான் மற்றும் கம்பீர் இவர்களுக்கான வாய்ப்புக்கள் முன்னரைவிட சற்று அதிகரித்தே காணப்படுகிறது.

**யுவராஜ்-** ஐ.பி.எல். தொடரில் அடித்து நொருக் குவார் என்று அனைவரும் யுவராஜ்ஜை எதிர்பார்த்தார்கள். இந்த எதிர்பார்ப்புக்களை இரட்டிப்பாக்கும் வகையில் டெல்லி அணியும் 16கோடியை (இந்திய மதிப்பில்) கொட்டி யுவ ராஜ்ஜை ஏலத்தில் எடுத்தது. ஆனால் எதிர்பார்க்கப்பட்டவற்றுக்கு முற்றிலும் முரணாகச் சொதப்பி வருகிறார் யுவராஜ். ஒரேயொரு அரைச்சதம் மட்டுமே நடப்பு தொடரில் யுவராஜ்ஜின் சிறந்த பெறுபேறு. இந்த நிலையில் யுவ ராஜ்ஜின் மட்டில் டோனி யின் முடிவு சரியென ஊடகங்களும் சமூக வலைத் தளங்களும் ரசிகர்களும் பேச ஆரம்பித்து விட்டார்கள். எனவே இவற்றையெல்லாம் வைத்துப்பார்க்கின்ற பொழுது யுவராஜ் தொடர்ந்தும் புறந்தள்ளப்படலாம்.

**கம்பீர்-** கொல்கத்தா அணியின் தலைவராகவும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகவும் நடப்பு ஐ.பி.எல். தொடரில் அசத்து கிறார் கம்பிர். தொடர்ச்சியாக மூன்று அரைச்சதங்களை விளாசியதுடன் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்களுக்கான பட்டியலில் முதலிடம் பிடிக்க போட்டிபோடுபவர்களில் கம்பீரும் ஒருவர். கம்பீருக்கு பதிலாக இந்திய அணியில் இடம்பிடித்த தவான் நடப்பு ஐ.பி.எல். தொடரில் தொடர்ந்து சொதப்பி வரும் நிலையில் தவானுக்கு பதிலாக மீண்டும் இந்தியஅணியில் கம்பீர் மறுபிரவேசம் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் மிக அதிகமாகவே காணப்படுகின்றன.

**ஷகிர்கான்-** இந்திய அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட மற்றைய வீரர்களுக்கும் ஷகீர்கானுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. மற்றைய வீரர்கள் திறன்வீழ்ச்சி (போர்ம்) என்ற காரணத்தால் புறந்தள்ளப்பட்டார்கள் ஆனால் ஷகிர் காயம் காரணமாக வெளியேறி மிண்டும் அணியில் இணைவதில் சிக்கல்களை எதிர்கொண்டார். ஐ.பி.எல். தொடரில் டெல்லிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னரும் காயம் ஷகீர்கானை விட்டுவிடவில்லை. இந்நிலையில் காயத்தில் இருந்து மீண்ட அவர் அறிமுக ஆட்டத்திலேயே தன்னை நிரூபித்துள்ளார். இந்திய அணியில் வேறு அனுபவ வேகப் பந்துவீச்சாளர்கள் இல்லாமையும் ஷகிர்கானுக்கு கூடுதல் பலம். வேகப்பந்துவீச்சாளர்களை எதிர்பார்க்கிறேன் என்ற டோனியின் வார்த்தைகளுக்கேற்ப செயல்பட்ட ஷகீர் கான் நிச்சயம் டோனியைக் கவர்ந்திருப்பார். எனவே ஷகீர் கானுக்கான இடம் இந்தியஅணியில் தொடர்ந்தும் பிரகாசமாகவே உள்ளது.

எது எப்படியோ ஐ.பி.எல். என்னும் அக்கினிப் பரிட்சையின் முதல்பாதி முடிவுக்கு வந்துவிட்டது. இரண்டாம் பாதியும் முடிந்துவிட்டால் தெரிந்துவிடும் யார் சித்திய்டைவதென்பது.



பிரகாஸ்

# பாகிஸ்தானின் பரிதாபமா இலங்கைக்கும்?

இ கிரிக்கெட்டைப் பொறுத்த மட்டில் அணியில் நட்சத்திரமாக இருந்த வீரர் ஒருவர் ஓய்வெடுத்தால் அந்த வீரரின் இழப்பு ஒட்டுமொத்த அணிக்குள்ளும் சிலகாலம் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும். இந்த பாதிப்பு மிகவும் தெள்ளத் தெளிவாக உணரப்படும். தங்க அணியாக இருக்கும் ஆஸ்திரேலியாவும் இதற்கு விதி விலக்கல்ல. பொண்டிங், கில்கிறிஸ்ட், ஹைடன், சைமன்ஸ், வோண் இவ்வா றான ஜாம்பவான்கள் ஓய்வுபெற்றதை யடுத்து அவர்களின் இடத்துக்கு மாற்று வீரரரை தெரிவுசெய்து அணியைப் பலப்படுத்தவதற்கு ஆஸ்திரேலியாவுக்கு கிட்டத்தட்ட 6 மாதங்கள் வரை தேவைப் பட்டது. இந்த தடுமாற்றத்தின் பின்னர் ஒரே தடவையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வீரர்கள் ஓய்வெடுப்பதை அந்த நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை விரும்புவதும் இல்லை அனுமதிப்பதும் இல்லை.



ஆஸ்திரேலியாவின் அன்றைய இந்த தடுமாற்றம் தற்பொழுது பாகிஸ்தான் அணியிலும் மிகையாகவே உணரப்படுகின்றது. பங்களதேஷ் என்றாலே பாகிஸ்தான் பாய்ந்து பாய்ந்து அடிக்கும். இந்த நிலையில் மிஷ்பாவும் அப்ரிடியும் இந்த வருடம் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் இருந்து ஓய்வினை அறிவித்ததையடுத்து தற்பொழுது நடந்து வரும் பாகிஸ்தான் எதிர் பங்களதேஷ் தொடரில் பாகிஸ்தானை வைத்து பங்களதேஷ் பழகுகிறது என்று சொல்லும் அளவுக்கு பாகிஸ்தானுக்கு மரணஅடி விழுகிறது. ஒருநாள், ரி–20 என்று எந்தத் தொடரையும் பாகிஸ்தான் கைப்பற்றாததுடன் பங்களாதேஷை பாகிஸ்தானால் ஒரு ஆட்டத்தில்கூட வெற்றிபெற முடியவில்லை. இதில் வெளிப்படையான உண்மை என்னவெனில் பங்களதேஷிடம் பாகிஸ்தான் தோற்றுப் போகும் அளவுக்கு இந்த இரண்டு வீரர்களின் இழப்பு பாகிஸ்தானில் உணரப்படுகிறது.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கின்ற பொழுது ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் இந்த வரிசையில் அடுத்து இடம்பெறப்போவது இலங்கையோ என்று எண்ணத்தோன்று கிறது. ஏனெனில் மிஷ்பா, அப்ரிடி இவர்களின் இழப்பையடுத்து பாகிஸ்தான் இவ்வாறு தடு மாறுகின்றதென்றால் சங்கா, மகெலவின் இழப்பு நிச்சயம் இலங்கையணியில் தனியானதொரு பாதிப்பை ஏற்படுத்தாமல் விட்டுவிடாது. அணியின் தலை வராக மத்தியூஸ் செயற்பட்ட போதிலும் ஆலோசனைகளை வழங்குவது, களத் தடுப்பு வியூகங்களை மேற்கொள்வது இவ்வாறான கடமைகளை தொடர்ந்தும் சங்காவும் மகெலவும் இணைந்தே செயற்படுத்தி வந்தனர். இதை மத்தியூஸ் பகிரங் கமாக ஏற்றுக்கொண்டதுடன் இருவரில் ஒருவரை அதிலும் குறிப்பாக சங்காவை தொடர்ந்து விளையாடுமாறு கோரிக்கை விடுத்தார். மத்தியூஸ் மட்டுமல்ல இலங் கைக்கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, சக விரர்கள், ஓய்வு பெற்ற விரர்கள் என்று சங்காவை தொடர்ந்து அணியில் இருக்கச் சொல்லி வற்புறுத்தாதவர்கள் இல்லாமல் இல்லை. இலங்கைக் கிரிக்கெட் மிகவும் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க காத்திருக்கிறது என்பதனையே சங்காவிடம் முன்வைத்த இவர்களின் வேண்டுதல்கள் சொல்லாமல் சொல்லி நிற்கின்றன.

இந்த இரு ஜாம்பவான்களின் ஓய்வு விடயத்தில் இலங்கைக்கிரிக்கெட் விட்ட பெரிய தவறு என்னவெனில் உலகக்கிண்ண தொடருடன் இவர்கள் இருவரும் ஓய்வினை அறிவிப்பார்கள் என்ற விடயம் ஏற்கனவே தெரிந்திருந்தும் இவர்கள் பாணியில் விளையாடக்கூடிய மாற்றுவிரரை உருவாக்கத் தவறியமையேயாகும். இரண்டாவது தவறு சந்திமால், குசல் பெரேரா ஆகியோர் சங்கா, மகெலவின் இடத்துக்கு பரிசீலிக்கப்படுவது. ஏனெனில் சங்காவும் மகெலவும் விளையாடும் விதத்துக்கு நேர் எதிரான முறைமையைக் கையாளுபவர்கள் தான் சந்திமாலும் குசல் பெரேராவும். சங்காவின் பாணியில் குசல் பெரேராவும் மகெலவின் பாணியில் சந்திமாலும் தம்மை மாற்றிக் கொள்ளும் பட்சத்தில் இலங்கைக் கிரிக்கெட் ஓரளவுக்கு தப்பித்துக்கொள்ளும். எல்லாவற்றையும் விட சங்கா, மகெல இழப்பு மத்தியூஸின் தலைமைத்துவத்தின் மீது மிக அதீகமான சுமையைத்தூக்கி வைத்துள்ளது. இந்த இரண்டு ஜாம்பவான்களும் இல்லாமல் ஒரு ஆட்டத்தில்கூட களமிறங்கிப் பழக்கமில்லாத மத்தியூஸ் இனிவரும் ஒவ்வொரு ஆட்டத்திலும் என்னத்தைச் செய்யப்போகிறார். எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பது புரியாத புதிர். சுருங்கக்கூறின் மத்தியூஸின் தற்போதைய நிலைமை நடுக்கடலில் தனியாகத் தத்தளிக்கும் வள்ளத்தைப்போல என்று சொல்லிக் கொள்ளலாம். தனியாகத் தத்தளிக்கப்போகும் மத்தியூஸிற்கு தற்போதிருக்கும் ஒரே நம்பிக்கை மீதமிருக் கும் மூத்த வீரர் டில்சான் மட்டுமே. ஆன போதிலும் டில்சான் இன்னும் எத்தனை காலத்துக்கு மத்தியூஸிற்கு உதவியாக அவருடன் பயணிப்பார் என்பது கேள்விக்குறியே?

> சங்கா, மகெலவின் இழப்பு நிச்சயம் இலங்கையணியில் தனியானதொரு பாதிப்பை ஏற்படத்தாமல் விட்டுவிடாது.

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூர்ந்த வேளை...

ஒளிச்சுடர் ஏற்றல்



உதயன் பிரதம ஆசிரியர்
வ.க.காணமயில்நாதன்



தினக்குரல் நிர்வாக இயக்குநர்
எஸ்.கேசவராஜ்



வட மாகாண அவைத் தலைவர்
சி.வி.கே.சிவஞானம்



மாகாண விவசாய அமைச்சர்
பொ.ஐங்கரநேசன்



மாகாண சபை உறுப்பினர்
த.சித்தார்த்தன்



யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்
சங்கத் தலைவர் இராசகுமாரன்



யாழ்.போதனா வைத்தியசாலை உதவிப்
பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா



யாழ்.மாவட்ட உதவி
அரசாங்க அதிபர் சுதர்சன்



கொலை செய்யப்பட்ட உதயன்
பணியாளரின் மனைவி திருமதி பாஸ்கரன்



கொலை செய்யப்பட்ட உதயன்
ஊடகவியலாளர் ரஜீவனின் தாயார்




கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள்




பொதுச்சுடரை ஏற்றிவைக்கும்
உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற
உறுப்பினருமான ஈ.சரவணபவன்





நிகழ்வுக்கு வருகை தந்த பிரமுகர்கள்





கண்காட்சியைப் பார்வையிடுவோர்



உதயன் நிறுவனத்தினால் நேற்று யாழ்.பொது நூலகத்தில் நடத்தப்பட்ட புகைப்படக் கண்காட்சியை பார்வையிடும் தென் பகுதி மக்கள். (த-21)

# பாதிப்புற்ற ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு உதவி வழங்கும் திட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஆரம்பித்து வைத்தார்







யாழ்ப்பாணம், மே. 03

கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கான உதவி வழங்கும் திட்டம், யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், 'உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவனினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன், ஊடக சுதந்திர தின நிகழ்வும் – கண்காட்சியும் யாழ்.பொது நூலகத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

நேற்றுக் காலை 10.20 மணிக்கு நிகழ்வுகள், யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், 'உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவனின் தலைமையில் ஆரம்பமானது. முதலில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் – ஊடகப் பணியாளர்களுக்கான ஈகச் சுடரேற்றல் நிகழ்வு இடம்பெற்றது.

ஈகச் சுடரினை, உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன், யாழ்.தினக்குரல் பத்திரிகையின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.கேசவராஜ், யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன், யாழ்.மாவட்ட உதவி அரச அதிபர் சா.சுதர்சன், யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன், மற்றும் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பத்தினர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அதன் பின்னர் ஊடகப் போராளிகளுக்கு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, உதயன் குழுமத் தலைவரும், யாழ். – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தலைமையுரை நிகழத்தினார்.


புதிய ஆட்சியில் வெளிப்பாட்டுச் சுதந்திரம் தொடர்பில், யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரனும், போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுதலும், ஊடக சுதந்திரமும் என்ற தலைப்பில் சட்டத்தரணி நிரான் அங்கிர்ரல் ஆகியோர் பிரதம உரை நிகழ்த்தினர்.

சுட்டுக் கொல்லப்பட்ட உதயன் ஊடகவியலாளர் ரஜிவர்மன் மற்றும் உதயன் அலுவலகச் சாரதி பாஸ்கரன் ஆகியோரின் குடும்பத்தினருக்கும், கேலிச்சித்திர கலைஞர் பயஸின் குடும்பத்தினருக்கும், 'உதயன் குழுமத் தலைவரும்', யாழ். – கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவனினால், நிதி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

(த-5)

# களநிலை அறிக்கையிடல் வல்லமைக்கு நம்பகத் தன்மையே மிக முக்கியமானது

## ஊடகப் பணி ஒருபக்கச் சார்பாகக் கூடாது என்கிறார் சட்டத்தரணி நிரான் அங்கிரல்



யாழ்ப்பாணம், மே 03

களநிலை அறிக்கையிடுதல் வல்லமையுள்ளதாக இருப்பதை உறுதி செய்வதற்கு அதன் நம்பகத்தன்மை மிக முக்கியமானதாகும். அதாவது, அது தொழிலாண்மை கொண்டதாயும், நேர்மையானதாயும் நடுநிலையானதாயும் இருக்கவேண்டும். அது ஒரு தரப்புக்குப் பக்கச் சார்பானதாகக் கண்டுகொள்ளப்படக்கூடாது என சர்வதேசச் சட்டங்களில் நிபுணத்துவம் வாய்ந்த சட்டத்தரணி நிரான் அங்கிரல் தெரிவித்தார்.

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டும், ஈழத்தின் மிகப் பெரும் ஊடகப் படுகொலையான உதயன் ஊடகப்பணியாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதை நினைவு கூர்ந்தும் ஊடக சுதந்திர தின நிகழ்வும்– கண்காட்சியும் நேற்று யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:–

உலகின் பல பாகங்களிலே ஊடக சுதந்திர தினமானது தமது ஊடகப் பணியை ஆற்றும்போது கொலையுண்ட ஊடகவியலாளர்களை நினைவு கூருவதால் கொண்டாடப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் அப்படி உயிரிழந்தவர்களின் தொகையானது எனது பேச்சிலோ இப்படியான ஒரு நிகழ்விலோ குறிப்பிட்டுச் சொல்லிமுடியாதபடிக்கு அதிகமானதாகும். இங்கு அமர்ந்திருக்கும் ஊடகவியலாளர்கள் உட்படப் பலர் இன்றும் அதே போன்ற ஆபத்துக்குத் தொடர்ந்தும் முகங்கொடுத்தும் வருகின்றனர். இருண்ட காலகட்டங்களிலுங்கூடப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ள தொழிற்துறையில் ஒரு சட்டத்தரணி என்ற ரீதியிலே, பெரும் விலை கொடுத்த இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு எனது ஆழ்ந்த கனத்தை வெளிப்படுத்துவதற்குக் கிடைத்த பாக்கியமாகவே இதனை நான் பார்க்கிறேன்.

எனக்குத் தரப்பட்ட தலைப்பு, போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக் கூறுதலும் ஊடக சுதந்திரமும் என்பதாகும். மக்களைச் சுண்டியிழுக்கும் ஒரு தலைப்பாக இது தெரிந்தாலுங்கூட, ஊடகவியலாளர்கள் – குறிப்பாக வடக்கு– கிழக்கிலே உள்ளவர்கள் – அனுதினமும் முகங்கொடுக்கும் அம்சங்களையே நான் கவனத்தில் கொள்ள விரும்புகிறேன். இப்படியான தலைப்பைக் கையாள்வதற்கு நான் எனது உரையை இரு பகுதிகளாகப் பிரித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலாவதாக, சர்வதேசக் குற்றச்செயல்களைத் தெரியப்படுத்துவதிலே ஊடகத்தின் (மற்றும் ஊடக சுதந்திரத்தின்) வகிபங்கு. இரண்டாவதாக, நிலைமாற்றுக்கால நீதியின் செயன்முறையிலே கடந்த காலத்திலே இடம்பெற்ற சர்வதேசக் குற்றச்செயல்களைக் கையாளுவதிலே ஊடகத்தின் (மற்றும் ஊடக சுதந்திரத்தின்) வகிபங்கு.

**போர்க் குற்றங்களை அறிக்கையிட்டால் ஆபத்து**

வேறுபல நாடுகளைப்போலவே இலங்கையிலும் போர்க்குற்றங்கள், மனுக்குலத்துக்கு எதிரான குற்றச் செயல்கள் மற்றும் இன அழிப்பு ஆகியவை பற்றி அறிக்கை செய்வதென்பது ஆபத்தான காரியமாகும். அநேகமாக இந்தக் குற்றச் செயல்கள் தமது குற்றச்செயல்கள் பகிரங்கப்படுத்தப்படுவதை விரும்பாத மிகவும் வல்லாதிக்கமுள்ளவர்களால் இழைக்கப்படுவதுண்டு. போர்க்குற்றங்கள் பற்றி அறிக்கை செய்வது பெரும் ஆபத்தை விலைக்கு வாங்குவது போன்றதே. வாளைவிடப்பேனா முனை பலம் மிக்கது என்பதைப் போரிடும் தரப்பினர் உணர்ந்திருப்பதாலே ஒருவேளை இப்படியாகக் கூடும். ஆயினும் இப்படியான ஆபத்துக்களிலிருந்தும், போர் வலயங்களுக்குள் நுழைவது மறுக்கப்பட்டிருந்தும், பல நாடுகளிலே போர்க் குற்றங்களையும் வேறு சர்வதேசக் குற்றச் செயல்களையும் வெளிக்கொணர்வதற்கு ஊடகவியலாளர்கள் உதவியுள்ளனர். சர்வதேசக் குற்றங்கள் இடம்பெறுகையிலே அவற்றைத் தமது 'ஸ்மார்ட்' கைத் தொலைபேசிகளிலே பதிவுசெய்து, வலைத்தளங்களுக்கு அந்தச் சான்றுகளைத் தரவேற்றும் குடிமக்கள் ஊடகவியலாளர்கள் அதிகரித்து வருகின்றனர். இந்த யுக்தி இலங்கையிலும் கணிசமான அளவுக்குப் பயன்படுத்தப்படுவதை நாம் கண்டுள்ளோம். உதாரணமாக, நுழைவு அனுமதி மறுக்கப்பட்டிருந்த மனிக் பண்ணைத் தடுப்புமுகாமின் ஆரம்பகட்டத்து நிலைமை மற்றும் அங்கு அடைக்கப்பட்ட மக்களின் மோசமான நிலைமை போன்றவற்றையிட்ட படங்கள், அந்த முகாமுக்குள் சென்ற குடிமக்கள் ஊடகவியலாளர்களாலேயே வெளிக்கொணரப்பட்டன.

**இன அழிப்பை ஊக்குவித்த ஊடகங்கள்**

ஆயினும் குற்றங்கள் மத்தியிலே ஊடகவியலாளர்கள் சேதமாக்கும் வகிபங்கை வகிப்பதும் சாத்தியமே. மனுக்குலத்துக்கு இழைக்கப்பட்ட மோசமான இன அழிப்புக்களின் போது எப்படியாக ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதையிட்ட உதாரணங்களையும் நாம் கண்டுள்ளோம். பல மில்லியன் கணக்கான மக்கள் கொலையுண்ட ஜேர்மனி மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகளிலே, அந்த இன அழிப்பை ஊக்குவித்து அவற்றை ஒழுங்கிணைக்க உதவிய வானொலி நிலையப் பணியாளர்களே அவற்றுக்குப் பொறுப்பைக் கொண்டவர்கள். இலங்கையிலுங்கூட, உலகெங்கிலும் பயன்படுத்தப்படும் யுக்தியான நடுகை ஊடகவியலாளர் பயன்படுத்தப்பட்டதை நாம் கண்டுள்ளோம். ஒரு தரப்பாரை ஆதரிக்கும் ஊடகவியலாளர்கள், இராணுவ அலகொன்றிலே உள்வாங்கப்பட்டு போர் வலயங்களுக்குச் செல்லும் அனுமதி அவர்களுக்கு வழங்கப்படுவதுண்டு. களநிலைச் செய்திகள் பற்றிய உண்மையின் விளக்கத்தை வழங்குகையிலே, இத்தகைய ஊடகவியலாளர்களின் அறிக்கைகள் பக்கச் சார்பானதாக இருப்பது இயல்பானதே. அதேபோலவே, குடிமக்கள் ஊடகவியலாளர்களும் அபத்தமானவர்களாக ஆகிடக்கூடும். ஒன்றில் அவர்கள் ஒரு தரப்பாரின் கொள்கைப் பரப்பினை ஊக்குவிப்பதாலேயோ அல்லது ஊடக விதிகள் மற்றும் தர்மங்களுக்கு ஒழுகாத பொறுப்பற்ற சமூகஊடகப்பயன்பாடுகளாலேயோ இப்படியாகலாம். எனவே, மோசமான குற்றச்செயல்களை வெளிக்கொணர்வதற்கு எப்படியாக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் செயற்படுமோ, அதேபோலவே அந்தக் குற்றங்களை மூடிமறைக்கவும் மேலும் குற்றங்களைச் செய்யும்படி ஊக்குவிக்கவும் ஊடகம் பயன்படுத்தப்படலாம்.

**தப்பான தகவல்களை பரப்புதல்**

இதனாலேதான், சான்று இருந்தாலுங்கூட, பெருமளவிலான குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றதையிட்டு உலகுக்கு உறுத்தியுணர்த்துவது கடினமானதாகிறது. தப்பான தகவல்களின் திரட்சியால், தீர்மானம் எடுப்பவர்களுக்கு யாரை நம்புவது என்ற குழப்பம். இலங்கையிலே, பிரதானமாகச் சர்வதேச விசாரணையைத் தவிர்க்கும் பிரகாரமாக, இராணுவமும் முன்னைய அரசும் திட்டமிட்டுப் புனையப்பட்ட தப்பான தகவல்களைச் பரப்பி வந்தன. 'குடிமக்களின் இறப்பு பூச்சியம்', 'யுத்த சூனியப் பிரதேசம்', 'சகல பார ஆயுதங்களையும் முடிவுக்குக் கொணர்தல்', மற்றும் 'மனிதாபிமான நடவடிக்கை' போன்றவைகளைப் பற்றி அவைகள் பேசி வந்தன. இந்தப் பொய்கள் கூறப்பட்டு கொண்டிருக்கும் போதே குண்டுத் தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான அப்பாவிக் குடிமக்கள் கொலை செய்யப்பட்டனர். எனவே சர்வதேசக் குற்றங்களையிட்டு அறிக்கையிடும் ஸ்தாபனங்களின் நம்பகத்தன்மை பற்றிய கேள்வி இங்கே எழுகிறது. பாதுகாப்பதற்கான பொறுப்புக் கோட்பாட்டின் வெளிச்சத்திலே இந்தக் கேள்விகள் பொருத்தமானவை. ஒரு நாட்டிலே சர்வதேசக் குற்றங்கள் பெருமளவிலே இடம்பெறும் போது, அவற்றைத் தவிர்ப்பதற்குக் குறிந்த அந்த நாடு நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், சர்வதேச சமூகம் குடிமக்களைப் பாதுகாப்பதற்கு . ஐ.நா. பாதுகாப்புப் பேரவையின் பணிப்புரையின் கீழ் பல படிமுறைகளை எடுத்திடலாம். சர்வதேத் தீர்மானம் எடுப்போருக்கான கேள்வி தொடர்கிறது – என்ன நடக்கிறது என்பதே தெரியாவிட்டால், என்ன செய்வது என்று எமக்கு எப்படித் தெரியும்?

லிபியா மற்றும் சிரியா ஆகிய நாடுகளிலே அண்மை காலங்களிலே இடம்பெற்றபூசல்களின்போது, அவை தொடர்கையிலேயே அவற்றை விசாரிப்பதற்கு ஐ.நா. ஒரு விசாரணை மன்றத்தை அமைத்து, ஐ.நா. இற்கு எந்த நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்பதைப் பரிந்துரைத்திருந்தது. ஆயினும் இந்த விசாரணைகள் நீடிய காலம் எடுக்கும் என்பதுடன், களநிலை அறிக்கையிடுதலுக்கு அவை மாற்றீடாக அமையவே அமையாது. ஆனால் 'களநிலை அறிக்கையிடுதல்' வல்லமையுள்ளதாக இருப்பதை உறுதி செய்வதற்கு அதன் நம்பகத்தன்மை மிக முக்கியமானதாகும். அதாவது, அது தொழிலாண்மை கொண்டதாயும், நேர்மையானதாயும் நடுநிலையானதாயும் இருக்கவேண்டும். அது ஒரு தரப்புக்குப் பக்கச்சார்பானதாகக் கண்டு கொள்ளப்படக்கூடாது. முன்நகர்ந்து செல்வதற்கு நாம் கற்கவேண்டிய பாடம் இதுவாகும். நாம் நேர்மையானவராயும், நிதர்சனமானவராயும், சகல பாதிப்புற்றோரினதும் மனித உரிமைகளைப் பாதுகாத்து அதனை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தைக் கொண்டவராயும் இருந்தால், சர்வதேச விடயங்களிலே மாற்றங்களை விளைவிப்பதற்கு அவசியமான நம்பகத்தன்மையை உலகம் தரக்கூடிய சாத்தியம் உண்டு.

**நிலைமாற்றுக்கால நீதியும் ஊடக சுதந்திரமும்**

நான் ஏற்கெனவே பகிர்ந்துகொண்டதைப்போல, எனது பேச்சின் இரண்டாம் பகுதியிலே நான் நிலைமாற்றுக்கால நீதியும் ஊடக சுதந்திரமும் பற்றிய விடயத்தைக் கவனத்திற் கொள்ள விரும்புகிறேன். அதாவது, குற்றங்கள் இழைக்கப்பட்ட பின்பு, சமூகமானது அந்தக் கடந்தகாலக் குற்றங்களைக் கையாள எத்தனிக்கையிலே ஊடகத்தினதும் ஊடக சுதந்திரத்தினதும் வகிபங்கு என்ன என்பதே. பலவிதங்களிலே போர்க் குற்றச்செயல்கள் அம்சங்களிலே அறிக்கையிடும் இந்தப் பகுதி அவ்வளவு கிளர்ச்சியான அனுபவமாக இராதுவிட்டாலுங்கூட, இதுவும் அதே போலவே முக்கியமானதாகும். நிலைமாற்றுக்கால நீதி என்பதால் நாம் கருதுவது என்ன? கடந்த காலங்களிலே பெருமளவிலான குற்றச் செயல்கள் இழைக்கப்பட்டுள்ள இடங்களிலே கடந்த காலத்தை மேற்கொள்வதற்கும் அதைக் கையாள்வதற்கும் சமூகம் மேற்கொள்ளும் படிமுறைகளே இவை. நிலைமாற்றுக்கால நீதிக்கு நான்கு தூண்கள் உண்டு. அதாவது, உண்மை, நீதி, திருத்தியமைப்பு மற்றும் மீள இடம் பெறாது என்பதற்கான உத்தரவாதம் ஆகியவைகள். எனவே குற்றவியல் விசாரணைகள், வழக்குகள், உண்மை அறியும் ஆணைக்குழு, நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள், மற்றும் நினைவுகள் ஆகிய அனைத்துமே நிலைமாற்றுக்கால நீதியின் பகுதிகளாகும்.

நிலைமாற்றுக்கால நீதியின் பிரதான கோரிக்கைகளுள் ஒன்றுதான் நிலைமாற்றுக்கால நீதியின் பொறிமுறைகளின் வடிவமைப்பு மற்றும் அமுலாக்கம் ஆகியவற்றிலே பாதிக்கப்பட்டோர் ஈடுபடுவது பற்றியதாகும். எனவே பாதிக்கப்பட்டவர்களுடன் நேரடியாகத் தொடர்பாடுவதிலே பிரதானமான பொறுப்பை அரசு கொண்டிருக்கும் அதேவேளை, இலங்கை போன்ற ஆயிரக்கணக்கான பாதிப்புற்றோர் உள்ள நிலையிலே, அவர்கள் அனைவரையும் நேரடியாக ஈடுபடுத்துவது என்பது சாத்தியமற்ற காரியமாகும். எனவே, சகல ஊடகங்களும் பல்வேறான நிலைமாற்றுக்கால நீதி பங்காளிகளுக்கிடையே நிலவும் தொடர்பாடற் பிளவைப் பாலமிடுவதிலே உதவும் பிரதான வகிபங்கை வகிக்கலாம். அது பாதிக்கப்பட்டவர்களுக்கும் அரசுக்கும் இடைப்பட்ட, அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கும்வேறு பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடைப்பட்ட, அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இடைப்பட்ட பிளவுகளையிட்டதாக இருக்கலாம். இந்த வகிபங்கினை வகிப்பதற்கு ஊடகம் சுயாதீனமானதாக இருக்கவேண்டும். தொடரும் செயன்முறையினைக் கண்டித்து விமர்சிக்க இயலாத ஒரு சூழ்நிலையிலே அவர்கள் அமர்த்தப்படக் கூடாது. இரண்டாவதாக, அவர்கள் நிலைமாற்றுக்கால நீதியிலே பயிற்றப்பட்டு, அதிலே மேற்கொள்ளப்படும் செயன்முறைகளைப் பற்றிப் புரிந்துகொள்ள வேண்டும். இது மிக் முக்கியம். இடம்பெறும் செயன்முறைகளின் வகைகள், அவற்றில் உள்ள குறைபாடுகள், அந்தச் செயன்முறைகளை மேம்படுத்துவதற்கு பரிந்துரைக்கும் வழிமுறைகள், அந்த செயன்முறைகளால் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் போன்றவற்றையிட்டு ஊடகவியலாளர்கள் புரிந்து கொண்டாலேயன்றி பாதிக்கப்பட்டவர்களும் பொதுமக்களும் அந்தச் செயன்முறைகளைப் பற்றிப்புரிந்து கொள்ளமாட்டார்கள். மிகவும் நேர்த்தியான செயன்முறைகளை நீங்கள் கொண்டிருந்தாலுங்கூட, பாதிக்கப்பட்டோர் அவற்றைப் புரிந்துகொண்டு அவற்றிலே பங்கெடுக்க இயலாதிருக்குமாயின், அதனால் பயனேதுமில்லை. எனவே, அச்சு மற்றும் ஊடகத் தொழிற்துறைத் தலைவர்கள் – குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ளவர்கள் – அவர்களின் ஊடகவியலாளர்கள் இந்த செயன்முறைகளிலே நன்கு பயிற்றப்பட்டு பாதிக்கப்பட்டோரின் நலன்களைச் சேவிப்பதை உறுதிசெய்யும் கடப்பாட்டைக் கொண்டவர்களாவார்கள். கடந்த வருடம் மார்ச் மாதத்திலே, ஜெனீவாவில் இருந்து சில தமிழ்த் தரப்பினர்கள் ஜெனீவா முறைகள் பற்றியும் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் பற்றியும் பல தப்பான தகவல்களைப் பரப்பியதை நாம் கண்டோம். தமிழர்களுக்கு அந்தத் தீர்மானத்தால் எவ்வித நன்மையும் கிட்டாது, அந்தத் தீர்மானத்திலே சர்வதேச விசாரணை எதுவுமே இல்லை, அது ஒரு பலவீனமான தீர்மானம் என்றும் கூறினார்கள். இந்தக் கூற்றுக்கள் பொய்யானவைகள் என்பது ஒரு புறமிருக்க, அவை எந்த மக்களின் நலனுக்காக நகர்த்தப்பட்டதோ அந்த மக்களைக் குழப்பிப்போட்டது. இதிலே நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் உள்ளன. நிஜங்களையிட்ட எமது பதிலீடுகள் அவற்றையிட்ட சீரியஸான பகுப்பாய்விலும் தொழிற்தன்மையான அறிவிலும் தங்கியிருக்க வேண்டும் அரசியல் விளையாட்டுக்களிலும் உணர்ச்சிப் பிரவாகங்களிலுமல்ல. தொடரும் செயன்முறைகள் பற்றிய நேர்மையான விபரிப்புகளுக்கும் நேர்மையற்ற விபரிப்புகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை இனங்கண்டு கொள்ளக்கூடிய விதத்திலே எமது ஊடகவியலாளர்கள் பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களின் உண்மை அறிவதற்கும் நீதிக்குமான உரிமை முழுமையாக உணரப்படும் என்பதே எமது பொதுவான நம்பிக்கையாகும். அந்தச் சேவைக்காக எமது பணி அர்ப்பணிக்கப்பட்டும் – என்றார். (த)

# உயர் கல்வி கற்ற மாணவர்களுக்கு நிதி நிறுவனங்கள் உதவவேண்டும்

## ஐ.ஐ.எஸ் சிற்றி கம்பஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவிப்பு



உயர்கல்வி கற்ற மாணவர்கள் தொழில் புரிவதற்கு நிதி வழங்கும் நிறுவனங்கள் உதவ முன்வர வேண்டும். மாணவர்களின் ஆக்கங்களை ஆராய்ந்து தொழில் முயற்சிக் கடன்களை வழங்குவதன் மூலம் அவர்கள் சமூக அபிவிருத்திக்குப் பங்காளியாவர்.

–இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.ஐ.எஸ் சிற்றி கம்பஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி வை.கு.விக்னேஸ்.

ஐ.ஐ.எஸ் சிற்றி கம்பஸ் நிறுவனத்தின் 19ஆவது நிறுவன தினமும் பட்டமளிப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

19 ஆண்டுகால வெற்றிச் செயற்பாட்டை நிறைவுசெய்து 20ஆவது ஆண்டில் கால்பதித்து வீறுநடை போட்டுவரும் எமது ஐ.ஐ.எஸ் நிறுவனம் பல்வேறு சவால்களை சாதனைகளாக்கி இன்று வடக்கில் உள்ள முதன்மையான நிறுவனமாகவும், தனியார் கல்வி நிறுவனங்களின் வரிசையில் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தையும் தனதாக்கிக் கொண்டுள்ளது.

எமது நிறுவனம் குடாநாட்டு மாணவர்களின் எதிர்கால இலக்குகளை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு யாழ். மண்ணின் தனித்துவத்தையும், பாரம்பரியத்தையும், கல்விப்பெருமை யையும் பேணுகின்ற வகையில் கல்விச் செயற்பாடுகளை நகர்த்தி வருகின்றது. அந்தவகையில் பாரம்பரிய கல்வி முறைமைகளுக்கு அப்பால் பிரயோக கல்வி முறைமையிலான கற்பித்தல் செயற்பாடுகளும் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரயோகங்களுக் குக் கொடுக்கும் முன்னுரிமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது தொழில்துறையின் வளர்ச்சியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. அந்த வகையில், எமது நாட்டிலே ஆரம்பிக்கப்படுகின்ற தொழில்துறைகளில் முயற்சியாளர்களாக அல்லது முதலீட்டாளர்களாக அரச மற்றும் தனியார் துறைகளில் பட்டங்கள் பெற்று வெளியேறும் மாணவர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக் கான அரச மற்றும் தனியார் பல்கலைக்கழக மாணவர்கள் பட்டங்களைப் பெற்று வெளியேறுகின்றனர். இவர்களில் கணிசமான எண்ணிக்கையானோர் அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில் தேடுபவர்களாகவே உள்ளனர். விரல்விட்டு எண் ணக்கூடிய ஓரிருவரே முதலீட்டாளர்களாகவும் முயற்சியாளர்களாகவும் மாறுகின்றனர். இந்த விடயத்தில் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். உண்மையில் தமது பட்டக் கல்வியைப் பூர்த்திசெய்யும் ஒவ்வொரு மாணவனும் கல்வியின் பூர்த்திக்காக திட்ட அறிக்கைகளையோ, ஆய்வறிக்கை களையோ சமர்ப்பிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

பெரும்பாலான மாணவர்களின் இத்தகைய ஆக்கங்கள் தமது கல்விச் செயற்பாடுகளைப் பூர்த்திசெய்யும் காகிதங்களாகவே உள்ளன. இந்தக் காகிதங்கள் உயிரூட்டப்பட வேண்டியவையாகும்.

இந்த ஆக்கங்கள் அங்கீகரிக்கப்படும்போது – அவற்றுக்குச் செயல் வடிவம் கொடுக்கப்படும்போது அவை உயிரூட்டப்படுகின்றன. அந்த வகையிலே உயர்கல்வி மாணவர்கள் மேற் கொள்ளும் தமது இந்த ஆக்கங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கத் தயங்குவது 2 விடயங்களிலாகும்.

1) பொருளாதார ரீதியிலான தடங்கல்.

2) மாணவர் மத்தியில் இருக்கும் சவால்களை எதிர்நோக்க முடியாத தன்மை.

இவ்விரண்டு குறைகளும் நீக்கப்படும் பட்சத்தில் உயர்கல்வி கற்கும் மாணவர்களின் ஆக்கங்கள் செயல் வடி வம் பெறும் என்பதிலும், பல முயற்சியா ளர்களைத் தோற்றுவிக்கும் என்பதிலும் எவ்வித ஐயமுமில்லை. நாம் கூறும் இக்கருத்தானது புதிதல்ல. நடை முறையில் உள்ள ஒரு விடயமாகும்.

உயர்கல்வி கற்கும் மாணவர்களின் இறுதி ஆக்கங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கின்ற வகையிலே பல்தேசிய கம்பனிகள், நிதி நிறுவனங்கள், ஆய்வு நிறுவனங்கள் பொருளா தார ரீதியில் அவர்களுக்கும் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றன.

எனவே, இத்தகைய நாடுகளில் உயர்கல்வியை மேற்கொள்ளும் மாணவர்களின் இறுதி ஆக்கங்கள் வெறுமனே கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்யும் ஆக்கங்களாக இருந்து விடாமல் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியான ஆக்கங்களாகவும் மாற வேண்டும்–என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொண்டார். 2014/15 கல்வியாண்டில் நிறுவனத் தில் உயர்தேசிய டிப்ளோமா, இளமாணி, முது மாணி போன்ற பட்டப் படிப்புகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பும் கௌரவிப்பும் நடைபெற்றது. (த)





இலங்கை வங்கி வாடிக்கையாளர்களான சிறுவர்களில் 2014 புலமைப் பரிசில்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசளிப்பு வைபவம் வவுனியா சுத்தானந்தா இந்த இளைஞர் சங்கத்தில் இலங்கை வங்கியின் வன்னிப் பிராந்திய முகாமையாளர் ந.சதானந்தம் தலைமையில் நடைபெற்றது. வவுனியா கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.சிதம்பரநாதன் மற்றும் அதிதிகள் வரவேற்கப்படுவதையும் பீடாதிபதி மாணவன் ஒருவருக்குப் பணப்பரிசில் வழங்குவதையும் காணலாம். (த–402)

# ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் மென்திறமைகள் செயலமர்வு

இறுதிப்படி மென்திறமைகள் செயலமர்வுகளின் வரிசையில் மற்றுமொரு வெற்றிகரமான செயலமர்வு கடந்த 2015 ஏப்ரல் 7 முதல் 9 வரை கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் பட்டதாரி மாணவர்களுக்காக ஜோன் கீல்ஸ் தொண்டு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முகாமைத்துவ மற்றும் நிதியியல் பாடத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் தினசரி 160 இற்கும் மேற்பட்ட பட்டதாரி மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

ஜோன் கீல்ஸ் தொண்டு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இறுதிப்படி மென் திறமைகள் செயலமர்வு எனது மென்திறமைகளை மேலும் விருத்தி செய்துகொள்வதற்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. ஒவ்வொரு ஆலோசனை அமர்விலும் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் மிகவும் ஆழமான அறிவை வழங்கியதுடன், புதிய விடயங்கள் சார்ந்த அறிவை வெளிக்கொணரவும் உதவின என்று மனித வள முகாமைத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவரான ரங்க யதார குறிப்பிட்டார்.





இலங்கை பல்கலைக்கழகங்கள் மத்தியில் தொடர்ந்து பன்னிரண்டாவது தடவையாக வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வின் பிரதான நோக்கம், உள்நாட்டிலுள்ள பட்டதாரி மாணவர்களுக்கு இலங்கையில் காணப்படுகின்ற தொழில்வாய்ப்புக்கள் தொடர்பான யதார்த்தபூர்வமான தோற்றப்பாடுகளை எடுத்துக்கூறி நாட்டின் பிரதான தொழில்வழங்குநராகக் காணப்படுகின்ற தனியார் துறையின் எதிர்பார்ப்புக்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் அவர்கள் தம்மை சிறந்த முறையில் தயார்செய்ய உதவி, அவர்களது தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்திக்கொள்ள வழிசமைப்பதாகும்.

இரண்டரை நாள்களாக இடம் பெற்ற இந்த நிகழ்வில் ஐந்து தொடர் செயலமர்வுகள் அடங்கியிருந்ததுடன், தொழில்தருநரின் எதிர்பார்ப்புக்கள், அணிக் கட்டமைப்பு மற்றும் தலைமைத்துவ ஆற்றல்கள், ஆளுமை அபிவிருத்தி மற்றும் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், வர்த்தகத்துறையின் சூழலுக்கு தம்மை இசைவாக்கிக் கொள்ளுதல்; ஆளுமை வளர்ச்சி மற்றும் வர்த்தகத்துறை உபசரிப்புப் பண்புகள் அடங்கலாக பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

ஜோன் கீல்ஸ் தொண்டு நிறுவனத்தின் தலைமைத் தொழிற்பாட்டு அதிகாரியான கார்மலீன் ஜெயசூரிய இதில் கலந்துகொண்டவர்கள் மத்தியில் உரையாற்றுகையில், ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் வர்த்தக சமூக நலன்புரி முன்னெடுப்புக்களின் இலட்சியம் எதிர்காலத்தைப் பிரகாசிக்கச் செய்வதற்கு தேசத்தை ஆளுமைப்படுத்துவதாகும். எதிர்காலத் தலைவர்களாக விளங்கவுள்ள உங்களைப் போன்ற இளம் பட்டதாரி மாணவர்களை ஆளுமைப்படுத்தி பணியுலகின் எதிர்பார்ப்புக்களுக்கு நீங்கள் சிறப்பாக முகங்கொடுக்க உங்களை வழிநடாத்துவதில் நாம் தீவிர அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். எமது பட்ட தாரிகள் எந்த இடத்திலும் வெற்றியடைவதற்குத் தேவையான அறிவையும், திறமையையும் கொண்டுள்ளனர் என நான் நம்புகின்றேன். ஆயினும் அவர்கள் ஒரு படி மேலே செல்வதற்கு அவர்களது மென்திறமைகள் மேம்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான செயலமர்வுகளின் மூலமாக மாணவர்கள் தமது திறமைகளை முற்றுமுழுதாக வெளிக்கொணர உதவி, எதிர்காலத்தில் தொழிலில் அவர்கள் வெற்றிகரமாக செயற்படுவதற்கு ஆளுமைப்படுத்தும் விடயங்களை அவர்களுக்கு வழங்கமுடியும் என நாம் நம்புகின்றோம். எமது பட்டதாரி மாணவர்கள் தமது கல்வி சார்ந்த கற்கையைப் பூர்த்திசெய்து வெளியேறி, தமது வாழ்வின் அடுத்த கட்டமாக உள்ள பணியுலகில் காலடியெடுத்து வைப்பதற்கு இது வழிகாட்டுவதால் நாம் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு இறுதிப்படி எனப் பெயரிட்டுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்நிகழ்ச்சித்திட்டமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் குறிப்பிட்ட பல்கலைக்கழ கங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றது. (த)